★ உதயன்

சுடர் 27
கதிர் 134

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 26 ஞாயிற்றுக்கிழமை (08/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ஜே.வி.பி. அதிருப்திக் குழுத் தலைவர் இரவோடிரவாக கொழும்பில் கடத்தல்



## மகளிர் அணித் தலைவியையும் தூக்கினர்
## நாளை மாநாடு நடக்க இருக்கையில் சம்பவம்

கொழும்பு, ஏப் 08
ஜே.வி.பி.யிலிருந்து பிரிந்து சென்ற அதிருப்திக் குழுவின் தலைவரான பிரேம்குமார் குணரட்ணம் மற்றும் ஜே.வி.பி. மத்திய குழுவின் முன்னாள் உறுப்பினரும் ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவின் மகளிர் பிரிவுத் தலைவியுமான திமுது ஆட்டிகல ஆகியோர் நேற்றுமுன் தினம் இரவு கடத்தப்பட்டுள்ளனர் என்று முற்போக்கு சோசலிசக் கட்சி நேற்றுத் தெரிவித்துள்ளது.
இருவரும் நேற்றுமுன் தினம் இரவு நன்கு திட்டமிட்ட முறையில் ஒரே நேரத்தில் கடத்தப்பட் 04



## வவுனியாவில் இந்தியர் கைது

வவுனியா நகரில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா நடைபாதையில் குறித்த இந்தியர் புடைவைகளை விற்பனை செய்து வந்ததாகப் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர். அனுமதி எதனையும் பெற்றுக் கொள்ளாது வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குறித்த இந்தியர் வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## ஜனாதிபதியிடம் பஞ்சாங்கம்

எதிர்வரும் புதுவருடத்தை குறிக்கும் பாரம்பரிய பஞ்சாங்கம் நேற்று கலாசார துறை அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்கவினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. நேற்றுக் காலை அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வின் போது, சுபநேரத்தில் இந்த கையளிப்பு இடம்பெற்றுள்ளது. எதிர்வரும் புதுவருட காலபகுதியில் குறிப்பாக புதுவருடம் பிறக்கும் நேரம், புண்ணிய காலம், ஒளியேற்றும் நேரம், உணவு தயாரிக்கும் நேரம், உணவு உட்கொள்ளும் நேரம், வீட்டை விட்டு வெளியேறும் நேரம் உட்பட பல விடயங்கள் இந்த பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சொத்து விவரம் கோருகிறார் ஆணையாளர்

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளைச் சார்ந்த அதிகாரிகளின் சொத்துக்கள் பொறுப்புகளின் விவரங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு கடிதம் மூலம் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் சட்டமூலத்திற்கு அமைவாக அரசியல் கட்சிகளின் அதிகாரிகள் தமது சொத்து, பொறுப்பு விவரங்களை வெளியிடவேண்டியது அவசியமாகிறது. தேர்தல்களில் போட்டியிட்ட தருணங்களில் குறித்த விவரங்களை வழங்கிய அதிகாரிகளுக்கு இந்த அறிவித்தல் உரித்தாகாது என ஆணையாளர் குறிப்பிட்டார்.

## ரணில் இந்தியாவுக்கு

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். புதுடில்லிக்கு முதலில் செல்லும் எதிர்க்கட்சித் தலைவர் அங்கு இடம்பெறும் தெற்காசிய கொள்கை வகுப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மாநாட்டில் இறுதி நாள் விவாதத்தில் கலந்துகொண்டு விஷேட உரையாற்றவுள்ளார். தெற்காசியப் பிராந்திய நாடுகளின் கீர்த்திமிக்க அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## காந்தி சிலை உடைப்புக்கு இந்தியா கண்டனம்

கொழும்பு,ஏப்.8
மட்டக்களப்பு நகரில் இருந்த காந்தி சிலை உட்பட 4 பெரியார்களின் சிலைகள் உடைக்கப்பட்டமைக்கு இந்தியா இராஜதந்திர ரீதியில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.
இந்திய அரசின் கண்டனம் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த மூலமாக வெளியுறவுத்துறை அமைச்சுக்கு நேரில் தெரிவிக்கப்பட்டது.
அஹிம்சாவாதியான காந்தியின் சிலை மீது வன்முறை ஏவப்பட்டமையே இந்தியாவைச் சீற்றமடைய வைத்துள்ளதாக இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார். 04

## திருமலையிலும் இளைஞர் வெள்ளை வானில் கடத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.8
நாட்டின் பல இடங்களில் மீண்டும் வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் ஆரம்பித்துள்ளமை மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.
திருகோணமலையில் நேற்றுமுன்தினம் இளைஞர் ஒருவர் வெள்ளை 'வானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.
திருகோணமலை அன்பு வழிபுரத்தைச் சேர்ந்த ரவீந்திரன் ரகுமாறன் (வயது 27) என்ற இளைஞனே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.
தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு மருந்து 04

## நவநீதம்பிள்ளை இலங்கை வரார்



ஜெனிவா, ஏப்.8
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.
ஐ.நாவில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேறியதைத் தொடர்ந்து இலங்கைக்கு அவர் பயணம் மேற்கொள்வார் என்று தீவிரமாக எதிர்பார்க்கப்பட்டது.
இலங்கைப் பயணத்துக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பிரதிநிதிகளை இலங்கைக்கு 04

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

கொழும்பு,ஏப்.8
அமைச்சரவையில் சில மாற்றங்களை ஏற்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. முக்கிய அமைச்சர்களின் பதவிகளில் மட்டும் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.
அனைத்து அமைச்சர்களின் பதவிகளிலும் மாற் 04

## குடாநாட்டில் நேற்று தாங்கமுடியாத சூடு

யாழ்ப்பாணம், ஏப்.8
இந்த வருடத்தில் - ஏப்ரல் மாதம் இதுவரையான நாள் வரையில் - நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் அதி உச்ச வெப்பநிலை காணப்பட்டது. நேற்று 34.6 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவியுள்ளது. அதற்கு முன்னைய நாள்களில் வழமை போன்று 33 பாகை செல்சியஸ் இற்கும் 34 பாகை செல்சியஸ் இற்கும் இடைப்பட்ட 04

## பேச்சில் மூன்றாம் தரப்பை அரசு ஒரு போதும் ஏற்காது

### ராஜீவ விஜேயசிங்க திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.8
பேச்சுக்களின் போது மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. வெளிநாடுகளுக்கு இலங்கையின் பிரச்சினை தொடர்பில் தெரியாது. உள் நாட்டிலேயே தீர்வு எட்டப்பட வேண்டும்.
இவ்வாறு அரச தரப்புப் பேச்சுக் குழுவில் அங்கம் வகிப்பவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேய சிங்க உதயனுக்குத் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அரச தரப்புடனான பேச்சின் போது மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் அவசியம் என்று தெரிவித்திருந்தார்.
இந்த விடயம் தொடர்பில் 04

## பரிந்துரைகளை செயற்படுத்த கால வரையறை அவசியம்

### அமைச்சர் திஸ்ஸ விதாரண வலியுறுத்துகிறார்

கொழும்பு, ஏப்.8
நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, அரசு காலவரையறை ஒன்றை வகுத்துச் செயற்பட வேண்டும் என்று லங்கா சம சமாஜக் கட்சி கோரியுள்ளது.
அந்தக் கட்சியின் தலைவரும், மூத்த அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.
அரசு தனது சொந்தப் பரிந்துரைகளை அமெரிக்கா அல்லது ஐ.நா மனித உரிமைகள்சபையின் அழுத்தத்தின் பேரில் 04

## 18 ஆம் திகதி வடக்கே வருகிறது இந்தியக் குழு


யாழ்ப்பாணம், ஏப்.8
இலங்கைக்கு 16ஆம் திகதி வருகின்ற சுஷ்மா சுவாரஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு 18 ஆம் திகதி வடபகுதிக்கு வரவுள்ளது.
15 பேர் கொண்ட இந்தக் குழு வடபகுதியில் இரண்டு தினங்கள் தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளிலும் சந்திப்புகளிலும் கலந்துகொள்ளவுள்ளது.
18ஆம் திகதி முல்லைத் தீவுக்குச் செல்லும் குழுவினர் இந்திய 04

## தீர்வை வழங்கினால் தனி ஈழம் கேட்கார்

### அரசுக்கு ஜே.வி.பி ஆலோசனை

கொழும்பு,ஏப்.8
வடக்கில் சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டி, அங்கு வாழும் மக்கள் எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகளுக்கு மகிந்த அரசு தீர்வை வழங்கினால் தமிழ்மக்கள் தனிஈழத்தைக் கோரமாட்டார்கள் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில்,
தீர்வு இல்லை எனக் குறிப்பிட்ட அவர், இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கைவிடவே மகிந்த அரசு நாடாளுமன்றத் தெரி 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கித்துலக வருண 2012' கண்காட்சி நேற்று சனிக்கிழமை கொழும்பில் ஆரம்பமானது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதில் கலந்துகொண்டு கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள விற்பனைப் பொருள்களைப் பார்வையிடுகிறார். (த)

# லத்தீன் அமெரிக்க நாடுகளில் புலிகளின் செயற்பாடு தீவிரம்

## தூதரகங்களை வலுப்படுத்துகிறது இலங்கை

கொழும்பு,ஏப்.8

லத்தீன் அமெரிக்க நாடுகளில் விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடுகள் அதிகரித்து வருவதாக, ஜெனிவாவுக்கான, இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தமரா குணநாயகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளதால், அந்தப் பிராந்தியத்தில் உள்ள தூதரகங்களை வலுப்படுத்தி, இலங்கை எதிர்ப் பரப்புரைகளை வலிமையுடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

''உலகில் எல்லாப் பிராந்தியங்களையும் கவனிக்கத்தக்க வகையில், இலங்கையின் தூதரகங்கள் அமைய வேண்டும். இந்த நடவடிக்கையில் லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளின் முக்கியத்துவம் இலங்கைக்கு அதிகரித்து வருகிறது.



போர் முடிவுக்கு வந்த பின்னர், விடுதலைப் புலிகள் தமது கடல் கடந்த செயற்பாடுகளை அதிகரித்து வருகின்றனர். தமது அரசியல் செயற்பாடுகளையே அவர்கள் அங்கு முன்னெடுத்துள்ளனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், விடுதலைப் புலிகள் தமது கடல் கடந்த செயற்பாடுகளை அதிகரித்து வருகின்றனர். அவர்கள் தற்போது லத்தீன் அமெரிக்க நாடுகளில் நுழைந்து அங்கு தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர். தமது அரசியல் செயற்பாடுகளையே அவர்கள் அங்கு முன்னெடுத்துள்ளனர்.''

''ஆர்ஜென்ரீனாவிலும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. நாம் அந்தப் பிராந்தியத்தை தனிப்படக் கவனிக்க வேண்டும். அவர்களின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகள் அந்த நாட்டின் பிரதான ஊடகங்களில் வெளிவருகின்றன. அந்த நாட்டு மக்கள் இலங்கையைப் பற்றி மேற்குலக ஊடகங்களில் தான் படிப்பார்கள்'' என்றும் தமரா குணநாயகம் மேலும் தெரிவித்தார். (த)

# வரி அதிகரிப்புக்கு காரணம் என்ன?

## தெளிவுபடுத்தக் கோருகிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஏப்.8

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான வரிகள் திடீரென உயர்த்தப்பட்டமைக்கான உரிய காரணங்களை அரசு தெளிவுபடுத்த வேண்டுமென ஜே.வி.பி கோரியுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கையை, நிதி அமைச்சின் செயலாளர் உரிய முறையில் விளக்க வேண்டுமென ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் அதிகரிக்கப்பட்ட வரிகள் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தும் என்பதையும் இதன் தாக்கத்தை எதிர்நோக்க நேரிடும் தரப்பினர் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக உரிய விளக்கம் இதுவரை வழங்கப்படவில்லை என்பதால் அதிக விலைகளுக்கு வாகனங்களை விற்பனை செய்து வாகன கொள்வனவாளர்களை ஏமாற்றி பணத்தை மோசடி செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறலாம். -என்றார். (த)

# பாகிஸ்தானில் 130 படையினர் பனிச்சரிவில் புதையுண்டனர்

இஸ்லாமாபாத், ஏப்.8

பாகிஸ்தானின் சியாச்சின் மலைப்பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட பனிச்சரிவில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் சுமார் 130 பேர் புதையுண்டுள்ளதாக அந்தநாட்டு இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

''மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. பனிச்சரிவில் சிக்குண்ட இராணுவத்தினரில் எத்தனைபேர் உயிரிழந்தார்கள் என்பது பற்றி இன்னமும் உறுதி செய்ய முடியவில்லை'' இவ்வாறு இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் அதார் அப்பாஸ் தெரிவித்தார்.

இந்திய எல்லைக்கு அருகில் சியாச்சின் மலைப் பகுதியில் அமைந்துள்ள மேற்படி இராணுவ முகாம், உலகிலேயே அதி உயரத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமாக கருதப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து 18 ஆயிரம் அடி உயரத்தில் இந்த இராணுவ முகாம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# தலா வருமானம் 2836 டொலர்

கொழும்பு,ஏப் 08

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் உயர்ந்த பட்சப் பொருளாதார வளர்ச்சியை அது இப்போது எட்டியுள்ளதாக சனத்தொகை, புள்ளிவிவரவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இலங்கையில் 2010ஆம் ஆண்டில் 2400 டொலராக இருந்த தலா வருமானம், கடந்த ஆண்டில் 2836 டொலராக உயர்ந்துள்ளதாகச் சனத்தொகை, புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் டி.சி.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, புள்ளி விவரங்களில் கூறப்படும் பொருளாதார வளர்ச்சியை உண்மையானதாக எடுத்துக் கொள்ள முடியவில்லை என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன தெரிவித்துள்ளார்.

**புள்ளி விவரங்களில் கூறப்படும் பொருளாதார வளர்ச்சியை உண்மையானதாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.**

ஒட்டுமொத்த ஏற்றுமதித்துறையும் பலவீனமடைந்துள்ளது. முதலீட்டாளர்களின் நம்பிக்கை குறைந்துள்ளது.

இருந்தபோதிலும், போர் முடிவுக்கு வந்தது பொருளாதாரத்தை முன்னேற்ற உதவியது. ஏற்றுமதித் துறையை அபிவிருத்தி செய்யாமல், புதிய முதலீடுகளை ஈர்க்காமல், பொருளாதார ஆதாயங்களை அடைய முடியாது.

இலங்கையின் ஒட்டுமொத்த பொருளதார நிலை தற்போது திருப்திகரமான நிலையில் இருந்து தொலைவிலேயே உள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

# 119 இக்கு 4 இலட்சம் அழைப்புக்கள்

கொழும்பு, ஏப்.8

பொலிஸ் அவசர சேவைப் பிரிவுக்கு 119 எனும் இலக்கத்தின் ஊடாக கடந்த வருடம் 4 லட்சம் அழைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் கிட்டத்தட்ட அரை வாசிக்கும் அதிகமானவை பொதுமக்களினால் ஏற்படுத்தப்பட்ட அழைப்புகளாகவே உள்ளன என்றுபொலிஸ் அவசரசேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற அழைப்புகளில் பொதுமக்கள் முறைப்பாடுகள், விசாரணை பற்றிய தகவல்கள், நடந்த சம்பவங்கள் பற்றித் திருப்திப்படுவதற்காகவும் மற்றும் நடந்த சம்பவங்கள் பற்றி விரிவான தகவல்களைப் பெற்றுவதற்காகவும் ஏற்படுபடுத்தப்பட்ட அழைப்புகளும் அடங்குகின்றன.

கட்டணம் எதுவும் இன்றி 119 எனும் இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி எவரும் முறைப்பாடு செய்யவும், தகவல் தெரிவிக்கவும் முடியும். 2004 நவம்பர் மாதம் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டபோது இலங்கையர் சிலரும் வெளிநாட்டவரும் இந்த இலக்கத்தின் ஊடாக முறைப்பாடு செய்திருந்தனர்.

தற்போது இந்தச் சேவை விரிவடைந்து அனைவருக்கும் தெரிந்த ஒன்றாக விளங்குகிறது. விபத்துச் சம்பவங்கள், கொலைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்றன உடனுக்குடன் 119 ஊடாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தலாம்.

இந்த முறைப்பாடுகளை யு.ஆர்.ரி., சி.ஐ.ரி.ஆர். என வகைகளுள் உள்ளடக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. கொலைகள், குழுக்களுக்கிடையிலான மோதல், தீ விபத்து மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் போன்ற முறைப்பாடுகள் யு.ஆர்.சி. வகையிலும் தொலைபேசி மூலமான மிரட்டல் அச்சுறுத்தல்கள் என்பன என்.யு.ஆர்.ரி. வகையிலும் உள்ளடக்கப்படுகின்றன.

போதைப் பொருள் கையாளுதல், மர்மமான கொலைகள் மற்றும் ஏதாவது சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதியான விசாரணை நடத்தவில்லை அல்லது நீதியான நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கருதுமிடத்து தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் சி.ஐ.ரி.ஆர் வகையிலும் உள்ளடக்கப்படுகின்றன. 119 மூலம் தொடர்பு கொள்பவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். தகவல்கள் தெரிவிப்பவர்களின் இரகசியத் தன்மை பேணப்படும் எனப் பொலிஸார்தெரிவித்தனர். (த-4)

# வெளிநாட்டு மாணவருக்கு பிரிட்டனின் புதிய விஸா விதிகள் நடைமுறைக்கு

கொழும்பு,ஏப்.8

ஐரோப்பிய ஒன்றியத்தைத் தவிர்ந்த ஏனைய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் பிரிட்டனில் கல்வி கற்பது தொடர்பான கடுமையான வீஸா விதிமுறைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் பிரிட்டனில் நடைமுறைக்கு வந்துள்ளன.

இனிமேல் பிரிட்டனில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது கல்வியைப் பூர்த்தி செய்த பின்னர் அங்கு தொடர்ந்தும் தங்கியிருக்க விரும்பினால், அரச அங்கீகாரம் பெற்ற தொழில் கொள்வோரின் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதுடன் வருடாந்தம் ஆகக் குறைந்தது 20,000 ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் பெறக்கூடிய தொழிலையும் கொண்டிருக்க வேண்டுமென்ற புதிய சட்ட விதி அமுலுக்கு வந்துள்ளது.

அத்துடன், அதிகளவுக்கு தொழில்தேர்ச்சி பெற்ற வேலையாட்களின் வருடாந்த தொகையையும் இருவருடங்களுக்கு முடக்குவதாக அரசு அறிவித்திருக்கிறது. 2014 வரை 20,700 சிறப்பு தொழில்தேர்ச்சி பெற்ற வேலையாட்கள் மட்டுமே அங்கு இருக்க முடியும்.

இதேவேளை, ஸ்திரமற்ற தன்மையை இந்த புதிய விதிமுறைகள் ஏற்படுத்துமென வர்த்தகத் துறையினரிடமிருந்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. எதிர்கால வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாகத் திட்டமிடுவதற்கும் இது நெருக்கடியை ஏற்படுத்துமென விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பிரிட்டனில் உள்ள வெளிநாட்டு மாணவர்கள் தமது கல்வியைப் பூர்த்தி செய்த பின்னர் இரு வருடங்கள் வரை தங்கியிருந்து தொழில்பார்க்க முடியும். ஆனால், இந்த முறைமையானது துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக அரசு கூறுகிறது.

பொருளாதார குடியேற்றவாசிகள் மாணவர் வீஸாக்க [illegible] அரசு கூறுகிறது. ஆனால், இந்த கடுமையான சட்டவிதிகள் பிரிட்டனுக்கு மாணவர்கள் வருவதைத் தடுத்துவிடுமென்று பல்கலைக்கழகங்கள் கவலை தெரிவிக்கின்றன. பொருளாதாரத்தையும் பாதிக்குமென அவை கூறுகின்றன.

வருடாந்தம் 9 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்ஸை வெளிநாட்டு மாணவர்கள் மூலம் வருமானமாகப் பல்கலைக்கழகங்கள் பெற்றுக் கொள்கின்றன. இதில் 6 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் கட்டணங்களாக மட்டும் பெற்றுக்கொள்ளப்படுகிறது. [illegible]ளுக்கு வரும் அதி[illegible] மாணவர்கள் வேலை செய்யவே வருகிறார்கள். படிப்பதிலும் பார்க்க வேலை செய்வதற்கே அவர்கள் வருகின்றனர். இந்தத் துஷ்பிரயோகம் முடிவுக்கு வர வேண்டுமென கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த குடிவரவுத் துறை அமைச்சர் டாமியன் கிறீன் கூறியுள்ளார்.

ஏப்ரல் 6 முதல் அதிகளவுக்கு தெரிவு செய்யப்படும் முறைமையே நடைமுறைப் படுத்தப்படுமென உள்துறை அமைச்சு அறிவித்திருந்தது. பிரிட்டனில் தங்கியிருந்து தொழில்நோக்கங்களுக்காக அதிகளவுக்கு திறமைவாய்ந்த சர்வதேச பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்க முடியுமென உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றுத் தொழில் கொள்வோரின் அங்கீகாரத்துடன் வேலையொன்றைப் பெற்றுக்கொண்டவருக்கு மட்டுமே பிரிட்டனின் எல்லை முகவரமைப்பு அங்கீகாரம் வழங்கும்.

அத்துடன் சம்பளம் 20 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ட்ஸாகவோ அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். இதன் அடிப்படையிலேயே பிரிட்டனில் தொடர்ந்து தங்கியிருந்து தொழில் செய்ய முடியும். இதன் மூலம் பிரிட்டனின் பொருளாதாரத்திற்கு அனுகூலம் ஏற்படும் என்று உள்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பொலிஸ் நிலையத்தில் விளையாட்டு விழா

பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நல்லுறவை வலுப்படுத்துவதற்கான விளையாட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் வழிப்படுத்தலில் நடைபெறும் இந்த விழாவில் பங்குகொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் இன்று தொடக்கம் பெயர் விவரங்களை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (11)

### இலங்கை வங்கியின் சேவை நிலையம்

வடமராட்சி,ஏப்.8

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையின் விரிவாக்க்ல் சேவை நிலையம் ஒன்று மிக விரைவில் கரணவாய் குஞ்சர் கடைச் சந்தியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த விரிவாக்கல் சேவை நிலையத்தை அமைப்பதற்கான பணிகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டதாக இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் தெரிவித்தார்.

(ம-8)

# மாதம் 7 லட்சம் லீற்றர் மது குடிக்கின்றனர் யாழ். மக்கள்

## நகர வாசிகளே பெரும் குடிகாரர்கள்

*யாழ்ப்பாணம், ஏப். 8*

***யாழ். மாவட்டத்தில் மாதாந்தம் சுமார் 6 லட்சத்து 91 ஆயிரம் லீற்றர் மதுபானம் விற்பனையாகிறது. ஏனைய இடங்களை விட யாழ். மதுவரிப் பரிசோதகர் பிரிவுக்குட் பட்ட பகுதியிலேயே அதிகளவில் விற்பனையாகிறது என்று யாழ். மாவட்ட மதுவரி திணைக்கள அதி காரி என்.சோதிநாதன் தெரிவித்தார்.***

மதுபானம் அதிகளவில் விற்பனை யாவது தொடர்பாக சோதிநாதனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாதாந்தம் சராசரியாக 2 லட்சத்து 82 ஆயிரம் லீற்றர் சாராயம் விற்பனையாகிறது. 4 லட்சத்து 9 ஆயிரம் லீற்றர் ஏனையவகை மது பானம் விற்பனையாகிறது. இதனுள் பியர், விஸ்கி, பிரன்டி, ஜின், ரம் எனப் பலவகைகள் உள்ளடங்குகின்றன.

யாழ். மதுவரி நிலையம் தவிர்ந்த ஏனைய மதுவரி நிலையங்களில் 30 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 35 ஆயிரம் லீற்றர் வரையான சாராயம் விற்பனை யாகின்றன. 55 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 60 ஆயிரம் லீற்றர் வரையான ஏனைய மதுபான வகைகள் விற்பனையாகின்றன.- எனத் தெரிவித்தார்.

யாழ்.மதுவரி நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் ஜனவரியில் ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 904 லீற்றர் மது பான வகையும், பெப்ர வரியில் ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 450 லீற்றர் மதுபான வகைகளும் விற்பனையாகியுள்ளன என்று பிரதம மதுவரிப் பரிசோதகர் என்.கிருபாகரன் தெரிவித்தார்.

சாராயம் ஜனவரியில் ஒரு லட்சத்து 77 ஆயிரம் லீற்றரும் பெப்ரவரியில் 82 ஆயிரத்து 775 லீற்றர் விற்பனையாகியுள்ளது. கள்ளு ஜனவரியில் 38 ஆயிரத்து 900 லீற்றரும் பெப்ரவரியில் 70 ஆயிரத்து 900 லீற்றரும் விற்பனையாகியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வரும் காலங்களில் மதுபான விற்பனை அதிகரிக்கின்றன. சுமார் 10 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 15 ஆயிரம் லீற்றர் வரையில் இத்தகைய காலங்களில் அதிகரித்து விற்பனையாகின்றது.

யாழ். மதுவரி நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் தென்னை பனை, மரங்கள் அதிகளவில் காணப்படுவதனால் அத்தகைய இடங்களில் கள்ளு விற்பனை அதிகளவில் இடம்பெறுகிறது. சாராயம் மற்றும் ஏனைய மது பான வகைகளின் விற்பனையை கள்ளின் விற்பனையும் தீர்மானிக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு ஆண் ஒருவர் 3 யுனிற் அற்கஹோலுக்கு அதிகமாகவும் பெண் ஒருவர் 2 யுனிற் அற்க ஹோலுக்கு அதிகமாகவும் அருந்துவார்களானால் அவர்களுக்கு ஈரல் பாதிப்பு உட்பட பல்வேறு நோய்கள் ஏற்படும் என்று வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

சாராயம் மற்றும் ஏனைய மது பானவகைகள் வேறுபட்ட அளவில் அற்கஹோல் அளவைக் கொண்டுள்ளன. அதனை அவதானிக்காது அளவுக் கதிகமாக மது அருந்தும் போது அருந்துபவர்களுக்குத் தெரியாமலேயே நோய் அவர்களைப் பற்றிக் கொள்கிறது.

தற்காலத்தில் வயது வந்தவர்களுக்கு நிகராக 21 வயதுக்குட்பட்டவர்களும் தாராளமாக மது பாவிக்கிறார்கள். கடைகளில் நின்று மது அருந்தாது ரின்கள், போத்தல்களாக வேண்டிச் சென்று வீதிச் சந்திகளில் வைத்து அருந்துகிறார்கள். இதனைச் சமூகத்தவர்கள் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் என்று அந்த வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4)

### பிரதேச சபை தலைவரின் வீட்டில் மலர் வளையம்

**உடுப்பிட்டியில் இனந்தெரியாதோர் அட்டகாசம்**

யாழ்ப்பாணம், ஏப்.8

கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசுவின் வீட்டுக்கு முன்பாக இனந்தெரியாத நபர்களால் மலர் வளையம் வைக்கப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சபைத் தலைவரை நேற்று சனிக்கிழமை தொடர்பு கொண்டு கேட்டபோது, நேற்று வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில் எனது வீட்டின் முன்பாக மலர் வளையம் வைக்கப்பட்டிருந்தது. அந்த மலர் வளையத்தை வெளியே நின்று வீட்டு வளவுக்குள் யாரோ வீசிவிட்டு சென்றுள்ளனர். அது வீட்டு ஜன்னலில் பட்டு அதன் கண்ணாடி உடைந்துள்ளது. வீட்டு வாசலில் கற்களும் காணப்பட்டன. இந்த விடயம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸாரை தொடர்பு கொண்டு கேட்டபோது, கரவெட்டிப் பிரதேச சபை தலைவர் தனது வீட்டில் மலர் வளையம் வைக்கப்பட்டது தொடர்பாக முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் எனத் தெரிவித்தனர்.

(10-3-15)

### அச்சுவேலி தொழில்பேட்டைக்கு இந்தியா 174 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், ஏப்.08

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் புனரமைப்புக்காக இந்திய அரசு 174 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

கைத்தொழில் பேட்டையிலுள்ள 25 ஏக்கர் பகுதி இந்த நிதி மூலம் மிக விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. ஓரிரு மாதங்களில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இன்னும் 12 மாதங்களில் புனரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளக வீதி, குடிதண்ணீர் வழங்கல், மின்சார விநியோகம், வடிகால் புனரமைப்பு, கழிவு நீர் அகற்றல் முகாமைத்துவம், வேலி அமைத்தல் உள்ளிட்ட உட்கட்டமைப்புப் பணிகள் இந்த நிதி உதவி மூலம் மேம்படுத்தப்படவுள்ளன.

கடந்த 2011ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது நிதி நன்கொடை வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று இலங்கை - இந்தியா அரசுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்டன. அதே ஆண்டில் டிசம்பர் மாதம் 9ஆம் திகதி இந்திய அரசுக்கும் 'யுனொப்ஸ்' நிறுவனத்துக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இந்திய அரசினால் வழங்கப்படும் நன்கொடைக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் இது வாகும்.

கைத்தொழில் பேட்டை புனரமைப்புக்கு 200 மில்லியன் தேவை எனக் கணக்கிடப்பட்டது. மிகுதி 26 மில்லியன் ரூபாவை வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து இலங்கை அரசு ஒதுக்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அமைச்சின் செயலாளர் எஸ். சிவஞானசோதி தெரிவித்தமை வருமாறு:

இலங்கை அரசின் நிதி மூலம் செய்யப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் யாவும் நிறைவு பெறும் நிலையில் உள்ளன. கைத்தொழில் பேட்டையில் நிர்வாகக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு கிணறுகள் சுத்திகரிக்கப்பட்டுள்ளன. மிதிவெடி அகற்றப்பட்டுள்ளது. நிலம் சுத்திகரிப்பு, குடிதண்ணீர் சோதனை, மண் சோதனை சூழலியல் தொடர்பான ஆரம்ப சோதனை என்பன இடம்பெற்றுள்ளன.

இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய உட்கட்டமைப்பு அபிவிருத்தியே இனி இடம்பெற வேண்டும். அது மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் இந்தப் புனரமைப்பு வேலைகளுக்கான ஒப்பந்தகாரர்கள் நியமிக்கப்படவுள்ளனர் - என்றார்.

(த-3)




Digitized by Noolaham Foundation
noolaham.org

# ஜெனிவா தீர்மானம் தொடர்பில் ஹெல உறுமய 5 அம்சத் திட்டம்

### ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுமாம்

கொழும்பு, ஏப்.8

இலங்கை மீதான ஜெனிவா தீர்மானத்துக்கு எவ்வாறு முகம்கொடுப்பது என்பது தொடர்பில் அரசிடம் நிலையான திட்டமில்லை எனத் தெரிவித்துள்ள அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, இது தொடர்பில் தாம் ஐந்து அம்சத் திட்டங்கள் அடங்கிய யோசனைகளைத் தயாரித்துள்ளதாகவும், இம்மாத இறுதியில் அதனை வெளியிடவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது : -

ஜெனிவாவில் அமெரிக்கா எமது நாட்டுக்கு எதிராகத் தீர்மானத்தை நிறைவேற்றியதோடு அதனை அடிப்படையாக வைத்து இன்று எம் மீது பல அழுத்தங்களை பல்வேறு வழிகளில் பிரயோகித்து வருகின்றது. எமது நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளாத தீர்வுகளைத் திணிக்க முயல்கின்றது.

ஆனால் இதற்கு முகம் கொடுப்பதற்கு அரசிடம் நிலையான கொள்கையுடனான திட்டம் எதுவும் இல்லை. எனவே அரசின் பங்காளிக் கட்சியான நாம் ஜனநாயகம், நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் நல்லாட்சி, ஒற்றையாட்சியைப் பாதுகாக்கும் வகையில் யோசனைகளைத் தயாரித்துள்ளோம்.

இதன் மூலம் அமெரிக்காவின் சவாலை வெற்றி கொள்ள முடியும். இந்த யோசனைகள் அடங்கிய அறிக்கை இம் மாத இறுதியில் மகாநாயக்க தேரர்களிடம் கையளித்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராபக்ஷவிடமும் கையளிக்கப்படும் -என்று கூறியுள்ளது. (த)

# திருமலையிலும் இளைஞர் வெள்ளை வானில் கடத்தல்

எடுப்பதற்காகச் சென்ற போதே இவர் கடத்தப்பட்டுள்ளதாக இளைஞனின் தாயார் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இளைஞன் கடத்தப்பட்டுள்ளதை திருகோணமலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உறுதிப்படுத்தியடன். இளைஞனின் கடத்தல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக திருகோணமலை பொலிஸ் பொறுப்பதிகாரி, உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு நவகம்புர பகுதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் ஆனந்தன் என்ற குடும்பஸ்தர் கடந்த புதன்கிழமை வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-3)

# காந்தி சிலை உடைப்புக்கு இந்தியா கண்டனம்

இந்தியாவின் கண்டனத்தைத் தொடர்ந்து சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை அரசு விசாரணைக்கு உத்தர விட்டுள்ளதாக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

''மட்டக்களப்பு நகரில் பல்வேறு முக்கிய சிலைகள் உடைக்கப்பட்டமை குறித்து வெளிவிவகார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்துமாறும் குற்றவாளிகளையும் நோக்கங்களையும் இனங்காணுமாறும் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்''- என வெளியுறவுத்துறை அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது. (த)

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

றம் ஏற்படுத்தப்பட மாட்டாது எனவும், பத்து அமைச்சர்களின் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாற்றங்கள் தொடர்பில் ஏற்கனவே பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார். இதேவேளை, அமைச்சின் செயலாளர் பதவிகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. (த)

# குடாநாட்டில் நேற்று தாங்கமுடியாத சூடு

அளவிலேயே வெப்பநிலை காணப்பட்டது. - இவ்வாறு யாழ்.திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்கள கடமைநேர அதிகாரி பி.பிரதீபன் தெரிவித்தார்.

இந்தமாத முதல் மூன்று நாள்களும் குறைந்தளவான மழை வீழ்ச்சி காணப்பட்டாலும் வெப்பநிலை முதல் இரண்டு நாள்களும் அண்ணளவாக 34 பாகை செல்சியஸ் நிலவியுள்ளது. அதற்குப் பின்னர் நேற்றுமுன்தினம் வரை அண்ணளவாக 33 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவியது. நேற்று இது 34.6 பாகை செல்சியஸ் ஆக அதிகரித்துக் காணப்பட்டது.

கடந்த மாதம் அதியுயர் வெப்பநிலை 35.5 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது. சராசரியாக 28.7 பாகை செல்சியஸ் நிலவியது.

2011 மார்ச் மாதத்தில் அதிகூடிய வெப்பநிலை 27.7 பாகை செல்சியஸூம் குறைந்த வெப்பநிலையாக 19.2 பாகை செல்சியஸூம் சராசரியாக 29 பாகை செல்சியஸூம் நிலவியது.

2010 இல் மார்ச் ஏப்ரல் மாதங்களில் வெப்பநிலை தற்போதைய வெப்பநிலையைப் போன்று அதிகளவாக இருந்துள்ளது. 2010 மார்ச்சில் அதி கூடிய வெப்பநிலையாக 36 பாகை செல்சியஸூம் குறைந்தளவாக 31.2 பாகை செல்சியஸூம் நிலவியுள்ளது. 2010 ஏப்ரலில் உயர் வெப்பநிலை 35.1 பாகை செல்சியஸ் ஆகவும் குறைந்தளவாக 24.6 பாகை செல்சியஸ் ஆகவும் பதிவாகியுள்ளது என பிரதீபன் தெரிவித்தார். (ஒ-4)

# நவநீதம்பிள்ளை இலங்கை வரார்

அனுப்பி நிலைமையை ஆராய்ந்த பின்னரே தனது பயணம் திட்டப்படும் என நவநீதம் பிள்ளை தெரிவித்திருந்தார். அவரது அந்த திட்டத்தை அரசு நிராகரித்துள்ளமையே, ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் பயணம் இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பிரதிநிதிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் வரையில் தமது பயணத்தைத் தொடரப் போவதில்லை என நவநீதம் பிள்ளை கூறியுள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (த)

# பேச்சில் மூன்றாம் தரப்பை அரசு ஒரு போதும் ஏற்காது

பேராசிரியர் ரஜீவ விஜேயசிங்கவிடம் கேட்டபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சொல்வதைப் போன்று உள்நாட்டுப் பிரச்சினையை சகல கட்சிகளுடனும் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். வெளிநாடுகளுக்கு எமது பிரச்சினைகள் ஒழுங்காகத் தெரியாது.

எமது நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நாட்டைப் பார்த்த பின்னர் மக்கள் ஐக்கியமாக இருப்பதாகச் சொல்கின்றனர். நோர்வே அரசுகூட இப்போது விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்கின்றது.

எனவே எங்களது பேச்சுக்கு மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் என்பது பொருத்தமானதாக இருக்காது. மேலும் அரசினுள்ளும் இருக்கும் சிங்கள கடும்போக்காளர்களால் அரசுக்கு அழுத்தம் இருப்பதைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழுத்தம் இருக்கலாம்.

அந்த அழுத்தம் காரணமாகவே பேச்சுக்களில் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை அவர்கள் கோரியிருக்கலாம். அதனை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (த-5)

# பரிந்துரைகளை செயற்படுத்த கால வரையறை அவசியம்

நடைமுறைப் படுத்தக்கூடாது. பரிந்துரைகளை நாம் நிச்சயமாக நடைமுறைப்படுத்தியாக வேண்டும். இது எமது கடமை.

ஆனால் அதை அமெரிக்கா அல்லது ஐ.நா. மனிதஉரிமைகள் சபையின் அழுத்தத்தின் பேரில் செய்யக் கூடாது.

அரசு முதலில், பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு என்ன செய்யப் போகிறது என்பதற்கான ஒரு கால எல்லை ஒன்றை வகுக்க வேண்டும். அதன் பின்னர் அதன் உள்ளடக்கங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (த)

# தீர்வை வழங்கினால் தனி ஈழம் கேட்கார்

வுக்குழுவின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம், நல்லிணக்க ஆணைக்குழு விவகாரம் மற்றும்

சர்வதேச நாணய நிதியத்தின் கடன்தொகை ஆகியவை குறித்து கருத்து வெளியிடும் போதே ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நல்லிணக்க ஆணைக் குழுவை ஜனாதிபதியே நியமித்தார். அந்தக் குழுவும் ஜனாதிபதியிடமே அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை அரசே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அப்படியாயின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் அரசு தற்போது குறை கூறுவது ஏன்? நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய பல விடயங்கள் உள்ளன. ஆனால், தேசிய பிரச்சினைக்குத் தெளிவான தொரு தீர்வுத்திட்டம் அதில் இல்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணாமல் அதை அப்படியே கைவிடுவதற்குத்தான் அரசு தெரிவுக் குழு விடயத்தில் துடிதுடித்து நீலிக்கண்ணீர் வடிக்கின்றது. இனப்பிச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இதற்கு முன்னரும் எத்தனை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவற்றால் கண்ட பயன்தான் என்ன? காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியமே தெரிவுக் குழு.

இனப்பிரச்சினைக்கு மஹிந்த அரசின் தீர்வுத் திட்டம் என்ன என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். மகிந்த அரசு வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி, அங்கு வாழும் மக்கள் எதிர் நோக்கும் பாரதூரமான பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வை வழங்கினால் தமிழ் மக்கள் தனிஈழத்தைக் கோரப் போவதில்லை.

அரசு காலத்தைக் கடத்தாமல் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்தே அரசு கடன் பெற இணங்கியுள்ளது. அரசு இந்த விடயம் தொடர்பில் கூறும் கதையெல்லாம் அப்பட்டமான பொய்யாகும்-என்றார்(த)

# 18 ஆம் திகதி வடக்கே வருகிறது இந்தியக் குழு

அரசின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களை மக்களிடம் கையளிக்கவுள்ளனர். முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களை அவர் கையளிப்பார். முல்லைத்தீவு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஐம்பது வீடுகளையும் பயனாளிகளுக்கு வழங்குவர். திருத்தி அமைக்கப்பட்ட 6 பாடசாலைகளின் கையளிப்பு நிகழ்வும் நடக்கவுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் இந்தக் குழுவினர் நேரில் பார்வையிடலாம் எனத் தெரிய வருகின்றது.

மறுநாள் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரும் குழு, இந்திய அரசின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் காங்கேசன் துறை துறைமுக புனரமைப்பு பணிகளையும் நேரில் பார்வையிட்டனர்.

அன்றையதினம் பிற்பகல் வேளை வடக்கு, மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியையும் இந்தக் குழுவினர் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு மக்கள் பிரதிநிதிகளையும் இந்தக் குழுவினர் சந்திக்கலாம் எனத் தெரிய வருகின்றது. (ஒ-3)

# ஜே.வி.பி. அதிருப்திக் குழுத் தலைவர் இரவோடிரவாக கொழும்பில் கடத்தல்

டுள்ளனர் என்று அந்தக் குழுவின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த ஜனக சுதார உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவினர் புதிதாக ஆரம்பிக்கவுள்ள முற்போக்கு சோசலிசக் கட்சியின் முதலாவது மாநாடு தொடர்பாக கட்சி உறுப்பினர்களுடன் கலந் துரையாடிவிட்டுத் திரும்பிய சிறிது நேரத்தில் இவர்கள் இருவரும் கடத்தப்பட்டுள்ளனர்.

ஜெனிவாவில் இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு வாரங்களே கடந்துள்ள நிலையில் நடந்துள்ள இந்தக் கடத்தல்கள் மனித உரிமை ஆர்வலர்களை பேரதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

''பிரேம்குமார் குணரட்ணம் கிரிபத்கொடவில் உள்ள அவரது வீட்டில் வைத்து இரவு 11 மணியளவில் கடத்தப்பட்டுள்ளார். குணரட்ணத்தின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த குழுவினர் வான் ஒன்றில் அவரைக் கடத்திச் சென்றுள்ளனர். அதே நேரத்தில் நேற்றுமுன்தினம் இரவு பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த எமது கட்சியின் மகளிர் பிரிவுத் தலைவி திமுது ஆட்டிகலவும் கடத்தப்பட்டுள்ளார்'' என்றார் ஜனக சுதார. அரசியல் கூட்டம் முடிந்த பின்னர் பிரேமகுமார் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் திமுதுவை தலவத்கொட பஸ் நிலையத்தில் இறக்கி விட்டுள்ளனர். அதன் பின்னரே அவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

''இந்தக் கடத்தல் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வான் ஒன்றில் வந்த குழுவில் நான்கு அல்லது ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் இருந்துள்ளனர். அவர்கள் முன்னர் திமுது ஆட்டிகலவைக் கடத்திய பின்னர் பிரேமகுமார் குணரட்ணத்தின் வீட்டுக்குச் சென்று அவரையும் கடத்தியுள்ளனர்.'' என்றார் அவர்.

இந்தக் கடத்தல் தொடர்பாக பிலியந்தல மற்றும் கொட்டாவ பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், சந்தேகத்தில் இருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்த போதும் அது தொடர்பில் மேலதிக விவரங்களைஅறியமுடியவில்லை எனவும் ஜனக சுதார கூறினார்.

இதுகுறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகனவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது ''அவர்களைப் பொலிஸார் கைது செய்யவில்லை. இந்த இருவரும் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம். மேலதிக விவரங்களை இப்போது கூற முடியாது.'' என்று தெரிவித்தார்.

ஜே.வி.பி. அதிருப்திக் குழுவின் முதல் மாநாடு கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்த நிலையில் இந்த இருவரும் கடத்தப்பட்டுள்ளனர்.

பிரேம்குமார் குணரட்ணம் தலைமையிலான ஜே.வி.பி. அதிருப்திக் குழுவினர் மக்கள் போராட்ட இயக்கத்தையும், முற்போக்கு சோசலிசக் கட்சியையும் ஸ்தாபித்தனர். திமுது ஆட்டிகல சுதந்திரத்திற்கான பெண்கள்இயக்கம்எனும்புதியஅமைப்பின் தலைவியாவார். (த-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இன சமத்துவமும் சகவாழ்வும் இலங்கைத் தீவில் சாத்தியமா?

கிழக்கு இலங்கையின் பிரதான நகர்களில், பெருநகர்களில் ஒன்றான மட்டக்களப்பில், வெவ்வேறு இடங்களில் நிறுவப்பட்டிருந்த பெரியார்களின் உருவச் சிலைகள் ஒரே வேளையில் திட்டமிட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளன.

ஒருசில மீற்றர்கள் இடைவெளிகளில் அமைந்திருந்த நினைவுச் சிலைகளை சேதமாக்கியதன் மூலம் இன, மத வெறியர்கள், அவர்கள் செய்ய விளையும் காட்டுமிராண்டித்தனமான குறிக்கோள்களை நிறைவேற்றி வெற்றி கண்டுள்ளனர்.

அதிகாலை வேளையில் வன்மம் நிறைந்த இந்த அக்கிரமம் நடத்தப்பட்ட இடங்களில் இருந்து சில கிலோ மீற்றர் தூரத்திலேயே, நகரின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்புள்ள பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. அதுவும் குறிப்பிட்டுக் கூறவேண்டிய வினோதமே!

இந்திய உபகண்டத்துக்கு அகிம்சை வழியில் விடுதலை வாங்கித்தந்த அண்ணல் மகாத்மா காந்தியின் உருவச்சிலையின் தலையைக் கொய்வதில் திருப்தியும் இன்பமும் கண்ட இனவெறியர்கள், சாரணியத்தின் நிறுவுநர் பேடன் பவல், யாழ் நூல் தந்த வித்தகர் சுவாமி விபுலானந்தர், பெருந்தமிழ்ப் புலவன், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரின் உருவச் சிலைகளையும் உடைத்து நாசமாக்கி உள்ளனர். ஜெனிவாவில் இந்தியா இறுதி நேரத்தில் தனது முடிவை மாற்றியதற்கு, காந்தி சிலை உடைப்பு ஒரு படிப்பினை என்று கருதுவது தப்பாகாது.

இதே மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர், (ஜனவரி பத்தாம் திகதியன்று) ஆரையம்பதியில் அமைந்திருந்த சர்வமதங்களையும் சமமாக நோக்குமாறு போதித்த, இந்து மதத்துறவி சுவாமி விவேகானந்தரின் உருவச் சிலையின் தலை, கைகால் பகுதிகள் உடைத்துச் சிதைக்கப்பட்டன. அவரது சிலை அமைந்திருந்த இடத்தில் புதிய உருவச் சிலை கடந்த புதன்கிழமையே மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

அதற்கு முன்னர், கடந்த வருடம் ஒக்ரோபர் முப்பதில் ஈழத்துக் காந்தி தந்தை செல்வாவின் உருவச் சிலை திருகோணமலை நகரில் கழுத்துத் துண்டாடப்பட்டு, கொய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கில் நடத்தப்படும் அரசியல் மற்றும் சமயப் பெரியார்களின் சிலை உடைப்புச் சம்பவங்கள் முழுக்க முழுக்கத் திட்டமிட்டு நடத்தப்படும், உள்ளந்தரங்கமான நோக்கம் கொண்டது என்பதில் ஒருதுளி சந்தேகமும் இருக்க முடியாது.

மூவின மக்களும், மும்மதங்களைச் சேர்ந்த மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில், அதன் பெருநகரங்களில் இலகுவில் இன, மத குரோதத்தை உருவாக்கி அதில் குளிர் காய்ந்து கொள்ளலாம்; அதனூடு அங்கு நிலவும் இன, மத சௌயன்யத்தை சின்னாபின்னமாக்கி, தமது வேற்றுமை கொள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற நயவஞ்சகம் மிகுந்த திட்டங்களுக்கான ஆரம்பப் புள்ளியாகவும், கிழக்கில் நடத்தப்படும், தமிழ் மக்களின் போற்றுதலுக்கு உரிய பெரியோர்களின் சிலைகளைச் சிதைக்கும் வெறியாட்டங்களை இனங்காட்டலாம்.

இவை, தமிழ் மக்களின் உணர்வுகளைக் காலால் மிதித்து, இனங்களிடையே பிளவுகளையும் பிணக்குகளையும் உண்டாக்கி, தமது உள்ளார்ந்த நாசகாரத் திட்டங்களை நடைமுறையாக்குவதற்கும், தமது இலக்குக்குச் சாதகமான நிலையைத் தோற்றுவிப்பதை வெளிப்படையாகத் தோன்றாத வகையில் மேற்கொள்வதையும் நோக்காகக் கொண்டவை என்பதிலும் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

வரலாற்றைத் திரிபு படுத்தி, உண்மைகளுக்குப் பதிலாகப் பொய்மைகளை உட்சேர்க்கைகளாக்கி, சரித்திர உண்மைகளை, அதிகார வர்க்கத்தினரின் திட்டங்களுக்கும், நாசகார வரைபுகளுக்கும் உகந்த விதத்தில் மாற்றி, வரலாற்றைத் தீண்டும் அடிப்படை நோக்குடனேயே இத்தகைய செயற்பாடுகள் முளைகொள்ளச் செய்யப்படுகின்றன.

ஏற்கனவே இப்பத்தியில் ஓரிரு மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்டது போன்று, சரித்திர உண்மைகளை, அரசியல் வரலாறுகளை மறைத்து விடும் சூழ்ச்சியின் ஓர் அங்கமாகவும் இவற்றை நோக்கலாம், கருதலாம்.

மேலும் தமிழர்கள் தங்களுக்கெனப் பிரதேசங்கள் உண்டென உரிமை கொண்டாடவோ, அங்கு தமது தனித்துவங்களைப் பேணவோ ஒரு துளியும் இடம் தரக்கூடாது என்ற வன்மத்துடன் சிலை உடைப்புகளுடன் ஓர் இன ஒடுக்கல் அத்தியாயம் தொடரப்படுவதாகவும் கருத இடமுண்டு.

அதன் முன்னோட்டமாக, வடக்கில் புதிது புதிதாக ஆலய மற்றும் தேவாலயச் சூழல்களில் திடீர் திடீரென புத்தர் சிலைகள் தோண்டி எடுக்கப்படும் கைங்கரியங்களும் வெற்றிகரமாக நடந்தேறி வருகின்றன.

இத்தகைய புதிய மாற்றங்கள் வெறுமனே புத்தர் சிலைகளைத் தோண்டி எடுப்பதோடு நின்று விடாது. புதிதாக எழுதப்படும் மகாவம்சத்தில் பின்னிணைப்பு அதிகாரங்களாகச் சேர்க்கப்பட்டாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. வன்னிப்பிரதேசத்தை மிக இலகுவாகப் பௌதிக ரீதியில் - நில உடைமையில் - மாற்றங்களைச் செய்வதற்கும் இனப்பரம்பலை (Demography) இலகுவாக மாற்றி அமைப்பதற்கான உத்திகள் முன்னெடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

மொத்தத்தில் பெரியார்களின் சிலை உடைப்புகள் வெவ்வேறு உருமாற்றங்களில் அரங்கேறினாலும் அனைத்துலகமும் அதன் தலைவர்களும் அதைத் தட்டிக்கேட்க முன்வருவார்களா, வரத்தான் இயலுமா?

இந்த இலட்சணத்தில் இன சமத்துவமும், சகவாழ்வும் இந்த நாட்டில் சாத்தியமாகும் என்று கனவு தானும் காண முடியாத நிலை, வெளிப்படையாகவும், சில கட்டங்களில் அல்லது சந்தர்ப்பங்களில் உள்ளூரவும் அரங்கேறி வருகின்றன. எவராலும் தடுக்க முடியாத பக்க பலத்துடன் நடந்தேறுகிறது என்று கொள்வதில் என்ன தப்பு?

# முதலாம் தவணைக்கான பாடத்திட்டம் பாடசாலைகளில் பூர்த்தியாகவில்லை

## பெற்றோர் தரப்பில் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.8

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகள் உள்ளிட்ட அனேகமான பாடசாலைகளில் முதலாம் தவணைக்குரிய பாடத் திட்டம் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாமை தொடர்பாக மாணவர்களும் பெற்றோர்களும் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

முதலாம் தவணை இறுதியில் பாடசாலைகளில் இடம்பெற்ற பெற்றோர்கள் சந்திப்பின்போது மாவட்டத்திலுள்ள 90 வீதமான பாடசாலைகளில் பெற்றோரினால் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

முதலாம் தவணைக்குரிய பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சைகள் இடம் பெற்றுள்ளன.

இதன் காரணமாக மாணவர்களால் திருப்திகரமான முறையில் வினாத்தாள்களை எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு பரீட்சை முடிவுகளின் அடைவு மட்டம் எதிர்பாராத விதமாகக் குறைவடைந்துள்ளது.

அநேகமான பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் மாணவர்கள் பெற்றுள்ள புள்ளிகள் மிகக் குறைவாகவே உள்ளன. பாடசாலை மட்டத்திலேயே முதலாம் தவணைப் பரீட்சைகள் இடம்பெறுவது வழமை. பாடசாலைகளினால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களையே அந்தந்தப் பாடசாலை மாணவர்களால் எதிர்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாடத்திட்டம் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத நிலையில், முதலாம் தவணைப் பாடப் பரப்புகளை உள்ளடக்கியதாக வினாத்தாள்களைப் பாடசாலைகள் தயாரித்ததன் காரணமாகவே மாணவர்களால் திருப்திகரமான புள்ளிகளைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தைப் பாடசாலைகளின் நிர்வாகங்களுக்கு மாணவர்களின் பெற்றோர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது குறித்து அவர்கள் வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக் குழுவின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளதாக அந்தக் குழுவின் உறுப்பினர் இரா.செல்வவடிவேல் தெரிவித்தார்.

பாடசாலைகளில் பாட வேளையின் போது இணைப் பாடவிதான செயற்பாடுகள் இடம்பெறுகின்றமையே தவணைக்குரிய பாடத்திட்டம் நிறைவு செய்யப்படாமைக்குரிய முக்கிய காரணங்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது. ஒரு சில பிரபல பாட சாலைகளில் விளையாட்டுப் போட்டி இடம்பெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னரே, பாடவேளை முழுவதும் மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் நிற்கின்றனர். முதலாம் தவணையிலேயே இணைப் பாட விதானச் செயற்பாடுகள் அடுத்தடுத்து இடம்பெறுவது வழமையாகும்.

இந்த இணைப்பாட விதானச் செயற்பாடுகள் பாட வேளை தவிர்ந்த நேரங்களில் இடம்பெற வேண்டும். அதன்மூலமே பாடத் திட்டத்தை உரிய முறையில் நிறைவு செய்ய முடியும் எனப் பெற்றோர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

இதேவேளை, முதலாம் தவணைக்குரிய பரீட்சைகள் பாடசாலைகளால் நடத்தப்படுவதைத் தவிர்த்து கோட்ட மட்டத்தில், வலய மட்டத்தில் இடம் பெற வேண்டும் எனவும் பெற்றோர்கள் தரப்பில் மேலும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் இடம் பெற்ற சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வடக்கு மாகாணம் இறுதியிடமான ஒன்பதாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-3)

# 50 வீதத்துக்கும் குறைவானோரே ஆங்கிலப் பாடத்தில் சித்தி

யாழ்ப்பாணம்,ஏப்.8

சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 50 வீதத்துக்கும் குறைவானவர்களே ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைகின்றனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் இரண்டு லட்சத்து 70 ஆயிரத்து 32 மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அவர்களில் 44.57 வீதத்தினர் மட்டுமே ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்துள்ளனர்.

இதே போல் கடந்த 2010 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் 42.36 வீத மாணவர்களும், 2009 ஆம் ஆண்டு பரீட்சையில் 37.62 வீதமான மாணவர்களுமே ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்துள்ளனர்.

பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான பிரிவு மேற்கொண்ட பகுப்பாய்வு அறிக்கை மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. இந்த அறிக்கையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் சித்தி வீதமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணித பாடத்தில்,2009 இல் இடம்பெற்ற பரீட்சையில் 50.98 வீதமான மாணவர்களும், 2010 இல் 30.38 வீதமான மாணவர்களும், 2011 இல் 55.33 வீதமான மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

அதே போல், விஞ்ஞான பாடத்தில் 2009 இல் 48.27 வீதமானவர்களும்,2010 இல் 60.38 வீதமானவர்களும், 2011 இல் 55.33 வீதமானவர்களும் சித்தியடைந்துள்ளனர். (ம-3)

# வாகனத்தால் முறிந்தன மின்கம்பங்கள்

அளவுக்கதிகமான உயரத்தில் பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனம் வீதியின் குறுக்கே சென்ற மின்சாரக் கம்பியில் சிக்கி இழுத் ததில் இரு மின்சாரக் கம்பங்கள் முறிந்தன. இதனால் மின் தடை ஏற்பட்டது.

அண்மையில் பளை முல்லையடியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மின்சாரம் தடைப்பட்டதால் வாகனத்தில் சிக்கியிருந்த மின்கம்பியினை அகற்றிவிட்டு வாகனச் சாரதி நழுவி விட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக இலங்கை மின்சார சபையினர் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-9)

# தேசிய இலக்கியப் போட்டிக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம்,ஏப். 8

தேசிய இலக்கிய விழாவை முன்னிட்டு பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டப் போட்டிக்கான ஆக்கங்கள் பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

சிரேஷ்ட, கனிஷ்ட, திறந்த பிரிவுகளில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவுகளில் கட்டுரைப் போட்டி கவிதைப் போட்டி, கையெழுத்துப் போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

திறந்த பிரிவில் பாடல் ஆக்கம் நாட்டார் கலை மற்றும் இலக்கிய விவரணப் போட்டி என்பன இடம் பெறவுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை தமது பிரதேச செயலர் அலுவலகங்களில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திறந்த பிரிவில் பாடல் ஆக்கப் போட்டியில் பங்கு பற்றும் போட்டியாளர்கள் தமக்கு விரும்பிய தலைப்பின் கீழ் பாடல் ஆக்கத்தை முன் வைக்கமுடியும்.

திறந்த பிரிவில் பங்குபற்றும் நாட்டார் கலை கற்றல் போட்டியாளர்கள் தமது பிரதேசத்தை சேர்ந்த 10 கிராமப் பெயர்கள் குறித்த விவரணங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். திறந்த போட்டியில் பங்குபற்ற விரும்பு பவர்கள் தமது ஆக்கத்தை எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் பாடசாலை மாணவர்களுக்கான கனிஷ்ட, சிரேஸ்ட பிரிவினர் தமது ஆக்கங் களை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி முன்னர் அனுப்பி வைக்கு மாறு கோரப்பட்டுள்ளது. (ம-13-253)

# புலோப்பளைக்கு மின் விநியோகம்

பளை பிரதேச புலோப்பளைக் கிராமத்துக்கு லக்ஸபான மின்சாரம் விநியோக ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம் பெறும்

[illegible] வழங்கப்பட்டதையடுத்து இந்தக் கிராமத்துக்கு மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையினர் கூறியுள்ளனர். (ம-9)

# விநாயகர் விக்கிரகம் திருட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.8

நாகர்கோவில் வடக்கு கௌதன்துறைப்பிள்ளையார் கோயில் உள்ள எழுந்தருளிப்பிள்ளையார் விக்கிரகம் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இந்தக் கோயில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் பூசை, வழிபாடு நடைபெறுவது வழக்கமாகும். கோயில் குருக்கள் வழமைபோல் கடந்த வெள்ளிக்கிழமை பூசை செய்வதற்காகச் சென்றிருந்த போது இவ்விக்கிரகம் திருட்டுப் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

இக்கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு விக்கிரகங்கள் யாவும் தனியான அறையில் வைக்கக்கப்பட்டு பூசை செய்யப் பட்டு வந்தது.

குருக்கள் பூசை செய்வதற்காக சென்ற போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டு விக்கிரகங்கள் வைக்கப் பட்டிருந்த பூட்டிய அறை திறந்து காணப்பட்டதாகவும் எழுந்தருளி பிள்ளையார் விக்கிரகம் காணாமல் போயிருந்ததாகவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கோயில் பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Study & Work in UK

PRIFYSGOL glyndŵr UNIVERSITY www.glyndwr.ac.uk

**Truly Exceptional**

Creative Industries, Media and Performance
Natural and Built Environment | Management and Business
Early Childhood Studies | Electrical Engineering | Computing
Education | Health Sciences | Aeronautical and Mechanical Eng
Humanities | Theology | Materials and Analytical Science
Society and Community | Sport and Exercise Sciences

**Free Accommodation included with the tuition fee**
**IELTS Not Compulsory**
**Undergraduate Fees Starting From £4,000**
**Postgraduate Fees Starting from £9,000**
**Final year Entry to the BTEC HND students**
*Conditions Apply

**Australia / New Zealand / UK / USA / Swiss**
**Malaysia / Singapore / Germany / Canada**

Free University Guidance | Free Visa Guidance

தொடர்புகளுக்கு → 077 3013060

iCS Study Abroad
107 B -1/1, Galle Road, Colombo-06.
(Opposite to Colombo plaza NOLIMIT.)
E-Mail: info@icslanka.com
www.icslanka.com
434 3322


## கண்ணீர்க் காணிக்கை



திருச்செல்வம்
றொபேட்
(ஆசிரியர் பரியோவான் கல்லூரி)

அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சின்ராசா குடும்பத்தினர் (லக்ஸ் மாலா)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



*அமரர் ஐயம்பிள்ளை*
*கந்தையா*

*திதி : 08.04.2012 (மண்கும்பான்)*

அன்பே ஆருயிரே - ஐயா
பாசத்தின் உறைவிடமே - நீ
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
மாறாது உம் நினைவுகள் - என்றும் எம்
நெஞ்சில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
மண்கும்பான் வெள்ளப்புற்றடி வீரகத்தி
விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

*பிறப்பு:*
*15★05★1933*
இறப்பு
*21★04★2004*

*இல. 9, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

### வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவிலில் K.K.S வீதியிலிருந்து மேற்குப் பக்கமாக 150 யார் தொலைவில் 5 அறைகள் 2 குளிய லறைகள் கொண்ட வீடு உடனடியாக வாடகைக்கு [illegible] தொடர்பு: 075 0697395, 077 8245557

### காணி விற்பனை

வடமராட்சி மாலி சந்தியிலிருந்து, 150 மீற்றர் தூரத்தில் கண்டாவத்தை அல்வாய் றோட்டின் அருகில் 2¼ பரப்புக்காணி பனைகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 021 2263769, 011 2610915

### காணிகள் விற்பனை

கடற்கரை யாழ். வீதி, திக்கம் சந்திக்கு அருகில் இரு காணிகள் முறையே 2 பரப்பு, 1½ பரப்பு விற் பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 9522139

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி, இருபாலை சந்திக்கு அண்மையில் நன்னீர் வசதியுள்ள 30 பரப்புக்காணி விற்பனைக் குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு : 071 8175820
077 7828209

### வீடு வளவு விற்பனைக்கு

யாழ். சித்தங்கேணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு அரசடி சந்திக்கு அருகில் கிணற்றுடன் 6 பரப்பு காணியுடன் வீடு பயன்தரு மரங்களுடன் விற் பனைக்கு உண்டு. தரகர் மார் தேவையில்லை உடன் விற் பனைக்கு
தொடர்பு : 077 4696662
021 3210112

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வெளி நாட்டில் P.R. உடன் நல்ல பதவியில் உள்ள மணமக னுக்கு அழகிய படித்த 30 வயதுக் குட்பட்ட மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 0016475322773
E-mail: goldentime2013@yahoo.com

### உதவியாளர் தேவை

வீட்டில் தங்கியிருந்து ஒரு வயது குழந்தையைப் பராமரிக்கவும் வீட்டு வேலைகள் செய்யவும் பெண் உதவியாளர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 0773405539

### காணி விற்பனைக்குண்டு

வடமராட்சி வல்லிபுரம் கோயிலுக்கு அண்மையில் 100 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
[illegible]

### காணியுடன் கடைக் கட்டடம் விற்பனைக்கு

186, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் காணியும் கடைக்கட்டடமும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776156051

### CAR விற்பனைக்கு

11 - 8535 தொடர் இலக்கத்தை உடைய Toyota Carella விற்பனைக்கு
தொடர்பு : 077 9672339

### தனா பியூட்டி பேஷன்

புதுவருட அன்பளிப்பாக தனது சேவைகள் அனைத்தும் 50% விலைக்கழிவு அனுமதிக் கட்டணம் 1600/= செலுத்தி 6 மாத வகுப்புகள் சான்றிதழ் உடன் இலவசம். கொழும்பு, யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை
29.04.2012 வரை மட்டுமே 077 5098103/077 7316453

## இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

**5 Chapel Road, West Ealing, Middlesex, W13 9AE, Charity Number : 1014409**

### எமது ஆலயத்தில்

கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

### 01. ஆலய சிவாச்சாரியார்

**பணிநிலை தகைமைகள் :**
விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும். இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.

**கடமைகள் :** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.

**வேதனம் :** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சனை பங்கிடப்பட்டு வழங்கப்படும்.

### 2. நாதஸ்வர தவில் கலைஞர்கள்

**பணிநிலை தகைமைகள் :**
நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்.
**கடமைகள் :**
ஆலயக் பூசைக் காலங்களில் மங்கள இசை இசைத்தல்.
**வேதனம் :**
பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.

**விண்ணப்ப முடிவு திகதி : 30-04-2012**

ஆலய இணையத்தளத்தில்
www.ammamealing.com
பணிநிலை வேண்டுகைக்கான விண்ணப்ப படிவம்தரவேற்றப்பட்டுள்ளது. விருப்பம் உடையோர் அதனைப் பதிவிறக்கி பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றோம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சே. விரி. அன்ரனி
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

தோற்றம்
24★05★1942

மறைவு
08★04★2011

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உம் நினைவு
என்றென்றும் எம் மனதில் நிறைந்திருக்கும்
காலங்கள் விடை பெறலாம் ஆனாலும்
கண் முன்னே நிழலாடும் உம் நினைவுகள்
ஒருபோதும் எமை விட்டு அகலாது.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

721, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

சகோதரர்கள்

(16575) (45 . 6 .7)


# கவுஸ் ஒவ் செலெக்ஷன்

## கிளை நிறுவனத்தின் விற்றுத்தீர்த்தல்



*அனைத்து புடைவைகளும் மலிவான விலையில் விற்றுத்தீர்க்கப்படும் என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.*

| பொருள் விவரம் | விலை | மலிவு விலை |
|---|---|---|
| சாறி W.Blouse | ~~800~~ | 400 |
| சாறி சில்க் W.Blouse | ~~1100~~ | 800 |
| டெனிம் ஸ்கேட் | ~~950~~ | 300 |
| ஸ்கேட் | ~~600~~ | 200 |
| பிளவுஸ் | 500 | 150 |
| டெனிம் ஜீன்ஸ் | ~~1100~~ | 300 |
| டெனிம் ஜீன்ஸ் (சிறிது) | ~~1250~~ | 400 |
| ஜீன்ஸ் (சிறிது) | ~~650~~ | 200 |

| பொருள் விவரம் | விலை | மலிவு விலை |
|---|---|---|
| சோக்கோ ஜீன்ஸ் | ~~1150~~ | 400 |
| சேட் பெரிது | ~~850~~ | 300 |
| ஜம்பர் | ~~650~~ | 200 |
| சல்வார் பெரிது | ~~1200~~ | 400 |
| சல்வார் சிறிது | ~~900~~ | 300 |
| சோலிக்கிற் பெரிது | ~~1200~~ | 400 |
| பாட்டி வுறக் | ~~850~~ | 300 |
| துப் | ~~900~~ | 300 |
| T சேட் | ~~350~~ | 150 |
| வெஸ்ட் | ~~190~~ | 100 |
| 01m கொட்டன் பிறின்ட் | ~~200~~ | 160 |
| 01m பட்டுக் குயின் | ~~200~~ | 100 |
| 01m ரெறின் | ~~280~~ | 200 |




(C\721) (6,10)

75D, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்திரு.ம.மரிசுதன்,
அருள் ஆச்சிரமம்,
யாழ்ப்பாணம்.

# "உயிர்த்த இயேசு"



இன்று பாஸ்கா ஞாயிறு தினம். பாடுகள் பல பட்டு, சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்ட இயேசு, சாவை வென்று உயிர்த் தெழுந்த மறைநிகழ்ச்சியைக் கொண்டாடுகின்றோம். கிறிஸ்தவர்களுக்கு உயிர்ப்பு விழாதான் எல்லா விழாக்களிலும் மேலான விழாவாகத் திகழ்கிறது.

ஏனென்றால், கிறிஸ்தவ சமயம் இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் உயிர்த்துடிப்புடன் இருப்பதற்குக் காரணம், அது கிறிஸ்துவின் உயிர்ப்பை அடித்தளமாகக் கொண்டதாலாகும். நற்செய்தியானது கிறிஸ்துவின் உயிர்ப்பை மையப்பொருளாகக் கொண்டிருக்கிறது. நம் மீட்பராகிய இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பே நற்செய்திக்கு விளக்கவுரையாக அமைகிறது. புனித சின்னப்பர் கூறுவது போல் கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் நாம் அறிவிக்கும் நற்செய்தியும் பயனற்றது.

நமது நம்பிக்கையும் பயனற்றது.[1 கொரி 15:14]. அத்தோடு அப்போஸ்தலர்களுடைய போதனைகளும் கிறிஸ்துவின் உயிர்ப்பை மையமாகக் கொண்டிருந்தன என்ற கூற்றில் மாற்றுக் கருத்துக்கு இடமளிக்கவில்லை.

அவர்கள் "வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்று விட்டீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்களே சாட்சிகள்" [தி.பணி 3:15-16] என்று முழங்கினார்கள்.

நமது ஆண்டவராகிய இயேசு இந்த உலகில் வாழ்ந்த போது லாசரை உயிர்ப்பித்தார். யாயீருடைய மகளை, நயீம் பட்டணத்துக் கைம்பெண்ணின் மகனை உயிர்த்தெழச் செய்தார். இயேசு தனது உத்தானத்தையும் முன் அறிவித்து "மானிட மகன்" மக்களின் கையில் ஒப்படைக்கப்பட இருக்கிறார். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள். கொல்லப்பட்ட மூன்று நாளுக்குப்பின் அவர் உயிர்த்தெழுவார்" [மாற் 9:31], இன்றே இந்த தேவாலயத்தை இடித்துப் போடுங்கள். மூன்று நாள்களில் கட்டியெழுப்புவேன் என்று தன் உடலாகிய பேராலயத்தைக் குறிப்பிட்டே இவ்வாறு கூறினார். இதனையே திருவள்ளுவர்

"சொல்லுதல் யார்க்கும் எளிதே, அரிதாம்
சொல்லிய வண்ணம் செயல்" [குறள்-664] என்று கூறுகின்றார்.

நம் மீட்பராம் இயேசு சொன்னபடியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். யோனா இறைவாக்கினர் மூன்று நாள் திமிங்கிலத்தின் வயிற்றினுள் இருந்தது போல, இயேசுவும் மூன்று நாள் பூமியின் வயிற்றினுள் இருந்தார்.

கல்லறை அவரை மூடி மறைக்க முடியவில்லை. சாவு அவரைத் தன் பிடியில் வைத்திருக்க முடியாமல் போனது. எனவே இயேசு இறந்து மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்து சாவுக்கே சாவுமணி அடித்தார். காலியாகக் கிடந்த இயேசுவின் கல்லறை அவரின் உயிர்ப்பை உலகுக்கு உரக்கச் சொன்னது.

அதிகாலையில் இயேசுவின் கல்லறைக்குச் சென்ற பெண்கள் காலியாகக் கிடந்த கல்லறையைக் கண்டனர். வானதூதர் அவர்களிடம் "சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்தூர் இயேசுவைத் தேடுகிறீர்களா?, அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் இங்கே இல்லை" [மாற் 16:6] என்று கூறினார்.

எனவே, மரணத்தை வென்ற மாவீரனும், மனுக்குலம் மீட்ட இறைமைந்தனுமான இயேசுவின் உயிர்ப்பு நமது உயிர்ப்புக்கும் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. நாமும் இறந்த பின் மாட்சியோடு உயிர்த் தெழுவோம் என்ற உத்தரவாதத்தை தருகிறது. ஏனெனில் கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வர்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு துன்ப துயரம், சோதனைகள் நிரம்பிய நமது வாழ்வுக்கும், புதிய நம்பிக்கையை கொடுக்கிறது.

ஆகவே இயேசு தமது உயிர்ப்பினால் உலகுக்கு ஈந்த மகிழ்ச்சி, சமாதானம், அன்பு என்ற புண்ணியங்களை வாழ்வாக்கி, அவரது உயிர்ப்புக்கு நாம் சான்று பகர்வோம். ★

---

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**நாளை**

பங்குனி 27 திங்கட்கிழமை 09.04.2012
திதி: திருதியை மாலை 06.37 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.இ 08.45 வரை
சுபநேரம்: 12.06-01.36 வரை
ராகு காலம்: 07.36-09.06 வரை

**மேஷம்:**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார். அமோகமான நாள்.

**இடபம்:**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்:**
நட்பால் ஆதாயம் உண்டு. பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் வந்து போகும். புதிய வேலைக் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவுக் கிட்டும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்:**
தன்னிச்சையாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும்.
புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.

**சிங்கம்:**
அழகு, இளமைக் கூடும். உறவினர்கள், நண்பர்கள் உங்களின் பெருந்தன்மையைப் புரிந்துக் கொள்வார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**கன்னி:**
மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். குடும்பத்தாருடன் இணக்கமாகச் செல்லவும். எதிலும் அவசரப்பட வேண்டாம். அடுத்தவர்கள் மனம் நோகும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் ஏற்படக்கூடும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**துலாம்:**
செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் கணிசமாக லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்:**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார்.

**தனுசு:**
சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். பழைய உறவினர், நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள்.

**மகரம்:**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். மாறுபட்ட அணுகுமுறையால் பழைய சிக்கல்களுக்குத் தீர்வு காண்பீர்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கும்பம்:**
தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை, குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். அநாவசியமாக மற்றவர்கள் விடயத்தில் தலையிட வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு. தர்மசங்கடமான சூழல்களைச் சமாளிக்க வேண்டிய நாள்.

**மீனம்:**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்ந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். நன்மை கிட்டும் நாள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | | 5 |
| | | 7 | 2 | | | 1 | | 9 |
| 5 | | 3 | 4 | | 9 | | | |
| | | 8 | | 2 | | 7 | 4 | |
| 3 | | | 9 | 8 | 1 | | | 6 |
| | 1 | 6 | | 4 | | 3 | | |
| | | | 8 | | 7 | 2 | | 5 |
| 7 | | 5 | | | 2 | 4 | | |
| | 3 | | | | 4 | | | 7 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 8 | 1 | 4 | 9 | 7 | 5 | 2 |
| 4 | 9 | 7 | 2 | 5 | 6 | 8 | 3 | 1 |
| 5 | 2 | 1 | 7 | 8 | 3 | 6 | 9 | 4 |
| 9 | 7 | 6 | 4 | 3 | 8 | 2 | 1 | 5 |
| 8 | 5 | 4 | 6 | 2 | 1 | 9 | 7 | 3 |
| 3 | 1 | 2 | 5 | 9 | 7 | 4 | 6 | 8 |
| 1 | 6 | 3 | 8 | 7 | 4 | 5 | 2 | 9 |
| 7 | 8 | 5 | 9 | 1 | 2 | 3 | 4 | 6 |
| 2 | 4 | 9 | 3 | 6 | 5 | 1 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் மலிவு விற்பனை!

**லேடீஸ் கோணர்**



புதுவருடத்தை முன்னிட்டு விசேட சலுகைகள்

* ஆண், பெண்களுக்கான ஆடைகள் விசேட விலைக்கழிவில்
* 1500/- விற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும், சிறுவர்களுக்கான ஓர் ஆடை இலவசம் மற்றும்-

2 பஞ்சாபித் துணிகள் 1600/-
2 கொட்டன்பஞ்சாபித் துணிகள் (15 வயதுக்கு கீழ்) 1600/-

| | | |
|---|---|---|
| சாறி வகைகள் | ~~1600/-~~ | 1200/- |
| | ~~1400/-~~ | 1000/- |
| | ~~1200/-~~ | 800/- |
| | ~~2000/-~~ | 1300/- |
| ரீ. சேட் | ~~1000/-~~ | 650/- |

**லேடீஸ்க்கோணர்,**
மருதனார் மடம் சந்தி,
மருதனார்மடம். (பெற்றோல் செற் அருகில்)

தொ.பே. 021 3001238


# கைதடியில் கடைகள் உடைக்கப்பட்டு திருட்டு

**கைதடி, ஏப். 8**

நள்ளிரவு வேளை உட் புகுந்த திருடர் கும்பல் ஒன்று ஒரே நேரத்தில் நான்கு கடைகளை உடைத்து திருட முயன்ற போதிலும் போதிய பலனளிக்காத நிலையில் திரும்பிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு கைதடி சந்தியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவ தினமன்று கைதடி சந்தியிலுள்ள தனியார் எரிபொருள் நிலையமருகே இருந்த வாகன உதிரிப்பாக கடையை உடைத்த இந்த திருடர் அங்கு ரயர் ஒன்றை மட்டும் எடுத்து விட்டு அடுத்திருந்த பலரக்கு கடையை உடைத்து சிகரெட், பீடி மற்றும் ஒரு தொகைப் பணத்தையும் அபகரித்துள்ளனர்.

மூன்றாவது கடைகளின் மேல்மாடியில் இருந்த களஞ்சிய அறையை உடைத்து அங்கிருந்த சோடா வகைகளைத் திருடியுள்ளனர்.

அதற்கு அருகிலிருந்த மதுபான சாலையையும் உடைக்க முயன்ற போதும் அது பயனளிக்கவில்லை.

நேற்றுக் காலை கடையை திறக்க வந்த வேளையே கடை உடைக்கப்பட்ட சம்பவம் கடை உரிமையாளர்களுக்குத் தெரியவந்தது. இது குறித்து சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் உடைக்கப்பட்ட கடைகளையும் பார்வையிட்டனர்.

(ம-288)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

தேசிய தலைமைச் செயலகம், 104 தர்மபால மாவத்தை
கொழும்பு - 07

*செஞ்சிலுவைச் சங்கத்துக்கான காணிக் கொள்வனவு தொடர்பான*

## கேள்விப்பத்திரம் கோரல்

யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பிரதேச எல்லைக்குட்பட்ட காணி உரிமையாளர்களிடமிருந்து 2 பரப்புக் காணி கொள்வனவு செய்வது தொடர்பாக கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. இக் காணிக் கொள்வனவின்போது பின்வரும் நிபந்தனைகள் கவனத்தில் கொள்ளப்படும்,

1. கூறப்பட்ட பிரதேசத்தில் தனியொருவருக்குச் சொந்தமான காணியான இருக்க வேண்டும்
2. பரப்பு அடிப்படையில் காணியின் மொத்தப்பெறுமதி கணிக்கப்பட்டு கேள்விப்பத்திரம் அனுப்பப்படல்வேண்டும்
3. காணி உறுதிப்பத்திரத்தின் தெளிவான பிரதி, உரிமத்துக்கான ஆவணம், அண்மையில் உறுதிப்படுத்தப்பட்ட நிலஅளவை வரைபடம் (காணியின் நிலப்பரப்பு எல்லைகள் சரியாக வகைக்குறிக்கப்பட்டது) என்பன கேள்விப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல்வேண்டும்
4. பிரதான பாதையில் இருந்து குறித்த காணிக்கான பரும்படியான இடவரைபடம் கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்

மூடிய கேள்விப்பத்திங்கள் "பணிப்பாளர் இலங்கை செஞ்சிலுவை சங்கம், இல 104, தர்மபால மாவத்தை, கொழும்பு – 7 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ 25.04.2012 அன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும்படியாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரத்தின் கடித உறையில் இடப்பக்க மேல்மூலையில் PRO/PRO/2012/026 இலக்கததைக் குறிப்பிடவும்.


**விற்பனைக்கு**

ரொயாற்றோ கியுலக்ஸ் (C) கப் LN 107 1992 253 - 3xxx ஸன்றூவ் புல் ஒப்ஷன்
Toyoto Hilux Cab LN107 1992 253 - 3xxxx.
**Tel: 0773914902, 0776172465**


## நினைவுப் பூக்கள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1969 | 1987 |
| * | * |
| 09 | 04 |
| * | * |
| 17 | 08 |

திதி * 08.04.2012

### சற்குணநாதன் நந்தகோபன்

கண்ணீரில் கரைந்ததடா இருபத்தைந்து வருடம்
நந்தன் என்ற நாமம் மறைந்ததடா,
உறவாட எம் முன்னே நீ இல்லையடா
அண்ணா என்று உன் தம்பி அழைக்க நீ எங்கே சென்றாய்?
தம்பி என்று உன் அக்காமார் கூப்பிட
காலன்தான் கொடுமைக் காரணாயிற்று,
அப்பாவை இழந்த அம்மா கண்ணீரில் வாட
உன் மைத்துனர், மைத்துனி சொல்லி அழைக்க - நீ
இங்கில்லை உன் மருமக்கள், மக்கள்,
பெரியப்பா, மாமா என்று அழைப்பது யாரை?
உன் நண்பர்களுக்கு ஏதும் சொல்லவில்லையே,
எம்மோடு தோழோடு சாய்ந்து நீ சொன்ன
கதைகளெல்லாம், நாம் இன்று கண்ணீரில் எழுதுகின்றோம்.
கனவாகிப்போனதென்ன? காவியமானதென்ன?

பிருந்தாவனம், நீங்கா நினைவுகளுடன்:
மீசாலை மேற்கு, அம்மா, சகோதர, சகோதரிகள்
மீசாலை. மற்றும் உறவினர்.


**கார் விற்பனைக்கு**

Ford Laser, 1998 Japanes Model, 300 - xxxx, Silver, Alloy wheel, sub woofer.

தொடர்பு : 0771930505

**வீடு, காணி விற்பனைக்கு**

மண்டைதீவில் காணிகள் விற்பனைக்கு உண்டு. வயற்காணி, தோட்டக்கணிகள் வேரம் கிழக்கு, சங்குட்டி வேரம் தெற்கு, மறையன் காடு மற்றும் வீடு நிலம் விலைகள். பேசித் தீர்மானிக்கலாம். தரகர்கள் வேண்டாம்.

தொடர்பு : 0716116305, 0112559875

**விற்பனைக்கு**

கொங்கிறீட் கல் அடிக்கும் இயந்திரம் (மிசின்) விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0774458582

**விற்பனைக்கு**

நல்ல இன வளர்ப்பு நாய்கள் உடன் விற்பனைக்கு.

தொடர்பு : 0776552676

**திருமண சேவை**

சுலபமான சுயதெரிவு முறையில் மணமக்களைத் தெரிவு செய்வதற்கு குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனிடம் செவ்வாய், வியாழன் தவிர்ந்த மற்றைய நாள்களில் மு.ப 11.00-பி.ப.1.00 மணிக்குள் விவரங்களை விசாரித்தறிக!

Tel: 0114873929, 0112360488

**தேவை**

[illegible] இருபாலாரும் தேவை.

தொடர்பு : 077 6652424


## தவறவிடப்பட்டவை

சிவஞானம் சசிகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (801913903V), தற்காலிக அடையாள அட்டையும், ச. யோகேஸ்வரி என்பவரின் தேசிய அடையாள அட்டை மற்றும் இலங்கை வங்கி புத்தகம், நகை அடைவு பத்திரம் மற்றும் விவேகானந்த சர்மா துவாரகனின் தேசிய அடையாள அட்டையும் (852465697V) பேஸ்சுடன் தவறி உள்ளது. இதனை கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் அல்லது நெடுங்கீரன் பல்பொருள் வாணிபம், கரடிப் போக்குச் சந்தியில் கொடுத்து உதவுமாறும் கொடுப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு - 0770775892

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினர்,

### அப்பாத்துரை துரைராஜா

அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையுமடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம், சுன்னாகம்.
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்



### சூசைப்பிள்ளை ராஜ்

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை ராஜ் நேற்று முன்தினம் (06.04.2012) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எம். சூசைப்பிள்ளை - சிசிலியா தம்பதியரின் அன்பு மகனும், சப்பிரினாலின் அன்புத் தந்தையும், ரவி, றஞ்சினி, றமணி, ரகு, ரமேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சியாமளா, சுகுமார், மனோகரன், ராணி ஆகியோரின் மைத்துனரும், ஜெனிசா, சுஜேன், சாது, சித்து ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், சூரியசாந்தி, கலாலயன் ஆகியோரின் அன்பு மாமனும் லெயிட்டன்ராஜின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உயரப்புலம், ஆனைக்கோட்டை.
வசந்தகுலசிங்கம், குடும்பத்தினர். மல்லிகா.



### திருமதி புவனேஸ்வரி அருணாசலம்

*(7ஆம் வட்டாரம், நயினாதீவு)*

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி அருணாசலம் நேற்றுமுன்தினம் (06.04.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான காரைநகர் பலகாட்டைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், அருணாசலத்தின் அன்பு மனைவியும், சுமித்திரா, குகநேசன் (பிரான்ஸ்), அருட்செல்வி (லண்டன்), சுஜிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், அம்பிகைதாசன், உனேக்கா (பிரான்ஸ்), கோகிலதாஸ் (லண் டன்), சங்கீதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், தில்லை யம்பலம், கனகம்மா (பிரான்ஸ்), காலஞ்சென்ற தில்லைநடேசு மற்றும் மகேந்திரம், ரோகினி, ராதாகிருஷ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, அம்பலவாணர் மற்றும் பரஞ்சோதி, செல்லமுத்து, பாலசுப்பிரமணியம், இராசேஸ்வரி, காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை மற்றும் யோகேஸ்வரி, மகேந்திரன், யோகேஸ்வரி, வனஜா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் ஞானசோதி, பத்மாவதி, காலஞ்சென்ற பரம சாமி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகலியும், ஸ்ரீகாந்தன், ஸ்ரீலக் சிகா, ஸ்ரீரங்கன், ஸ்ரீராகவன், சந்தோஸ்நேமி, நேமிதா, சன்மிதா, மிரு சாலினி, ஐதுசன், துர்க்கா, துசாந், தர்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2012) திங்கட் கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
7ஆம் வட்டாரம், நயினாதீவு.
குடும்பத்தினர்.



### திருமதி கனகரெட்ணம் இரத்தினம்

யாழ். பெரியகடை வீதியைப் பிறப்பிடமாகவும், 36/2, செட்டித்தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரெட்ணம் இரத்தினம் நேற்று (07.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல. 36/2, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
க. உருத்திரேஸ்வரன் (மகன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 62

# பெண்களைத் துன்புறுத்தும் புற்றுநோய்கள்

மனித சமுதாயத்தைப் பெரிதும் பாதித்து பல இலட்சக்கணக்கான மக்கள் இறப்பதற்குக் காரணமான கொடிய நோய்கள் இரண்டு. அவையாவன எயிட்ஸ் மற்றும் புற்றுநோயாகும். மனித சமுதாயத்துக்கு சவாலாக இருக்கும் புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சிகள் உலகின் பல பகுதிகளிலும் தொடர்ந்து நிகழ்கின்றன. இந்த ஆராய்ச்சிகளின் பயனாக புற்றுநோய் சிகிச்சையில் ஒரு வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நோய் குறித்து மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு அதிநவீன பரிசோதனை முறைகள் மற்றும் சிகிச்சை முறையில் ஏற்பட்டுள்ள புதிய முறைகள், முன்னேற்றங்களால் இது சாத்தியமானது. எனினும் பெரும்பாலான மக்களிடையே புற்றுநோய் ஒரு குணப்படுத்த முடியாத நோய் என்ற கருத்து நிலவுகிறது. இந்த நோயைப் பற்றி முழு விவரமும் அறிந்து கொண்டால் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படும். புற்றுநோய் என்பது உடலில் உள்ள கலங்களின் கட்டுப்பாடற்ற அபரிமிதமான அல்லது அதீத வளர்ச்சியாகும். புற்று நோய் கட்டிகளாகவும் இருக்கலாம் அல்லது ஆறாத புண்களாகவும் இருக்கலாம்.

புற்றுநோயில் பல வகைகள் உண்டு. தலை முதல் கால் வரை எந்தப் பாகத்தையும் தாக்கலாம். இருப்பினும் தலை மற்றும் கழுத்துப் பகுதியிலும் உணவுக் கால்வாயிலும், குருதியிலும், சுவாசப் பையிலும் வரும் புற்றுநோய் ஆண், பெண் இருபாலாரையும் கர்ப்பப்பை, சூலகம், மார்பகங்களில் ஏற்படும் புற்றநோய் பெண்களையும் அதிகமாகத் தாக்குகின்றது. இதன் பொதுவான அபாய அறிகுறிகளாவன:

*நாள்பட்ட ஆறாத புண்

*மார்பகம் அல்லது வேறு உறுப்புகளில் வலியுள்ள அல்லது வலியற்ற கட்டி

*உடலின் எப்பாகத்திலாவது நிறம் அல்லது உருவமாற்றம்

*நாள்பட்ட இருமல் அல்லது குரல் மாற்றம்

*உணவு உண்ணுதலில் தடை

*உடலில் எந்தப் பகுதியிலாவது நீர் அல்லது இரத்தக் கசிவு

*சிறுநீர், மலம் கழித்தல் போன்ற வழக்கங்களில் மாற்றம் போன்றவை அமையலாம் அல்லது ஏற்படலாம்.

இது எந்த வயதினரையும் தாக்கக் கூடியது. புற்றுநோய் ஒரு தொற்று நோயல்ல. பெரும்பாலும் நாம் கடைப்பிடிக்கும் வாழ்க்கை முறையும் பழக்க வழக்கங்களுமே நோய் ஏற்படக் காரணமாகின்றன. உதாரணமாக புகையிலை, புகைப்பிடித்தல், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு உண்ணும் பழக்கமுள்ளவர்களுக்கு புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

சில வகைப் புற்றுநோய் பரம்பரையாகவும் வருவதுண்டு. பெற்றோரில் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ இருந்தால் குழந்தைகளுக்கு இந்த நோய் வரும் வாய்ப்புகள் அதிகம். புற்றுநோய்த் தொடக்க நிலையில் ஒருவரைப் பார்த்த உடனேயே அவர் புற்றுநோயாளி என்று கூறிமுடியாது. முற்றிய நிலையில் ஏற்படும் சில குறிகளை வைத்து மட்டுமே அடையாளம் காண முடியும். எனவே அவ்வப்போது பரிசோதனை செய்து கொள்வது ஒன்று தான் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் வழியாகும்.

புற்று நோய் ஏற்பட குறிப்பிட்ட எந்தவொரு வகை உணவும் காரணம் என்று இதுவரை அறியப்படவில்லை. எனினும் நார்ச்சத்து அதிகமுள்ள பச்சைக் காய்கறிகள், பழங்களை அதிகளவில் சேர்த்துக் கொண்டால் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் குறையும்.

நோயின் தொடக்க நிலையில் வலி அல்லது நோ இருக்காது. என்பு, நரம்புகளில் பரவும்போது மட்டுமே வலி ஏற்படும். குருதிப்போக்கு இருந்தால் மருத்துவ ஆலோசனைப்படி சிகிச்சை பெறுவது அவசியம். சரியான முறையில் உரிய சிகிச்சை செய்தால் புற்றுநோயாளியும் மற்றவர்கள் போல இயல்பாக வாழ முடியும். ஆரம்பநிலையில் கண்டுபிடிக்கப்பட்டு உரிய சிகிச்சை அளித்தால் 80-90 வீதமான நோய்களை முற் றாகக் குணப்படுத்த முடியும்.

பெண்களுக்கு Pap Smear சோதனை மூலம் கருப்பை வாய் புற்றுநோய் கண்டறியப்பட்டால் அறுவைச் சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை மூலம் முற்றாகக் குணப்படுத்த முடியும். புற்றுநோய்க்கு ஒழுங்காகச் சிகிச்சை பெற்று குணமடைந்த ஒருவருக்கு ஐந்து ஆண்டுகள் வரை புற்றுநோய் பாதிப்பு ஏற்படாமல் இருந்தால் அவருக்கு மீண்டும் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவு. எனினும் சிலவகைப் புற்றுநோய் 10-20 ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் வர வாய்ப்புண்டு. எனவே முற்றிலும் குணமடைந்தாலும் இரு ஆண்டு களுக்கு, ஒருமுறை பரிசோதனை செய்தல் அவசியமாகும்.

கருப்பை, வாய் புற்றுநோய்:-

போதியளவு விழிப்புணர்வு இல்லாதது, இளம் வயதில் திருமணம் செய்து பலமுறை கர்ப்பம் தரிப்பது, கருத்தடை மாத்திரை அதிகளவு உபயோகித்தல், பல ஆண்களுடன் உறவு கொள்ளல், பிறப்புறுப்புக்களை சுத்தமாக வைக்காத காரணங்களால் இந்த நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம். இதன் அறிகுறிகளாக, மாதவிடாயின் போது அதிக குருதி வெளியேறல், மாதவிடாய்க் காலப்பகுதியில் குருதி வெளியேறல், மாதவிடாய் நின்ற பின் வெள்ளைபடல் அல்லது குருதி வெளியேறல், உடலுறவின் பின்பு, உடலுறவின் போது குருதி கசிதல் என்பன அமையலாம். இதனை ஆரம்பத்திலறிய எளிய பரிசோதனையாகிய Pap Smear செய்யலாம். முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் ஆண்டுக்கு ஒரு தடவை இந்தப் பரிசோதனை செய்தல் நன்று. சிகிச்சையாக கதிரியக்க சிகிச்சை அளிக்கப்படும். நோய் நிலைக்கேற்ப அளவு, காலம் என்பன மாறுபடும். மார்பகப் புற்று நோய் என்பது வெறும் புற்று நோய் மட்டுமல்ல அது பெண்மை சம்பந்தப்பட்டதாகவும் பாலியல் சம்பந்தப்பட்டதாகவும் உடல் அழகுடன் சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதால் அது பெரும் துன்பத்தோடு மன உளைச்சலையும் கொடுக்கக் கூடிய நோயாகும். இது மார்பகத்தில் ஒரு சிறு கட்டியாக ஆரம்பித்து சிறிது சிறிதாக வளர்ந்து மார்பகத்தோல், முலைக் காம்புகளிடையே பரவுகின்றது. நேரடியாக உட்புறமாக வளர்ந்து, மார்பகத்தின் பின்புறம் உள்ள தசைகளில் பரவுகிறது. அது தவிர நிணநீர் வழியாக அக்குளிடையே பரவி பல நிணநீர் முடிச்சுக்களுள் பரவுகின்றது. அத்துடன் குருதியூடாக உடலில் பல பாகங்களுக்கும் பரவலாம். பல ஆய்வுகள் மூலம் இது ஏற்பட மிக வாய்ப்புடையவர்களாகக் கருதப்படுவோர்:-

*கருத்தடை மாத்திரை அதிகளவு உட்கொள்ளும் பெண்கள்

*குழந்தை இல்லாத பெண்

*தாய்ப்பாலூட்டாதோர்

*சிறுவயதில் பூப்படைந்தோர்

*மிக தாமதமாக மாதவிடாய் நிற்பவர்கள்.

*குடும்பத்தில் தாய்,சகோதரி புற்று நோயால் பாதிக்கப்பட்டோர்.

*மது அருந்தும் பெண்கள்

*கொழுப்புணவு அதிகம் உண்போர்.

*அசைவ உணவு உண்போர்

**இதன் அறிகுறிகளாக அமைவன:**

*மார்பகக் கட்டி

*முலைக்காம்பு வெடிப்பு

*மார்பகத்தில் வீக்கம்,வலி,நீர்/இரத்தம் வடிதல் அல்லது கசிதல்

*மார்பு பெருத்து இருமார்பகங்களும் வெவ்வேறு நிலையில் இருத்தல்

முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் வருடம் ஒரு முறையாவது மார்பக புற்றுநோய் பரிசோதனையும் மாதம் ஒரு தடவை சுயமார்புப் பரிசோதனையும் செய்தல் அவசியமாகும். இதன் சிகிச்சையாக கதிரியக்க சிகிச்சை, அறுவை மருத்துவ சிகிச்சை செய்யப்படும்.

பொதுவாக புற்றுநோய்க்கு மூன்று வகை சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

1.கதிரியக்கச் சிகிச்சை

2.அறுவைச் சிகிச்சை

3.மருத்துவ சிகிச்சை

புற்று நோயாளிகளில் 80வீதமான நோயாளிகளுக்கு கதிரியக்க சிகிச்சை தேவைப்படுகின்றது. இது முதன்மைச் சிகிச்சை

களுடன் சேர்த்து நோயின் தன்மை அது பரவியிருக்கும் நிலைக்கு ஏற்ப அளிக் கப்படும்.

பத்துக்கும் மேற்பட்ட புற்றுநோய்கள் நம்நாட்டில் காணப்பட்டாலும் பெண்களை அதிகம் துன்புறுத்துவது கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் ஆகியனவாகும். இருபாலாரையும் அதிகம் தாக்கக்கூடியது வாய்ப்புற்று நோயாகும். இந்த மூன்று வகைப் புற்றுநோய்களும் மிக கொடிய உயிர்க் கொல்லிகள் என்றாலும் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் குணப்படுத்தக் கூடியவையே.

எனவே இந்தப் புற்று நோய் பற்றிய அபரிமிதமான விழிப்புணர்வே எம் மக்களை இந்தக் கொடிய நோயிலிருந்து விடுவிக்க ஒரேயொரு இலகுவான வழியாகும்.

**திருமதி சதானந்தி நந்தகுமார்**
தாதிய போதனாசிரியர்,
யாழ்.தாதியக் கல்லூரி.

*உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

**கேள்வி:**-நான் 30 வயதுடைய முதலாவது சிசுவைத் தாங்கும் 3 மாதக் கர்ப் பிணிப் பெண் ஆவேன். எனக்கு 2 வருடங்களின் முன் சின்னம்மை நோய்த் (Chic ken Pox) தாக்கம் ஏற்பட்டது. இதனால் எனது சிசுவுக்குப் பாதிப்பு ஏற்படுமா?

**பதில்** :-சின்னம்மை (Chicken Pox) நோயானது ஒருவருக்கு 2 படிநிலைகளில் ஏற்படலாம். முதன்மையான நோய்த் தொற்று (Primary Infection) ஆனது Varicella Zoster எனப்படும் வைரஸினால் ஏற்படுத்தப்படுகிறது. இது முறையாக சிகிச் சையளிக்கப்படாதவிடத்து தாயில் நோய்ப் பாதிப்புகளையும் சில வேளைகளில் மரணத்தையும் சிசுவில் Varicella Syndrom ஐயும் ஏற்படுத்தலாம்.

Varicella Zoster வைரஸ் ஆனது சின்னம்மை நோயாளி தும்மும் போதும், இரு மும் போதும் வெளிப்படும் சுவாசப்பைச் சுரப்பு, கொப்புள நீரின் நேரடித் தொடுகை மூலமும் பரவுகிறது.

முதன்மையான தொற்றுக் காய்ச்சல், களைப்பு, கடியுடன் கூடிய தோல் அழற்சி, கொப்புளங்கள் ஆகிய அறிகுறிகளைக் கொண்டிருக்கும். இந்த தோல் அழற்சி தோன்றுவதற்கு 48 மணித்தியாலம் முன்பு தொடங்கி கொப்புளங்கள் மறையும் வரையான காலப்பகுதியில் தொற்றுகின்றது.

முதன்மையான தொற்றைத் தொடர்ந்து வைரஸ், நரம்புக் கணுக்களில் மறைந்து வாழ்கிறது. எமக்கு நீர்ப்பீடனக் குறைபாடு ஏற்படும் நேரத்தில், அது மீண்டும் தொற்றுதலை ஏற்படுத்தும். இது Herpes Zoster or Shingless எனப்படும்.

சின்னம்மை நோயானது கர்ப்பிணித் தாய்மாரில் சுவாசப்பைத் தொற்று,ஈரலழற்சி, மூளையழற்சி,போன்ற பாதிப்புக்களை ஏற்படுத்தி ஈற்றில் மரணத்தை ஏற்படுத்தக்கூடியது.

சிசுவில் Fetal Varicell Syndrdme எனப்படும் தோல் அழற்சி, கண்பாதிப்பு, அங்கங்களின் குறை விருத்தி, நரம்புக் குறைபாடுகள் கொண்ட நோய்ப்பாதிப்பை ஏற்படுத்தலாம். இந்தப் பாதிப்பு, கர்ப்பகாலத்தில் 3 ஆம் கிழமை முதல் 28 ஆம் கிழமை வரையான காலப்பகுதியில் வைரஸ் தொற்று ஏற்படும் போது அதிகளவில் ஏற்படுத்தப்படுகிறது.

சிசு பிறந்த பின்னர் கூட சின்னம்மை நோய் தாக்கலாம். வைரஸ் ஆனது தொப்புழ் கொடி மூலமாக, பிறப்பு வழியூடாக அல்லது நோயாளியின் தொடுகையூடாகப் பரவலாம்.

சின்னம்மை நோயாளியிலிருந்து விலகியிருத்தல், நோயாளி தனிமைப்படுத்தப்படல் மூலம் நோய் தொற்றாது தவிர்க்கலாம்.

சின்னம்மை நோய் தொற்றினால் அல்லது தொற்றியுள்ளது எனச் சந்தேகித்தால் கர்ப்பிணிப் பெண்கள் உடனடியாக வைத்திய ஆலோசனையை நாட வேண்டும்.

நோயாளியிலிருந்து தூர விலகியிருந்த, தனிநபர் சுகாதாரம் பேணுதல் நோயைத் தவிர்க்க உதவும். கர்ப்பிணித் தாய் ஒருவர் நோய் தொற்றிய நிலையில் சுவாசப் பிரச்சினை, நரம்பியல் அறிகுறிகள், குருதிப் பெருக்கு, தோல் அழற்சி, மென்சவ்வு அழற்சி ஆகியன ஏற்படுமிடத்து வைத்தியசாலைப் பராமரிப்பு அவசியம்.

சிசுவுக்கு ஏற்படும் அங்கக் குறைபாடுகள், சிறிய தலை (Microcephaly) தலையினுள் நீர் சேர்தல் (Hydrocephalus) மூளை வளர்ச்சிக்குறைபாடு இழையங்களில் கல்சியம் படிதல், வளர்ச்சிக் குறைபாடு போன்றவற்றை அல்ட்ரா சவுண்டு ஸ்கான் (Ultra Sound Scan) மூலம் கண்டறியலாம்.

சின்னம்மை வைரஸுக்கு எதிரான மருந்து வகைகளை, தடுப்பூசிகளை வைத்திய ஆலோசனைப்படி பயன்படுத்தல், நோயுற்ற கர்ப்பிணித் தாய்மாரை நோய்ப் பாதிப்பிலிருந்து காப்பாற்றும் தாயிலிருந்து சிசுவுக்கு தொப்புழ் கொடி மூலம் கடத்தப்படும் பிறபொருளெதிரிகள் , சிசுவில் நோய் வராது தடுக்கக் கூடியன. சின்னம்மை நோய்த் தடுப்பாற்றல் கொண்டவர்களுக்கு மறுபடியும் நோய்த் தொற்று ஏற்படாது.

**மருத்துவர்**
**போ.சிவாகரன்**
யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்து



## சிவப்பிரகாசம் சிவஜெயந்தன்

எமது பணியினை சிறப்புற ஆற்றுவதற்கு வழிகாட்டியாக தம் பல முன்னேற்றங்களை அடைவதற்கு பலவழிகளில் உதவி புரிந்த சிவப்பிரகாசம் சிவஜெயந்தன் அவர்கள் வடமாகாண ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களினால் முல்லைமாவட்ட பிராந்திய ஆணையாளராக பதவி உயர்வு பெற்றமைக்காக அவரைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

மயூரதாஸ் (ரான்ஸ்போட்)
மீசாலை மேற்கு, மீசாலை, யாழ்ப்பாணம்

# பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக, யாழ்.மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றிவரும் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

★ 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.

★ பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

★ பணி நிலையங்கள்:

யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி.

அடிப்படைத் தகைமைகள்:-

★G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.

★ 18 - 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (*BIO DATA*) விண்ணப்பங்களை 25.04.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


C/O உதயன்,
விளம்பர இல. 4348,
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(16470) (2-9-8)

# ஆசிரியர் வெற்றிடம்

குருநாகல் மாவட்டத்தில் தலைசிறந்த பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் மதீனா தேசிய பாடசாலையில் க.பொ.த (உ.த) விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல், உயிரியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பொருத்தமான சம்பளம், இலவச உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும். ஆங்கிலம், தமிழ் மொழிகளில் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தொடர்புகொள்ளவும். இடமாற்றம் பெற்றுவர விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 077 111 7670, 072 9462703

# முதலாம் ஆண்டு நினைவினில்



மண்ணில்
20★ 10★ 1925

விண்ணில்
08 ★ 04★ 2011

## அமரர் வைரமுத்து குழந்தைவேலு

எங்கே போனீர்கள்?
ஆண்டு ஒன்று ஆனதுவே
அனைவரையும் விட்டுச் சென்று
எம் இதயத்து வேதனை மறக்குமோ
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு.
(நயினாதீவு - 2)
(16484) (2-6-7)
- குடும்பத்தினர்.

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 முதல் O/L வரை கணிதம் பல வருட அனுபவமிக்க ஆசிரியரால் வீடு வந்து கற்பிக்கப் படும். O/L (மீட்டல்) பகல் நேரவகுப்புக்களும் எடுக்கப் படும்.

அளவெட்டியில் O/L (மீட்டல்) பகல் நேர குழுவகுப்பு 9/4 இல் ஆரம்பிக்கப்படுகின்றது.

தொடர்பு : 077 9370228

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோயிலுக்கு அருகில் ஒரு சிறிய குடும்பத்திற்கு ஏற்ற சகல வசதிகளுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 8006382

## அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் A/C non A/C அறைகள் Washing Machine, Kitchen, Hot Water என்பனவற்றோடு நாள், வார, மாத வாடகைக்கு உண்டு.

0756438583

## காணி குத்தகைக்கு தேவை

"யாழ்" நகரை அண்மித்த பிரதேசங்களில் பிரதான வீதியுடனும், "அரியாலை" A9 வீதியிலும் திருநெல்வேலி பலாலி வீதியிலும், ஒட்டுமடம், ஆனைக்கோட்டை, மானிப்பாய், காரைநகர் வீதியிலும், கொக்குவில் K.K.S வீதியிலும், நீர், மின்சார வசதியுடன் 04 பரப்பு காணிதேவை

தொடர்பு : 077 0294160

## கடை வாடகைக்குண்டு

K.K.S. றோட் D.F.C.C வங்கி அருகில்

அருள் விநாயகர் ரேடர்ஸ்
தொடர்பு:- 106, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இல.153, 2 மாடிக் கட்டடம், நீளம் 35 அடி, அகலம் 13 அடி கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய கடை வாடகைக்கு.

தொடர்புகளுக்கு:- 077 6618122

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட,புறொயிலர், கல்பேட் கோழிகள் தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்த புறொயிலர் ரூ.450 மட்டுமே.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.இல.021 222 6944

## கட்டடம் வாடகைக்கு

கே.கே.எஸ் வீதியில், யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்திக்கருகில் 6 அறைகள் கொண்ட மாடிக்கட்டடம் (3000 சதுரஅடி) வாடகைக்குண்டு. அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள் அலுவலகமாக/ களஞ்சியமாக பாவிக்க உகந்தது.

தொடர்பு : 077 7150931

## களஞ்சியசாலை வாடகைக்கு கொடுக்கப்படும்

அரியாலைப் பகுதியில் 7000 சதுரஅடி விஸ்தீரணமும், 30' உயரமுமுள்ள களஞ்சியசாலையும் அதனுடன் சேர்ந்த அலுவலகமும், அலுவலர்கள் தங்குமிடமும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு : A.B. றஞ்சித், 077 7170069
ம.தனுஜன், 077 4294451

## உயிரூட்டுகின்றோம்

தொழில்சார் மின்சார உபகரணங்கள், அனைத்தையும் உடனடியாகத் திருத்தி உயிரூட்டிக் கொள்ளவும் புதியனவற்றைக் கொள்வனவு செய்யவும் எங்கள் ஸ்தாபனத்தை நாடுங்கள். நாங்கள் விற்பனை செய்யும் சகல உபகரணங் களுக்குமான உத்தரவாத சேவை உடனடியாக எங்களால் வழங்கப்படும்.




**Green House Trading Company,**
No.05, Karuwapulam Lane,
Adiyapatham Road, Kokuvil East,
021 2226450, 071 4843432, 071 6605668.
(நல்லூர் பிரதேச காரியாலயத்துக்கு அருகில்)

# பாராட்டி வாழ்த்து



எமது முல்லை மாவட்டத்துக்கு பல வழிகளிலும் உதவியவரும் முல்லை மாவட்ட வாழ் மக்களுக்கான வீட்டுத் திட்டத்தினைச் சிறப்பாக செயலாற்றி பல முன்னேற்றங்களுக்கு வழி வகுத்து முடித்த வரும் வடக்கு - கிழக்கு மீள் நிர்மாணத் திட்டத்தின் பிரதேச திட்டப் பணிப்பாளர்

சிவப்பிரகாசம் சிவஜெயந்தன்

அவர்களை வடமாகாண ஆளுனர் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்களால் பிராந்திய ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றமைக்கு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வடக்கு - கிழக்கு மீள் நிர்மாணத்துறை, முல்லை மாவட்டம்.

## போலிகள் எச்சரிக்கை !!!

"தய்ரோஸ் வைட்டிங் கிரீம்" பாவனையாளர்களுக்கு...

யாழ், வன்னி மாவட்டத்திலும் தய்ரோஸ் வைட்டிங் கிரீம் மிகப்பெரிய அளவில் போலிகள் விற்பனை செய்யப் பட்டு வருகின்றன.

ஆதலால் பாவனையாளர்கள் மிகப்பெரிய அளவிலான பக்கவிளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும் (தோல் புற்று நோய்). எனவே விலையை பொருட் படுத்தாது தரமானதா? என்பதனை உறுதிப்படுத்தும் வியாபார தாபனங்களில் பெற்றுக் கொள்ளவும்

இனங்காணும் முறை:

பொதி செய்யப்பட்ட பேளையில் கோல்ட் (தங்கநிறம்) நிற தரக்கட்டுப்பாட்டு ஸ்ரிக்கர் மற்றும் கொம்பனியின் பெயர் வெள்ளை நிறத்தில் நீல எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டிருக்கும்.

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
மயூரா டிஸ்ரிபியூட்டர்ஸ்,
25, நவீன சந்தை, மேல்மாடி, யாழ்ப்பாணம்.

தய்ரோஸ் சந்தைப்படுத்தல் தனியார் நிறுவனம்
பாணந்துறை.
(C9859) (6,9,10)

## வீடு வாடகைக்கு

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகிலும் ஞானம்ஸ் ஹோட்டலுக்கு முன்பாகவும் 2000 சதுரஅடியில் 4 Rooms, Hall,Kitchen, 2BathRooms வாகனங்கள் தரிக்கக்கூடிய வசதியுடைய வீடு வாடகைக்கு உண்டு.

அரச, தனியார், நிதிநிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் காரியாலயம் அமைப்பதற்கு சிறந்தது.

தொடர்புகளுக்கு : 077 1339662

"தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு"

## மிகப் பிரமாண்டமான மலிவு விற்பனை

ரூ.1500/= இற்கு மேல் கடந்தகால வினா விடை நூல்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு G.C.E. சாதாரணதர மாணவர்களுக்கு ஒரு மாதிரி வினா விடை நூல் இலவசமாக வழங்கப்படும்

### தாதிய நூல்கள் சிறப்பு விலையில்

மருத்துவ நூல்களுக்கு 10% முதல் 30 % வரையான விலைக்கழிவு

தரம் - 1 முதல் தரம் - 13 வரையான மாணவர்களுக்கான செயல்நூல்கள் பாடநூல்களுக்கு விசேட கழிவு.

### உயர்கல்வி மாணவர்களுக்கான நூல்கள் சிறப்பு விலையில்

புதியபல அகராதிகள் விசேட கழிவு விலையில்

மாதர்கள், சிறுவர்களுக்கான, கதை நூல்கள், நகைச்சுவை நூல்கள் சிறப்பு விலையில்

### ஆய்வு கூட உபகரணங்கள் விசேட காட்சியறையில் சிறப்பு விலையில்

மற்றும் O.H.Projector, Laminating Machine, Binding Machine, White Board, Green Board, Planal Board உட்பட அனைத்து கல்விசார் உபகரணங்களையும் ஒரேகூரையின் கீழ் பெற்றிட இன்றே நாடவேண்டிய ஒரே இடம்

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(C712) (2,6,7)

# நீங்காத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## செல்லப்பா சிவானந்தன்

தோற்றம்
21 ★ 07★ 1948

மறைவு
31 ★ 03★ 2010

திதி:- துதியை

ஆண்டுகள் இரண்டு கடந்து விட்டது
ஆறவில்லை எம் துயரம்....
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
பாசமிகு அண்ணாவை மறக்கமுடியாது.

செல்லப்பா - செல்வநாயகி (சகோதரி),
கண்ணலிங்கம் - சிவநாதன்
(உடன் பிறவாச் சகோதரன்)

விராங்கொடை,
தந்தை செல்வாபுரம், தெல்லிப்பழை.
(16563) (3-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலான் வங்கி: பரிசுக்கு மேல் பரிசு இதுவரை 7890 வெற்றியாளர்கள்

செலான் வங்கியானது அதன் சிறப்பான 'பரிசு மேல் பரிசு' சீட்டிழுப்பில், இதுவரை 7890 வெற்றியாளர்களுக்கு கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து பரிசளித்துள்ளது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வெற்றிபெற்ற வெற்றியாளர்கள் மாதாந்தம் ரூ.1 மில்லியன், மோட்டார் சைக்கிள்கள், எல்சிடி தொலைக் காட்சிகள், குளிர்சாதனப் பெட்டிகள், ஹோம் என்டர் டெயின்மன்ட் சிஸ்ரம், சோஃபா செட், லப்ரொப்கள், தானியங்கள் சலவை இயந்திரங்கள், கேஸ் அடுப்புகள் மற்றும் தங்க நாணயங்கள் போன்ற பலதரப்பட்ட பரிசுகளை வெற்றிபெற்றனர்.




அண்மைய வெற்றியாளர்கள் தங்களின் பரிசுகளை கொள்ளுபிட்டியில் உள்ள செலான் வங்கியின் தலைமையலுவலகத்தில் வைத்து முன்னாள் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட, நிறைவேற்று பணிப்பாளர் ஆர்.நடராஜா மற்றும் பொது முகாமையாளர் - பிரதம நிறைவேற்று அதிகாரி கபில ஆரியரத்ன ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

திருமதி எம்.ஏ.சி.ஆதிஹெட்டி (ஜா-எல கிளை), டி.டி.எஸ்.வீரசிங்க (இரத்தினபுரி கிளை), எஸ்.எஸ்.சி.அத்தபத்து (கெக்கிராவ கிளை), வீ.விஜயராஜா (மட்டக்களப்புக் கிளை) மற்றும் திருமதி எச்.என்.பி.நாணயக்கார (இணை வெற்றியாளர்கள் கொட்டாவ கிளை), திருமதி எம்.டபிள்யூ.என்.சிரிபால (ஹொரண கிளை), டி.என்.யூ. மெண்டிஸ் (செலான் கார்ட் சென்டர்), திருமதி ஜே.மூசா (பதுளை கிளை), எஸ். விஜயகமலன் (திருகோணமலை கிளை) மற்றும் திருமதி கே.கே.எஸ்.கே.சேனாநாயக்க (மொரட்டுவகிளை) ஆகியோரே பரிசு பெற்றவர்களாவர்.

எந்தவொரு வங்கியினாலும் இதுவரை வழங்கப்பட்டிராத சிறப்பான பரிசுத்திட்டமாக உள்ள 'செலான் பரிசு மேல் பரிசு' செலான் வங்கியின் எட்டுச் வங்கி சேவைகளுடன் தொடர்புபட்டதாக உள்ளது. அந்த எட்டு சேவைகளாக 'செலான் சுவர்' (தனிநபர் சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகள்), டிக்கிரி பிளஸ் (சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்கு), நிலையான வைப்புக்கள், வதியாதோர் வெளிநாட்டு நாணயக்கணக்குகள் - என்.ஆர்.எஃப்.சி மற்றும் ஆர்.எஃப்.சி (சேமிப்புகள் மற்றும் நிலையான வைப்புக்கள்), 'கூல் காஷ்' (இளைஞர் கணக்குகள்), அடகு பிடித்தல், கடனட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் ஆகியவை திகழ்வதுடன், இவற்றுள் அதிகமானவை உள்ளார்ந்தமான வெகுமதி வழங்கல் திட்டங்களை தன்னகத்தே உள்ளடக்கியதாக உள்ளன

(த)

## இலங்கை வங்கியின் பாதுகாப்புப் பெட்டகங்கள்

யாழ்ப்பாணம், ஏப் 8

அரச வங்கியாகிய இலங்கை வங்கி தமது வாடிக்கையாளரின் நன்மை கருதி அவர்களுக்காகப் பாது காப்புப் பெட்டகங்களை (SafetyLockers) வழங்கி வருகின்றது.

உங்களது பெறுமதி மிக்க ஆபரணங்களையோ, ஆவணங்களையோ வங்கியிலேயே பாதுகாப்பாக வைத்து தேவையான போது எடுக்கவும், திரும்ப வைத்துக் கொள்ளவும் இப் பாதுகாப்பு பெட்டகங்களைப் பாவித்துக் கொள்ள முடியும்.

இன்றே உங்களுக்கென்று ஒரு பாதுகாப்பு பெட்டகத்தைப் பெற்று அரச வங்கியாகிய இலங்கை வங்கி மூலம் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு பிரதான முகாமையாளர், இலங்கை வங்கி, அதி மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும்.

(த)

## ஜனசக்தி காப்புறுதியின் கவர்ச்சிகரமான பரிசுகள்

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனம் சிறப்பாக செயலாற்றிய சுமார் 200இற்கும் அதிகமான விற்பனை பிரதிநிதிகளுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வில் கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கி கௌரவித்திருந்தது. இந்த பரிசுகளில் அமெரிக்கா, பிரித்தானியா, டுபாய், பாங்கொக் மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு சுற்றுலா, வெளிநாட்டு பயிற்சிகள், விமான டிக்கெட்கள், பணப்பரிசுகள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் போன்றன உள்ளடங்கியிருந்தன. இந்த பரிசுகள் ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் வருடாந்த விருதுகள் வழங்கல் நிகழ்வில் வழங்கப்பட்டிருந்தன.

இந்த விருது வழங்கும் நிகழ்வு வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் கோலாகலமாக இடம்பெற்றது. 23 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. ஆண்டின் சிறந்த செயற்பாட்டாளருக்கான விருது எம்.எஸ்.சாம்பனுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த விருதை நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.ரி.எல்லாவல வழங்கியிருந்தார்.

ஆயுள் காப்புறுதி பிரிவில் சிறந்த விற்பனையாளருக்கான விருது பலாங்கொட கிளையை சேர்ந்த கே.ஜி.ஏ.கமகே மூலம் வெல்லப்பட்டிருந்தது. அத்துடன் மேலும் 75 ஆயுள் காப்புறுதி விற்பனையாளர்கள் தமது திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டியிருந்தமைக்காக கௌரவிக்கப்பட்டிருந்தனர். சிறந்த வாடிக்கையாளர் மேம்படுத்தல் விருதை மஹாவெள பிராந்திய அபிவிருத்தி அலுவலகத்தை சேர்ந்த எம்.தங்கையா வென்றிருந்தார். நீர்கொழும்பு கிளையை சேர்ந்த யு.எஸ். என்.பெர்னான்டோ சிறந்த ஆயுள் குழுவுக்கான விருதை வென்றிருந்தார். சிறந்த ஆயுள் காப்புறுதி வர்த்தக மேம்பாட்டு உதவியாளர் விருது நுவரெலியா கிளையை சேர்ந்த எச்.எம். டி.ஹேரத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. அவிசாவளை கிளையை சேர்ந்த ஓ.எஸ்.தரங்கவுக்கு சிறந்த ஆயுள் காப்புறுதி வர்த்தக அபிவிருத்தி அதிகாரிக்கான விருது வழங்கப்பட்டிருந்தது. அனுராதபுரகிளையை சேர்ந்த டபிள்யூ.ஜி.சந்தனலால் சிறந்த ஆயுள் காப்புறுதி வர்த்தக விற்பனை அதிகாரியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆயுள் காப்புறுதி பிரிவின் சிறந்த பிரிவு முகாமையாளருக்கான விருது அவிசாவளை கிளையை சேர்ந்த எச்.பி.டி.எம்.வீரசிங்கவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

பொதுக்காப்புறுதி பிரிவில், சிறந்த பொது வர்த்தக அபிவிருத்தி விற்பனை மேற் பார்வையாளருக்கான டயமண்ட் விருதை, மஹர கம அலுவலகத்தை சேர்ந்த பி.டி.என்.சந்திரரத்ன வெற்றி கொண்டார். சிறந்த பொது வர்த்தக அபிவிருத்தி உதவியாளருக்கான தங்க விருது ஹோமாகம கிளையை சேர்ந்த டி.எஸ்.நிலுஷவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

## மக்கள் வங்கியின் புத்தாண்டுப் பரிசு

சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு மக்கள் வங்கியினர் 5 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையான தொகையினை வைப்பிலிடும் வாடிக்கையாளர்களுக்குப் புத்தாண்டுப் பரிசில்களாக பின்வரும் பொருள்களை வழங்கவுள்ளனர்.

50 ஆயிரம் ரூபா வைப்பிலிடுவோருக்கு வடிகட்டி நீர்த்தாங்கியும் (வோட்டர் பில்டர்) 25 ஆயிரம் ரூபா வைப்பிலிடுவோருக்கு ரைஸ் குக்கரும், 10 ஆயிரம் ரூபா வைப்பிடுபவர்களுக்கு மின் அழுத்தியும் (எலக்ரிக் அயன்) 5 ஆயிரம் ரூபா வைப்பிலிடுவோருக்கு மின்வலுவூட்டக் கூடிய மின்சூளும் (Rechare toch) வழங்கப்படவுள்ளன.

பரிசில்களை ஏப்ரல் 14 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் சகல மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)



உல்லாசப் பயணத்துறையின் அபிவிருத்தியை முன்னிட்டு இலங்கையில் முதல்முறையாக நிர்மாணிக்கப்பட்ட மிதக்கும் உணவு விடுதி கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. கொழும்பு பேர வாவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேற்படி உணவு விடுதியை ஜனாதிபதி மஹிந்த திறந்து வைத்தார். (த)

# சிறந்த ரயர் விநியோகஸ்த்தர்களுக்கு விருதுகள்

இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான அசோசியேட் மோட்டர்வேஸ் (ஏ.எம்.டபிள்யூ) நிறுவனத்தின் மீள்நிரப்பும் ரயர்கள் பிரிவின் விநியோகஸ்த்தர்களை கௌரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு அந்தநிறுவனத்தின் தலைவர் திலக் டி சொய்சாவின் பங்குபற்றுதலுடன் கந்தலம ஹோட்டலில் கோலகலமாக நடைபெற்றிருந்தது. சிறந்த 25 விநியோகஸ்தர்களின் விருது வழங்கல்' எனும் தலைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நாடு பூராகவுமுள்ள நிறுவனத்தின் மீள்நிரப்பும் ரயர்கள் பிரிவைச் சேர்ந்த 700 விநியோகஸ்த்தர்களினுள் சிறப்பாக செயலாற்றியிருந்த 25 பேருக்குத் தமது குடும்பத்தினர் சகிதம் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு கிட்டியிருந்தது.

மரதன் வர்த்தக நாமத்தின் கீழ் மீள்நிரப்பக்கூடிய ரயர்களை உற்பத்தி செய்து வரும் அசோசியேட் மோட்டர்வேஸ் நிறுவனம் அனைத்து ரிம் அளவுகளுக்குமான ரயர்களை மீள்நிரப்பக்கூடிய வகையிலும், பாரம்பரிய முறைகளான வகு-லுக் (Vacu&Lug) மற்றும் டை-ஹாட் (Die&hard) போன்ற முறைகளின் மூலம் ரயர்களை மீள் நிரப்பக்கூடிய ஆற்றல் கொண்ட இலங்கையின் ஒரே நிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



முற்றிலும் மாறுபட்ட அனுபவங்களை வழங்கக் கூடிய வகையில் கந்தலம ஹோட்டலில் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விநியோகத்தர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு, குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பங்குபற்றக்கூடிய வகையில் இரு நாள்களுக்கு இடம்பெற்றிருந்தது.

2011ஆம் ஆண்டுக்காக இடம்பெற்ற இந்த அசோசியேட் மோட்டர்வேஸ் நிறுவனத்தின் விநியோகஸ்த்தர்களை கௌரவித்து விருதுகள் வழங்கும் நிகழ்வில் ஆண்டின் சிறந்த விநியோகஸ்த்தராக தெரிவு செய்யப்பட்டவர், கம்பஹா விநியோகத்தரான காமினி லொகுபாலசூரிய ஆவார்.

கண்டி சுபிரி ரயர் ஹவுசை சேர்ந்த கித்சிறி பண்டார மற்றும் கண்டி எம்.ஜே.ஆர் பீரிஸ் மற்றும் புதல்வர்கள் நிறுவனத்தை சேர்ந்த நியூட்டன் பீரிஸ், ஆகியோருக்கு முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டிருந்தன.

இவர்களுக்குப் பெறுமதி மிக்க பரிசுகள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

களுத்துறை மற்றும் அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் தொழிற்சாலைகளை கொண்டமைந்த அசோசியேட் மோட்டர்வேஸ் நிறுவனம், தர முகாமைத்துவத்துக்காக வழங்கப்படும் ஐ.எஸ்.ஓ. 9001 : 2008 தரச் சான்றிதழையும், சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் ஐ.எஸ்.ஓ. 14001 : 2004 தரச்சான்றிதழையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுபோன்று 65 ஆண்டு கால வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனுபவத்தை பெற்ற அசோசியேட் மோட்டர்வேஸ் நிறுவனம் ஸ்ரீமத் சிறில் டி.சொய்சா மூலம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்த நிறுவனத்தின் முதலாவது வர்த்தக நடவடிக்கையாகவும் ரயர் மீள் நிரப்பல் அமைந்திருந்தது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## S.K TRAVELS

WESTERN UNION

துரித கதியில் சகலவிதமான உள்நாட்டு வெளிநாட்டு விமானப் பயணச் சீட்டுக்களையும், Western Union ஊடாக உலகத்தின் எப் பகுதியில் இருந்தும் அனுப்பும் பணத்தை துரிதகதியில் பெற்றுக்கொள்ளலாம்.

- Computer Sales & Repairing
- Internet Browsing
- Printing
- Scanning
- Photocopy
- Laminating
- Mobile phone repairing & Service.

- சிறந்த போக்குவரத்துச் சேவை
- யாழ் - கொழும்பு பஸ் சேவை
- Airport சேவைகள்
- Van for Hire

MPCS building palaly Road, Urumpirai Junction. Tel: 021 7539015

Hot line: 0094779643178
E-mail: skmoneytravels@yahoo.com
Web:sktravelsandmoney.com

நம்பிக்கை (16350)(2-6-7) நாணயம் பாதுகாப்பு


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
08.06.1943

மறைவு
09.03.2012

## திருமதி பொன்னம்பலம் மகேஸ்வரி

இரண்டு முத்துக்களை பெற்றெடுத்த செல்வத் தாயே!
திடீரென எமை விட்டுப் பிரிந்த காரணம் ஏனோ
உன் பிரிவைத் தாங்க முடியாமல் தவிக்கின்றோமம்மா
அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
இன்று நாம் சிறக்க வழிகாட்டி நின்றவளே
ஓடி மறைந்ததம்மா 31 நாள்கள்
கண் இமைக்கும் பொழுதெல்லாம்
இனிய உன் சிரிப்பு முகம் - எங்கள்
கண்களில் உலா வருகின்றது
அன்புடனும் பண்புடனும் எம்மைப் பேணிக்காத்து
கல்வி கற்பித்து எம்மையெல்லாம் ஆளாக்கிவிட்டு
நீங்கள் எங்கே சென்றீர்களம்மா?
ஆறவில்லை எம் துயரம் - ஆயிரம்
உறவுகள் இங்கிருந்தும் அம்மா - உங்களுக்கு ஈடாகுமா
மாசுபடா உங்கள் நினைவுதனை நெஞ்சிலே
சுமந்து கொண்டு ஊன் உருகி உளம் நோக வாழ்கின்றோமம்மா!
காலமெல்லாம் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் காத்த அம்மாவே!
அம்மம்மாவே! - இன்னொருமுறை
எம் குடும்பத்தில் வந்து பிறக்க மாட்டீர்களா? எம் தெய்வமே!

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். - குடும்பத்தினர்.

(16551)(2-6-7)

# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
24.04.1954

அமரர்

மறைவு
08.04.2004

## வேலுப்பிள்ளை இராஜரட்ணம்

(R.B.புக்கிங் சென்ரர் உரிமையாளர்)

அன்புத் தந்தையே நீங்கள்
எமை விட்டுப் போன தூரம்
எட்டாண்டுகள் ஆனாலும்
உங்கள் பாசமுகம் எம் கண்ணுக்குள்
எட்டிப் பார்த்த வண்ணமே
இருக்கின்றது இமைகள் இமைக்க
மறந்தாலும் எம் இதயம் உங்களை
நினைக்க மறக்கவில்லை
அன்புத் தந்தையே எம் நினைவுப்
பூக்களை உங்கள் பாதங்களில்
சமர்ப்பணமாக்குகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் நினைவுகளுடன்:
இ.டொமினிக்கம்மா (மனைவி),
மக்கள், மருமக்கள்.
இந்தியா.

(16552)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 ★ 06 ★ 1928 |  | 09 ★ 03 ★ 2012 |

## திருமதி சின்னையா அன்னம்

கடந்த (09.03.2012) இறைபதம் அடைந்த சின்னையா அன்னம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று (08.04.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எங்கள் குடும்பத் தலைவியின் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு நேரில் வருகை தந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு வகைகளிலும் உதவிகள், ஒத்தாசை வழங்கியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

7 ஆம் கட்டை,
பாரதி வீதி, சங்கானை,
தொ.பே. 077 9610 084

**குடும்பத்தினர்**

(16350)(45.0 .7)

## கருத்தரங்குகள் நேற்று ஆரம்பம்

தென்மராட்சி பிரதேச க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மற்றும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டற் கருத்தரங்குகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினரும் சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய பொது நூலகங்களும் இணைந்து இந்த வழிகாட்டற் கருத்தரங்குகளை சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட கல்வியாளர்கள் மூலம் நடத்தவுள்ளனர்.

நேற்று தமிழ்ப் பாட வழிகாட்டற் கருத்தரங்கு நடைபெற்றபோது பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

வளவாளராக தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சி. முகுந்தன் கலந்துகொண்டார். ஆரம்ப நிகழ்வில் நகராட்சி மன்ற தவிசாளர் சி.தேவசகாயம்பிள்ளை, செயலாளர் சு.புத்திசிகாமணி, பொதுச் சுகாதார பரிசோதகர் வீ.தளிர்ராஜ் ஆகியோரும் வருகை தந்தனர்.

(ம-8)

## கண்ணீர் அஞ்சலி

### சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள் - சபேசக்குருக்கள்

(புலோலி பசுபதீஸ்வர தேவஸ்தான முன்னாள் குருக்கள்)

மறைவுச்செய்தி கேட்டு மிகுந்த துயரடைவதோடு, அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

அறங்காவலர், குருக்கள், தொண்டர்கள்
(புலோலி பசுபதீஸ்வர தேவஸ்தானம், பருத்தித்துறை)

# மரண அறிவித்தல்



## கந்தசாமி சிறிஸ்கந்தா (ராசா)

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிறிஸ்கந்தா (ராசா - ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம்) 06.04.2012 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தம்பிராசா, கந்தசாமி (ஓய்வு பெற்ற தபால் திணைக்கள நுண்ணாய்வுப் பரிசோதகர்) காலஞ்சென்ற ஜீவனாயகி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும் , மனோரஞ்சிதத்தின் (ரஞ்சினி) அன்புக்கணவரும் காலஞ்சென்ற இராமர் மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், ரேணுகா, பிரபாகரன் (ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்) மனோகரன் (தபால் நிலையம் வெள்ளவத்தை), பாலகுமார், மோகனா, பிரியதர்சினி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சாந்தினி (ஆஸ்திரேலியா), ராகிணி (பிரான்ஸ்), மனோகரன் (ஆஸ்திரேலியா), மனோரதன் (லண்டன்), ரவீந்திரதாஸ் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), தேவி, நகுலா, காலஞ்சென்ற எழிலரசி ஆகியோரின் மைத்துனரும், சாந்தசொரூபன் (ஆஸ்திரேலியா), குகநாதன் (பிரான்ஸ்), சகீலா (ஆஸ்திரேலியா), சர்மிளா (லண்டன்) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2012) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோண்டாவில் ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்ப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு

தகவல்:
மனோரஞ்சிதம்
(ரஞ்சினி-மனைவி)

## VACANCY @ TRADE FINANCE & INVESTMENT PLC IN KILINOCHCHI BRANCH

TFI வெற்றி அணியோடு நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.
எதிர்கால நிதி கனவுகளை நிகழ் காலத்தில் நிறைவேற்றிடுங்கள்

இலங்கையின் நிதிச்சேவையில் கடந்த 33 வருடங்களாக முன்னோடியாக திகழும் TRADE FINANCE & INVESTMENTS PLC பின்வரும் பதவி நிலைகளுக்கு அக்கறையுடனும் , பொறுப்புடனும் குறைந்தளவு மேற்பார்வையுடனும் சுயமாக இயங்கக்கூடிய இளைஞர் யுவதிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01) Field Marketing and Recovery officer (Male)

**தகைமைகள்**

- வயது எல்லை - 25 வயதிற்கு கீழ்
- கல்வி தகைமை - உயர்தரத்தில் 03 பாட சித்தியுடன், சாதாரண தரத்தில் கணித, ஆங்கிலம் உட்பட ஆறுபாட சித்தி
- மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
- முன் அனுபவம் விரும்பத்தக்கது

### 02) Pawning Assistant (Male / Female)

**தகைமைகள்**

- வயது எல்லை - 25 வயதிற்கு உட்பட்டவர்
- கல்வி தகைமை - உயர்தரத்தில் 03 பாடசித்தியுடன், சாதாரணதரத்தில் கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாட சித்தி
- குறைந்தது 02 வருட கால அனுபவம்

**(கிளிநொச்சி நகரில் வசிப்பவர் விரும்பத்தக்கது)**

நீங்கள் எம்மோடு இணைந்து கொள்ள மேற்குறிப்பிட்ட தகுதிகளும், ஆர்வமும் இருந்தால் முழுமையான சுயவிவரக்கோவையினை 10 நாள்களுக்குள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில்/ மின்அஞ்சலில் அனுப்பி வைக்கவும்.

THE MANAGER
TRADE FINANCE & INVESTMENT PLC
A9 ROAD, KARADIPPOKKU JUNCTION, KILINOCHCHI
Email - tradefik@sltnet.lk

**TRADE FINANCE & INVESTMENTS PLC.**
(Registered with the central bank of srilanka under the finance companies ACT NO.78 of 1988)
(Registration No. PB 445)
Karadippokku junction, A9 Road, Kilinochchi.
Telephone : 021 2280108, 228 0110 Fax : 021 2280109 E-mail: tradefik@sltnet.lk

Principal lines OF Business:-

- Leasing
- Pawning
- Foreign Currency Exchange
- Hire Purchase
- Personal Loan
- Micro Finance
- Fixed Deposit
- Security Loan

Branches :-
Colombo (H.O) Jaffna Batticaloa

### வீடு வாடகைக்குண்டு

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில் இல.48/3, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி எனும் முகவரியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 3448863

### வீடு தேவை

இளைப்பாறிய அரசஅதிகாரி குடும்பத்திற்கு 3 அல்ல 4 அறைகளுடன் வீடு வாடகைக்குத் தேவை.
நல்லூர், நல்லூரை அண்மித்த பகுதிகள் விரும்பத்தக்கவை. தரகர் தேவையில்லை
தொடர்பு : சண்முகநாதன்
021 4925565, 077 6093384

### கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு

மல்லாகத்திற்கும், சுன்னாகத்திற்கும் இடையில் யாழ்ப்பாணம் K.K.S றோட்டில் அமைந்துள்ள 3 தளங்களைக் கொண்ட (G + 2 தளங்கள்) 6500 சதுரஅடி பரப்பளவைக் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்பு :
077 9003780 , 077 1726642

### வீடு வாடகைக்கு

மானிப்பாயில் நான்கு அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு : 077 0544157, 071 8818460

### தவறிவிட்டது

பாலசுப்பிரமணியம் உதயகுமார் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், Job IC என்பன 03.04.2012 திருநெல்வேலி சந்திக்கும், கோண்டாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 9865975

### தவறிவிட்டது

பிறவுண் கிறிஸ்ரியன் யோசவாஸ் திலகன் ஆகிய எனது தே.அ.அட்டை (863173108 V), சாரதி அனுதிப்பத்திரம், சில ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் (26.03.2012) அன்று பளைக்கும், நாவற்குழிக்கும் இடையில் தவற விடப்பட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும்.
077 3556619, 021 2222841
071 5786639

### கார் விற்பனைக்குண்டு

MITSUBISHI LANCER (FURI C 12) A/C, P/S, CD, MP3 என்பன உள்ள கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071686 7209


## NEW YEAR BONANZA

சித்திரைப் புத்தாண்டு வெகுமதிகள்.....
10% விலைக்கழிவு

**Acer Laptops & Desktop**



- Aspire 5742
- Aspire 4738
- Aspire AOD225



M275

**Canon Printers & Photocopy Machine**



- MP 276
- MX 357

1 வருட உத்தரவாதம்



8030cn

**Dell Printers**



- V313
- 1130SA

**Headphones**



கையிருப்பு உள்ளவரை மட்டுமே இச்சலுகை...!
தவணைமுறையிலும் வட்டி இல்லாமலும் பெற்றுக்கொள்ளலாம்...

ILE Supply Chain Centre
259, Main Street, Jaffna.
T.P No : 077608642, 0776349054


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜுவல் பிளாசா
# Jewel Plaza

தங்கத் திருநாளாம்
அக்ஷய திருதியை



அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நந்தன புதுவருட வாழ்த்துக்கள்

தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை நாளன்று (24.04.2012) விசேட விலைக்கழிவுகளும் பெறுமதிமிக்க பரிசுகளும் அள்ளி வழங்கப்படும்.

கண்கவரும் டிசைன்களில் தரம், நாணயம், சரியான நிறைவுடன் ஓடர் செய்து குறித்த தவணையில் பெற்றுக் கொள்ள மற்றும் அசல் சிங்கப்பூர் நகைகளை தரம், நிறை விலைகளில் பங்கம் ஏற்படாத வண்ணம் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

ஜுவல் பிளாசா
இல.91, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3124

(வி/716) (2-7-9)


## உயர்தர மாணவருக்கு விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஏப். 8

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தர விஞ்ஞான மாணவர்களுக்கான விசேட விரிவுரைகள் நடத்தப்படவுள்ளது.

வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர்றோயல்ஏ.விமலேந்திரன் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தால் நாளையும் நாளை மறுதினமும் கல்லூரிஒட்லிமண்டபத்தில் உயர்தர விஞ்ஞான மாணவர்களுக்கான விசேட விரிவுரைகள் நடத்தப்படவுள்ளன.

இதில் 2012, 2013, 2014 பிரிவு மாணவர்கள் பங்கு கொண்டு பயன் பெறலாம் என்று கல்லூரி விஞ்ஞானப் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் என்.வி.ஜெ.விக்டர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

விரிவுரைகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## கண்ணீர் அஞ்சலி



திருச்செல்வம் றொபேட்
(ஆசிரியர் பரியோவான் கல்லூரி)

எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய மாமாவுக்கு எனது அன்பின் கண்ணீர்க் காணிக்கைகள்
- மருமகள் சபினா.

(16574) (2-7-9)

## மரண அறிவித்தல்

### செல்லையா வீரசிங்கம்

(இளைப்பாறிய பிரதம எழுதுவினைர், காணிப்பதிவு திணைக்களம், யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா வீரசிங்கம் மார்ச் மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அரியமுத்து தம்பதியரின் அருமை மருமகனும், குணபூபதி அவர்களது பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சத்தியபாமா, பவானி (கனடா), சற்குணநாதன் (கனடா), ரவீந்திரன் (கனடா) காலஞ் சென்ற சுமதி மற்றும் சுரேந்தினி (கனடா), சர் மேந்திரன்(கனடா), வித்தியா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் பீற்றர் (கனடா), ரஜினி (கனடா), சத்தியா (கனடா), குணேந் திரன் (கனடா), தாரணி (கனடா), சிவரூபன் (கனடா) ஆகியோரின் நேசமிகு மாமனும், சிந்துஜா, ஆர்த்தி, அபி, ஆரணி, லக்சணா, மதுரா, மயூரன், நிவேதா, சஞ்சயன், ஆரண்யா, இலக்கியா, சந்தோஷ், ஆகாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் புதவுடல் ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி திங்கட்கிழமை காலை இல. 4164 Sheppard Ave East இல் அமைந்துள்ள Ogden Funeral Home இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் இல. 4570 Yonge Street ல் அமைந்துள்ள Forest Lawn Crematorium ல் காலை 9:30 மணிமுதல் 11:30 மணி வரை இறுதிக் கிரியைகள் நடைபெற்று, தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்

தொ.பே 001 647 341 0056

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்: செ.ஞானராஜா (மைத்துனர்)


Midea Electro Mart

பண்டிகைக்கால விஷேட விலைக்கழிவும்
இலவச மின் உபகரணங்களும்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

2012 Midea PC Show Room

Authorized Dealer for Abans Ltd.

24" Panasonic LCD Tv — Free Woofer
32" LCD Tv — Free DVD Player
LG Ultra Slim Tv — Free 4.1 Woofer

Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவை.

5 Items Free: Rice Cooker, Kettle, Iron Box, Mixer Grinder, Stand Fan with Remote

| COMPUTER | INTEL DUAL CORE | INTEL DUAL CORE | INTEL CORE i3 | INTEL CORE i5 |
|---|---|---|---|---|
| Processor | Intel Dual core 3.0GHZ | Intel Dual core 3.0GHZ | Inter Core I3 3.1GHZ | IntelCore i5 2.9GHZ |
| Mother board | Intel Chipset G41 -D3B | Intel Chipset G41 -D3B | Intel Board DH61WW | Intel Board DH61WW |
| Memory | 2GB DDR-III, 800MHZ | 2GB DDR-III, 800MHZ | 2GBDDRIII | 2GBDDRIII |
| Hart disk | 500GB SATA-7200RPM | 500 GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM |
| Disk drive | DVD Writer | DVD Writer | DVD Writer | DVD Writer |
| Casing | ATX 500W | ATX 500W | ATX 500W | ATX 500W |
| Moniter | LG LED16" | Samsung LED19" | Samsung LED19" | Samsung LED19" |
| Key board | Optical mouse USB | Optical mouse USB | Optical mouse USB | Optical mouse USB |
| Mouse | Multimedia key board | Multimedia key board | Multimedia key board | Multimedia key board |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker |
| Price | price =47900 | price=49900 | price= 59900 | price=68900 |

| Toshiba NB500 | Acer emachines | Lenovo B470 | HP pavilion G6 |
|---|---|---|---|
| Intel Atom 1.6GHz | Intel Dual core 2.30 GHz | IntelCorei3-2.30 GHz | Intel core i5 2.5 GHz |
| Free Dos | Win7 Home pre | Free Dos | Free Dos |
| Intel HD Graphics | RAM 3GB DDRIII | RAM 4GB DDRIII | RAM 4GB DDRIII |
| RAM 2GB DDRIII | H.D 320GB | 500GB HDD | H.D 500GB |
| H.D 250GB | LED 14.0' HD LCD | DVD Writer | LED 15.6. HD LED |
| webCam | Intel GMA4500 HD | HD Graphics | 1GB HD Graphics Radeon |
| Wifi. | DVD Writter | HD Camera | DVD Writter |
| BlueTooth | Blue Tooth | LED 14.1" | Blue Tooth |
| LED 10.1" HD | Wifi | Wifi | Wifi |
| Mirophone | webCamera With Mic | Mirophone | webCamera With Mic |
| Energy Star power | Energy Star power | Energy Star power | Energy Star power |
| Price=37900 | Price=55900 | Price=58900 | Price=79900 |

LG Single Door Fridge
2 Items Free: Rice Cooker, Mixer Grinder

LG Fully Automatic Washing Machine
2 Items Free: Iron Box, Stand Fan with Remote

Whirlpool Single Door Fridge
Free Table Fan

Terms & Contdition
1.3Years Manufacturer's warranty,
1 Year Service Warranty

கணினி கொள்வனவு செய்பவர்களுக்கு
AVG Inernet Security 2012 FREE

No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA. Tel: 021-2224566 Fax: 021-2221646
NO.4, NEW MARKET, CHAVAKACHCHERI. Tel: 021-2270268 Fax: 021-2270129
e-mail:midea21@gmail.com www.mideamart.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

நல்லூர்ப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-7)


## சேவைநலன் பாராட்டும் 60 ஆவது அகவை வாழ்த்தும்

08.04.2012

**திருமதி ஜெயமணி டெனிசியஸ்**

B.A.PGDE, M.A. SLTS - 2.I

ஆசிரிய ஆலோசகர் – ஆங்கிலம்கஷ

யாழ்.கல்வி வலயம்

முதல் நியமனம்:– ஆசிரியர் – 1996.03.18

ஆசிரிய ஆலோசகர்:– 2008.01.01 – 2012.04.07

சிறந்த ஆங்கில ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றிய

**திருமதி ஜெயமணி டெனிசியஸ்**

அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சி நிறைந்ததாக அமைந்திட எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.



ஆசிரிய ஆலோசக நண்பர்கள்,
ஆசிரிய ஆலோசகர் கழகம், யாழ்.கல்விவலயம்.

(16550) (2-6-7)

### காணி விற்பனை

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் ஆனைப்பந்தி சந்திக்கும் வீரமாகாளி அம்மன் கோயிலுக்குமிடையில் (10) பத்து பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு.

தொ.பே:- 021 7200467/ 011 2363742/ 0775487382

### வீடு விற்பனை

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் சந்தியில் சித் தங்கேணி வீதியில் சீரணி அம்மன் கோயிலருகில் 29.02 பேர்ச்சஸ் காணி 4 அறைகள் கொண்ட முற்றாக முடிக்கப்படாத வீட்டுடன் உடனடியாகவிற்பனைக்குண்டு.

தொ.பே:- 0776463843

### காணி, வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோயிலருகில் சகல வசதிகளுடன் கூடிய 4 பரப்பு காணியிலமைந்த வீடும் அருகில் விவசாயம் செய்யக் கூடிய 8 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. 0772197194

### சேவை

Ithaly, Canada, UK, Swiss, Germany போன்ற நாடுகளுக்கு Visa ஆலோசனைகள் வழங்குவதுடன் Rejected மற்றும் Pending Visa க்கள், Work Permit, PR, Visit Visa க்கள் மிகவும் துரிதமாகச் செய்துதரப்படும். மேலதிக தொடர்புகளுக்கு:-

No. - 257 1/1, Galle Road, Colombo - 6
T.P.No. - 011 2363880/ 077 2484403
E-mail - jeansasi@yahoo.co.in.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு இராமகிருஷ்ண மணி மண்டபத்தில் 05.04.2012 இல் நடைபெற்ற "கம்பன் கழக விழா" வில் சான்றோர் விருது பெற்ற யாழ்.மாவட்ட

**நா.உ.திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி** அவர்களையும்

யாழ்.பல்கலைக்கழக முதல் பெண்துணைவேந்தர் பேராசிரியை

**வசந்தி அரசரத்தினம்**

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.




"அம்பிகா மருந்தகம்",
சாவகச்சேரி.
"வதனா மருந்தகம்",
சாவகச்சேரி.

(14625) (2-6-7)

# YOGI'S BEAUTY

(Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)



**குறுகியகால அழகுக்கலை புதிய வகுப்புகள் ஆரம்பம்.**

பல புதிய மாற்றங்களுடன் கூடிய ஒப்பனைகள்

★ எமது பிரதேசத்திற்கு ஏற்றவாறும் செய்யக்கூடிய Air Brush Make up மூலம் Bridal Make up
★ மற்றும் புதிய யுத்திகளுடன் கூடிய Dance Make Up
★ Film Make Up
★ Camouflage Make Up (T.V & Photogrophic), ★ Natural Society Make Up
★ புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய Hair Rebonding & Curling

யாழ்.நகரில் முதன் முறையாக இந்த ஒப்பனைகளை அறிமுகப்படுத்துகின்றோம்.

புதிய வகுப்புகள் 15.04.2012 ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.

என்னிடம் அழகுக் கலை பயிற்சியை முடித்த மாணவிகளும் இந்தப் புதிய பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளலாம்.

**75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**Mrs.YOGINI SHANMUGANATHAN**
Dip. in. High.Tec.Aesthetics & Cosmetalogy (India)
Dip. in. Advanced Bridal Make UP & Character Make Up (India)
Dip. in. Home Economics (Srilanka & India)
Dip. in. Latest Make UP & Hair Rebending, Curling (India)
**- 021 222 2796, 0777164923**

(சி/715) (2-6-7)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

**Mega Sales**

# JAFFNA ELECTRICAL நிறுவனம் வழங்கும்

## (Abans Dealer Show Room)

LG No 1 Dealer in SriLanka

என்றும் எங்கும் எப்போதும் இல்லாத
மாபெரும் விலைக்கழிவும்,
இலவசக் கொடுப்பனவுகளும்

விசேட விலைக் கழிவு

**கையிருப்பு உள்ளவரை மட்டுமே!**




# LG JAFFNA ELECTRICAL


## (Show Room)

141,Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.
No.135, A-9 Road, Kilinochchi.
T.P: 021 228 0008
Authorized Dealer for **Abans**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JIALING STREAM

## இதோ! உங்கள் உந்துருளி கனவு நனவாகின்றது



JL48Q-5

ரூ.74,099 (மேலும் வெற் வரி)



உடன் காசுக்கு உந்துருளியுடன் LG டுவல் சிம் கைப்பேசி இலவசம்

- தானியக்க மற்றும் உதைத்து தொடக்கம் (செல்ப் மற்றும் கிக் ஸ்டார்ட்)
- 4 ஸ்ரோக் என்ஜின்
- எலோய் வீல்
- தலைக்கவசம் மற்றும் ஜேகேட் இலவசம்
- நீடித்துழைக்கும் எக்சைட் மின்கலம் (பற்றரி)

அழையுங்கள் 077 9186417

Castrol எண்ணெய் பரிந்துரைக்கப்பட்டது

*நிபந்தனைகளுக்குட்பட்டது

நாடெங்கிழுமுள்ள Abans / JVC / Haier A-Z Electronics (Pvt) Ltd. காட்சியறைகளில் கிடைக்கும்

Abans


## மணல் அகழவும் பனை தறிக்கவும் மண்கும்பானில் தடை விதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.8

வேலணை மண்கும்பான் பகுதியில் இருந்து மணல் எடுத்துச் செல்வதும் பனைகளைத் தறித்து எடுத்துச் செல்வதும் தடை செய்யப்படவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மண்கும்பானில் சட்டவிரோதமாக மணல் எடுத்துச் செல்லப்படுவதாகவும் பனைகள் தறித்து எடுத்துச் செல்வதாகவும் அதனை முழுமையாகத் தடை செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி திருட்டுத்தனமாக மணல் அள்ளிச் செல்வதுடன் பனைகளும் அளவுக்கு அதிகமாகத் தறிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மணல் அகழ்வதால் நாளடைவில் மண்டைதீவு மக்கள் குடிதண்ணீரைப் பெற முடியாமற் போகலாம் எனவும் கடல் நீர் உட்புக வாய்ப்புக்கள் ஏற்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டினார்கள்.

இதனையடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

### தேவை

Colombo Tel - Shop

வயது 25 இற்கு குறைந்த ஆண்/பெண் இருபாலார் வேலையாள்கள் தேவை. இருப்பிடம் இலவசம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

127A, 2nd Cross Street, Col -11

Tel: 0773834848

## St. John's College Jaffna

### Announcement

All the tutorial & Non - Tutorial staff, Members of the prefect body, the Scout Troop, the Sea Scout Troop, Members of the Junior Band, and the Students are requested to assemble at the college on Monday 9th April 2012 at 8.30 a.m. to attend the funeral service of our staff Late Mr.T.Robert.

(C/719) Principal


## டுபாயில் உடனடி வேலைவாய்ப்பு UNITED ARAB EMIRATES (UAE)

டுபாயில் உள்ள பிரபல கம்பனிக்கு கீழ் உள்ள வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகின்றனர். **இரண்டு வாரங்களில் பயணம்**

| | | | |
|---|---|---|---|
| CLEANERS | MALE | 100 Nos. | 800 + 200 AED |
| CLEANERS | FEMALE | 20 Nos. | 800 + 200 AED |
| SECURITY GUARD | | 50 Nos. | 2000 + 770 AED |

SLBFE Charges : 72,552.00 LKR

Terms & Conditions

இலவச தங்குமிடவசதி, போக்குவரத்து. ஒவ்வொரு இரண்டு வருடத்திற்கும் சென்றுவர விமான டிக்கெட்டுக்கள், வைத்திய உதவிகள், காப்புறுதி ஆகியவை UAE கம்பனிச் சட்டத்திற்கமைய கம்பனியால் வழங்கப்படும், வேலைநேரம் - 8 மணித்தியாலம் + 3hrs OT

நேர்முகப் பரீட்சைகள் 2012 ஏப்ரல் 16, 17, 18, 19, 20, 21ம் திகதிகளில் நடைபெறும்

AL/Advt/2491/20,21/12

நேர்முக பரீட்சைக்கு வரும்போது உங்களின் பாஸ்போட் மற்றும் 08 பாஸ்போட் அளவு புகைப்பட பிரதிகள் (White Background) தவறாமல் கொண்டுவரவும்.

AL - AZAB Travels (Pvt) Ltd

No. 67, 1st Floor, Pradeepa Mawatha, Colombo 10.
(Opposite to the Maligawatte Police Station)
Tele : 071 988 5454 / 011 266 9995
E-mail : alazabtravels@gmail.com

L.L.No. 2491

JEBZ


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் புனிதவதி குகநாதன்

(ஆசிரியை - பூநகரி செல்லையாதீவு அ.த.க. பாடசாலை, கூவில், புலோலி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 ★ 04 ★ 1975 | 10 ★ 03 ★ 2012 |

கடந்த (10.03.2012) அன்று இறைபதமெய்திய எங்கள் குடும்பவிளக்கின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்தும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு உதவிகள் புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் -

நாளை (09.04.2012) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு எமது இல்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"கனகபவனம்"
கூவில், புலோலி தெற்கு,
புலோலி.

(சி/714)(45.6.7)

குடும்பத்தினர்

### முத்துச் சிற்றி ஆற்றாகைப் பள்ளி

06.04.2012 உதயன் பத்திரிகையில் 24 B எனும் பக்கத்தில் வெளிவந்த மேற்படி விளம்பரத்தின் விலாசத்தை இருபாலை வீதி, கோண்டாவில் என வாசிக்கவும்.

### காணி விற்பனைக்கு

பிறவுண் வீதி, கொக்குவிலில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (பிறவுண் வீதியில் முகப்புப் பக்கம் 25 அடி அகலம் கொண்ட காணி)

தொடர்பு : 0771737144

### மன்னார் நகரில் விருந்தினர் விடுதி விற்பனைக்கு

26 பேர்ச் விஸ்தீரணத்தில் சகல வசதிகளுடனும் நகர மத்தியில் அமைந்துள்ள முதல்தர விருந்தினர் விடுதி விற்பனைக்கு உண்டு. முதலீட்டாளர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்

விபரங்களுக்கு : Mr.E. கயஸ் பெல்டானோ
சிரேஷ்ட சட்டத்தரணி
தொலைபேசி : 0776685918
(மாலை 6மணி - 9 மணிவரை

அல்லது 0719957124


## விசா

- இந்தியா, டுபாய், துருக்கி, றுமேனியா, லித்துவேனியா, இத்தாலி, பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி, கொலண்ட், லண்டன் நாடுகளிற்கான விசிட் விசா ஒழுங்குகள்
- சிங்கப்பூர் **Work Permit** (வேலை விசா)
- இந்தியா பிசினஸ் விசா, இந்திய குடியுரிமை **(Passport)** விசா ஒழுங்குகள்
- பார்/வைன் சொப் லைசன்ஸ் விற்பனைக்குண்டு

EURO PROFIT

0773152327/0778885903


## பதவி வெற்றிடம்

யாழ்.நகருக்கு அண்மையில் அலுவலகத்தைக் கொண்டு இயங்கும் கட்டட நிர்மாண நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) முகாமைத்துவ உதவியாளர் (B.com/HNDA with Experience, A/L 3 pass உள்ளவர்களும் பயில்வதற்கு விண்ணப்பிக்கலாம்)

2) பட வரைஞர்

NCT Draughtsmanship with Auto CAD Knowledge or equivalent (பெறுபேறுகளுக்காக காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

தகுதியானவர்கள் 7 நாள்களுக்குள் விண்ணப்பங்களை பக்ஸ், ஈமெயில், தபால் மூலமாக அனுப்பிவைக்கவும்.

சாருகாயா நிர்மாணம், செட்டியார் வளவு, சுன்னாகம்

Fax : 0212220234 (16576) Email: sarukaya_con@yahoo.com

## மரண அறிவித்தல்



### றெக்ஸ் ஜீவரட்ணம்

மிருசுவில் றெஜிஸ்ரார் வளவைச் சேர்ந்த றெக்ஸ் ஜீவரட்ணம் நேற்று (07.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாக இராசரட்ணம்-நேசரட்ணம் தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான அல்பி றட் ஜோசவ்-எலிசபேத் (தங்கம்மா) ஆகியோரின் அன்பு மருமகனும் மேரியின் (வசந்தா) அன்புக் கணவரும் நிசாந்தினி, சத்தியறூபன் (பாது காப்பு உத்தியோகத்தர், மக்கள் வங்கி சாவகச்சேரி) ஞானறூபிகா(A/L மாணவி, உசன் இராமநாதன் ம.வி.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜயந்தனின் (J.R.S. Radio Center, Jaffna) பாசமிகு மாமனாரும், செல்வம், ஜெயம், பாலா ஆகியோ ரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 09.04.2012 திங்கட் கிழமை பி.ப. 3 மணிக்கு புனித நீங்கிலார் ஆலயத்தில் நடைபெற்று திருப்பலியின் பின் மிருசுவில் சேமக் காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*றெஜிஸ்ரார் வளவு,*
*மிருசுவில் வடக்கு,*
*மிருசுவில்.*

(16579)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சத்திர சிகிச்சைக்கான உபகரணங்கள் இனி உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து

யாழ்ப்பாணம், ஏப்.8

சத்திரசிகிச்சை ஆய்வு கூடங்களுக்கான உபகரணங்களை இந்த வருடத்திலிருந்து உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் இவை கொள்வனவு செய்யப்படும் என சுகாதார அமைச்சர் மைதிரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இவை மட்டுமன்றி மருந்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்கென புதிய நடைமுறை ஒன்றையும் கொண்டுவரத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இலங்கையில் சத்திரசிகிச்சை ஆய்வுகூட உபகரணங்களை உற்பத்தி செய்யும் இரண்டு நிறுவனங்கள் உள்ளன. தவிர வெளிநாட்டு நிறுவனங்கள் பலவற்றில் இருந்தும் கேள்வி கோரல் அடிப்படையில் மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. ஆனால் சில நிறுவனங்கள் தரமான மருந்துகளை சுகாதார அமைச்சு கோரிக்கை விடும் நேரங்களில் வழங்குவதில்லை. அதனால் அரச வைத்திய சாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

அந்தச் சில நிறுவனங்கள் வேண்டுமென்றே காலதாமதம் செய்து மருந்துகளை சுகாதார அமைச்சுக்கு விநியோகிக்கின்றது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் உள்ளூர்ச் சந்தைகளில் அதிக விலைக்கு மருந்துகளைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலையே காணப்படுகின்றது. எனவே தான் உள்ளூர் நிறுவனங்களில் இருந்து மருந்து வகைகளை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச மருந்து உற்பத்தியாளர் கூட்டுத்தாபனமும் தனியார் நிறுவனங்கள் இரண்டும் தற்பொழுது 93 வகை மருந்து மாத்திரைகளை மட்டுமே உற்பத்தி செய்கின்றன. ஆனால் சுகாதார அமைச்சு ஆயிரத்து 400 வகை மருந்து மாத்திரைகளை வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து இறக்குமதி செய்கின்றன. 284 வகை மருந்துகள் அத்தியாவசியமாக உள்ளன. அரச மருந்து உற்பத்தியாளர் சங்கத்திடம் இருந்து கொள்ளளவு கூடிய தரமான மருந்து வகைகளை அதிகரிக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கென 'ஜெய்க்கா' நிறுவனம் 100 பில்லியன் ரூபாவை சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளது. இரண்டு வருடங்களில் மருந்து உற்பத்தி செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுவிடும் என சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(4)

# யாழ். நகரில் இரவு வேளை தொடரும் கொள்ளைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ்.நகரிலும் மற்றும் அண்டிய பகுதிகளிலும் கடந்த சில வாரங் களில் கொள்ளைச் சம்பவங்களும் திருட்டுக்களும் அதிகரித்து காணப் படுகிறன. இந்தக் கொள்ளைகள் மற்றும் திருட்டுக்கள் அநேகமாக இரவு வேளைகளில் ஒரு பாணியிலேயே நடைபெற்று வருகின்றது.

வீடுகள், கடைகளின் கூரைகள் வழியாக அல்லது ஜன்னல் போன்ற வற்றில் கம்பிகளை வளைத்தோ வெட்டியோ உள்ளே புகுந்து இனந்தெரியாதவர்கள் நகைகள், பணம் மற்றும் உடைமைகளை அபகரித்துச் செல்கின்றனர்.

யாழ்.கொட்டடிப் பகுதியில் வியாழன் இரவு அருகருகே இரு வீடுகளில் கொள்ளையர்கள் புகுந்து நகைகள், மடிக்கணனிகள், கைத்தொலைபேசிகள், பணம் மற்றும் பெறுமதி மிக்க உடைமைகளைச் சூறையாடியுள்ளனர்.

இந்தக் கொள்ளைகளின் போது வர்த்தகர் ஒருவரின் வீடும் சூறையாடப்பட்டுள்ளது. அங்கு 30 பவுண் நகைகள் மடிக்கணினிகள், இரண்டு கைத்தொலைபேசிகள் மற்றும் பொழுது போக்காக சேகரிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு நாணயங்களும் கொள்ளையிடப்பட்டன. வர்த்தகர் குடும்பத்தினருடன் கொழும்பு சென்ற இரண்டொரு நாளில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. வீட்டில் வர்த்தகரின் மைத்துனர் மட்டுமே தங்கி இருந்தார்

**மூன்று மணிநேரம் கொள்ளையடித்தார்கள்**

வீட்டின் சமையல் அறையின் ஜன்னல் கம்பியை வளைத்து உள்ளே புகுந்தவர்கள் மைத்துனரை கத்தியைக் காட்டி அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். சுமார் மூன்று மணிநேரம் கொள்ளையர் சாவகசமாக வீட்டில் தேடுதல் நடத்தியுள்ளனர்.

(வீட்டிலும் மூவர் தேடுதல் நடத்த வெளியில் (அருகில்) வேறு சிலர் நின்றிருக்கலாம் என்று அவர்களின் தொலைபேசி உரையாடல் மூலம் தெரியப்படுகிறது. அவர்கள் நீண்ட நேரம் தொலைபேசித் தொடர்பில் இருந்துள்ளனர்.

ஜன்னல் வழியாகக் கம்பியை வளைத்து சிறுவன் ஒருவனை உள்ளே அனுப்பியே ஏனையவர்கள் நுழைந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தக் கொள்ளை இடம்பெற்ற வீட்டுக்கு அருகில் அதே இரவில் மற்றொரு வீட்டிலும் ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் பெறுமதிமிக்க புடைவைகள் என்பன அபகரிக்கப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன் யாழ். நகரில் நாவலர் வீதியிலும் இரு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

யாழ்.மேல் நீதிமன்ற வலயத்து க்குட்பட்ட கணக்காளரது வீட்டில் மடிக்கணினி கொள்ளையடிக்கப்பட்டது. மற்றொரு பிரபல ஆசிரியர் வீட்டிலும் பணம், நகைகள் சூறையாடப்பட்டுள்ளன.

யாழ்.மாம்பழம் சந்தியில் கடந்த வியாழக்கிழமை இரவு கைத் தொலை பேசி விற்பனை நிலையத்தில் 12 கைத்தொலைபேசிகள் டிவிடி பிளேயர் மற்றும் டொங்குள் என்பன திருடப்பட்டன.

(ஒ-4)

# வவுனியா குளத்தை அழகு படுத்தல்

வவுனியா, ஏப்.8

வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள வவுனியாக்குளத்தை அழகு படுத்தும் செயற்பாடு மிக விரைவில் இடம்பெறவுள்ளது.

வவுனியா கொரவப் பொத்தனை வீதியில் அமைந்துள்ள குளமே நீர்ப்பானத் திணைக்களமும் வவுனியா நகரசபையும் இணைந்து அழகு படுத்தப்படவுள்ளது.

முன்பு இக்குளம் அழகுபடுத்துவதற்கான திட்டமிடப்பட்ட போதும் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தடைப்பட்டிருந்தது.

மீண்டும் இத்திட்டம் அப்பகுதி கமக்கார அமைப்பின் உதவியுடன் அழகுபடுத்தப்படவுள்ளது.

குளப் பகுதியைச் சுற்றிவர அலங்கார தாவரங்களை நாட்டி, இருக்கைகளும் அமைக்கப்பட்டு ஒரு பொழுது போக்கு இடமாக மாற்றுவதே நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக வவுனியா நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் சுற்றிவர நிழல் மரங்கள் நடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இக்குளம் அமைந்துள்ள பகுதி மதுப்பிரியர்களுக்குரிய முக்கிய இடமாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.


## நெஞ்சார வாழ்த்துகிறோம்



கொழும்பு கம்பன் கழகம் வழங்கிய ஏற்றமிகு இளைஞர் எனும் விருதினைப் பெற்ற நாதஸ்வர வித்துவான்

**திரு. சு. பாலமுருகன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவர் இன்னும் பல பாராட்டுக்களைப் பெற எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

இணுவில் கலாபூஷணம்
கே.ஆர். சுந்தரமூர்த்தி குடும்பம்.

## ஹீரோ கென்டன் காட்சியறை

சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு **Hero** மவுண்டன், **BMX** சைக்கிள், சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (**Rechar Charble & Remote**) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

புதுவருட விசேட விலையில்



ஹீரோ கென்டன் விநியோகஸ்த்தர்கள்
ஸ்டார் ரேடர்ஸ்,
இல. 258, 260, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி,
யாழ்ப்பாணம். தொ.பே. 0711840722.


## மரண அறிவித்தல்

### செல்லம்மா ஆறுமுகம்



தம்பசிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லம்மா நேற்று (07.04.2012) சனிக்கிழமை சிவப்பேறு எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகப்பர் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம், பார்வதிப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை, அன்னம்மா மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலகிருஷ்ணன் (ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர்), சண்முகநாதன் (கனடா), சிவதாசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), புவனேஸ்வரி, ஞானேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் மகேஸ்வரி (ஓய்வு பெற்ற தொலைபேசி இயக்குநர், மன்னார்), பரமேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி, செல்வராசா(ஓய்வு பெற்ற தபால் அதிபர்), துரைசிங்கம் (ஓய்வு பெற்ற அஞ்சல் அத்தியட்சகர்), விஜயகுமாரன் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் வீதி அதிகார சபை), ஜெயசேகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் பிரசாத் (H.N.D.A மட்டக்களப்பு), லாவண்யா (கல்வித் திணைக்களம், மன்னார்), டாக்டர் சஞ்சிதா (அமெரிக்கா), விஜிதா (கனடா), பிரகாஷ் (பொறியியலாளர், லண்டன்), டாக்டர் யாழினி (யாழ். போதனா வைத்தியசாலை), பிரதீபன் (வயம்ப பல்கலைக்கழகம்), சாமினி, துஷ்யந்தி (பொறியியலாளர், சிங்கப்பூர்), டாக்டர் அமலன் (ஆஸ்திரேலியா), கபிலன் (லண்டன்), வித்தகன், வினோதினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,பருத்தித்துறை), நிருஷா, நிருஷல், கிருஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கஷிகாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை மதியம் 11 மணியளவில் கோண்டாவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கோண்டாவில் கிழக்கு கட்டைக்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/1, இராமகிருஸ்ணா வீதி,
கோண்டாவில் கிழக்கு

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை பாஸ்கரன்



அரியாலையைப் பிறப்பிடமாகவும், 26, கனகரத்தினம் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பாஸ்கரன் நேற்று (07.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-செல்வலக்ஷ்மி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம்-அன்னலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீதயாவின் அன்புக் கணவரும், டயானின் (HNB, Batticaloa Branch) அன்புத் தந்தையும், பவானி, ராசதுரை, உருத்திரா, பீதாகரன், தர்மபாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சறோஜினி, ஸ்ரீதரன், ஸ்ரீமோகன், ஸ்ரீகாந்தன், ஸ்ரீரமணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26, கனகரத்தினம் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.


## வேலையாள் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கி வரும் பிரபலமான மருந்தகம் (பார்மசி) ஒன்றுக்கு முன்னனுபவமுள்ள வேலையாள் (ஆண் 25 வயதுக்கு உட்பட்ட) தேவை.

★ தங்குமிட வசதி செய்து தரப்படும்
★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

உடன் தொடர்பு கொள்ளவும்
தொ.பே.: 0721056924


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு. சின்னராசா சிவபாலசிங்கம்

அல்வாய் வடக்கு கிராம சேவையாளராக ஆறு வருடங்கள் சிறப்பாக பணியாற்றி ஓய்வுபெறும் உயர்திரு. சி. சிவபாலசிங்கம் அவர்களின் சேவையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டு விழா நடைபெறும்

இடம்: யா/ அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை
காலம் : 08.04.2012 ஞாயிறு பி.ப. 3.00 மணி

அல்வாய் வடக்கு மக்கள்
(J/400 பிரிவு)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



*அமரர் முருகேசு மயில்வாகனம்*
*(பெயின்ரர்)*

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்கள் இன்று (08.04.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிறப்பு:
*27.12.1949*
இறப்பு
*09.03.2012*

*54 A, புங்கன்குளம் வீதி,*
*கணக்கர் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## அழகுக்கலை வகுப்புகள் ஆரம்பம்

- இந்தியாவில் இருந்து யாழ். வருகை தந்துள்ள Mrs. Niruja Marshall, DBHT (UK). Cosmeto logist அழகுக்கலை நிபுணரால் அனைத்து அழக்குக்கலை பயிற்சிகளும் சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.
- ஆரம்பம் - சித்திரை 16ஆம் திகதி தொடக்கம்
- சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0754167523

யாழ்.வண்ணை

## அரசடி விநாயகர் ஆலயம் உற்சவ மூர்த்தி விநாயகர் பிரதிஷ்டா விஞ்ஞாபனம்

விநாயகர் அடியார்களே,

நிகழும் கரவருஷம் பங்குனி மாதம் 26 ஆம் நாள் (08.04.2012) ஞாயிற்றுக் கிழமை பகல் 10. 27 மணி முதல் 12.14 மணி வரை உள்ள மிதுன லக்கினமும் துதியை திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் விநாயகப் பெருமான் பிரதிஷ்டை நடைபெற திருவருள் பாலித்துள்ளார்.

இந்த வைபவம் யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் இருந்து அன்று காலை 9 மணியளவில் விநாயகப் பெருமான் எழுந்தருளி காங்கேசன்துறை வீதி வழியாக ஆலயத்தைச் சென்றடைவார்.

அன்றைய தினம் விநாயக அடியார்கள் விஸ்வப் பிரம ஸ்ரீ க.நவநீதன் ஆச்சாரியார் விஸ்வப் பிரம்ம ஸ்ரீ ந. கஜன் ஆச்சாரியார் ஆகியோரது ஏற்பாடான இந்த வைபவத்தில் கலந்துகொண்டு எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

அன்றையதினம் நண்பகல் 12 மணியளவில் மகேஸ்வர பூசை நடைபெறும்.

ஆலய பரிபாலன சபையினர்

உபயகாரர்

விளம்பர அனுசரணை
**சுஜீவா வைத்தியசாலை**
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள் வேத வைத்தியசாலை)
இல.6, கஸ்டிஅம்மன் வீதி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## கணினி உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு

Tel : 021-222 4459, 0772533390

Processor, Motherboard, Hard disk, Ram DDR- I, II, III, DVD Writer, Casing, LED Monitor, Keyboard, Laser Mouse, Headphone, Pen drive, 7.2 Multy Dongle, Web camera, Speaker, etc, (கணினி தொடர்பான அனைத்து பொருள்களையும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்).

NORTH LEAD COMPUTER SALES AND SERVICE CENTER
328A, Stanly Road, Jaffna

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணி பீடம்

**மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி**
**முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2011**

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 09.04.2012 முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 18.04.2012 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப் படுகின்றார்கள்.

பதிவாளர்.

## மரண அறிவித்தல்



*திருமதி விறிசித்தம்மா லூர்த்தையா*

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விறிசித்தம்மா லூர்த்தையா நேற்றுமுன்தினம் (06.04.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் லூர்த்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பிலோமினா (மணி) மற்றும் புஸ்பம், சூசப்பிள்ளை (நியூஸிலாந்து) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அல்போனிசா, சிலோஜினா, குறூஸ்றபாயல், தேவராஜா (ஜெர்மனி), ஞான உதயதாசன் (ஜேர்மனி), இருதயராஜ் (லண்டன்) ஆகியோரின் பெரியம்மாவும், சப்சிங், அன்ரனி டொறிங்ரன், சுமித்திரா (ஜேர்மனி), சகாயராணி (ஜேர்மனி), சியாமளா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், றஞ்சிதம் (நியூஸிலாந்து) மைத்துனியும், ரவிக்குமார், சுதர்னா, சுஜிவன் (பிரான்ஸ்), சுலெக்சன், வினோத் அன்ரனி, கனிஸ்ரன், கமில்ரன், அஜித், றபீனா, றொசானா, றெமிஸ் (லண்டன்), நிருபா, நிரூசன், நிக்கொம் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், றஜீவன், நெக்சனா, ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.04.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் உயர்ப்புலம் அடைக்கல நாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பாசமிகு பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்.

## அகி பியூட்டி கெயாவின் அழகுக்காட்சி



யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்
08.04.2012 ஞாயிற்றுக்கிழமை இன்று 2 மணி தொடக்கம் 6 மணிவரை



Tel.: 0217200353,
0771559113.

## German Institute இல் இம்முறை A1 Exam மில் சித்தியடைந்த மாணவர்கள்



சேந்தன் - 86, அயித் - 69,
பிறஞ்சீபன் - 72, சுதர்சினி 60,
சிவதர்சினி - 61, பிரிந்திகா - 71,
மதிவதனி - 75, வசந்தி - 71,
றோன்சிய - 65, கார்திகா - 65

தொடர்புகளுக்கு
10, Palaly Road,
T.P.: 0771604823.

## உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
விசேட கட்டணங்கள்

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு),
கடல் உணவு, மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும், வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD, Vedioகள் என்பன மிக விரைவாக அனுப்பி DHL

நீங்கள் உங்கள் இல்லங்களில் இருந்தவாறே உள்நாடு,வெளிநாடுகளுக்கான DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள (Door to door Service)
அழையுங்கள் 021 222 7835, 0719554528

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
கனடா - 1 kg - 500/=
சுவிஸ் - 1 kg - 400/=

**திருமுருகன் கொம் நெற்**

DHL யாழ்ப்பாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2

இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 ஆவது வீரர்களின் போர்

# முடிந்தது சமநிலையில்



தெல்லிப்பழை, ஏப். 8
கடந்த இரு தினங்களாக மகாஜனக் கல்லூரியில் நடைபெற்று வந்த 12 ஆவது வீரர்களின் போர் துடுப்பாட்டப் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

நேற்று பகல் 02 ஓட்டங்களுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 74.3 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பிரணவன் 94 பந்துகளில் 42 ஓட்டங்களையும் டிலோஜன் ஆட்மிழக்காது 26 ஓட்டங்களையும், ரமேஷ்குமார் 25 ஓட்டங்களையும், டிலக்சன் 21 ஓட்டங்களையும், அஜித் 19 ஓட்டங்களையும், பிரசாந் 16 ஓட்டங்களையும், சாரங்கன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 40 ஓட்டங்களும் கிடைத்தன.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த சஞ்சயன் 5 இலக்குகளையும், குமுதன் 03 இலக்குகளையும் சிந்துஜன், ஜெனக்சன் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் - ஒரு மணித்தியாலமும் 50 நிமிடங்களிலும் - 180 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் பொறுமையுடனும், கவனமாகவும் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை குவித்தனர். எனினும் அடுத்து வந்தவர்கள் சோபிக்காத நிலையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 26 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 06 இலக்குகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது. நிக்ஷன் 69 ஓட்டங்களையும், றெபேட்நிசாந் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 11 ஓட்டங்களும் கிடைத்தன.

மகாஜனக் கல்லூரியின் அணித்தலைவர் அஜித் 03 இலக்குகளையும் டிலக்சன் 02 இலக்குகளையும் ஜனந்தன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள்.

போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராகவும் சகலதுறை வீரனாகவும் மகாஜனக் கல்லூரி அணித்தலைவர் அஜித் தெரிவு செய்யப்பட்டார். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த நிரோஜன் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், றொபேட் நிசாந்த் சிறந்த களத்தடுப்பாளராகவும் சிந்துஜன் ஆட்டநாயகனாகவும் தெரிவானார்கள்.

சிறந்த வீரர்களுக்கான பரிசில்களை திருமதி எஸ். சத்தியநாதனும், வெற்றிக் கிண்ணத்தை இரு அணிகளுக்கும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மகாஜனன் நல்லதம்பி சத்தியநாதன் மற்றும் விருந்தினர்களாக கலந்துகொண்ட மு.குமரகுருபரன் மு.நடராசா மற்றும் இரு கல்லூரிகளின் அதிபர்கள் ஆகியோர் இணைந்து வழங்கினர். (ங-86)



வெற்றிக் கிண்ணத்துடன் இரு அணித் தலைவர்களும்



சிறந்த களத்தடுப்பாளர் விருது பெறும் றொபேட் நிசாந்த்



ஆட்ட நாயகன் விருது பெறும் சிந்துஜன்



சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது பெறும் நிரோஜன்

## சைக்கிளோட்டப் போட்டி: வெற்றியீட்டியோர் விவரம்

வவுனியா,ஏப்.8
வவுனியா தெற்கு வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட 21 மைல் சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளின் விவரம் வருமாறு.

ஆண்கள் பிரிவில் முதல் பத்து இடங்களைப் பெற்ற பாடசாலை மாணவர்களின் விவரம்:-

கே.பி.தேவகுமார் (காமினி ம.வி), எஸ்.அகிலதீபன் (இந்துக்கல்லூரி), பி.டினுசன் (நெளுக்குளம் கலைமகள் வித்), யோ.டினுசாந் (வவுனியா சி.சி.ரி.எம்.எஸ்), ரி.அமுதாசன் (மூன்று முறிப்பு அ.த.க), என்.கிறிஸ்ரி (வீரபுரம் ம.வி), ஆர்.செந்தூரன்(அல் இக்பால் ம.வி), எஸ்.சதீஸ்வரன்(பாவற்குளம் கணேஸ்வரா வித்), சி.ஜெயகாந் (தமிழ் மத்திய மகாவித்தியாலயம்)

பெண்கள்:-

செ.சன்சிகா (வெளிக்குளம் கனிஷ்ட உயர்தரப் பாடசாலை), கி.நேர்மதி (பூவரசங்குளம் ம.வி), பா.டர்சிகா (பெரியகோமரசன் குளம் ம.வி), எஸ்.தனுசா(மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை), யோ.பிரதீபா (பிறமண்டு வித்தி), ஜெ.ஜெயந்தினி (பெரியகோமரசம் குளம் ம.வி), ஐ.கனிஸ்ரா (வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தி), ப.மிதுஷா (வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தி), வீ.றிஷாணி (மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை)

இந்தப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா தெற்கு வலயத்தின் அலுவலக வாயிலில் இருந்து ஆரம்பமாகி நொச்சிமோட்டைச் சந்திவரை சென்று மீண்டும் ஆரம்பமான இடத்திலேயே நிறைவுற்றது.

இந்தப் போட்டி வவுனியா தெற்கு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.சுபைர் தலைமையில் இடம்பெற்றது. போட்டியை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாணிக்கவாசகர் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

(ங-23-400)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 8
யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படுகின்ற அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 9 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ். சென்றல் அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோத உள்ளது. (ங-23)

## கபடி சம்பியன்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.8
பளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான கபடி போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழக அணியும், பெண்கள் பிரிவில் புலோப்பளை சென் பீற்றர் விளையாட்டுக் கழக அணியும் சம்பியன் ஆகின.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சோரன்பற்று பராசக்தி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. போட்டியில் வெல்லப்போவது யார் என்பதை இறுதி வரை கணிக்க முடியாதிருந்தது. இறுதி வரை இரு அணிகளும் சளைக்காமல் வெற்றிக்காக பெரும் போராட்டம் நடத்தின.

இறுதியில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழக அணி 39:32 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சோரன்பற்று பராசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புலோப்பளை சென்.பீற்றர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் புலோப்பளை சென்.பீற்றர் விளையாட்டுக்கழக அணி [illegible] என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது. (ங-23)

## அல்- அமன், கலைமகள் இறுதிப் போட்டியில் மோதல்

வவுனியா,ஏப்.8
வவுனியா கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் "செல்லையா பத்மநாதன்" ஞாபகார்த்த, அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்துக்கு வவுனியா அல் -அமன் விளையாட்டுக் கழகமும், கலைமகள் விளையாட்டுக் கழகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

16 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப் போட்டி கலைமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அல் -அமன் விளையாட்டுக் கழகமும், வவுனியா கலைமகள் மஞ்சள் அணியினரும் மோதிக் கொண்டனர்.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் அல் -அமன் விளையாட்டுக் கழகம் 2 புள்ளிகள் வித்தியாசத்தில் வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற மற்றொரு அரையிறுதியில் கலைமகள் விளையாட்டுக் கழகமும், தோணிக்கல் அண்ணா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. பரபரப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் வவுனியா கலைமகள் விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-400)

## வெற்றிக் களிப்பு



நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவானது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பியது முதலிடம்

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் சுவானின் சுழல் மாயா ஜாலமும், பீற்றர்ஸனின் அதிரடியும் கை கொடுக்க இங்கிலாந்து அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தி தொடரைச் சமன் செய்தது.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் நடைபெற்றது. இதில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 275 ஓட்டங்களுடன் தனது சகல இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன சதமடித்தார். உப தலைவர் மத்தியூஸும், சமர வீரவும் அரைச்சதம் கடந்தனர். இங்கிலாந்தின் சுழல் மன்னன் சுவான் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

இதற்குப் பதிலளித்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி கெவின் பீற்றர்ஸனின் அதிரடியான சதத்தின் மூலம் வலுவான இலக்கினை நிர்ணயித்தது. முதலாவது இன்னிங்ஸிற்காக இங்கிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 460 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இங்கிலாந்து அணிக்கு துடுப்பாட்டத்தில் தூணாக நின்று பீற்றர்ஸன் 151 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இந்த ஓட்ட எண்ணிக்கையை அவர் 'ரி-20' ஆட்டம் போன்று அதிரடியாக விளாசிப் பெற்றுக் கொண்டார். இலங்கையின் சார்பில் அடுத்த முரளியாக உருவெடுத்திருக்கும் ஹேரத் 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.

185 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி சுவானின் ஆதிகத்திலிருந்து விடுபடுவதற்கு தடுமாறியது. மஹேல, சமரவீர ஓரளவு சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவு வரையில் இலங்கையின் ஆட்டத்தை நீடித்திருந்தனர். நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் இலங்கை அணி 6 இலக்குகளை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் மஹேல 55, மத்தியூஸ் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.




இங்கிலாந்தின் வெற்றியைத் தடுக்க கடுமையாகப் போராட வேண்டிய நிலையில் இலங்கை அணி நேற்று ஆட்டத்தின் இறுதி நாளில் களமிறங்கியது. ஆட்டம் ஆரம்பமாகியதும் மஹேல, மத்தியூஸ் ஜோடி அணியின் நிலை உணர்ந்து விளையாடியது. இருப்பினும் ஆரம்பத்திலேயே இங்கிலாந்து அணி சுழற்பந்து வீச்சை பயன்படுத்தியது. சுவானின் சுழலில் மஹேலவின் இலக்கு பந்தாடப்பட்டது. அதன் பின்னர் இலங்கை அணியின் தோல்வி உறுதியான போதும் மறுமுனையில் மத்தியூஸ் நிற்பது நம்பிக்கை கொடுத்தது. மஹேல ஜெயவர்த்தனவின் வெளியேற்றத்தை தொடர்ந்து உள்நுழைந்த பின்வரிசை வீரர்கள் ஒற்றை ஓட்டங்களுடன் வெளியேறினர். மத்தியூஸ் தனித்துப் போராடிய போதும் இறுதியில் பின்னின் பந்து வீச்சில் அரைச்சதத்தை தவறவிட்டு ஆட்டமிழக்க இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்தது.

இங்கிலாந்து அணி 94 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. முதலாவது பந்து பரிமாற்றத்தினை டில்ஷான் வீசினார். அந்தப் பந்து பரிமாற்றத்தின் கடைசிப் பந்தில் ஸ்ரோரஸின் இலக்கினை ஓட்டமெதனையும் பெறாத நிலையில் வீழ்த்தி இங்கிலாந்துக்கு அதிர்ச்சி கொடுத்தார். குக் மறுமுனையில் சிறப்பாக ஆட அடுத்து நுழைந்த ரொட்டும் ஹேரத்தின் சுழலில் சிக்கி வெளியேறினார்.

இதனையடுத்து களமிறங்கிய பீற்றர்ஸன் முதலாவது இன்னிங்ஸில் வெளுத்து வாங்கியதைப் போன்று வெளுத்துக் கட்டினார். அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். பீற்றர்ஸனின் அதிரடியில் இங்கிலாந்தின் வெற்றி இலகுவானது.

இறுதியில் இரண்டு இலக்குகளை மாத்திரம் இழந்து இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக பீற்றர்ஸனும், தொடர்நாயகனாக மஹேலவும் தெரிவு செய்யப்பட்டனர். (5)

**இலங்கை எதிர் இங்கிலாந்து** (கொழும்பு சரவணமுத்து மைதானம்)

இலங்கை - 275 & 278 இங்கிலாந்து - 460 & 97/2

இங்கிலாந்து 8 இலக்குகளால் வெற்றி

இலங்கை (இரண்டாவது இன்னிங்ஸ்)

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| பிரசாத் | c பிரஸ்னன் b பின் | 34 | 59 | 5 | 0 |
| திரிமன்னே | c ஸ்ரோரஸ் b அண்டர்ஸன் | 11 | 28 | 1 | 0 |
| டில்ஷான் | c அண்டர்ஸன் b சுவான் | 35 | 66 | 0 | 0 |
| சங்ககார | c பிரையர் b சுவான் | 21 | 86 | 2 | 0 |
| ஜெயவர்தன | c குக் b சுவான் | 64 | 191 | 4 | 0 |
| சமரவீர | b சுவான் | 47 | 139 | 4 | 0 |
| ரந்திவ் | b சுவான் | 00 | 02 | 0 | 0 |
| மத்தியூஸ் | c ஸ்ரோரஸ் b பின் | 46 | 98 | 6 | 0 |
| பி.ஜெயவர்தன | b சுவான் | 02 | 06 | 0 | 0 |
| ஹேரத் | c அண்டர்ஸன் b பட்டேல் | 02 | 21 | 0 | 0 |
| லக்மல் | (ஆட்டமிழக்காமல்) | 04 | 17 | 1 | 0 |
| | உதிரிகள் | 12 | | | |
| | மொத்த ஓட்டங்கள் | 278 | | | |

இலக்கு இழப்பு: 1-23, 2-64, 3-104, 4-125, 5-215, 6-215, 7-238, 8-242, 9-251, 10-278

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அண்டர்ஸன் | 20 | 6 | 36 | 1 |
| பின் | 15.5 | 1 | 30 | 2 |
| சுவான் | 40 | 1 | 106 | 6 |
| பிரஸ்னன் | 14 | 5 | 24 | 0 |
| பட்டேல் | 25 | 7 | 54 | 1 |
| பீற்றர்ஸன் | 4 | 0 | 18 | 0 |

Sri Lanka Cricket

இங்கிலாந்து (இரண்டாவது இன்னிங்ஸ்)

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஸ்ரோரஸ் | b டில்ஷான் | 00 | 06 | 0 | 0 |
| குக் | (ஆட்டமிழக்காமல்) | 49 | 69 | 6 | 0 |
| ரொட் | lbw b ஹேரத் | 05 | 15 | 0 | 0 |
| பீற்றர்ஸன் | (ஆட்டமிழக்காமல்) | 42 | 28 | 4 | 2 |
| | உதிரிகள் | 1 | | | |
| | மொத்த ஓட்டங்கள் | 97 | | | |

இலக்கு இழப்பு: 1-0, 2-31

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| டில்ஷான் | 7.4 | 1 | 43 | 1 |
| ஹேரத் | 09 | 0 | 37 | 1 |
| ரந்திவ் | 03 | 0 | 16 | 0 |

# சென்னை அமோகம்

ரவீந்திர ஜடேஜா சகல துறைகளிலும் கலக்க சென்னை அணி இலகுவாக வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

ஐ.பி.எல் தொடரின் ஆறாவது ஆட்டம் நேற்று இரவு 8 மணிக்கு விசாகப்பட்டினத்தில் இடம்பெற்றது. சென்னை சூப்ப கிங்ஸ் மற்றும் டெக்கான் சார்ஜஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் சார்ஜஸ் அணித் தலைவர் கம்ரான் வைட் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

துடுப்பெடுத்தாடத் தொடங்கிய சென்னை அணி முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே முரளி விஜயின் இலக்கினைப் பறிகொடுத்தது. இருப்பினும் அதன் பின்னர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய பிளெஸிஸ், ரெய்னா ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை மெல்ல மெல்ல உயர்த்தியது. நான்கு பந்து பரிமாற்றங்களில் 40 ஓட்டங்களை இரண்டாவது இலக்குக்காக பகிர்ந்த நிலையில் ரெய்னா 16 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அதன் பின்னர் நுழைந்த பத்திரிநாத் சுமாராக விளையாட மறுமுனையில் அதிரடி வேட்டை நடத்திய பிளெஸிஸ் ஆட்டமிழந்தார். பிளெஸிஸ் 25 பந்துகளில் 35 (4 ஆறு ஓட்டங்கள், ஓர் நான்கு ஓட்டம்) பெற்றுக் கொடுத்தார். பத்திரிநாத் 25, டோனி 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஜடேஜா கலக்கலாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தார். ஜடேஜாவின் ஓட்ட வேட்டையில் 48 ஓட்டங்கள் 29 பந்துகளில் பெறப்பட்டது.


டுவைன் பிராவோ

இறுதிக் கட்டத்தில் டுவைன் பிராவோ போட்டுத் தாக்கினார். இறுதிப் பந்து பரிமாற்றத்தில் கோணியின் பந்து வீச்சில் மூன்று ஆறு ஓட்டங்கள் விளாச சென்னை அணி 20 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டுவைன் பிராவோ ஆட்டமிழக்காமல் 18 பந்துகளில் 5 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 43 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் டெக்கான் சார்பில் ஸ்ரெய்ன், டானியல் கிறிஸ்டியன் இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு பிரமாண்டமான இலக்கை விரட்டக் களமிறங்கிய டெக்கான் அணி ஆரம்பத்தில் அசத்தியது. சென்னைக்கு நிகராக வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. டானியல் ஹரிஸ் 15 ஓட்டங்களுடன் பொலஞ்சரின் பந்தில் வெளியேற முதலாவது இலக்கு வீழ்த்தப்பட்டது. 45 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாவது இலக்கும் சரிக்கப்பட அணி சற்று நெருக்கடியை எதிர்நோக்கியது.

இருப்பினும் அதன் பின்னர் இணைந்த அணித்தலைவர் வைட், பார்த்திவ் பட்டேல் இருவரும் சென்னையின் பந்து வீச்சை சமாளித்து ஓட்டங்களைப் பெற்றனர். 25 பந்துகளில் 32 ஓட்டங்களை மூன்றாவது இலக்குக்காக இணைப்பாட்டமாகப் பகிர்ந்த நிலையில் பட்டேல் ஆட்டமிழக்க டெக்கானின் சரிவு தொடங்கியது.

சென்னையின் சுழல் புயல்கள் போட்டுத் தாக்க டெக்கான் அணியால் நிமிர்ந்து கூடப் பார்க்காத அளவுக்கு அடுத்தடுத்து இலக்குகளை பறிகொடுத்தது. பின்வரிசையில் அன்கிட் சர்மா மாத்திரமே இரண்டு ஆறு ஓட்டங்கள் விளாசி அணியை 100 ஓட்டங்களைத் தாண்ட வைத்தார். இருப்பினும் 17.1 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 74 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சென்னையின் பந்து வீச்சில் ஜடேஜா 16 ஓட்டங்களுக்கு ஐந்து இலக்குகளைக் கைப்பற்றி சாதனை படைத்தார். ஆட்டநாயகனாகவும் அவரே தெரிவானார். (5)

# முரளி கலக்கல் பெங்களூர் வெற்றி



பந்து வீச்சில் முரளிதரன் கலக்க, துடுப்பாட்டத்தில் ஏ.பீ.டீ வில்லியர்ஸ் அசத்த பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி சொந்த மண்ணில் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லி டெயாடெவில்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல் தொடரின் ஐந்தாவது ஆட்டம் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி டெயாடெவில்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பெங்களூருக்கு மக்டொனால்ட் மிகச் சிறப்பான ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தார். இப்ரான் பதானின் இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தில் 3 நான்கு ஓட்டங்கள் மற்றும் ஓர் ஆறு ஓட்டம் அடித்து அதிரடியில் கலக்கினார். இருப்பினும் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் புஜாரா, மோர்னி மோர்கலின் வேகத்தில் சரிந்தார். தொடர்ந்தும் அதிரடி காட்ட முனைந்த மக்டொனால்ட், மோர்னி மோர்கலின் பந்தில் பிரேஸ்வெல்லின் சிறப்பான பிடியெடுப்பில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹோக்லி 8 ஓட்டங்களுடனும், திவாரி ஓர் ஓட்டத்துடனும் பவிலியன் திரும்பினர். இலக்குகள் ஒரு புறம் வீழ்த்தப்பட்டாலும் மறுமுனையில் ஏ.பீ.டீ வில்லியர்ஸ், டெல்லிக்கு எமனானார். வில்லியர்ஸின் போட்டுத் தாக்குதலில் நிலைகுலைந்தாலும் ஒரு புறம் இலக்குகளை டெல்லி அணி பெங்களூருடமிருந்து பிடுங்கியது.

இறுதியில் இருபது பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 8 இலக்குளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டீ வில்லியர்ஸ் இறுதிவரையில் ஆட்டமிழக்காமல் 42 பந்துகளில் 64 (4 ஓட்டங்கள் 6, 6 ஓட்டங்கள் 2) பெற்றார். டெல்லி சார்பில் பந்து வீச்சில் பிரேஸ்வெல் 3 இலக்குகளை கைப்பற்றினார்.

மிகவும் கடினமான இலக்கை விரட்ட டெல்லி அணி களமிறங்கியது. சகீரின் முதலாவது பந்துபரிமாற்றத்தின் முதல் மூன்று பந்துகளிலும் அரோன் நான்கு ஓட்டங்களுக்கு அடுத்தடுத்து விரட்டி அதிரடியைத் தொடக்கினார். சேவாக் அதிரடியாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட போதும் சகீர்கானின் முதலாவது பந்து பரிமாற்றத்தின் இறுதிப் பந்தில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் அரோன், நமன் ஓஜா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினர். இவர்களின் அதிரடியில் டெல்லி அணி வெற்றியை எட்டும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த பெங்களூர் அணித்தலைவர் வெற்றோரி முரளியைப் பந்து வீச அழைத்தார். முரளியின் முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே அதிரடியாக ஆடிய நமன் ஓஜா (33 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். தொடர்ந்து முரளியின் அடுத்த பந்து பரிமாற்றத்தில் அரோனும் (25 ஓட்டங்கள்) ஆட்டமிழக்க டெல்லியின் வெற்றி கேள்விக் குறியானது.

இலக்குக்ள் சீராக வீழ்த்தப்பட்டாலும் கடைசி ஆட்டத்தில் கலக்கிய இப்ரான் பதான் துடுப்பெடுத்தாடத் தொடங்கியதும் மீண்டும் டெல்லியின் பக்கம் வெற்றி சாயலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. பதானும் 24 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாக டெல்லியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

20 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களை மாத்திரம் பெற்று டெல்லி அணி 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பெங்களூரின் பந்து வீச்சில் முரளி 25 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக பெங்களூரின் டீ வில்லியர்ஸ் தெரிவானார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலைகளுக்கு நேற்று 'சிகிச்சை'



மட்டக்களப்பு , ஏப் 08

மட்டக்களப்பில் இனந் தெரியாதோரால் கடந்த வியாழக்கிழமை அதிகாலை சிதைக்கப்பட்ட பெரியார்களின் சிலைகள் நேற்று முதல் துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. பெரியார்களின் சிலை உடைப்புத் தொடர்பாக பல்வேறு அமைப்புகளும், பொது மக்களும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர். இந்துநிலைமை மோசமடைந்தால் கலவரங்கள் தோன்றக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே எதிர்ப்புகளைச் சமாளிக்கும் முகமாக மட்டக்களப்பு மாநகர சபை இந்தப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு நகரில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் பெருந்தலைவரும் சமாதானத்தின் சாத்வீகப் போராட்டத் தந்தையுமான மகாத்மா காந்தியின் சிலை, சாரண இயக்கத்தின் தந்தையான பேடன் பவல் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட சிலை, உலகறிந்த தமிழ் அறிஞரும் துறவியுமான விபுலானந்தரின் சிலை, மற்றும் பெரும் தமிழ் அறிஞரும் சிறந்த தமிழ் இலக்கியச் செம்மலுமான புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரின் சிலைகள் கடந்த வியாழக்கிழமை அதிகாலை உடைக்கப்பட்டிருந்தன. மக்களின் மனதில் நீங்கா இடம்பிடித்த இந்த அறிஞர்களதும், பெரியார்களினதும் சிலைகள் உடைக்கப்பட்ட விவகாரத்தால் மட்டக்களப்பில் பெரும் பதற்ற நிலை தோன்றியிருந்தது. கலவரம் ஒன்றை உருவாக்குவதற்காகவே இத்தகைய சீண்டல் முயற்சிகள் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் பல்வேறு அமைப்புகளும், அரசியல் கட்சிகளும், பொது மக்களும் சிலை உடைப்புகளுக்கு எதிராக கண்டனங்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றனர். இந்தநிலை தொடர்ந்தால் மட்டக்களப்பில் பெரும் பதற்றம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்ட மாநகர சபை உடனடியாக சிதைக்கப்பட்ட நான்கு சிலைகளையும் புனரமைக்க முடிவு செய் தது.

இந்தமுடிவின் அடிப்படையில் குறித்த நான்கு சிலைகளினதும் புனரமைப்புப் பணிகள் நேற்று ஆரம்பமாகின. குறுகிய காலத்துக்குள் இவை புனரமைப்புச் செய்யப்பட்டு மீளத்திறக்கப்படும் என மட்டக்களப்பு மாநகர சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிலை உடைப்புவிவகாரம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் லால் பெரேரா தெரிவித்துள்ளார். எனினும் இதுவரை குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை. (ங)

## சிலை உடைப்பு விவகாரம் அமைப்புகள் கண்டனம்

மட்டக்களப்பு,ஏப் 8

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் தமிழ் இன விரோதிகளால் தலைவர்களின் சிலைகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு அரசியல் மற்றும் பொதுஜன அமைப்புக்கள் தமது கண்டனத்தை வெளியிட்டு வருகின்றன.

விடயமறிந்து உடனடியாக அறிக்கை வெளியிட்டுள்ள தமிழரசுக் கட்சி, '' தமிழர்களின் உரிமைப் போராட்டங்கள் யாவற்றையும் வன்முறை முத்திரை குத்தி விடுபவர்கள். அகிம்சையே தமது செயற்பாட்டு வலுவாக கொண்டிருந்த நான்கு உத்தமர்களின் சிலைகளையும் உடைத்தெறிந்ததன் மூலம் தாமே வன்முறையாளர்கள் என்பதை வெளிப்படையாகவே அடையாளங் காட்டியுள்ளனர். இதற்கு முன்னரும் இந்துமத ஞானி சுவாமி விவேகானந்தரின் சிலை உடைக்கப்பட்டதும். திருமலையில் தந்தை செல்வநாயகத்தின் சிலை உடைக்கப்பட்டதும் கிழக்கு மாகாணத்தில் எமது இருப்பை கேள்விக்குறியாக்கும் இதே நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில்தான் என்பது இப்போதும் சந்தேகமின்றி நிரூபணமாகின்றது.'' என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

சம்பவம் தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது மதிகெட்டோரின் ஈனச் செயல் என குறிப்பிட்டுள்ளதோடு '' உலகம் எங்ஙனும் போற்றப்படும் அகிம்சாமூர்த்தி மகாத்மா காந்தி, கிழக்கிலங்கையில் பிறந்து அகிலமெங்கும் ஆன்மிக ஒளி பரப்பிய சுவாமி விபுலானந்தர், "கிழக்கிலங்கையின் இன்னுமொரு தவப்புதல்வன் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை மற்றும் அகிலமெல்லாம் சமூக நலன் பேணித் தொண்டாற்றிய சாரணர் இயக்கத்தின் தந்தையெனப் போற்றப்படுகின்ற பேடன் பவல் பிரபு ஆகியோரின் சிலைகள், தமிழும், சைவமும் என்றும் அழியாது வாழும் மட்டக்களப்பு புனித பூமியில் இரவோடிரவாக உடைத்துச் சேதமாக்கப்பட்டதை .அறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் பேரதிர்ச்சியும் வேதனையும் அடைகிறது.'' எனவும் தனது அதிர்ச்சியை வெளியிட்டிருக்கிறது. (ங)

## அடிப்படை வசதி இன்றி மாந்தை கிழக்கு மக்கள்

முல்லைத்தீவு,ஏப்.8

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் மீளக்குடியமர்ந்த மக்கள் போதிய அடிப்படை வசதிகளின்றி மிக நீண்ட காலமாகவே அவல நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள 15 கிராம அலுவலர் பிரிவில் 2 ஆயிரத்து 595 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 161 பேர் மீள்குடியமர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகக் காணப்படும் சிறாட்டிகுளம், மூன்றுமுறிப்பு, பனங்காமம், கொம்பு வைத்தகுளம், பூவரசன்குளம், விநாயகபுரம் போன்ற மிகவும் பின்தங்கிய பகுதிகளில் வாழும் மக்கள் அடிப்படை வசதிகளான போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதிகள் இன்றி அல்லல்படுகின்றனர்.

அத்துடன் இவர்கள் தினமும் பயணிக்கும் வீதிகள் கூடப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இந்தக் கிராம மக்கள் மருத்துவ வசதிகளைப் பெறுவதாயின், சுமார் 20 கிலோ மீற்றர் தொலைவுக்கு அப்பாலுள்ள மல்லாவி நகருக்கே செல்ல வேண்டும். ஆனால் போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லை.

அதேவேளை இந்தப்பகுதிகளில் உயர்தரப் பாடசாலைகள் எவையும் இல்லை. இங்குள்ள மாணவர்கள் தமது கல்வியைத் தொடருவதற்கு 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பாண்டியன்குளம் மகாவித்தியாலயம் அல்லது அதற்கு அப்பால் உள்ள பாலிநகர் மகாவித்தியாலயத்துக்குச் செல்ல வேண்டும். ஆனால் போக்குவரத்து வசதிகள் இல்லை.

இதனால் மாணவர்கள் தமது ஆரம்பக் கல்வியுடன் கல்வியை இடைநிறுத்துகின்ற நிலமையும் காணப்படுகின்றது. (க-6)

## சட்ட விரோதமாக இரும்பு வெட்டிய இருவர் கைது

கிளிநொச்சி, ஏப்.8

கிளிநொச்சி பளைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இரும்பு திருடிய இருவரை நேற்று முன்தினம் தாம் கைது செய்துள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பளையில் கைவிடப்பட்ட பகுதியில் வாகனம் ஒன்றை இரும்புக்காக அறுத்துக்கொண்டிருந்த வேளை இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு பளைப் பொலிஸாரிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

இரும்பு வெட்டுவதற்கு பயன்படுத்த சிலிண்டரும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் கிளிநொச்சிப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு நேற்றிரவு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவர் என தெரிவிக்கப்பட்டது. (10-6)

## யுனிசெவ் அனுசரணையுடன் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வவுனியா, ஏப்.8

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் யுனிசெவ் அனுசரணையுடன் சுகாதாரக் கழகங்கள் அமைக்கப்பட்டு மாணவர்கள் மத்தியில் சுக வாழ்வுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

சூழலைப் பாதுகாக்கத் திண்ம, திரவ முகாமைத்துவம், சூழலில் பயன்படுத்தப்படும் நஞ்சு இரசாயனப் பொருள்களின் பாதிப்பு புகைத்தல், மது போதையில் இருந்து பாதுகாத்தல் சிறுவர்கள் துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாத்தல் போன்றவை தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்பூட்டல் மேற்கொள்ளப்படுகின்றது.

இவை தொடர்பாகப் பாடசாலை மட்டத்திலும் வலய மட்டத்திலும் சித்திரப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், கவிதைப் போட்டிகள், மற்றும் வினாடிவினாப் போட்டிகள் நடத்தப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி ) ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம் இந்தத் திட்டம் யுனிசெப் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் எதிர்நோக்கவுள்ள சுகவாழ்வுக்கான சவால்களை எவ்வாறு முகம் கொடுத்து வெற்றி கொள்ளுவது என்பது தொடர்பாக இந்த விழிப்புணர்வுச் செயற்திட்டம் அமைந்துள்ளது.

இவ்வாறு இத்திட்டத்துக்கான இணைப்பாளர் எம்.டி சின்னையா தெரிவித்தார்.

இதேவேளை இந்தத் திட்டத்தில் இணைந்துள்ள பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (க-400)

## ஜெனிவா தீர்மானம் தொடர்பில் ஹெல உறுமய 5 அம்சத் திட்டம்

### ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுமாம்

கொழும்பு, ஏப்.8

இலங்கைமீதான ஜெனிவா தீர்மானத்துக்கு எவ்வாறு முகம்கொடுப்பது என்பது தொடர்பில் அரசிடம் நிலையான திட்ட மில்லை எனத் தெரிவித்துள்ள அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, இது தொடர்பில் தாம் ஐந்து அம்சத் திட்டங்கள் அடங்கிய யோசனைக ளைத் தயாரித்துள்ளதாகவும், இம்மாத இறுதியில் அதனை வெளியிடவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது : -

ஜெனிவாவில் அமெரிக்கா எமது நாட்டுக்கு எதிராகத் தீர்மானத்தை நிறைவேற்றியதோடு அதனை அடிப்படையாக வைத்து இன்று எம் மீது பல அழுத்தங் களை பல்வேறு வழிகளில் பிரயோகித்து வருகின்றது. எமது நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளாத தீர்வுகளைத் திணிக்க முயல்கின்றது.

ஆனால் இதற்கு முகம் கொடுப்பதற்கு அரசிடம் நிலையான கொள்கையுடனான திட்டம் எதுவும் இல்லை. எனவே அரசின் பங்காளிக் கட்சியான நாம் ஜனநாயகம்,நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் நல்லாட்சி, ஒற்றையாட்சியைப் பாதுகாக்கும் வகையில் யோசனைகளைத் தயாரித்துள்ளோம்.

இதன் மூலம் அமெரிக்காவின் சவாலை வெற்றிக் கொள்ள முடியும். இந்த யோசனைகள் அடங்கிய அறிக்கை இம் மாத இறுதியில் மகா நாயக்க தேரர்களிடம் கையளித்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராபக்ஷவிடமும் கையளிக்கப்படும் -என்று கூறியுள்ளது. (த)

## மொழி புரியாத பொலிஸார்

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் தமிழ் தெரிந்த பொலிஸார் இல்லாததால் மக்கள் பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்குச் செல்வோரும், குறைபாடுகளைத் தெரிவிப்பதற்குச் செல்வோரும் சிங்கள மொழி தெரியாததால் செய்வதறியாது திகைத்து நிற்பதைக் காண முடிகிறது.

மேலும் மொழி தெரியாத காரணத்தால் பொலிஸ், பொது மக்கள் உறவைப் பேண முடியாத நிலையும் காணப்படுகிறது. பொலிஸாரும் மக்களின் குறைபாடுகளை அறிந்து அவற்றுக்குத் தீர்வு வழங்க முடியாத நிலையில் உள்ளது. மக்களும் உரிய வகையில் தமது குறைகளைத் தெரிவிக்க முடியாத நிலையில் உள்ளனர். எனவே ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் தமிழ் தெரிந்த பொலிஸாரை நியமிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## அழைத்துச் சென்றவர்களை தாக்கி விட்டு பணமோசடி சந்தேகநபர் தப்பினார்

### கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசென்ற வேளை

யாழ்ப்பாணம், ஏப்.8

கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக வானில் ஏற்றி வரப்பட்ட பண மோசடிச் சந்தேக நபர் ஒருவர் தன்னைப் பிடித்து வந்தவர்களை சரமாரியாகத் தாக்கிவிட்டு தப்பிய சம்பவம் ஒன்று நேற்றுப் பிற்பகல் திருநெல்வேலி முடமாவடிப் பகுதியில் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தவை வருமாறு:

இராஜேந்திரம் நிறஞ்சன் என்பவரிடம் முடமாவடியைச் சேர்ந்த மாணிக்கம் தனபாலசிங்கம் என்ற சுமார் 50 வயது மதிக்கத்தக்க நபர் 4 லட்சத்து 5 ஆயிரம் ரூபா பெற்றுள்ளார். நீண்ட காலமாக வாங்கிய பணத்தை செலுத்தாது அவர் ஏமாற்றி வந்துள்ளார்.

பணம் கொடுத்தவர் இந்த நபரைத் தேடிக் கண்டுபிடித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

ஐந்து லட்சம் ரூபாக்கு உட்பட்ட பணம் ஆகையால் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கே அழைத்துச் செல்லுமாறு யாழ்ப்பாணப் பொலிஸார் கூறியுள்ளனர். அங்கிருந்து கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றபோது, அழைத்து வந்தவர்களை தாக்கிவிட்டு அந்த நபர் ஓடித் தலைமறைவாகி விட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

சந்தேக நபரான மாணிக்கம் தனபாலசிங்கம் என்பவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே வேறு பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என பொலிஸ் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (10-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினிவிஸ் லக்கி
# இந்தியன் பியூட்டி பார்லர்



சர்வதேச தரத்திலான அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
தொலை தூரத்தில் இருந்து பயில வரும் மாணவிகளுக்குத் தங்கிப் பயிற்சி பெறுவதற்கான இடவசதிகளும் செய்து கொடுக்கப்படும்.
தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு மணப்பெண் மேக்கப் ஓடர்களுக்கும், பயிற்சி வகுப்பில் சேருபவர்களுக்கும் சிறப்புச் சலுகைகள் காத்திருக்கின்றன.
தொடர்புக்கு:- 0770540935, 0754099871

WHAT NEXT AFTER YOUR O/L?
நீங்கள் A/L செய்வதற்கு தகைமை பெற்றுள்ளீர்களா?
UNIQUE OPPORTUNITY TO BECOME A YOUNG PROFESSIONAL
ENGLISH MEDIUM
A/L Commerce Stream
with AAT
to go beyond your expectation

பாடநெறி முடிவில்
- பல்கலைக்கழகம் ஒன்றில் உங்களது பட்டப்படிப்புக்களை தொடர்வதற்கான வாய்ப்பு.
- விலக்களிப்புக்களுடன் CIMA, ICASL, CIM, ACCA போன்ற தொழில்சார் கற்கைநெறிகளை தொடர்வதற்கான வாய்ப்பு.
- பகுதிநேர வேலைவாய்ப்புக்களுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் உயர்கல்வியினை தொடர்வதற்கான வாய்ப்பு.
- Management மற்றும் Accounting துறைகளில் உடனடியாக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு.
- மத்திய கிழக்கு நாடுகளில் சிறந்த தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு.

FREE ACCOUNTING PACKAGES COMPUTER SOFT SKILLS
Experienced Panel of Lecturers
Modern Teaching Method
Affordable Course/Term Fee
Student Friendly Environment
No Extra Classes or Tuition need

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தை 0777 222 529 உடன் தொடர்பு கொண்டு அல்லது SMS செய்து பெற்றுக் கொள்ளவும்.
GOLDEN COLLEGE CITY CAMPUS
548, Peradeniya Road, Kandy.
0812 20 55 44/0716 032 967
HOTLINE 0777 222 529
A training institute registered with the TVEC under P09/0148

## அகற்றப்படும் மினி முகாம்கள்

யாழ்.குடாநாட்டின் பல் வேறு இடங்களிலும் அமைக்கப்பட்டிருந்த மினி முகாம்கள் அகற்றும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

பல இடங்களில் இந்த முகாம்கள் அகற்றப்பட்டு அந்தப் பகுதிகளும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளன.

குறிப்பாக யாழ். நகரை அண்டிய பகுதிகள், வலி. கிழக்கு, வலி.தென்மேற்கு, வலி.மேற்கு, யாழ். கரையோரப் பகுதிகளில் அமைந்திருந்த படைமுகாம்களே இவ்வாறு அகற்றப்பட்டு வருகின்றன. படையினரின் இந்தத் திடீர் நடவடிக்கை பொது மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

யாழ்.நகரில் தட்டாதெருச் சந்தி, வேம்படி வீதியும் பிரதான வீதியும் இணையும் சந்தி, குருநகர், பாஷையூர் கரையோர வீதிகள் மற்றும் வலிகாமம் பகுதிகளான வட்டுக்கோட்டை, சங்கத்தை, நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் கடந்த பல வருடங்களாக இருந்து வந்த மினி முகாம்களே இவ்வாறு படையினரால் அகற்றப்பட்டு வருகின்றன.

**விற்பனைக்கு**
24000 BTU - SINGER AC மாறாத விலை ரூபா65,000/=, Projectorகள் EPSON, VIEWSONIC என்பன உடன் விற்பனைக்குண்டு.
T.P : 078 6722209

**வாடகைக்கு**
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி காய்கறிச்சந்தை அருகில் கடை 15 அடி அகலம், 15 அடி நீளம் கொமிசன் அடிப்படையில் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 7283811

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் பத்மநாதன்

வேலணையைப் பிறப்பிடமாகவும், மல்லாவி யோகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பத்மநாதன் (சாத்திரியார்) நேற்று (07.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-சின்னம்மாதம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை-பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மலோஜினி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், வவுனியா), பத்மாயினி (கனடா), காலஞ்சென்ற வேல்வரன், கமலாயினி (கொழும்பு), பங்கயாயினி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா (அநுராதபுரம்), உதயகுமாரன் (கனடா), ரவிக்குமார் (கொழும்பு) ஆகியோரின் மாமனும், அபிஷன், அபினன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2012) திங்கட்கிழமை மல்லாவியில் நடைபெற்று பி.ப 2.00 மணிக்கு பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.368, திருநகர்,
மல்லாவி, யோகபுரம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(16288) (6,10)

**வாடகைக்கு**
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, (சந்திரசந்தியில் இருந்து
கோட்டடிசந்திக்கு அருகில் ஐம்பதடி (50) நீளம்,
பன்னிரண்டு (12) அடி அகலம், வெற்று நிலம் உண்டு.
கடை கட்டிக்கொடுக்கப்படும்
தொடர்பு: 077 728 3811

# 21 ஆம் மாத ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
23 ★ 03 ★ 1936

இறப்பு
07 ★ 07 ★ 2010



பிறப்பு
06 ★ 11 ★ 1939

இறப்பு
21 ★ 03 ★ 2011

## தருமலிங்கம் தியாகராஜா
## தியாகராஜா மகேஸ்வரி

அன்பு எனும் சொல் அதனை
பாசம் என்னும் வலை வீசி
உறவு என்னும் ஓடம் அதில்
உரிமையுடன் வாழ்ந்து வந்தோம்
ஆண்டுகள் பல ஆனாலும்
பொங்கிவரும் கண்ணீருக்கு அளவில்லையே
உமை நினைத்து ஏங்குகின்றோம்.

"திருப்பதி"
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

மகன்கள்
தி. திலகன், தி. திலகராட்ணம்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(16549) (45,6,7)

# மரண அறிவித்தல்



## திருச்செல்வம் றொபேட்

(ஆசிரியர்- யாழ். பரியோவான் கல்லூரி)

பாஷையூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் றொபேட் (ஆசிரியர்- பரியோவான் கல்லூரி) கடந்த (06.04.2012) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம் - திரேசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சிங்கராயர் - பிலோமினா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி வேர்ஜினி (பிறேமா) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற டிலக்ஷி மற்றும் டீன்ஜெனிபேட் (2013-விஞ்ஞானப் பிரிவு டீன்ஒஸ்பேட் தரம் 11 மாணவர்கள்), (யாழ். பரியோவான் கல்லூரி) அன்றியா, சாந்தனா - தரம் 9, ஏஞ்சலின் - தரம் - 6 மாணவிகள் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செபஸ்ரினா, பிரான்ஸ்சிக்கா (அன்னமலர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், யுஸ்ரின் (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி), காலஞ்சென்ற ஜொய்சி மற்றும் டீன் நெவில் (பிரான்ஸ்), ஜீன் ஒலிவற் (ஆசிரியை-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பிலிப் (சின்ராசா), உதயகாந்தராசா ஆகியோரின் மைத்துனரும், அன்ரனிப்பிள்ளை கிளிபேட் (முன்னாள் உப அதிபர்- யா/பரியோவான் கல்லூரி), ஜெறோம், பிரதீபா (பிரான்ஸ்), யோகானந்தன் (ஆசிரியர்- நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (09.07.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 33,2 ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(8/714)(45,6,7)

தகவல்:
மனைவி பிறேமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செஞ்சிலுவைச் சங்கக் கோப்பாய் பிரிவின் ஏற்பாட்டில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவிகள் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கினர். (ம-8)






ஆனைக்கோட்டையில் புதிதாகக் கட்டப்பட்ட முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தை வடமாகாண சமூக சேவைத் திணைக்கள பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராசா நாடாவெட்டித் திறந்து வைத்தார். நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (ம-100)



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கரவெட்டி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் அழகியல் பொருள்களின் கண்காட்சியை விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலராஜ், கரவெட்டிப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் பார்வையிடுகின்றனர். (ம-253)



உரும்பிராய் கிழக்கு காந்தி சனசமூக நிலைய முன்பள்ளிக் கலை விழாவில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கோப்பாய் பிரிவுத் தலைவர் இ.மயில்வாகனம் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். (ம-8)



அராலி கிழக்கு அம்பாள் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அம்பாள் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றபோது யாழ்.மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கச் சமாசத் தலைவர் எஸ்.இலகுநாதன் உரை நிகழ்த்துகிறார். (ம-3)




அல்வாய் வடமேற்கு இளம்பிறை சனசமூக நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் தேவைகளுக்காக சனசமூக நிலைய அங்கத்தவர் யோ.சிவகரன் கணினி ஒன்றை அன்பளிப்புச் செய்தார். (ம-253)



கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் கைதடி மேற்கு மகளிர் விவகார அமைப்பும் இணைந்து நடத்திய மகளிர் தின விழாவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூத்த உறுப்பினர் திருமதி கண்மணி சிவசண்முகநாதனுக்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.தபலிசியன் வாழ்த்து மடல் வழங்கிக் கௌரவிக்கின்றார். (ம-9)



புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு அண்மையில் வித்தியாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் அதிபர் நா.பஞ்சலிங்கத்துடன் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் அமர்ந்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய **நாவலர்**

கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

**O/L DAY CLASS**

ஆரம்பம்
09.04.2012
திங்கள் காலை 8.00 மணி


## நாடு திரும்புகிறார் யுவராஜ் சிங்

புற்றுநோய்ச் சிகிச்சைக்காக அமெரிக்காவிலுள்ள பாஸ்ரன் நகர மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் நாளை இந்தியா திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமான யுவராஜ் சிங் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு, தற்போது வெற்றிகரமாகச் சிகிச்சை மூலம் அதிலிருந்து மீண்டுள்ளார்.

(ங)


**Subra (14) -சித்தன்கேணி**
**கிளை -வட்டுக்கோட்டை**

**A/L 2014 கலை, வர்த்தகம், கணித, விஞ்ஞான பாடங்கள் ஆரம்பமாகிவிட்டன.**

எமது வழமையான ஆசிரியர் குழு

O/L Day Classes ஆரம்பமாகிவிட்டன.
வாரத்தில் 7 நாள்களும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Note:- காரைநகர் பிரதேச மாணவர்களுக்கு 50% விசேட சலுகைக் கட்டணம் வழங்கப்படும்



**யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்**

JAFFNA TECHNICAL INSTITUTE · SRI LANKA

இல. 92/1, சேர் பொன். இராமநாதன் வீதி,
இல. 7, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல. 15251

01. வங்கியியல் கற்கைகள் : CBF, DBF
  * *வங்கியியல் கற்கைகளுக்கான அனைத்து பாடங்களும் ஆரம்பமாகின்றன.*
  * *வங்கி உத்தியோகத்தர்கள், வங்கிப் பயிலுநர்கள் இணைந்து கொள்ளமுடியும்.*
  * *க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கும் விசேட பிரிவு*
  * *புதிய பாடத்திட்டம், கட்டுரை வினாக்கள் பயிற்சியளிக்கப்படவுள்ளன.*

  *சனி, ஞாயிறு தினங்களில் 2.00 pm – 5.00pm*

02. சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர் கற்கை நெறி : ACCA
  * *16 வயதிற்கு மேற்பட்டவர்கள் இணைந்து கொள்ளமுடியும்.*
  * *தொழில் வாய்ப்பினைப் பெறக்கூடிய கற்கை நெறி.*
  * *இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறி.*

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 09.04.2012 - 15.04.2012 முற்பகல் : 10.00 மணி

மேலதிக விவரங்களுடன் தொடர்புகட்கு

இயக்குநர்,
யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்
T.P. 021 5670345, Email - jtiedu@gmail.com.



**பிரத்தியேக வகுப்புகள்**

வீடியோ, தொலைக்காட்சி துறையினருக்கான எடிட்டிங்
Grass Vally - Edius
Adobe - Premiere Pro
Adobe - After Effects

இசைத்துறையினருக்கான எடிட்டிங்
Digidesign - Pro Tools
Steinberg - Cubase
Stein Berg - Muendo

பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு

**Sinclair Digital Media**
#48/1, Stanley Road, Jaffna.
0777206769, 0777162090.



**இனிய புத்தாண்டில் விசேட சலுகையுடன்**
**வின்றிச் ஐஸ்கிறீம் இயந்திரம்**



50,000/- மேல் மாத வருமானம்

* சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
* இலவச பயிற்சி
* விற்பனையின் பின் சேவை

ஒரு வருட உத்தரவாதம்

விலை ரூ 99,000/- இல் இருந்து புத்தம் புதியது

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
**Hot Line: 077 391 8870, 077 477 4782**



**மாபெரும் 15% விலை தள்ளுபடி**

**புதுவருடத்தை முன்னிட்டு**

★ மகாசில்க்
★ பியூட்டி சில்க்ஸ்
★ கவுஸ் ஒவ் செலெக்ஷன்

ஆகிய ஸ்தாபனங்கள் வழங்கும் அனைத்துப் புடைவைகளுக்கும் நிஜமான 15% விலைத் தள்ளுபடி. 08.04.2012 தொடக்கம் 13.04.2012 வரை மட்டுமே நடைபெறும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மன மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

விற்றுத்தீர்த்தல் பக்கம் **06** ஐப் பார்க்கவும்..



**Cambridge Management College**

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கான **French, Deutch, Sinhala and English** ஆகிய மொழிகளை எளிமையான முறையில் பேச, எழுத கற்பிக்கப்படுகிறது.
6 - 13 வயது வரையான சிறுவர்களுக்கான ஆங்கிலம் ICT வகுப்புக்களும், O/L மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. உங்கள்

தொ.பே: 021 222 1818, 077 774 0999



**துாதரகப் பரீட்சைகளுக்கான**
**German - Deutsch, Netherland - Dutch, French, Italian**
வகுப்புகள் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
221 1/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0774842464, 021 2220393, 021 3216928



**காணி விற்பனைக்கு**

இரண்டாம் குறுக்குத்தெரு (2nd Cross Street) யாழ்ப்பாணத்தில் 1¼ பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு: **0774842464, 0770785444**



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



பஜாஜ்

**புதுவருட விஷேட கொடுப்பனவு**




pulsar **சக்தி!**



அனைத்து பல்சர் மோட்டார் சைக்கிள்களுடனும் பெறுமதிவாய்ந்த றயிடிங் கிட் ஒன்று **இலவசம்!**

Discover **சுதந்திரம்**





அனைத்து டிஸ்கவர் மோட்டார் சைக்கிள்களுடனும் பெறுமதிவாய்ந்த பேக், டி சேர்ட், ஹெல்மட் மற்றும் ஜக்கட் ஒன்று

**இலவசம்!**



மற்றைய அனைத்து மோட்டார் சைக்கிள்களுடனும் பெறுமதிவாய்ந்த பேக், ஹெல்மட் மற்றும் ஜக்கட் ஒன்று

**இலவசம்!**




டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

**S.J. MOTORS**
73, Stanley Road, Jaffna. T.P.: 021 222 4554, 021 492 3684, 077 171 1819,

கிளை நிறுவனம்:
No.53, Station Road, Chunnakam. T.P.: 021 720 0750



**சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகள் புத்தாண்டுக்காக குறைக்கப்பட்ட கட்டணங்களுடன்...**




ICDL International Computer Driving Licence — Just 6,500/= ONLY

e - Citizen — Just 2,500/= ONLY

தென்னாசிய நாடுகளில் கணினிப் பயிற்சியில் முன்னணி வகிக்கும் நிறுவனத்திடமிருந்து நேரடியாக, மிக விரைவாக தராதரமொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு.



**Gateway** Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk

GATEWAY CfICT

இந்த சலுகை ஏப்ரல் 20 வரை மட்டுமே



**கோசலா லேணர்ஸ்**




L **திறப்பு விழா**
**(பதிவிலக்கம் 591)**

பிரதான வீதி, சங்கானையில்,
**கோசலா லேணர்ஸின்**
கிளை அலுவலகம் இன்று (08.04.2012) ஞாயிறுக்கிழமை மு.ப. 11.45 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.

கிளை:
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே.இல. 0777048585

உரிமையாளர்
எஸ். ரவிச்சந்திரன்
0775356979.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கின் ஹிட்லர் 07



அரசியல் கடை விரிப்பு 13



மௌனம் ஜனநாயகம் 21



இதுவா வன்னி? 18



சிலைகளோடு போர் 05



# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் 08 ஏப்ரல் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


■ ஓாண்யன்

# புலியின்அருமை




"உப்பில்லா விட்டால் தெரியும் உப்பின் அருமை; அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பனின் அருமை" இந்த சொலவடையின் இறுதிப் பகுதியை "புலியில்லா விட்டால் தெரியும் புலியின் அருமை" என்று கொஞ்சம் மாற்றினால் அரசின் இக்கட்டான நிலை தெரியும்.

போர் நிகழ்ந்த காலங்களில் அரசுக்கு புலிகளோடு போரிடுவது மட்டுமே அல்லது புலிகள் என்ற பெயரில் பொதுமக்களை வகை தொகையின்றி கொன்றழிப்பது மட்டுமே அரசின் ஒரே இலக்காக இருந்தது. அப்போது என்னவேண்டுமானாலும் செய்து கொள்ள வசதியிருந்தது. அரசுக்கு எதிரான ஊடகவியலாளர்களை கடத்த வேண்டுமா? கொல்ல வேண்டுமா? நடுநிலைமையான அரசியல்வாதிகளின் கதையை முடிக்க வேண்டுமா? பொருள்களின் விலையை ஏற்ற வேண்டுமா? சர்வதேச நாடுகளிடம் "அம்மா! தாயே!!" என்று கடன்கள் பெறவேண்டுமா? எல்லாவற்றையும் அப்போது செய்து முடிக்க அரசிடம் இருந்த மந்திரச் சொல் "புலிகள்" என்பது மட்டுமே.

அலிபாபாவும் 40 திருடர்களும் படத்தில், மந்திரக் குகையைத் திறக்க "அண்டா கசம், அபூகா கசம், திறந்திடு சீசேம்" என்ற மந்திரத்தை எம்.ஜி.ஆர். உச்சரித்த மறுகணமே மூடிக்கிடந்த குகையின் கதவுகள் திறந்து கொள்ளும். அதைப் போல புலிகளுக்கெதிரான போர் என்ற ஒற்றைச் சொல்லோடு எல்லாக் கதவுகளையும் திறப்பதற்கு அரசால் முடிந்தது. எனினும் புலிகள் அடிக்கடி கொடுக்கின்ற அடிகளின் வலிகளால் புலிகளை முற்றாக ஒழிப்பதே நாட்டுக்கும் அரசுக்கும், பொருளாதாரத்துக்கும், தம் குடும்பத்துக்கும் நல்லது என்று "மஹிந்த அன்ட் கோ" நினைத்தது. அதனால் சர்வதேசம் கொடுத்த அழுத்தங்கள் எதனையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் புலிகளை வழித்துத் துடைப்பதில் மாத்திரமே மஹிந்தவாதிகள் குறியாக இருந்தனர். எல்லா நாடுகளிடமும் எவ்வளவுக்கு வாங்க முடியுமோ அவ்வளவுக்கு கடன்கள் இரந்து பெறப்பட்டன. தேவைக்கதிகமாக ஆயுதங்கள் படைத்தளங்களில் குவிக்கப்பட்டன. அங்குல இடைவெளியின்றி தமிழர் நிலங்களைப் பல்குழல்களும், கொத்துக் குண்டுகளும், எறிகணைகளும் முத்தமிட்டுச் சிதறின. அந்த சிதறல்களில் ஒட்டிக்கிடந்தன தமிழ்க் குழந்தைகளின் மெல்லிய தசைத்துண்டங்களும், பால்மணம் வீசுகின்ற குருதித் துளிகளும். எங்கும் ஓலம் நிறைந்திருக்க, குருதி படிந்து போய்க்கிடந்த நிலத்தில் நின்று கொண்டு 2009 மே 18 இல் புலிகளை முற்றாக அழித்து விட்ட செய்தியை உலகுக்கு முரசறைவித்தது அரசு.

வெளிநாட்டுக்கு போயிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தச் செய்தியைக் கேட்டதும் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. உடனடியாக நாட்டுக்குத் திரும்பியவர் இலங்கையின் மண் என்று நினைத்துக் கொண்டு கட்டுநாயக்கா ஓடுபாதை தார்மீது தன் உதடுகளைப் பதித்துக் கொண்டார். "அப்பாடா, தலையிடி தீர்ந்தது!" என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு காலிமுகத் திடலில் வழமையான அம்பு, ஆளணியின்றி ஓரிரண்டு மெய்ப்பாதுகாவலர்களோடு ஓட்டப்பயிற்சியில் ஈடுபட்டார் ஜனாதிபதி. எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்.

வெற்றிப் பேரொலி மங்கத் தொடங்க, பிரச்சினைகளின் விஸ்வரூபம் அரசை மிரட்டத் தொடங்கியது. பிரச்சினைகள் எல்லா திசைகளிலிருந்தும் சொல்லி வைத்தால் போல் ஒரே நேரத்தில் புறப்பட்டன. போர்க்குற்றச்சாட்டு, வெள்ளைக் கொடி விவகாரம், பொருளாதார நெருக்கடி, வெற்றியில் பங்குபோட முனையும் பொன்சேகா, சர்வதேச அழுத்தங்கள், ஊடகங்களின் கடுமையான விமர்சனங்கள் என்று ஒரே சமயத்தில் மஹிந்த அரசின் மீது ஏகப்பட்ட அடிகள்.

> "குண்டுச் சிதறல்களில் ஒட்டிக்கிடந்தன தமிழ் குழந்தைகளின் மெல்லிய தசைத்துண்டங்களும், பால்மணம் வீசுகின்ற குருதித் துளிகளும். எங்கும் ஓலம் நிறைந்திருக்க, குருதி படிந்து போய்க்கிடந்த நிலத்தில் நின்று கொண்டு 2009 மே 18 இல் புலிகளை முற்றாக அழித்து விட்ட செய்தியை உலகுக்கு முரசறைவித்தது அரசு.

இப்படி அடிகள் விழுந்த சமயத்தில்தான் அரசுக்கு புலிகளின் அருமை மெல்ல மெல்ல தெரியத் தொடங்கியது. புலிகள் இருந்திருந்தால் பொன்சேகாவையும், குடைச்சல் கொடுக்கும் ஊடகங்களையும் அரசு படைகளே தீர்த்துக் கட்டிவிட்டு புலிகளின் தலையில் பழியைப் போட்டிருக்கலாம். வரிகளையும், விலைகளையும் கூட்டியோ அல்லது உலக நாடுகளிடம் கடன் வாங்கியோ பொருளாதார நெருக்கடியைச் சமாளித்திருக்கலாம். இப்படி எல்லா நோய்களுக்கும் சர்வரோக நிவாரணியாகக் கூடிய புலிகளை அழித்தது பிழையோ என்று கூட மஹிந்த யோசித்திருக்க வேண்டும். அவருக்கு இப்போது அந்த சர்வரோக நிவாரணி மீண்டும் கிடைத்தால் மாத்திரமே அவர் முன்னால் உள்ள சிக்கல்களிலிருந்து மீள முடியும். இனியும் கிளம்பக் காத்திருக்கும் பிரச்சினைகளையும் சமாளிக்க அதுவே உதவும். ஆகவேதான் ஒரு முடிவை அரசு எடுத்து அதை நடைமுறைப்படுத்தவும் தொடங்கியிருக்கிறது.

"புலிகளுக்கு மீண்டும் உயிரூட்டுதல்" என்பது அரசின் இப்போதைய திட்டம். புலிகளின் ஒரு பிரிவினராவது செயற்திறனுடன் இலங்கையில் இருக்கின்றனர் என்பதை நம்பவைக்க அரசு படாதபாடுபடுகின்றது. திருகோணமலைக் குச்சவெளியில் ஈ.பி.டி.பி. உறுப்பினரின் கொலை நிகழ்வோடு புலிகளின் மீள் உயிர்ப்புப் பற்றிய கதைகளை அரசு உலவ விடத் தொடங்கியது. "இந்தக் கதை இட்டுக் கட்டிய வதந்தியல்ல. நூறு சதவீதம் கலப்படமற்ற உண்மை" என்று நம்ப வைப்பதற்காக மூன்று நாள்கள் தொடர்ச்சியாக தேடுதல் வேட்டையிலும் படைத்தரப்பு இறங்கியது. தாம் உண்டு தம் வேலை உண்டு. என்று தம் வாழ்வை மீளத்தொடங்கும் எத்தனிப்போடு ஒதுங்கியிருந்த முன்னாள் போராளிகள் சிலரை 'மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ள புலிகள்' என்ற முத்திரை குத்தி படையினர் கைது செய்தனர்.


தமிழகத்தில் இருந்து பயிற்சி பெற்ற புலிகளின் பிரிவு ஒன்று கிழக்கில் செயற்படத் தொடங்கியிருப்பதாக அரச ஊடகங்கள் அடிக்கடி மக்களுக்கு ஞாபகம் ஊட்டிக் கொண்டு இருக்கின்றன. எப்படியேனும் புலிகளுக்கு உயிர் கொடுத்துவிட வேண்டும் என்று மஹிந்தவாதிகள் துடியாய்த் துடிக்கின்றனர்.

(சூரியகாந்தி 24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவின் தலையைக் கொய்யக் கேட்ட இந்தியாவை நம்பாதீர்கள் !

**"விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தலையையும் இறப்புச் சான்றிதழையும் கேட்ட இந்தியா தமிழர்களுக்கு உதவும் என்று ஒருபோதும் நம்பாதீர்கள். சுயநலத்துக்காகத்தான் இந்தியா ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானத்தையும் ஆதரித்தது" -இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளரும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் விக்கிரமபாகு கருணாரட்ன வழங்கிய விசேட செவ்வி இது.**



*ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிராகரிக்கும் போக்கில் அரசு செயற்படுமானால், எதிர்காலத்தில் ஏதாவது சிக்கல் ஏற்படுமா?*

ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டுள்ளது.

அவ்வாறு அரசு ஏற்றுக்கொண்ட அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் நடைமுறைப்படுத்துமாறே ஜெனிவாத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

தனது கடமைகளை அரசு உரிய வகையில் செய்து முடிக்காததன் காரணமாகவே இன்று உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேச சமூகத்தின் தலையீடு அதிகரித்துள்ளது. சர்வதேச தலையீடுகளுக்கு அரசே வழிசமைத்துக் கொடுத்துள்ளது.

ஜெனிவாத் தீர்மானத்தை அரசு நிராகரிக்குமானால் சர்வதேச சமூகம் சிலவேளை இலங்கைக்கு வழங்கும் நிவாரண உதவிகளை நிறுத்தலாம். அதுமட்டுமின்றி, சர்வதேச அமைப்புகளும் உதவிகளை வழங்க முன்வரா. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளையும் பெறமுடியாமல் போய்விடும்.

அதேவேளை, இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகம் கடும் போக்கைக் கையாளும். அவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால் நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்துக்குள் தள்ளப்படும். அத்துடன், இராஜதந்திர மட்டத்திலான நெருக்கடிகளும் வந்து குவியும்.

ஈரான் எண்ணெய் இறக்குமதி விவகாரத்தில் அமெரிக்கா கையாளும் கடும்போக்கை அவதானித்திருப்பீர்களானால் இதன் யதார்த்தத்தை உணரக்கூடியதாக இருக்கும்.

*பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வெளித்தலையீடுகள் அவசியமில்லை எனக் கூறும் அரசு, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்க்கலாமா அல்லது காலத்தை இழுத்தடிக்குமா?*

'பொய்', 'பித்தலாட்டம்' 'காலம் கடத்தல்' ஆகியவையே இன்று மஹிந்த அரசின் கொள்கைகளாக உள்ளன. சர்வதேச சமூகத்துக்கு 'பம்மாத்து' காட்டி காலத்தை இழுத்தடிக்கவே அது நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. மாறாக சுய விருப்பின் பேரிலல்ல. எனவே, அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு உரிய வகையில் நடைமுறைப்படுத்தும் என நம்பமுடியாது. கடும்போக்குடைய அமைச்சர்களின் கொக்கரிப்பு எமக்கு இதனையே உணர்த்துகின்றது.

*தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்குரிய சகல அம்சங்களையும் கொண்ட (நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை உட்பட) தற்போதைய ஆட்சிபீடம், இனப்பிரச்சினைக்குத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு தீர்வை வழங்குமா?*

நந்திக் கடலில் தமிழர்களின் அரசியல் உரிமைகளை முழுமையாகக் கரைத்துவிட்டோம் என்ற மமதையில் செயற்படும் மஹிந்த அரசு தமிழர்களுக்கு ஒருபோதும் தீர்வை வழங்காது. போரில் மண்டியிட்ட இனமே தமிழினம் என நினைத்துக் கொண்டு தமிழர்களை அடக்கியொடுக்கி ஆளவே இந்த அரசு முயற்சிக்கின்றது. தமிழர்களுக்குத் தற்போதைய அரசு தீர்வை வழங்காது என்பது தெட்டத்தெளிவு.

இஸ்ரேலியர்கள் பலஸ்தீனத்தினருக்கு எதிராக ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவது போல இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக கடும்போக்குடைய சிங்களத் தலைவர்கள் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க, மேர்வின் சில்வா ஆகியோர் இனவாதத்தை கக்கித் திரிகின்றனர். இவர்களை ஜனாதிபதி மஹிந்தவே தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றார்.

இனவாதத்தை தலையில் தூக்கி வைத்தாடும் இந்த அரசு தமிழர்களின் நலன் குறித்து துளியளவேனும் அக்கறை கொள்ளாது என்பதை தமிழர்கள் உணர்ந்தே இருப்பர் என்றுதான் நான் நம்புகின்றேன்.

*அப்படியானால் தமிழர்கள் தமது அரசியல் உரிமைகளை எவ்வாறு வென்றெடுப்பது?*

சாத்வீக வழியில் போராட வேண்டும். கால்கள் மண்ணில் பட்டால்தான் நினைத்த இலக்கை அடையமுடியும். தமிழ் மக்கள் தெற்கிலுள்ள இடதுசாரிகளுடன் இணைந்து போராட முன்வரவேண்டும்.

பொது எதிரணியின் ஆர்ப்பாட்டத்தில் மக்கள் கலந்துகொண்டு தற்போதைய அரசை வீட்டுக்கு விரட்டியடிக்கப் பாடுபடவேண்டும். இதற்கு அனைத்து தரப்பும் முன்வரவேண்டும். இவ்வாறு செய்தால் நாட்டில் நல்லாட்சி ஏற்படும்.

மஹிந்த அரசுடன் பேசுவதை விடுத்து வடக்கு, கிழக்கு மக்களின் நம்பிக்கையை வென்ற கட்சியென்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களை சாத்வீகப் போராட்டத்துக்கு வழிநடத்தவேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் துணிகரமாகக் குரல்கொடுப்போம். எனது இறுதிமூச்சு என்னிலிருந்து பிரியும்வரை தமிழர்களுக்காக எனது குரல் ஓயாது ஒலிக்கும். நான் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தாலும் எமது கட்சி தமிழர்களுக்காகத் தொடர்ந்தும் போராடும். எமது பயணம் என்றும் தமிழர்களுக்காகத் தொடரும்.

*தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு இந்தியா உறுதுணையாக நிற்கும் எனக் கூறப்படுகின்றதே?*

யார் சொன்னது? தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய பிரபாகரனின் தலையையும், மரணச் சான்றிதழையும் கோரிய இந்தியா தமிழ் மக்களுக்கு சார்பாகச் செயற்படும் என நான் நம்பவில்லை.

இந்தியா நினைத்திருந்தால் இறுதிப் போரைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆனால், அரசுக்கு ஆயுதம் வழங்கி போரை முன்னெடுப்பதற்கு அதுவே பக்கபலமாக இருந்தது. அரசியல் சுயநலங்களைக் கருத்திற்கொண்டே ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்பட்டது. தமிழ் நாட்டில் தனது இருப்பு ஆட்டம் கண்டுவிடும் என்ற அச்சத்தின் காரணமாகவே காங்கிரஸ் அரசு அந்த முடிவை எடுத்தது.

சோனியா அரசின் செல்லப் பிள்ளையாகத் திகழும் மஹிந்த அரசை, பாரதம் ஒருபோதும் பகைத்துக்கொள்ளாது. மஹிந்தவின் மனம் நோகாத வகையிலேயே டில்லி அரசு அழுத்தங்களைப் பிரயோகிக்கும். இது இந்தியாவின் இரட்டை வேடம். தமிழர்கள் இந்தியாவை நம்புவதால் விடிவு ஒருபோதும் கிட்டாது.

*இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் சனல்-04 தொலைக்காட்சி நிறுவனம் அண்மையில் 'தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' என்ற புதிய ஆவணப்படத்தை வெளியிட்டது. அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

முள்ளிவாய்க்காலில் அன்று தமிழ் மக்கள் "ஐயோ!" என இட்ட மரண ஓலமே இன்று உலகமெங்கும் ஒலிக்கின்றது. இங்கு நடந்த கொடூரங்களை 'சனல்-4' வீடியோவைப் பார்த்துத்தான் புரிந்துக்கொள்ள வேண்டும் என்றில்லை. இறுதிப் போரில் அரங்கேறிய கொடூரங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும்.

'சனல்-04' தொலைக்காட்சி நிறுவனம் இதற்கு முன்னர் வெளியிட்ட போர்க் குற்ற ஆவணப் படம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தவேண்டும் என நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அரசு செய்யவேண்டும்.

*இராணுவத்தினரால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் இராணுவம் விசாரணை மன்றம் ஒன்றை அமைத்து விசாரணை நடத்துகின்றதே பின்னர் ஏன் அரசு விசாரிக்க வேண்டும்?*

அது ஒரு சுயாதீன விசாரணைக் குழு அல்ல. இராணுவத்தினரே அதிகாரிகளை நியமித்து விசாரணை நடத்துகின்றனர். அந்த விசாரணைக் குழு அறிக்கை சமர்ப்பித்த பின்னர் தான் அதன் உண்மை நிலவரம் என்னவென்பது தெரியவரும்.

*பொது எதிரணியின் மே தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை தாங்க விரும்புகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் மேதின நிகழ்வுகளை அங்கு நடத்துவதற்கு கூட்டமைப்பினர் திட்டமிட்டுள்ளனர் என அறிய முடிகின்றது. பொது எதிரணியில் கூட்டமைப்பும் அங்கம் வகிக்கின்றது.

எனவே, யாழில் நடைபெறும் நிகழ்வுக்கு கூட்டமைப்பு தலைமை தாங்கினால் நாம் மகிழ்வடைவோம். எதிர்க்க மாட்டோம்.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை முன்கதிரையில் இருத்துவதை எதிர்க்கும் அரசியல்வாதிகள் நாங்கள் அல்லர். தெற்கில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வரவேற்று அதிகாரப் பகிர்விற்கும் இணங்கியுள்ளார்.

அவர் ஜனநாயக ரீதியாக செயற்படும் தலைவராகத் தோற்றமளிக்கின்றார். அதனால்தான் நாம் ஐ.தே.கவுடன் இணைந்து செயற்படுகின்றோம். இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்துகொள்ள வேண்டும். யார் நிகழ்வை வைக்கின்றனர் என்பது முக்கியமில்லை. அந்த நிகழ்வின் ஊடாகப் பலன் கிடைக்க வேண்டும் என்பதே முக்கியமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாதகமானதொரு முடிவை எடுக்கும் என நாம் நம்புகின்றோம்.

அதேவேளை, தமிழர்களின் கோட்டையில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுள்ள கட்சியான கூட்டமைப்பின் தலைமையில் நிகழ்வை முன்னெடுப்பதும் நியாயமானதுதான்.

*தேசப்பற்று எனக்கூறிக் கொண்டு மக்களை வீதிகளில் இறக்கி அரசு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கின்றது. இதனால் பிரச்சினைகள் தீருமா? அத்துடன், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தேசப் பற்று இல்லை என்றும் அது குற்றஞ்சாட்டுகின்றதே?*

மஹிந்த அரசு 'தேசப்பற்றையும்' விற்று இன்று அரசியல் பிழைப்பு நடத்துகின்றது. தேசப்பற்று குறித்து பேசிக்கொண்டே தேசத்துரோக செயல்களில் ஈடுபடுகின்றது. தாய் நாடு எனக் கூறிக்கொண்டே தாய் நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்குத் தாரைவார்ப்பவர்கள் இவர்களே.

மஹிந்த அரசு அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளுடன் இரகசியமாகப் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது. இது தொடர்பில் மக்களுக்கு எதுவும் தெரியாது. இவ்வாறான செயல்கள்தான் தேசத்துரோகம்.

அமைச்சர்களின் பிள்ளைகள் இன்று வெளிநாடுகளில் சுகபோகம் அனுபவிக்கின்றனர். அரச தரப்பினரின் குடும்பங்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றன. ஆனால் அப்பாவி மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். எனவே, தேசப்பற்றுக் குறித்து கதைப்பதற்கு தற்போதைய அரசுக்கு துளியளவேனும் தகுதி இல்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் பிறந்த மண்ணுக்காக விடுதலை வேண்டிப் போராடியவர். அவர் தாய் மண்ணுக்காகத் தனது உயிரையே தரத் துணிந்தவர். அவர் உயிருக்குப் பயந்து ஓடி ஒளியவில்லை. முள்ளிவாய்க்கால் வரை நின்று போரிட்டவர். தனது குடும்பத்தையே மண்ணின் விடுதலைக்காக பலி கொடுக்க முன்வந்தவர்.

பிரபாகரன் தமிழர்களின் உரிமைகளையும் அடையாளங்களையும், வளங்களையும் பாதுகாக்கவே போராடினார். தான் பிறந்த மண்ணைக் காப்பதற்கு இறுதிவரை பாடுபட்டார்.

அவரின் கொள்கைகளை நாம் ஏற்கமாட்டோம். ஆனாலும் அவர் ஒரு தேசப்பற்றாளர். அவர் சிற்சில தவறுகளை இழைத்திருந்தாலும் அவர் ஒரு சிறந்த விடுதலைப் போராளி. தேசத்துரோகி அல்லர். பிரபாகரன் என்ற நாமம் இந்த நாட்டில் இன்னும் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களுக்கு வரலாற்றில் வாழும். இதனை எவராலும் அழித்துவிடமுடியாது. இதுவே உண்மையும்கூட.

தாய்நாட்டு வளங்களை விற்பனை செய்து பிழைப்பு நடத்தும் ஜனாதிபதி மஹிந்தவுடன் ஒப்பிடுகையில் தாய்மண் மீது பிரபாகரன் அதிக பற்றைக் கொண்டிருந்தார். மக்களை வீதியில் இறக்கிப் போராடித்தான் தேசப்பற்றைக் காட்டவேண்டுமென்றில்லை. அது மனதில் இருந்தால் போதும்.

பொருள்களின் விலைகளைத் தொடர்ச்சியாக அதிகரித்து மக்களின் அடிவயிற்றில் அடிக்கும் மஹிந்த அரசு முதலில் நிர்வாக முறைமையைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் ஏனைய விடயங்களைப் பற்றிச் சிந்திக்கலாம்; பேசலாம்.

*வடமாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு பின்னடிப்பது ஏன்?*

வடக்கில் கூட்டமைப்புடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மோதி அரசு படுதோல்வியடைந்தது. எனவே, மாகாண சபையையும் இழந்துவிடுவோம் என்ற அச்சத்தில் தேர்தலை நடத்தாமல் காலம் கடத்துகிறது.

வடமாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றினால் அரசுக்கு சர்வதேச அரங்கில் சில சிக்கல்கள் ஏற்படும். அது மட்டுமின்றி, கூட்டமைப்பு ஒருபோதும் வளைந்து கொடுக்காத கட்சி. அரசின் அடாவடிகளைத் துணிகரமாகச் சுட்டிக் காட்டும். அது மேலும் மேலும் அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும் என்பதால் அரசு பின்வாங்குகிறது. ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எப்படி இருந்தவர் இப்படி ஆகிவிட்டார் என்றே ஜெனட் ஜாக்ஸனைப் பார்த்தால் சொல்லத் தோன்றுகிறது. மைக்கேல் ஜாக்ஸனின் தங்கையும் பிரபல பொப் பாடகியுமான ஜெனட் ஒரு சாப்பாட்டுப் பிரியை. சாப்பாடு என்றால் எனக்கு உயிர் என்று சொல்லிச் சொல்லியே மூக்கு முட்ட நன்றாகச் சாப்பிட்டதில் படு குண்டாகிப் போனார். இதனால் பல கம்பனிகள் அவரை வைத்து 'ஆல்பம்' தயாரிப்பதற்கே தயங்கின. இப்போதோ அம்மணி அத்தனை பேரையும் கிறங்கடிக்கும் 'சிலிம்'. ஸீரோ சைஸ் உடல்வாகு என்ற அளவுக்கு வந்துவிட்டார். எல்லாமும் எடைக் குறைப்புக்கு என்றே தனியாக வைத்தியரையும் ஆலோசகர்களையும் வைத்து கடுமையாக முயற்சி செய்து இந்த நிலைக்கு வந்திருக்கிறார். எல்லாமும் ஒரு விளம்பரக் கம்பனி கேட்டுக் கொண்டதற்காகத்தான். ஆனாலும் சாப்பாடு என்றால் எனக்கு உயிர் என்பதை இன்னும் மறக்காமல் சொல்கிறார் ஜெனட். 45 வயதில் இப்படியொரு அசாத்தியத் துணிச்சலா என்று வியந்து பார்க்கிறார்கள் ஏனைய ஹொலிவூட் பிரபலங்கள்.

பார்க்கிறத்துக்குப் பேய் வீடு மாதிரி இது இருந்தாலும் உண்மையில் அப்படியல்ல. ஜப்பானின் நாகசாகி நகரையொட்டி கடலில் இருக்கும் ஒரு தீவில் இந்தக் கைவிடப்பட்ட குடியிருப்பு இருக்கிறது. இப்போது இங்கே யாரும் இல்லை. குங்கன்ஷிமா என்பதுதான் இந்தத் தீவின் பெயர். 'போர்க் கப்பல் தீவு' என்று அர்த்தம். 1810 இல் தீவில் நிலக்கரி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதுதான் அதன் பொற்காலம். அதிலிருந்து அங்கு ஜப்பானியர்கள் குடியேற ஆரம்பித்தார்கள். மளமளவென சனத்தொகை வளர்ந்தது. 1887 - 1974 இடையில் எக்கச்சக்கம் பேர் வந்து சேர்ந்தார்கள். ஆனால் பெற்றோல் கண்டுபிடிக்கப்பட்டதும் தீவின் மவுசு மெல்ல மெல்ல காணாமல்போய் இப்போது பேய் வீடாகிவிட்டது.







ஆட்டுக்குட்டிகள் கறுப்பு வெள்ளை நிறத்தில் பிறப்பது வழமை. ஆனால் பிரிட்டனில் ஜூலி நோபல் என்ற 58 அம்மணி வைத்துள்ள பண்ணையில் பண்டா கரடிக் குட்டிகள் போன்ற தோற்றத்தில் ஆட்டுக் குட்டிகள் பிறந்துள்ளன. மரபணு மாற்றத்தின் மூலம் திட்டமிட்டே இந்த ஆட்டுக் குட்டிகளை பிரசவித்திருக்கிறார் அந்த அம்மணி. கண்கள் காதுகளைச் சுற்றி அப்படியே பண்டா மாதிரியே இவற்றுக்கும் கருவளையங்கள் உள்ளன.


டேவிட் பெக்காம் பிரிட்டனின் புகழ் பெற்ற கால்பந்தாட்ட வீரர். உலகக் கோப்பைப் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு தலைமை தாங்கியவர். ஆனால் அவரது மகன்களில் ஒருவர் கூடைப்பந்தாட்டத்தைத்தான் விரும்புகிறார். அப்பாவும் மகனுமாக ஒரு கூடைப்பந்தாட்டத்தை ரசிக்கிறார்கள்.

பொதுவாக 40 வயதுகளில்தான் வாழ்க்கையே ஆரம்பிக்கும் என்பார்கள். அந்த 40 ஐ எட்டிவிட்ட ஹொலிவூட் நடிகை லுங்கி, அதெல்லாம் பழங்கதை இப்போது வாழ்க்கை 60 வயதில்தான் ஆரம்பிக்கிறது; அதுவரை இளமைதான் என்கிறார். "எங்கள் அம்மாக்களின் காலத்தை விட இன்று நாங்கள் இளமையாகவும் ஆடை அணிவதுடன் தலை அலங்காரங்களையும் நாகரிகமாகச் செய்கிறோம். இந்த காலத்தில் 60 தான் புதிய 40 வயதுகள்'' என்கிறார் அவர்.



© AB Images Gloucestershire






உலக ரெஸ்லிங் டபிள்யூ. டபிள்யூ.டபிள்யூ ரொக் புதிய படம் ஒன்றில் நடித்து வருகிறார். வலியில்லாமல் வெற்றி இல்லை என்பதைக் குறிக்கும் 'நோ பெயின் நோ கெயின்' என்ற அந்தப் படத்தில் கூட நடிப்பவர் ஹொலிவூட் நட்சத்திரம் மார்க். அவரும் கட்டுமஸ்தானவர்தான் ஆனால் ரொக்கின் முன்னால் தாக்குப்பிடிக்க முடியாமல் படத்தில் தனது உடலை காட்டும் காட்சிகளை நீக்கி...

செர்கே பிரின், கூகுள் நிறுவனத்தை நிறுவிய பங்காளிக்ளில் ஒருவர். அவர் அணிந்திருப்பது கூகுள் கண்டாடி. பார்வைக் குறைப்பாட்டுக்கானதல்ல, உலகையே பார்ப்பதற்கானது. கூகுள் மூலமாகச் செய்யும் எல்லா விடயங்களையும் இந்த கண்ணாடி தரும் வசதிகள் ஊடாகச் செய்ய முடியும். தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு மட்டுமே இப்போதைக்கு இது கிடைக்கும்.



உலகின் மிகச் சிறிய முட்டையை, அதுவும் ஈஸ்டர் விழா காலத்தில் இட்டு சாதனை புரிந்துள்ளது. கோழி பெரிது ஆனால் முட்டை சின்னஞ் சிறிது. வெறும் 50 சதக் குற்றியைவிட சற்றுப் பெரியதாக இந்த முட்டையை இட்டிருக்கிறது கோழி. 2.5 சென்ரிமீற்றர் மட்டும்தான் அதன் நீளம். சுற்றளவு வெறும் 2 சென்ரி மீற்றர். கோழியின் உரிமையாளர் இவான் இந்த முட்டையை கின்னஸ் சாதனையாகப் பதியுமாறு விண்ணப்பித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகேளம்

# பட்டகாலிலே படும்



> “இயற்கை தன் கோரத் தாண்டவத்தை ஒரு மணி நேரத்துக்குள் முடித்துவிட்டு இருள் கவ்விய பொழுதில், நான்காயிரத்துச் சொச்சக் குடும்பங்கள் இருந்த ஒன்றிரண்டு சொத்தையும் இழந்து நிர்க்கதியாகின.

மேகக்கூட்டங்கள் திரண்டு மழையின் வரவை அறிவித்துகொண்டிருந்தன. குழந்தைகள் முற்றத்து மணலில் ஓடிவிளையாடிக்கொண்டிருந்தனர்.

நான்கு பக்கங்களும் அடைக்கப்பட்ட முட்கம்பி வேலி. பாது அங்கு காப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. எரிச்சல், மனக்கசப்பு, விரக்தி, வேதனை எல்லாவற்றையும் சுமந்தபடி ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு வாழ்கின்றனர்.

வவுனியா நகரம் சனக்கூட்டங்களால் நிரம்பி வழிந்த காலத்தில், நகரத்து பஸ் நிலையத்தில் எவரையாவது பார்த்தால் ''எனது வீட்டார், சொந்தக்காரர்கள், தெரிந்தவர், அறிந்தவர்களைப் பார்ப்பதற்காக செட்டிகுளம் போகிறோம்'' என்று பேசிக்கொள்வார்கள். முகாமுக்குள் அடைக்கப்பட்ட மக்களும் அவர்களை பார்பதற்காக சென்றவர்களும் முட்கம்பிவேலிகளில் அனுமதிக்காகக் காத்திருந்து காய்ந்த வேதனைகளை எவருமே இன்றுவரை மறந்துவிடவில்லை. அந்த வாழ்க்கை எழிதில் மறந்துவிடக்கூடியதுமில்லை.

அவை எல்லாம் நேற்று நடந்தது போலாக, மூன்று வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஆனால் இன்னமும் அதே துயரங்களையும் துன்பங்களையும் சுமந்துகொண்டு ஒரு பகுதி மக்களுக்கு முகாம் வாழ்க்கைதான் சொந்தமாக்கப்பட்டுள்ளது. அவர்களது பிள்ளைகள் பலருக்கு பிறந்த ஊரைச் சரியாக ஞாபகம் இல்லை. குண்டுகளும், ரவைகளும் வெடிக்கும் 'சாவின்பூமி' அது என்பதுதான் அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம்.

நான்கு மூலைகளில் தடிகள் நடப்பட்டு தகராங்களால் சுற்றி அடைக்கப்பட்ட வரிசை வீடுகளைக் கொண்ட அந்தக் காட்டுப் பண்ணைதான் இன்று அவர்களுக்குச் சொந்த ஊராகிப் போனது.

எப்படியாவது சொந்த தேசத்துக்கு சென்று விடவேண்டும் என்ற பேரவாவுடனும் ''முக்கியமான பொருள்களை மண்ணுக்குள் தாட்டு வைத்துவிட்டு வந்தேன். இப்போ அதை யார் எடுத்தார்களோ'' என்ற முணுமுணுப்புடனும் கழியும் அவர்கள் வாழ்க்கையை, 'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்' என்ற கதையாக ஒரு சிறு காற்றுடன் ஆரம்பித்த மழை மேலும் கெடுத்துவிட்டுப் போய்விட்டது ஒரே மணி நேரத்தில்.

மழை வேண்டும் என்று வானத்தைப் பார்த்த ஒரு சமூகத்தை அன்றைய மாலைப் பொழுது 'பாழ்பட்ட வானம்' என்று திட்டுமளவுக்கு ஆக்கிவிடும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. இயற்கை தன் கோரத் தாண்டவத்தை ஒரு மணி நேரத்துக்குள் முடித்துவிட்டு இருள் கவ்விய பொழுதில், நான்காயிரத்துச் சொச்சக் குடும்பங்கள் இருந்த ஒன்றிரண்டு சொத்தையும் இழந்து நிர்க்கதியாகின. மூன்று வருடத்துக்கு முந்திய முள்ளிவாய்க்காலை ஞாபகப்படுதிப் போனது அந்த இரக்கமில்லாத காற்று.

இருந்த குடிசையையும் அதற்குள் இருந்த ஒன்றிரண்டு உடுபுடைவைகளையும்கூட மழைக்கும் காற்றுக்கும் காவு கொடுத்துவிட்டு யார் யாரையோ எல்லாம் திட்டுகிறார்கள் அந்த மக்கள். ஆனாலும் என்ன பயன் இன்னும் மாதக்கணக்கில் அவர்கள் அங்கேயேதான் இருக்க வேண்டும் என்று இரக்கமின்றி வருகிறது தெற்கிலிருந்து மறுமொழிகள்..

அவர்களின் மீள்குடியமர்வு குறித்து அரசு ஏதேதோ கட்டுக்கதைகள் பேசிவருகிற போதும் அவை எவையும் நிறைவுறவில்லை.

உதவியும் நிதியும் தேவை என்பதை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தக்கூடிய அடையாளங்கள் இவர்கள்தான் என்பதால் அவர்களை அப்படியே பேணுவதில் அரசு விருப்பதுடனேயே இருக்கிறது போலுள்ளது.

போர்முடிவுற்று மூன்று வருடங்களாவதற்கு இன்னமும் ஒரு மாதமே இருக்கும் நிலையில் தொடர்ச்சியாக அந்த மக்கள் 'லாயத்துக்குள்' அடைக்கப்பட்டவர்களாகவே வாழ்கின்றனர்.

இந்த நிலையில்தான் கடந்த மாதம் 31 ஆம் திகதி சுழன்ற மினி சூறாவளி முள்ளிவாய்காலின் இரத்தம் தோய்ந்த எண்ணங்களை ஞாபகப்படுத்தியது.

ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழக்க,பலர் காயப்பட, உணவு, உடை, உடமைகள் மழைநீரில் அள்ளுண்டுபோக இயற்கையும் அந்த மக்களைப் பந்தாடியது.

நனைந்து போன உடல்கள் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தன அரசை. ''எவ்வளவு காலமா எங்கள போட்டு படாத பாடு படுத்துறாங்கள் எல்லாச் சனத்தையும் விட்டது போல எங்களையும் விட்டிருந்தா நாங்கள் எங்கட சொந்த இடத்தில எப்படியாவது இருந்திருப்பம். இங்க அடச்சு வைச்சுச் சீரழிக்கிறாங்கள்'' என்பதுதான் அவர்களின் ஆவேசக் குரல்களின் சுருக்க வடிவம்.

ஒரு நாள் இடைவேளையின் பின்னர் கடந்த 02 ஆம் திகதியும் இயற்கை மீண்டும் அவர்களது இருப்பை ஏழனம் செய்தது. ''பட்ட காாலிலே படும், கெட்ட குடியே கெடும்'' என்பதை சுழல் காற்றும் மழையும் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றன.

போரில் பட்ட துன்பங்கள் மாறமுன் இயற்கையும் சோதனை செய்தது. அதன் பின்னர்தான் இந்த மக்களின் மீள்குடியமர்வை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார்களாம். அதற்காகத் திட்டமிடத் தொடங்கி இருக்கிறார்கள் அதிகாரிகள். இதுவரை ஏன் அதனைத் தாமதித்தார்கள் என்று அவர்களிடம் யாரும் கேட்கக்கூடாது.

இரு மாதங்களுக்குள் எஞ்சியுள்ள மக்களை மீள்குடியமர்த்துவது, அதற்காக அவர்களது வாழ்விடத்தில் உள்ள மிதிவெடி அபாயத்தைப் போக்குவது என்ற முடிவுக்கு அதிகாரிகள் இப்போது வந்திருக்கிறார்கள்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இராணுவத்தினர் 700 பேரையும் நான்கு மிதிவெடி அகற்றும் இயந்திரங்களையும் ஒழுங்குபடுத்தி கண்ணிவெடி அகற்றும் பணியைத் துரிதப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரசு போர் முடிவுற்றுச் சில நாள்களில் வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து 6 மாத காலத்துக்குள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை அவர்களது சொந்த இடத்தில் மீள்குடியமர்த்துவோம் என உறுதியளித்து அதற்கான ஆரம்ப நிகழ்வுகளைக் கோலாகலமாகக் கொண்டாடியிருந்தது.

நாள்கள் நகரநகர 180 நாள் நீண்டுகொண்டே சென்றது. அது இன்று மூன்று வருடங்களைத் தொட்டுவிட்டது. ஆனால் அரசின் வாக்குறுதி காற்றில் பறந்துகொண்டே இருக்கின்றது. அவ்வப்போது சாட்டுப்போக்குக்கு அறிக்கைகளும், காரணங்களும் சொல்லப்படுகின்றன. 95 சதவீத மக்களை மீளக்குடியமர்த்திவிட்டோம் என்று ஆரவாரங்கள் செய்யப்படுகின்றன. ஆனால், முகாம்களில் இன்னும் எஞ்சியுள்ள 6,000 மக்களைக் கவனிக்கத்தான் யாருமில்லை.

பேரிடர்கள் வரும்போது ஓடிவிழிக்கும் அரசும் அதிகாரிகளும் பின்னர் மெல்ல மெல்ல மந்தமாகி விடுகின்றனர். அடுத்த இடர் வந்தால்தான் அவர்கள் விழித்துக் கொள்கின்றனர்.

அண்மையில் வவுனியா நலன்புரி நிலையத்தில் இயற்கை தாண்டவமாடிய பின்னர்தான் 2,000 வரையிலான மக்கள் பாதிக்கப்பட்ட பின்னர்தான் அவர்களை இரண்டு மாதத்தில் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இப்படியாக மக்களின் தேவைகளை உணராது நெருக்கடிகளுக்கு அல்லது வெளியாள்களின் விருப்பங்களுக்காகவே இலங்கையில் மீள்குடியமர்வும், அபிவருத்தியும் முன்னெடுக்கப்படுகின்றன.

மக்களில் உண்மையான அக்கறையும் இதயசுத்தியுடனான செயற்பாடும் இருந்திருக்குமானால் இன்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இரண்டு வருடங்களுக்கு முன்பே எடுத்து அந்த மக்களை மீளக்குடியமர்த்தியிருக்க முடியும்.

மிதிவெடிகள், கண்ணிவெடிகள் அகற்றப்படுவதற்கு ஆளணிப் பற்றாக்குறை இருந்தால் இன்று எடுக்கப்பட்ட முடிவை அன்றே எடுத்திருக்கக் கூடாதா? நாங்கள் இயற்கைச் சீற்றத்திலிருந்தாவது தப்பியிருப்போமே என்பதுதான் பாதிக்கப்பட்ட மக்களின் கேள்வி.

கேள்விகள் கேள்விகளாகவே இருக்க - விடைகள் வெளித்தெரியாமலே போகின்றன.

இந்த இரண்டு மாத அறிவிப்பும் எத்தனை இரண்டு வருடங்களைப் பூர்த்தி செய்யுமோ என்பது இன்று பலர் மத்தியில் உள்ள கேள்வி. அப்படி எதிர்க் கேள்வி கேட்பவர்கள் இந்த நாட்டில் வாழ்வதற்குத் தகுதியற்றவர்கள். குனியும்வரை குட்டிக் கொண்டே இருப்பவர்களாகத் தான் இந்த அரசு இருக்கிறது.

போரின்போது எல்லாவற்றையும் இழந்து நலன்புரி நிலையங்களில் நிம்மதியற்று வாழும் மக்களுக்கு இயற்கை கொடுத்தது மேலும் ஒரு இழப்பை. அவர்கள் இயற்கையையும் திட்டினார்கள்; அரசையும் திட்டினார்கள்; எதுவுமே அவர்கள் பக்கம் கைகூடியதாய் இல்லை. சொந்த இடத்துக்கு எப்போது போவோம் என்பதுதான் அவர்களின் கடைசி ஆசை.

# தர்மத்தை மீறும் புத்தர்

போர் முடிவுற்று மூன்று வருடங்கள் நெருங்கும் நிலையில் வடக்கு கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களுக்கான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டதோ என்னவோ அங்கு புத்த கோயில்களுக்கு அடித்தளம் இடப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பது வெளிச்சம்.

குறிப்பாக வன்னி இறுதிப் போரின் பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதி இராணுவத்தினரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, அதன் ஊடாகத் திட்டமிட்ட நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டம் கிடைத்ததோ என்னவோ இராணுவ முகாம்கள் நிரந்தரமாக்கப்பட்டு ஆங்காங்கே புத்தர் சிலைகள் நிறுவப்படுவது வழமையாகிவிட்டது.

அதுமட்டுமல்லாது முக்கியத்துவம் வாய்ந்த நகரப் பகுதிகளிலும் பெரிய புத்த விகாரைகள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்தில் புதிதாக குருநகர் கடற்கரை வீதியில் அவசர அவசரமாக புத்தர் கோயில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதை பார்க்க முடிகிறது.

இதுபோலவே வவுனியா வடக்கு கனகராயன் குளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களிலும் புதிதாக புத்த கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழும் இந்தப் பகுதிகளில் அவர்கள் வணங்காத தெய்வமொன்றை அமைப்பதற்கு ஒரு சாரார் எடுக்கும் தீவிர முயற்சி எதிர்காலதத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலத்தை சிங்கள பௌத்த பேரினவாத நிலமாகக் காட்டுவதற்கு உள்ளூர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற செயற்பாடாகும்.

அண்மையில் வரலாற்றுப் புகழ்மிக்க கிளிநொச்சி உரித்திரபுரீஸ்வரர் ஆலயத்துக்குள் சீருடையுடன் புகுந்த இராணுவத்தினர் மூலஸ்தானத்தில் புத்தரைத் தேடியுள்ளனர். சைவாகம முறைப்படி இது இந்து சமயத்தை இழிவுபடுத்தும் செயலாகும்.

அறநெறி போதிக்க அருள் பெற்ற புத்த பெருமான் அவ்வழி தவறி மக்களின் வாழ்விடங்களை அபகரித்த வருகிறார்.

இப்போது உருத்திரபும் சிவன் கோயில் அருகிலுள்ள செங்கல் மணல் திட்டு ஒன்றுக்குள் புத்த பெருமான் பதுங்கி இருக்கிறார் என்று புதிய தகவல் பரப்பப்பட்டு அந்த இடத்துக்கு பொலிஸ் காவல் வழங்கப்பட்டுள்ளது.

பஞ்சமா பாதகங்களில் இருந்து விலகிக் கொள்ள எண்ணிய புத்த பெருமான் அதில் ஒன்றை செய்பவரைக் கூட தன்னிடத்தில் இருந்து வேறுபடுத்தியவர். இன்று மட்டும் அவர் கூட பஞ்சமா பாதங்கள் புரிகிறார் போலவே தெரிகிறது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலைகளோடு போர்

ஜெரா

# தலைகளை இழந்தனர் தலைவர்கள்


## புதிய வடிவில் ஆக்கிரமிப்பு

தமிழர் தாயகப்பகுதியானது என்றுமில்லாதளவுக்கு சூறையாடப்பட்டு வரும் காலமொன்றுக்குள் பயணிக்கிறது. நீர், நிலம், வனம் போன்ற இயற்கைக் கூறுகளும் சமூகம், நிர்வாகம் மற்றும் கலாசார விழுமியங்கள் என அனைத்தும் பெரும்பான்மை மனநிலை ஆக்கிரமிப்பால் நிலைகுலைந்து வருகின்றன. இந்தநிலையில் தமிழர் தாயகப் பரப்பின் வரலாற்றை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் சிலைகளும் சிதைவுக்குள்ளாக்கப்பட்டு வருவது அபாய அறிவிப்பாகிறது.

முதலில் விடுதலைப் புலிகள் நிறுவிய அனைத்து வரலாறு சார்ந்த சிலைகளையும் இடித்தழித்த அடையாளம் தெரியாத கும்பல்கள் இப்போது தமிழ்ப் பரப்பில் அரசியல் மற்றும் பண்பாட்டு விடயங்களை மேன்மை செய்த கர்த்தாக்களின் சிலைகளைக் குறிவைத்திருக்கின்றன. வடக்கில் தந்தை செல்வாவின் சிலையை தொடர்ந்தும் சிதைத்துக் களைத்து, இப்போது கிழக்கில் தொடங்கியிருக்கின்றனர். சில நாள்களுக்கு முன் திருகோணமலையில் நிறுவப்பட்டிருந்த தந்தையின் சிலைத் தலையை கொய்தவர்களின் கைவரிசை மறுபடியும் தொடங்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்ப் பண்பாட்டு வாழ்வியலின் ஓர் அங்கமான தமிழிசைக்கு புதிய அறிமுகம் கொடுத்த விபுலாநந்தரின் சிலை சேதமாக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்புக்கு வரலாற்று பெருமிதத்தை வழங்கிய விபுலாநந்தருக்கு அந்தப் பிராந்திய மக்கள் சிலையெடுத்துக் கொண்டாடினர். தம் பண்பாட்டுச் சிற்பிகளில் ஒருவராக அவரை மதித்தனர். அது போலவே புலவர் மணி பெரியதம்பிப் புலவரும் மதிக்கப்பட்டார். ஆனால் இவ்விருவருக்கும், அவர்களை சிலை வடிவிலாவது வைத்து நேசித்த தமிழருக்கும் கரிபூசியிருக்கின்றனர் இந்த நாட்டின் இனந் தெரியாத நபர்கள். இலங்கையைப் பற்றி அறிந்த குழந்தைக்கும் இனந்தெரியா நபர்கள் யாரென்று தெரியும். முற்று முழுதான தமிழர் விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கும் விசமிகளின் திட்டமிட்ட செயலாகவே தமிழர்கள் இதனைப் பார்க்கின்றனர்.

தமிழர் தாயகப் பரப்பில் இன்னும் பல பண்பாட்டுக் கர்த்தாக்களின் சிலைகள் இருக்கின்றன. அவற்றின் மரண காலமும் நெருங்கிவருகின்றது. இதனை தமிழர்கள் எப்படிக் காத்துக் கொள்ளப் போகின்றனர் என்று தெரியவில்லை. இலங்கைத் திருநாட்டின் இனங்களுக்கிடையிலான நல்லிணக்க நிலைமைகள் இப்படியே போனால் தமிழர்கள் தம் சிலைகளைக் காத்துக் கொள்ளவாவது ஆயுதம் தாங்க வேண்டிய சூழல் ஏற்படும். உயிரற்ற சிலைகள் மீதான கொலைவெறியாட்டம் அந்தநிலை நோக்கியே தமிழ் மக்களை இழுத்துச் செல்கின்றது.





சிலைகள் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவற்றின் மொழி மௌனம் என்பதால் அதன் பெறுமதி யாருக்கும் இலகுவாகப் புரிவதில்லை.

ஆனாலும் தம் சமூகத்தில் மேன்மையடைவோர்க்காக சிலைகள் அமைப்பதை மட்டும் எந்தச் சமூகமும் கைவிடுவதாக இல்லை. பெறுமதி மிக்கவர்களை சந்திச் சிலைகளாக வைத்து வழிபடத்தலைப்படுகின்றது. சிலைகளில் நிறுவப்பட்டவர்களின் பிறப்பும் இறப்பும் கொண்டாட்ட நாள்களா கின்றன. தமக்கு வழிகாட்டியவர்கள் தொடர்பான நினைவு நீட்டலை தக்க வைத்துக் கொள்ள அந்தக் கொண்டாட்டங்கள் உதவுமென நம்பப்படுகின்றது.

நினைவுகள் கடந்த காலம் பற்றிய பற்றினை ஆழப்படுத்துவதால் சிலைகள் அத்தியாவசியமானவையாக மாறுகின்றன. ஒரு வகையில் நிகழ்காலம் தொடர்பிலான வரலாற்றை அவை நினைவுறுத்திக் கொண்டேயிருக்கின்றன. பிரதிமையான வரலாற்று மையமாக இவைகள் பார்ப்பவர் மனதில் எப்போதும் உணரப்படுகின்றன. சமூகம், சமயம், பிரதேசம், தேசியம் எனப் பல்வேறு விதமான அடையாள உணர்வலைகளை கிளப்பக் கூடிய வகையில் சிலைகள் தம்மை நிலைநிறுத்தியிருக்கின்றன. எனவேதான் சிலைகள் எப்போதும் பெறுமதியானவையாக இருக்கின்றன.

## வெள்ளைச்சாயலில் எதுவானாலும்....

மேற்கின் பண்பாட்டை இலங்கையில் பரப்பியவர்களுக்கு இலங்கை மக்கள் சிலையெடுத்தனர். அதில் மனித விழுமியத்தை கற்பித்த பேடன் பவல் முதன்மையாவர். இன்றும் இலங்கைப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு அவர் பெரும் இலட்சிய புருஷனாக இருக்கின்றார். ஜெனிவா பிரளயத்தோடு இலங்கையின் இனந்தெரியாத கும்பல்கள் அவரையும் பகைத்துக் கொண்டனர். மட்டக்களப்பில் அவரின் சிலைத் தலையும் இரவோடிரவாகக் கொய்யப்பட்டிருக்கின்றது.

வவுனியாவில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயம் சிதைவுக்குள்ளாக்கப்பட்டுள்ளதோடு அசிங்கப்படுத்தியும் உள்ளனர்.

அண்மைக்காலமாக மேற்குக்கெதிராக எழுந்துள்ள பீதியினாலேயே இந்த கீழ்த்தர செயல்களில் இனந்தெரியாத கும்பல்கள் ஈடுபடுவதாக மக்கள் விசனம் வெளியிட்டிருக்கின்றனர்.

தற்போது எழுந்திருக்கின்ற அரசியல் நெருக்கடியைச் சமாளிக்க எத்தனையோ வழியிருக்கின்றது. சரியான வகையில் தமிழருக்கு ஒரு தீர்வை முன்வைத்து அதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கோண்டாலே அழுத்தங்கள் தானாகக் குறைந்து விடும்.

## அகிம்சாவாதிக்கும் அடி

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக பிறநாட்டவரது சிலைகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் காந்தி உடைக்கப்பட்டிருக்கிறார். இலங்கையில் நல்லிணக்கம் பற்றிய உரையாடல்கள் வலுப்பெற்று வரும் தருணத்தில் நல்லிணக்கவாதி இனந்தெரியாதவர்களால் உடைக்கபட்டிருக்கின்றார். இது வரைக்கும் எந்த நாட்டிலும் காந்தி சிலை உடைக்கப்பட்டதாக வரலாறில்லை. இலங்கைதான் அதனையும் தொடக்கி வைத்திருக்கின்றது.

இதற்கும் பலமானதொரு அரசியல் பின்னணி உள்ளதாகவே எண்ணப்படுகின்றது.

ஜெனிவாவில் அமெரிக்கா பக்கம் நின்ற இந்தியாவுக்கு எதிரான உடைப்பாகவே இது பார்க்கப்படுகின்றது. எல்லா வகையிலும் இறுகிப் போயிருக்கும் இலங்கையின் இராஜதந்திர நகர்வின் பலவீனத்தைப் பொது மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவே இந்த விவகாரம் உள்ளது. தம்மை எதிர்த்தவரை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்ற மூடத்தனத்தின் உச்சமாகவே இந்தச் சம்பவம் நோக்கப்படுகின்றது.

உண்மையில் இலங்கைக்கெதிரான நடவடிக்கைகள் சர்வதேச மட்டத்தில் கிளர்ந்தெழும் போதெல்லாம் முட்டுக்கெடுப்பது இந்தியாதான். ஆனால் இம்முறை அந்த நாடும் கைகழுவி விட்டதை இலங்கை அரசியல்வாதிகளால் ஜீரணிக்க முடியவில்லை. எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்றுதென்னிந்திய சினிமாக்களில் வரும் வில்லன்களின் பாணியில் களமிறங்கியிருக்கின்றனர். அதன் தொடக்கத்தை தமிழக மீனவர்களில் காட்டினர் முதலில். அடுத்ததாக காந்தி சிலையில் காட்டியுள்ளனர். அகிம்சையின் வடிவமாக உலகமே கொண்டாடும் இந்த ஒப்பற்ற மனிதனின் நினைவுச் சிலையை உடைத்ததன் ஊடாக என்ன இலாபத்தை அடைந்தனரோ தெரியவில்லை. இது போன்ற இழிசெயல்கள் எந்தவிதமான முன்னேற்றங்களுக்கு இடங்கொடுக்கப் போவதில்லை என்பது தெளிவாகின்றது .

இப்படியே தொடர்ந்தும் இந்திய எதிர்ப்பு வெறியை இனந்தெரியாத கும்பல்கள் காட்டத்தான் போகின்றன எனில் அடுத்து அவர்கள் தலையுடைக்க வேண்டியது மிக முக்கியமான ஒருவரின் சிலைத் தலையைத்தான். அது பெரும்பான்மையினரின் கடவுள். அகிம்சையின் தொடக்கத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய புத்த பெருமானின் தலையைத்தான் அடுத்து உடைக்க வேண்டும். ஏனெனில் அவரும் இந்தியாவிலிருந்துதான் இலங்கைக்கு வந்தார். அதுவும் இன்று இலங்கையை எதிர்த்து வாக்களித்த வட இந்தியாவிலிருந்துதான் வந்தார். நாடு முழு[illegible]லும் அவரின் சிலையை இனந்தெரியா[illegible]தவர்கள் சேதப்படுத்துவார்களா?

# பல்லவர் கண்ட சிலை

தமிழ்ப் பண்பாட்டு மரபின் சிலைகளின் அறிமுகம் கி.பி 4ஆம் நூற்றாண்டுக்கு பின்னரேயே ஏற்படுகின்றது.

அதற்கு முன்னரான சங்க காலப் பகுதியில் வடிவமைக்கப்பட்ட சிலைகள் பற்றிய செய்திகளை சங்க இலக்கியங்கள் தருகின்ற போதிலும் அவை கட்டமைந்த வடிவத்தைப் பெறவில்லை. காரணம் அக்கால மக்கள் அழியும் பொருள்களில் சிலைகளை வடிவமைத்தமையே ஆகும்.

சங்ககாலத்துக்கு முன்னரே வாழ்ந்த மக்கள் சிலை அமைக்கும் முறையைக் கண்டுபிடித்திருக்கின்றனர். அவை சுடுமண்ணால் ஆக்கப்பட்டவை. கடவுள் உருவங்கள், பெண் உருவங்கள், விளையாட்டுப் பொம்மைகள் போன்றன அக்கால மக்கள் உருவாக்கிய சிலைகள். இச்சிலைகள் ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவையும் பல்லவர் காலத்தோடு ஒத்துவரக்கூடிய வகையில் முன்னேற்றம் பெற்றதாகக் காணப்படவில்லை.

பல்லவர்கள் வட இந்தியாவில் கற்றுணர்ந்த சிற்ப [illegible] பயன்படுத்தி [illegible] சிலை வடிவமைப்பதில் புதிய சகாப்தத்தைத் தொடக்கி வைத்தனர்.

கடவுள் உருவங்கள், மன்னர் உருவங்கள் போன்றவற்றை பல்லவ ஸ்தபதிகள் வடிவமைத்தனர். அதுவும் நம்பிக்கையையும், வரலாற்றையும் அடுத்து வரும் காலங்களுக்குக் கடத்தும் ஒரு ஊடகமாகவே பயன்படுத்தப்பட்டது.

தொடர்ந்து வந்த சோழ, பாண்டிய, நாயக்கர் காலங்களிலும் பல்லவர் மரபில் வந்த சிலைகளே வேறு வேறு வடிவங்களில் மெருகேற்றப்பட்டன.

[illegible] முடிவோடு அறிமுகமான [illegible] சிலை அமைப்புக் கலையானது தமிழ் பண்பாட்டு மரபில் இருந்து சற்று விடுபட்டே வளர்ந்தது. அதாவது பிரமாண்டப்படுத்தி சிலைகளை வடிவமைப்பதன் மூலம் பார்ப்பவர் மனதில் இலகுவான, ஆழமான பதிவை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு அமைக்கப்பட்டன. உயரமான இடங்களில் புத்தரை பிரமாண்டப்படுத்திக் காட்டுவதன் ஊடாக அதனை இன்று வரைக்கும் நிறுவி வருகின்றனர்.

ஆயினும் பல்லவர் சிலைகள் தமிழ்ப் பண்பாட்டில் ஏற்படுத்தியிருந்த தாக்கத்தினால் பௌத்த சிலையின் செல்வாக்கை உள்வாங்க முடியவில்லை.

தமிழ்ப் பரப்பில் பௌத்தத்தால் நின்று நிலைக்க முடியாததால் அதன் சிலைச் செல்வாக்கு இப்பரப்பில் ஏற்பட வாய்ப்பற்றுப் போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டுக் கேட்பது எப்போ?

கணேசாயினி



"ஆராரோ.... ஆரிவரோ... ஆரடித்து நீ அழுதாய்..." என்றவாறாகத் தொடர்கிறது ஒரு தாயின் தலாட்டு. என்னதான் மொழி குழந்தைக்கு விளங்கா விட்டாலும், தாய் தன்னுடன் அன்பு மொழி பேசுகிறாள் என்ற எண்ணத்துடன் மனநிறைவுடன் உறங்கிப் போகிறது குழந்தை.

அதுமட்டுமன்றி அந்தத் தாயின் அணைப்பின் சூட்டில் உறங்கிப் போய்விடுகிறது.

தாய் சற்று அவ்விடத்தில் இல்லாது விட்டால் குழந்தை பாட்டியின் அன்பில் விளையாடும்.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. ரீவியைப் போட்டு விட்டு பிள்ளையை அதற்கு முன்பாகக் கிடத்திவிட்டு தாய் தன்னுடைய வேலைகளைச் செய்யச் சென்றுவிடுவார். குழந்தையும் ஏதோ அசைவுகளைப் பார்த்து விட்டு அப்படியே தூங்கிவிடும்.

அதற்கு அன்பு என்றால் என்ன? பரிவு என்றால் என்ன என்ற மனோநிலையே இல்லாது போய்விடுகிறது.

அதுமட்டுமா பெற்றோர் வேலை வேலை என்று போகும் போது பிஞ்சு மனங்கள் பிறர் மனைகளில் அந்நியர் அரவணைப்பில் வானம் பார்த்த பூமியாக வளர்கின்றன.

இவ்வாறு வளரும் ஒரு பிள்ளை, எதிர்காலத்தில் எவ்வாறான மன நிலையை உடைய ஒரு பிள்ளையாக வளரும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

குழந்தையின் பெற்றோர் தமது பெற்றோரைச் சுமைகள் என்று எண்ணுகிறார்களோ என்னவோ. அவர்களைக் கொண்டு போய் முதியோர் இல்லங்களில் முடக்கி பேசா மடந்தைகளாக்கி விடுகின்றனர்.

ஆனால் தமது பச்சைப் பாலகர்களை உறவே இல்லாத ஒருவரிடம் ஒப்படைத்து விட்டுச் செல்கின்றனர்.

தமது பெற்றோரைத் தம்வசம் வைத்துக் கொள்ளும்போது என்னதான் நெருக்கடிகள் வரும் என்று எண்ணுகிறார்களோ அது இறைவன் ஒருவனுக்கே வெளிச்சம்.

பேரர்களுடன் வளரும் குழந்தைகள் பெற்றோருக்குச் சமமான ஆதரவை நிச்சயம் பெறும் என்பதில் இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடமே இல்லை.

பெற்றோரையும் விலக்கி வைத்து அவர்களின் மனதையும் நோகடிக்கும் பிள்ளைகள், தமது பிள்ளைகளது நலனைக் கூட எண்ணிப் பார்ப்பது கிடையாது.

முதியோர் இல்லங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பெற்றோர், பிள்ளைகளது உணர்வுபூர்வமான அன்புக்கும் பாசத்துக்கும் ஏங்கிக் கண்ணீர் வடிக்கின்றனர்.

வயோதிபத்தில் தனிமைப் படுத்தப்படும் இவர்கள் உளரீதியாக மிகவும் சோர்வடைந்து விடுவார்கள்.

> "பேரர்களுடன் வளரும் குழந்தைகள் பெற்றோருக்குச் சமமான ஆதரவை நிச்சயம் பெறும் என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கும் இடமே இல்லை. பெற்றோரையும் விலக்கி வைத்து அவர்களின் மனதையும் நோகடிக்கும் பிள்ளைகள் தமது பிள்ளைகளது நலனைக் கூட எண்ணிப் பார்ப்பது கிடையாது.

தமது பேரக்குழந்தைகளுட்ன் கொஞ்சிக் குலாவும் உணர்வுகளைக் கட்டிவைத்துவிட்டு நடைப் பிணமாக இருப்பார்கள். இங்கு குழந்தைகள் இரவல் தாயின் கண்டிப்பின் சூழலில் தன்னிலை மறந்து வளருவர்.

இதன்போது அந்தக் குழந்தை வளரும் சூழலமைவு அதனை முழுமையாக அவர்களது குடும்பப் பிண்ணனியில் இருந்து மாற்றியமைத்துவிடும். இது சுயபுத்தியுடன் செயற்படத் தொடங்கிய பின்னரும் இந்தக் கட்டமைப்பில் இருந்து விடுபடமுடியாத பிள்ளையாக இருக்கும்.

ஏன் இந்த நிலைமை - அவலம். உங்கள் பிள்ளைகள் உங்கள் பெற்றோரின் அன்பையும் பரிவையும் பெற்று வளரவாவது வழிகாட்டுங்கள். நீங்கள் பெற்றோரை ஒதுக்கி வைப்பது உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் கற்பிக்கும் பாடமாகவே இருக்கும்.

ஏன் இந்த நிலைமை. எதற்காக இந்த வேதனைகள். உங்கள் உறவுகளை நீங்களே அறுத்து விடாதீர்கள். உறவுகளைப் பேண வேண்டியதும் அவர்களது இன்ப துன்பங்களில் பங்கெடுக்க வேண்டியதும் உங்கள் ஒவ்வொருவரதும் கரங்களிலேயே உள்ளது. ✱

# குடி கெடுக்கும்

நிஷாவதி



யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் இன்று குடிக்கு வசப்படாதவர்கள் இல்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை மாறி விட்டது.

முன்னொரு காலத்தில் வயது முதிர்ந்தவர்கள் மட்டுமே குடிப்பார்கள். அதுவும் கடின வேலைகள் செய்து களைப்பு ஏற்பட்டவர்கள், உடல் அலுப்பு நீங்க வேண்டும் என்பதற்காகக் குடிப்பார்கள்.

தவறணைகளில் என்றாலும் சரி, சாராயம் விற்பனை செய்யும் இடங்களில் என்றாலும் சரி ஒரு சில வயோதிபர்களையே அன்றைய காலங்களில் காண முடிந்தது.

ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது.குடிப்பது என்பது ஒரு நாகரிகமாக மாறிவிட்டது. குடி தெரியாதவன் குறிப்பிட்ட நண்பர் வட்டத்தில் மதிக்கப்படாத ஒருவனாகவும், கௌரவம் இல்லாத ஒருவனுமாகவே கருதப்படும் நிலைமை தான் தற்போது ஏற்பட்டுள்ளது.

தற்போது வீதிகள் எங்கும் 'பியர்' வெற்று ரின்களும் சாராயப் போத்தல்களும் எறிந்து பரவிக் கிடக்கின்றன.

ஒரு நண்பரின் பிறந்த நாள் என்றாலும் சரி, இறந்த நாள் என்றாலும் சரி மது தான் மகிழ்வையும் துக்கத்தையும் கொடுக்கும் ஒன்றாக எல்லோர் கைகளிலும் தவழும். தற்போது சாராயத்தின் விலைகளில் சற்று உயர்வு நிலை தோன்றியுள்ளதால் இளஞ் சமூகம் கள்ளுத் தவறணைகளில் தவம் கிடக்கின்றன என்றால் பாருங்களேன்.

அதுவும் ஊருக்குள் இருக்கும் தவறணைகளுக்குச் சென்றால் விடயம் வீடு வரைக்கும் சென்றுவிடும் என்று எண்ணும் திருட்டுக் குடிகாரர்கள் தமது நண்பர்களுடன் வேறு ஊர்களில் உள்ள தவறணை வாயில்களில் தவம் கிடக்கின்றனராம்.

அதுமட்டுமன்றி அண்மையில் கிடைத்த தரவுகளின் படி 'பியர்' வகைகளின் விற்பனை நிலை அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

யாழ். மாவட்டத்தில் மாதாந்தம் சுமார் 6லட்சத்து 91 ஆயிரம் லீற்றர் மதுபானம் விற்பனையாகிறது. ஏனைய இடங்களை விட, யாழ். மதுவரிப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே அதிகளவில் விற்பனையாகிறது என யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள அதிகாரி கூறியுள்ளார்.

2 லட்சத்து 82 ஆயிரம் லீற்றர் சாராயம் விற்பனையாகிறது. 4 லட்சத்து 9 ஆயிரம் லீற்றர் ஏனையவகை மதுபானம் விற்பனையாகிறது. இதனுள் பியர், விஸ்கி, பிரன்டி, ஜின், ப்ரம் எனப் பலவகைகள் உள்ளடங்குகின்றன.

யாழ். மதுவரி நிலையம் தவிர்ந்த ஏனைய மதுவரி நிலையங்களில் 30 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 35 ஆயிரம் லீற்றர் வரையான சாராயம் விற்பனையாகின்றது. 55 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 60 ஆயிரம் லீற்றர் வரையான ஏனைய மதுபான வகைகள் விற்பனையாகின்றன.

யாழ்.மதுவரி நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் ஜனவரியில் ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 904 லீற்றர் மதுபான வகைகையும், பெப்ரவரியில் 1லட்சத்து 45 ஆயிரத்து 450 லீற்றர் மதுபான வகைகளும் விற்பனையாகியுள்ளன.

சாராயம் ஜனவரியில் ஒரு லட்சத்து 77 ஆயிரம் லீற்றரும் பெப்ரவரியில் 82 ஆயிரத்து 775 லீற்றம், விற்பனையாகியுள்ளது. தவிர கள்ளு ஜனவரியில் 38 ஆயிரத்து 900 லீற்றரும், பெப்ரவரியில் 70 ஆயிரத்து 900 லீற்றரும் விற்பனையாகியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வரும் காலங்களில் மதுபான விற்பனை அதிகரிக்கின்றது. சுமார் 10 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 15 ஆயிரம் லீற்றர் வரையில் அதிகரித்து இத்தகைய காலங்களில் விற்பனையாகின்றன என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இது சரியானதா. எமது நாட்டு இளையோரது வளர்ச்சிப் பாதைக்கு இது திறவுகோலாக அமையுமா? நிச்சயம் இல்லை.

எமது உள்ளூர் வளங்களையும் உழைப்பையும் சுரண்டும் நோக்குடன் திட்டமிட்டுச் செயற்படும் கூட்டம் எந்த வழியையும் விட்டு வைக்கவில்லை. புதுப்புது விதமாக 'பியர்' ரின்களை இறக்குமதி செய்து எமது இளஞ்சந்ததியைச் சீரழிக்கும் ஒரு திட்டமிடப்பட்ட நாடகம் குடாநாட்டு மேடையில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

இந்த நாடகம் வெற்றியளிக்கும் வகையிலான போக்கில் எமது இளஞ் சமூகம் செயற்பட்டுக் கொண்டு வருகிறது. தெற்கிலிருந்து வரும் இளையோர் இங்கு தமது வருவாயை எவ்வாறு உயர்த்தலாம் என்று திட்டம் தீட்டுகின்றனர். அதற்கேற்றாற் போல் வருவாயும் பெறுகின்றனர். எமது இளைஞர்களோ வீதிகளில் பியர் டின்னும் சிகரெட்டுமாகக் காலத்தைப் போக்குகின்றனர்.

எமது பண்பாடு எமது கலாசாரம் என்று வளர்ந்த எமது சமூகத்தை இந்த இளஞ் சமுதாயம் நடு வீதியில் கொண்டு வந்து விடப் போகிறது என்பதுதான் வேதனைதரும் ஒரு விடயமாக உள்ளது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தில்லாலங்கடி

# வடக்கின் ஹிட்லர்



அதிகாரம் இருப்பவர்கள் எதையும் செய்யலாம் என்பது உலக வழமை.

சிலர் இருக்கின்ற அதிகாரங்களை உரிய வகையில் பயன்படுத்த மாட்டார்கள். சிலர் தங்களது அதிகார வரம்புகளை மீறி செயற்பட்டு எல்லாவற்றையும் வீணடிப்பார்கள்.

உலகில் அனைவராலும் அறியப்பட்ட சர்வதிகாரி ஹிட்லர். உலகத்திற்கே மன்னராக ஆசைப்பட்டு நாடுகளைக் கைப்பற்றினார். பேராசைப்பட்ட ஹிட்லர் இறுதியில் எதுவுமில்லாமல் போனமைதான் வரலாறு.

ஹிட்லரின் பாணியில் ஆனால் அதிலிருந்து சிறிது வேறுபட்டு வடமாகாண ஆளுநரும் தனது சர்வதிகார ஆட்சிக்கு முயற்சிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வலுக்கிறது.

இந்த உலகத்தை ஆளவேண்டும் என்பதற்காக மக்களை, குறிப்பாக யூதர்களை வகை தொகையின்றி கொன்றொழித்தார் ஹிட்லர்.

வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் ஆளுநர்தான் ஹிட்லர் என்கிறார்கள் இங்குள்ள அரச உயர் அதிகாரிகள். ஹிட்லர்கூட பதவிக்கு வந்த பின்னர்தான் சர்வாதிகாரியானார், மக்களை அழித்தொழித்தார். வடக்கு ஆளுநரோ இந்தப் பொதுப் பணிக்கு வருவதற்கு முன்னரே இராணுவத்தில் உயர் அதிகாரியாக இருந்தவர். இவர் பணியாற்றிய இராணுவம்தான் இன்று மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்காக உலகின் முன்னால் தலைகுனிந்து நிற்கிறது.

பொதுமக்களின் இருப்பிடங்கள் மீது திட்டமிட்ட ரீதியில் எறிகணை மற்றும் கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தி குறைந்தது 40,000 மக்களைக் கொன்றிருக்கிறார்கள் என்பதை நம்பமுடியும் என்று ஐ.நா. வல்லுனர்கள் குழு தனது அறிக்கையில் இவர் அங்கம் வகித்த இராணுவத்தின் மீது குற்றச்சாட்டுக்களை வைத்துள்ளது.

ஐநா. வல்லுநர்கள் குழு முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கு உரிய சம்பவங்கள் வன்னியில் நடைபெற்ற அதே காலப் பகுதியில், யாழ்ப்பாணத்திலும் பல மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றன. அவை யாழ்ப்பாணத்தில் நடந்த போது தற்போதைய ஆளுநரே இராணுவத்தின் யாழ். மாவட்டத் தளபதியாகக் கடமையாற்றினார்.

2006 ஆம் ஆண்டு ஏ-9 வீதி மூடப்பட்ட காலம் முதல் யாழ்ப்பாணம் ஒரு மனிதக் கொல்களமாக மாற்றப்பட்டது. அன்றாடம் கொலைகளும் சாவுகளும் மலிந்தன. அப்போது குடாநாடு முழுவதையும் இராணுவமே தனது இரும்புப் பிடிக்குள் வைத்திருந்தது. அதன் தளபதியாக இன்றைய ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியே கடைமையாற்றினார். இவரது பதவிக் காலம் முழுவதும் யாழ். குடாநாடு பெரும்பாலும் இரவு நேர ஊரடங்கு உத்தரவால் அடங்கிப் போயிருக்கும். ஆனால் அந்த நேரத்தில்தான் பல குற்றங்களும் படுகொலைகளும் அரங்கேறி வந்தன.

இராணுவத்தினர் முழத்துக்கு முழம் அடுக்கப்பட்டிருந்த நிலையிலும் அவர்களை மீறி அணுவும் அசைய முடியாத நிலை காணப்பட்ட போதும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளிமாவட்டத்துக்குச் செல்வதானால் கூட, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு வெளியேறுவதைப் போன்று இராணுவ அனுமதி பெற்றே வெளியேற வேண்டி இருந்தபோதும் கொலைகளும் கொள்ளைகளும் சந்திரசிறி ஆட்சியில் மலிந்து கிடந்தன.

மாணவர்கள் முதல்கொண்டு எல்லா வயதினரும் காணாமல் போய்கொண்டிருந்தனர். இல்லையேல் வீதியில் அடுக்கடுக்காக சுடப்பட்டுக் கொண்டிருந்தனர். இவற்றைச் செய்தவர்களும் செய்யச் சொன்னவர்களும் யாரென்பது யாழ்ப்பாணத்தில் இருந்த அனைவருக்கும் தெரிந்த போதும் அவையெவையும் நீதியின் முன்பாக சாட்சியங்களுடன் கொண்டு வரப்படவில்லை.

அப்படிக்கொண்டு வருவதற்காகப் பணியாற்றியிருக்க வேண்டிய அப்போதைய மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி எதுவும் செய்யாமல் கொலைகளையும் சாவுகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு வாளவிருந்தார். இல்லையேல் கொல்லப்பட்டவர்கள் பயரங்கரவாதிகள் என்றார்.

இப்படி அவர் அரசுக்கு ஆற்றிய சேவைக்காகத்தான் வடமாகாண ஆளுநர் என்ற பதவி அவருக்கு வழங்கப்பட்டது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணத்தில் சிங்கள இனத்தவரான ஜீ.ஏ.சந்திரசிறி அரசால் நியமிக்கப்பட்டார்.

அவர் இந்தப் பதவியை ஏற்றது முதல்ணைய பொதுப் பணி அதிகாரிகளை இராணுவச் சிப்பாய்களாகவே நினைத்து நடத்துகிறார் என்பது பெரும்பாலான அதிகாரிகளின் குற்றச்சாட்டு.

இதுவரை அரசுக்கும் அதிகாரத்துக்கும் பயந்து ஆங்காங்கே மூலை முடுகுகளில் முணு முணுத்து வந்த அதிகாரிகள், இப்போது வெளிப்படையாகவே முணுமுணுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

இந்த ஆளுநரால் தங்களால் தமது அரச பணிகள் எவற்றையும் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை என்பதே அவர்களின் முதன்மைக் குற்றச்சாட்டு.

''இனத்து வேசத்துடன் பணியாற்றும் ஒரு நபருடன் எப்படி வேலை செய்வது. இங்கு எந்தத் திட்டமாக இருந்தாலும் அது ஏன் தமிழர்களுக்கு மட்டும் என்பதுதான் அவரது முதல் கேள்வி. மக்களுக்கு நன்மை அளிக்கும் எந்தவொரு திட்டத்தையும் நாம் சரிவர நிறைவேற்ற முடியாத நிலைமையை அவர் ஏற்படுத்துகிறார்'' என்று குமுறினார் ஓர் உயர் அதிகாரி.

வடமாகாண சபைக்கு ஜனநாயக முறைப்படியான தேர்தல் நடத்தப்படாததன் காரணமாக, மாகாண சபையின் ஆட்சி முழுவதும் ஆளுநரின் கைகளில் அடைபட்டுக் கிடக்கின்றது (நடத்தப்பட்டாலும் அப்படித்தான் இருக்கும் என்பது வேறு கதை). வடமாகாண சபையில் பணியாற்றும் விருப்போடு இந்தப் பகுதியைச் சேர்ந்த சில உயர் அதிகாரிகள் கொழும்பு மற்றும் அமைச்சுக்களின் உயர் பதவிகளில் இருந்து மாற்றம் பெற்று வந்தார்கள். ஆனால், அனேகமாக அவர்கள் எல்லோருமே இங்கு பணியாற்ற முடியாது என்று கூறித் திரும்பி விட்டார்கள். அவர்கள் ஒரே குரலில் ''இந்த ஆளுநருடன் வேலை செய்ய முடியாது. நாட்டில் வேறு எங்கும் இந்த மாதிரி ஒரு ஆளுநர் கிடையாது. அரச அதிகாரிகளின் அதிகாரங்களுக்கும் ஆசைப்பட்டுக்கொண்டு இந்த மாகாணத்தைச் சீரழிக்கப் போகிறார்'' என்கிறார்கள். ஆளுநர் சொல்வதற்கெல்லாம் எதிர்ப்பு ஏதும் சொல்லாமல் ஒப்புக்கேனும் ''ஆமாம் சாமி'' போடுபவர்களால் மட்டுமே அவருடன் தாக்குப்பிடிக்க முடியும் என்கிறார்கள் வெளியேறிச் சென்ற அதிகாரிகள்.

மகாணசபைக்குதான் இந்த நிலை என்றால் தற்போது, ஆளுநர் வடமாகாணத்தைத் தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்குடன் மத்திய அரச அதிகாரிகளின் அதிகாரங்களுக்குள்ளும் கைவைக்க ஆரம்பித்திருக்கிறார்.

மத்திய பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அரச திணைக்களங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றார்.

தன்னை அழைக்காமல் மத்திய அரசின் அதிகாரிகள்கூடக் கூட்டங்கள் நடத்தக் கூடாதென்றும், முக்கியமாக மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட கல்வித்துறை சம்பந்தமான நிகழ்வுகளுக்கு யாரைப் பிரதம விருந்தினராக அழைக்க வேண்டும் என்பதைத் தான்தான் தீர்மானிப்பேன் என்றும் நீள்கின்றன ஆளுநரின் அடாவடித்தனங்கள்.

மத்திய அரச அதிகாரிகளின் அதிகாரங்களிலும் ஆளுநர் கைவைத்தமையைப் பொறுக்க முடியாமலும், இருப்பினும் அதனை வெளியில் சொன்னால் என்ன ஆகுமோ என்ற பயத்தில் பல அதிகாரிகள் வாய் மூடியிருக்கின்றனர். இருப்பினும் அவர்கள் தங்களுக்கு நெருங்கியவர்களுடன் ஆளுநரின் வரம்பு மீறிய செயற்பாடுகள் தொடர்பில் கடிந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

வடமாகாணத்துக்கு தற்போது அடிக்கடி வெளிநாட்டு இராஜதந்திரிகள் படையெடுக்கின்றனர். இவர்கள் வடமாகாண ஆளுநரை சந்திப்பதை தவிர்த்து வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று அங்குள்ள அரச அதிகாரிகள் மூலமாகத் தகவல்களைத் திரட்டவே அவர்கள் விரும்புகின்றனர்.

ஆனால், வடக்கைப் பற்றித் தன்னைத் தவிர வேறு எவரும் திறம்பட வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்குச் சொல்லமாட்டார்கள் (?!) என்று கூறும் ஆளுநர், அத்தகைய சந்திப்புக்களுக்குத் தன்னைக் கட்டாயம் அழைக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் அரசுக்கு தெரியாமல் ஒன்றும் வடக்குக்கு வரவில்லை. வெளிவிவகார அமைச்சின் அனுமதியுடனேயே அவர்களின் வழிகாட்டலிலேயே வருகின்றனர். அவர்கள் ஆளுநரைச் சந்திப்பதற்கு விரும்பியிருந்தால் வெளிவிவகார அமைச்சே அதற்கு ஏற்பாடு செய்திருக்கும். அப்படி இல்லாத நிலையில் இவர் ஏன் தேவையற்ற வகையில் மூக்கை நுழைக்கிறார் என்பதே இப்போதுள்ள கேள்வி.

பெரும்பாலான வெளிநாட்டு இராஜதந்திரிகள், வடமாகாண ஆளுநரின் அதிகாரம் என்ன என்பது பற்றியும் பொதுப் பணித் துறையில் அவரது தேவையற்ற தலையீடு எவ்வகையில் அமைகிறது என்பதையும் இங்குள்ள அதிகாரிகளைச் சந்திக்கும்போது கேட்கின்றனர்.

அவர்கள் அவ்வாறு கேட்பதற்குக் காரணம், வடமாகாண ஆளுநரின் அதிகார வரம்பு மீறிய செயற்பாடுகளே.

தன்னைப் பற்றிய தகவல்கள் இப்படி இராஜதந்திரிகளுக்குக் கிடைப்பதைத் தடுப்பதே உண்மையில் ஆளுநரின் உள்நோக்கம் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இதனை தேசிய வேலைத் திட்டங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் தனது மேற்பார்வையின் கீழேதான் நடைபெற வேண்டும் என்று ஆளுநர் நடைமுறைப்படுத்தி வைத்திருக்கின்றார். இதனால் வேலைகள் தேவையற்றுத் தாமதமாவதாகவும் அதிகாரிகள் கூறகிறார்கள். ''இது ஏன் என்பது மக்களுக்கே புரியும்....'' என்று கூறி ஒரு நமுட்டுச் சிரிப்பும் சிரிக்கிறார்கள் அதிகாரிகள். ✸

# இதயத்தைத் திறந்த கடிதங்கள்

■ கறுப்பி

''போஸ்ட்' என்ற குரலைக் கேட்டவுடன் வீட்டுக்குள் இருந்து தபாலை வாங்க ஓடிவரும் போது யார் எழுதியிருப்பார்கள்? எங்கிருந்து வந்திருக்கும்? என ஆயிரம் ஆயிரம் துடிப்புகளோடும் ஆவலோடும் பதற்றம், கனவு, சந்தோஷம் என எல்லாமும் ஆட்கொண்ட ஒரு காலம் இருந்தது.

ஆனால் இன்று 'போஸ்ட்' என்றாலே எமக்கு புரிந்துவிடும் கரண்ட்பில்லோ, ரெலிபோன் பில்லோ, வங்கிக் கணக்கோ இதில் ஏதோ ஒன்றுதான் வந்திருக்கும் என்பது சாதாரணமாகவே தபாலை வாங்கிவிட்டு, பிரித்து என்ன ஒரு மாதத்துக்கு இவ்வளவா? என ஏங்குவோம்.

முன்பெல்லாம் வேலை தேடியோ, கல்விக்காக விடுதியில் தங்கி படிப்பதற்கோ வெளியூர்களுக்குச் சென்றிருந்தால் தமது பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ கடிதம் எழுதினோம். ஒரு கடிதம் எழுதிவிட்டு அடுத்த பதிலுக்காகக் காத்திருப்பதில் கூட ஒரு சுகம்தான். என்ன பதில்வரும் என ஒரு எதிர்பார்ப்போடு காத்திருப்போம்.

இன்றெல்லாம் செல்போனிலே ''ஹலோ....'' என்ற வார்த்தையுடன் தொடங்கி ''பாய்'' என்பதுடன் முடித்துவிடுகின்றனர்.

கடிதம் எழுதுவதற்[illegible]கான தாள்கள் வாங்குவதிலும் ஒரு இன்பம்தான்.

கடிதங்கள் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உறவுகளுக்கும் இடையே உள்ள உறவுகளை இரத்தமும் சதையுமாகப் பின்னிப் பிணைத்துவிடும். நேரில் பார்க்கும் போது பேச முடியாத விடயங்களைப் பக்கம் பக்கமாக எழுதி தள்ளிவிடுவார்கள். இதனால் உறவு முறைகளும் நீள்வ[illegible] [illegible] ருக்கு கடிதம் எழுதும் முறை அறியாமலும் போய்விடக்கூடும். பல ஆயிரம் ஆயிரம் தொலைவில் தமது உறவுகள் இருந்தாலும், நேரில் பார்ப்பதுபோல கடிதத்திலுள்ள சொற்கள் பேசும். இனி அது எங்கே வரப்போகிறது.




தொலைபேசி உரையாடலின்போது நாம் ஒன்று பேச அவர்கள் ஒன்று பேச, பேசவேண்டிய விடயங்களைத் தெளிவாகப் பேச முடியாது. பின்பு அதைபேச, இதைப் பேச மறந்துவிட்டோம் என குழப்பம்தான் ஏற்படும்.

இன்றெல்லாம் தேவை இருக்குதோ இல்லையோ பொருளாதார நெருக்கடியிலும் எல்லோரது வீடுகளிலும், கைகளிலும் கணினியும் தொலைபேசியும் ஆக்கிரமித்து விட்டன.

தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் பல தொடர்பு சாதனங்கள் வந்தாலும் கடிதத்தில் நினைத்ததை முழுமையாக எழுதி முடிப்பதுதான் சுவாரஸ்யம் அதுதான் உண்மையான பரிந்துணர்வை ஏற்படுத்தும்.

கடிதம் எழுதுவதில் யாருக்கும் இன்று நாட்டம் இல்லை. ஆங்காங்கே சில வாழ்த்து மடல்கள் மட்டும் புதுவருடத்துக்கும், தீபாவளி போன்ற கொண்டாட்டங்களுக்கும் வந்து சேரும். அதுவும் தற்போது அருகிப் போய்விட்டது.

எமது வாழ்வில் அன்பான உறவுகள், நட்புகள் ஆகியன கடிதங்களில் தொடர்வது போன்ற சுவாரஸ்யங்கள் தொழில்நுட்ப வேகத்தில் இல்லை. ✸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் துளிர்த்த நட்பு

யமுனா



தமிழக முதல்வர் ஜெயலலிதா-சசிகலா உறவில் மீண்டும் வசந்தம் வீசத் தொடங்கிவிட்டது. இது தமிழக அரசியல் கட்சிகளிடையே ஒரு பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த 3 மாதங்களாக பிளவுபட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் அவரது உயிர்த் தோழி சசிகலாவுக்கும் இடையிலான உறவு மீண்டும் துளிர்த்துள்ளது.

1984 ஆம் ஆண்டில் ஜெயலலிதாவுக்கு அறிமுகமானவர் தான் சசிகலா. அன்று தொடங்கிய நட்பு வலுப்பெற்று இருவரும் நெருங்கிய தோழிகளாக மாறிவிட்டனர். நெருங்கிய தோழிகள் என்றால் சொல்லவா வேண்டும். 1988 ஆம் ஆண்டு தொடக்கம் சசிகலா ஜெயலலிதாவுடன் சென்னையிலுள்ள ஜெயலலிதாவின் போயஸ் தோட்டத்திலேயே வசித்து வந்தார். அன்று தொடக்கம் ஜெயலலிதாவின் வலதுகரமாகவே தோழி சசிகலா செயற்பட்டவர். கடந்த வருடம் இடம் பெற்ற சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவின் தலைமையிலான அ.தி.மு.க. அமோக பெரும்பான்மையுடன் வெற்றிபெற்ற தன் பேரில் ஜெயலலிதா தமிழக முதல்வரானார். அன்றிலிருந்து கட்சியின் சகல நிர்வாகச் செயற்பாடுகளையும் சசிகலாவே கையாண்டு வந்தார்.

இவ்வாறு நகமும் சதையும் போல அரசியல் நடத்தி வந்த தோழியரிடையே புயல் வீசத் தொடங்கியது. சசியின் உறவினர்கள் மீதான பல்வேறு முறைப்பாடுகள் ஜெயாவுக்கு வந்த வண்ணம் இருந்தன. இதனையடுத்து தோழியையும் அவரது உறவினர்களையும் கூண்டோடு வெளியேற்றும் அதிரடி நடவடிக்கையில் குதித்தார் ஜெயா. 19.12.2011 சசிகலா, ஜெயலலிதாவால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். போயஸ் தோட்டத்தில் இருந்தும் வெளியேற்றப்பட்டார். சசிகலா மூடை முடிச்சுகளுடன் போயஸ் தோட்டத்திலிருந்து வெளியேறினர்.

இவர்களது பிரிவு நிரந்தரமானது என்று கருதி தமிழகத்தில் பல தரப்பினர் பட்டாசு கொளுத்தி, இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சி கொண்டாடினர். ஆனால், தமிழக மக்கள் மனதில் இருவரின் பிரிவு நிரந்தரமானதுதானா என்ற சந்தேகம் எழத்தான் செய்தது. இவர்களது சந்தேகம் உறுதியாகும் விதத்தில் தற்போது மீண்டும் இருவரும் ஒன்றிணையும் நிலை ஏற்பட்டுள்ளது.

போயஸ் தோட்டத்திலிருந்து வெளியேறிய பின்னர் சென்னையில் அவரது உறவினரொருவர் வீட்டிலே தங்கியிருந்த சசிகலா கடந்த மாதம் 27 ஆம் திகதி, தான் எந்தவிதத்திலும் குற்றமிழைக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தனது தோழி ஜெயலலிதா கடந்த வருடம் டிசெம்பர் 19 ஆம் திகதி தம்மை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்த பின்னர்தான், அதற்கு என்ன காரணம், அதன் பின்னணி என்ன என்பது பற்றியெல்லாம் எனக்குத் தெரிய வந்தது. என்னுடைய உறவினர்கள், நண்பர்கள் சிலர் எனது பெயரைத் தவறாகப் பயன்படுத்தி கழகத்தின் நற் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் விதத்தில் செயற்பட்டனர். தோழி ஜெயலலிதாவுக்கு எதிராகச் சில சதித் திட்டங்களையும் தீட்டினர். தைப் பின்னர் தான் நான்அறிந்து கொண்டேன் என்று அறிக்கையில் சசிகலா குறிப்பிட்டிருந்தார்.

"இதனால் மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். இவை எல்லாம் எனக்குத் தெரியாமல் நடந்தவை. எனது உறவினர், நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டு தோழிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் செய்தவை மன்னிக்க முடியாத துரோகம். எனவே இந்தளவுக்கு துரோகம் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எனக்கு வேண்டாதவர்கள்தான், அவர்களின் உறவையும் துண்டித்து விட்டேன்" என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

தோழியின் அறிக்கையை அடுத்து முதல்வரும் அதனை ஏற்றுக் கொண்டு அவர் மீதான நடவடிக்கைகளை ரத்து செய்வதாகச் கூறி மன்னிப்பு வழங்கியுள்ளார்.

எனினும் தோழியின் உறவினர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் அவர் எந்த விதமான மாற்றமும் செய்யவில்லை. தோழியின் பாவமன்னிப்பைத் தொடர்ந்து சுமார் 3மாதங்களின் பின்னர் தனக்கு முன்னர் அடைக்கலம் கொடுத்த போயஸ் தோட்டத்துக்கு சசிகலா சென்று தோழி ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசியுள்ளார். அப்போது முன்னர் இடம் பெற்ற வேண்டத்தகாத சம்பவங்கள் குறித்தும் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளாராம் சசிகலா. இனியென்ன? குறுகிய காலம் முறிவடைந்திருந்த ஜெயலலிதா-சசிகலா உறவில் புதிய சகாப்தம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

போயஸ் தோட்டமும் மீண்டும் களைகட்டுகிறது. முறிவடைந்திருந்த நட்பு மீண்டும் கைகூடியதால் இனி சசிகலா காட்டில் மழைதான்.

# பன்னிரு ராசிகளுக்குமான குருபெயர்ச்சிப் பலன்

**ஆங்கிரஸ மகரிஷியின் ஏக புத்திரரான குரு பகவான் ஒருவருக்குத்தான் நவக்கிரக நாயகர்களில் சரராசி, ஸ்திரராசி, உபயராசிகளான மூன்றையும் பார்க்கும் சிறப்பு இருக்கிறது. இவரின் பார்வை மற்ற கிரகங்களால் ஏற்படும் குறைகள், தோஷங்களை நீக்கிவிடும். தனகாரகன், புத்திரகாரகனான வியாழ பகவான் வருடத்தில் ஒரு முறை பன்னிரு ராசிகளுக்கும் சஞ்சாரத்தில் இடம் மாறுகிறார். இம் முறை புதிதாகப் பிறக்கவிருக்கும் நந்தன வருஷத்தில் வைகாசிமாதம் 04 ம் நாள், வியாழக்கிழமை [2012-05-17] வாக்கிய பஞ்சாங்கப்படி மாலை 06 மணி 50 நிமிடத்தில் மேடத்திலிருந்து இடபத்திற்கு சஞ்சாரம் செய்கிறார். அதன்படி பன்னிரு இராசிகளுக்கும் வியாழபகவான் தரப்போகும் பலனை ஆராய்வோம்.**

## மேடம்

பிரம்மஸ்ரீ - சண்முக - தியானேஸ்வரசர்மா, ஜோதிடர், நுணாவில் மத்தி, சாவகச்சேரி.



அச்சுவினி, பரணி, கார்த்திகை-1

எந்தவிதமான பொறுப்பான காரியங்களையும் சிரத்தையுடனும், பொறுமையுடனும், கையாளக் கூடிய மேட ராசி அன்பர்களே!

தனகாரகன் குருபகவான் எதிர்வரும் 2012-05-17 நாள்மேல் ஓர் ஆண்டு காலத்திற்கு 02ஆம் வீடான தனஸ்தானத்தில் சஞ்சரிப்பது சிறப்பே. அனைத்துத் துறைகளிலுமுள்ளவர்களுக்கும் தொழில் வியாபாரம், தனவரவு நன்றாக இருக்கும். இருப்பினும் பழைய கடன்களை அடைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கவே செய்யும்.

சனிபகவான் வருடாதியாக எதிர்வரும் ஆவணி 27 வரை (2012-09-12) 06 இல் இருப்பது குடும்பத்தவர்கள் முழுமையான சிறப்புக்களை எதிர்நோக்குவோரும் சிறப்படைவர். சுப செலவுகளும் அசுப செலவுகளும் மாறி மாறி வரும். இதனால், தனவரவுகள் நன்றாக இருந்தாலும், செலவுகளும் இருக்கும். ஒரு சிலருக்கு உயர்கல்வி நிறுவனம் மூலம் நல்ல சிறப்புக்கள் தேடி வரும். இந்தக்கால கட்டத்தில் கொடுத்த வாக்கைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கும். உங்கள் இராசிக்கு 06ஆம் இடமான ரோகஸ்தானம், சத்துரு ஸ்தானம் என்ற இடத்தை குருபகவான் 05ஆம் பார்வையாகப் பார்ப்பதால் உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மறைமுக எதிரிகளின் தொல்லையும் குறையும். பகைவரும் நண்பர்களாவார்கள். உங்களை விட்டு விலகிச் சென்ற உறவுகளும் மீண்டும் தேடி வருவார்கள். உங்கள் ராசிக்கு 08 ஆம் இடமான ஆயுள் ஸ்தானத்தை குரு பகவான் 07 ஆம் பார்வையாகப் பார்ப்பதால், மருத்துவச் செலவுகள் குறையும். உங்கள் ராசிக்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தை குருபகவான் 09ஆம் பார்வையாகப் பார்ப்பதால் தொழில்கள், வியாபார மூலம் நல்ல வருமானம் கிட்டும்.

**பெண்களுக்கு** - சனி பகவான் 06இல் இருக்கும் காலம் திருமணம் அமையும். கணவன், மனைவிக்கிடையில் நல்லுறவு இருக்கும். துணைவர் உங்கள் சொல்லுக்கு கட்டுப்படுவார். வேலையில்லா தவர்களுக்கு வேலை கிட்டும். ஒரு சிலருக்கு பணிபுரியும் தொழில் ஸ்தானத்தில் சம்பள உயர்வு பதவி உயர்வு அமையும். பணிபுரியும் பெண்களுக்கு அரச உதவி மூலம் புதிய வீடு கட்டும் யோகமும் அமையும். ஒரு சிலர் ஏற்கனவே கட்ட, பாதியில் நின்று போன வீட்டையும் கட்டி முடிப்பார்கள்.

**உத்தியோகத்தவர்களுக்கு**- தடைப்பட்ட சம்பள உயர்வு, அல்லது ஏனைய கொடுப்பனவுகள் கிடைக்கக்கூடியதாக இருக்கும். பதவி உயர்வு அமையும், விரும்பிய இடத்திற்கு இடமாற்றமும் கிட்டும். எதிர்பார்த்த நற்பலன்களும் அமையும்.

**வியாபாரிகளுக்கு** - வியாபாரம் நன்றாக இருக்கும் ஒரு சிலர் புதிய வியாபாரம் ஆரம்பிப்பார்கள். ஒரு சிலரது வருமான வரி தொடர்பான பிரச்சனைகளும் அகலும்.

**மாணவர்களுக்கு** - கிரகங்கள் சாதகமான இடத்தில் இருப்பதனால், நன்கு முயற்சி செய்து படித்தால் முன்னேற்றத்தையும், எதிர்பார்த்த இலக்கையும் அடையலாம்.

அதேவேளை மேட ராசி அன்பர்களுக்கு

எதிர்வரும் ஆவணி 27 இன் மேல் (2012-09-12) சனிபகவான் 07 இல் வருவதோ, அல்லது கார்த்திகை 18 இன் மேல் (2012 -12-03) ராகு கேதுக்கள் சஞ்சாரத்தில் கேந்திரங்களுக்கு வருவதோ குடும்பத்தவர்களுக்கு நன்மை, தீமை கலந்த பலன்களையே காட்டும். ஆவணி 27இன் மேல் திருமணத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு தடங்கல், இழுபறி காட்ட இடமுண்டு. எனவே அக்காலம் மேல் சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கும், கார்த்திகை 18இன் மேல் செவ்வாய்க்கிழமைகளில் ராகு, கேது, தூர்க்கைக்கும் வழிபாடு செய்து வருவது சிறப்பைத் தரும்.

## இடபம்



கார்த்திகை 2-24, ரோகினி, மிருகசீரிடம் -1-2

தற்பெருமையை புகழ்ச்சியை விரும்பாதவர்களாகவும், எவ் விடயங்களிலும் சிந்தித்துச் செயற்படக்கூடிய இடப ராசி அன்பர்களே ! வியாழ பகவான் 2012-05-17 நாள் மேல் ஓர் ஆண்டு காலத்திற்கு உங்கள் ஜென்ம ராசியில் சஞ்சாரம் செய்யப் போகிறார். சனி பகவான் வருடாதி முதலாக ஆவணி 27 வரை (2012-09-12) 05இல் இருந்து 03ஆம் பார்வையாக 07ஆம் பாவத்தைப் பார்ப்பதும் எதிர்வரும் கார்த்திகை 18 வரை (2012-12-03) ராகு, கேதுக்கள் சஞ்சாரத்தில் ஜென்ம, களஸ்திர ஸ்தானங்களில் இருப்பதால், காரியத்தடை, துணைவருடன் சச்சரவுகளையும் காட்ட இடமுண்டு. எனவே வருடாதி முதலாக இடபராசி அன்பர்கள் சனிபகவானுக்கும், தற்காலமும் வியாழக்கிழமைகளில் குரு, தெட்ஷணா மூர்த்திக்கும், செவ்வாய்க்கிழமைகளில் ராகு,கேது, துர்க்கைக்கும் வழிபாடுகளைச் செய்து வருவதன் மூலம் சிறப்புக்களை அடையலாம்.

எதிர்வரும் குரு பெயர்ச்சியின் மேல் திருமணமாகாதவர்களுக்கு தடங்கல் இழுபறி காட்டுமெனி னும் பாதகமில்லை. நண்பர்கள், மூத்த சகோதரர்களுடன் முரண்பாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியக் குறைபாடுகளும் காட்ட இடமுண்டு.

அதேவேளை ஜென்மத்தில் இருக்கும் குரு பகவான் 05 ஆம் இடமான பூர்வ புண்ணியஸ் தானம், புத்திர பாக்கிய ஸ்தானம் என்ற இடத்தை 05ஆம் பார்வையால் பார்ப்பதால் உங்கள் மகன் அல்லது மகளுக்கு திருமணம் போன்ற நன்மையான விஷயங்கள் நடைபெறலாம். அதேபோன்று விஷயங்கள் நடைபெறலாம்.

அதேபோன்று 07ஆம் பார்வையாக 07ஆம் பாவத்தைப் பார்ப்பதால் உங்கள் துணையின் உடல் ஆரோக்கியம் சிறந்து விளங்கும். மருத்துவச் செலவுகள் குறையும். 09ஆம் பாவத்தையும் 09ஆம் பார்வையாகப் பார்ப்பதால் தகப்பனாருக்கு உடல் ஆரோக்கியம்,செய்தொழில் வருமானம் அமையும்.

**பெண்களுக்கு** - தெசாபுத்தி சிறப்பாக இருந்தால் திருமணமாகாதவர்களுக்கு திருமணம் அமையும். மருத்துவச் செலவுகள் குறையும். உற்றார், உறவினர் அடிக்கடி வருகையால், ஒரு சில குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்ற வாய்ப்புண்டு, தொழிலில் ஆர்வக்குறைவு இருக்கும்.

**உத்தியோகத்தர்களுக்கு** - ஒரு சிலர் அரசாங்கம் மூலம் கடன் வாங்கி வீடு கட்ட ஆரம்பிப்பார்கள். மேல் அதிகாரிகளின் கெடுபிடி இருக்கும். ஒரு சிலருக்கு இடமாற்றம் கிட்டும். வரவுக்கு மேல் குடும்பத்தில் செலவுகள் ஏற்பட்டு பணம் விரயம் ஏற்படும்.

**வியாபாரிகளுக்கு** - வியாபாரம் நன்றாக அமையும். அதிக முதலீடு செய்யக் கூடியதாக இருப்பினும், கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் செய்பவர்களுக்குத் தாக்கமில்லை.

**மாணவர்களுக்கு** - கல்வியில் முன்னேற்றம் உண்டு. உயர்கல்வி, விரும்பிய கல்வி அமையும். இங்கு கல்வியைப் பூர்த்தி செய்தவர்கள் வெளிநாடு சென்று மேற் கல்வியையும் தொடரலாம். [illegible] அன்பர்கள்! வியாழக்கிழமைகளில் குரு, தெட்ஷணா மூர்த்திக்கும், இவ்வாண்டு பிற் [illegible] செவ்வாய்க்கிழமைகளில் ராகு,கேது தூர்க்கைக்கும் வழிபாடு செய்து வருவது சிறப்பு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதப் போர் வராமல் காக்க வழி கூறும் சகாதேவன்




மட்டுவில் நல்லதம்பி

பாண்டவர்களும் கௌரவர்களும் ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள். பாண்டவர்கள் ஐவரும் நல்லவர்கள். அறிவும் அடக்கமும் ஆண்மையும் கடவுள் பக்தியும் கொண்டவர்கள். கௌரவர் என்கின்ற துரியோதனன் முதலாம் நூற்றுவர்கள் தீயவர்கள். அத்துடன் பாண்டவர் மீது அழுக்காறு உடையவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

பாண்டுவின் அண்ணனான திருதராட்டினன் கண்பார்வையற்ற கபோதி. ஆயினும் நீதி தெரிந்தவன். ஆனால் , பாண்டு இறந்த பின்னர் தனது மூத்த புதல்வனான துரியோதனன் சொற்படி நடக்கத் தொடங்கினான் பெயரளவில் அரசனாக இருந்தான். பாதி இராச்சியத்துக்கு உரிமையுடையவரான பஞ்ச பாண்டவரை எள்ளளவும் மதிப்பதில்லை. துரியோதனன் முதலியோர் அவர்களுக்குச் செய்யும் துன்பங்களைக் கண்டும் காணாதவன் போல் நடந்துகொள்வான். பெரியோர்களான துரோணர், பீஷ்மர், விதுரர் முதலியோர் பாண்டவர் மீது பெரும் மதிப்பு வைத்திருந்தனர். ஆயினும் அவர்கள் கௌரவர்களின் ஆளுமைக்கு உட்பட்டிருந்தமையால் மௌனமாக இருந்து கொள்வர். சிலவேளை அவர்கள் சொல்லும் புத்திமதிகூட துரியோதனனுக்கு வேம்பாகக் கைக்கும்.

எனினும் இருபாலாருக்கும் பொதுவானவனனாக விளங்கிய கண்ணன் பாண்டவருடன் சிறந்த முறையில் நண்பனாய் பழகி வருகிறான்.

பாண்டவர்கள் மதிப்போடு வாழ்வதைப் பொறுக்காத துரியோதனன் அரக்கு மாளிகை ஒன்றை நிர்மாணித்து அதில் குந்திதேவியோடு ஐவரையும் குடியேற்றினான். உலகத்துக்கு தான் நல்லவன் எனக் காட்டி அவர்களை கூண்டோடு அழிக்க எண்ணியிருக்க, வீமன் தானே மாளிகைக்குத் தீ மூட்டி விட்டு தாயோடும் சகோதரரோடும் வெளியேறி விடுகிறான்.

பாண்டவர் கதை முடிந்தது என்று இருந்த துரியோதனனுக்குச் சில காலம் செல்ல பாண்டவர்கள், பாஞ்சாலி திருமணமும் முடித்து இந்திர பிரஷ்தம் என்ற நகரில் வாழ்வது செவிவழிச் செய்தியாகிறது.

நல்லெண்ணம் கொண்ட தருமன், தங்கள் நகரத் திறப்பு விழாவுக்கு வரும்படி துரியோதனன் முதலியோருக்கு அழைப்பிதழ் அனுப்புகிறார். திறப்பு விழாவில் கலந்துகொண்ட துரியோதனனுக்கு அழுக்காறு அதிகரிக்கிறது. பாண்டவர்களை விருந்துக்கு வரும்படி தனது ஊருக்கு அழைக்கிறான் துரியன்.

அங்கு ஏற்கனவே திட்டமிட்டபடி தருமனைச் சூதாட வரும்படி வற்புறுத்தி கேட்டுத் தன் பக்கத்துக்குச் சகுனி மாமாவை நிறுத்துகிறான்.

சூதாட்டத்தில் நாடுநகர் இழந்து சகோதரர்களை இழந்து தன்னையும் இழந்து அடிமைகளாகி விட்ட பாண்டவரை பதினான்கு ஆண்டுகள் வனவசம் அனுப்புகிறான் துரியோதனன்.

வனவாசம் முடித்து வந்த பாண்டவர் தம் பங்கை திரும்பப் பெறும் பொருட்டு ஸ்ரீகிருஸ்ணனைத் தூது அனுப்புகின்றனர்.

தூது செல்லும் முன் கிருஷ்ணன் பாண்டவரைத் தனித் தனியாகச் சந்தித்து அவர் அவர் மனநிலையை அறிகிறார்.

தருமன், என்றும் போலவே "அவர்கள் எமது உடன் பிறப்புக்கள்தானே கண்ணுக்குள் குத்தி விட்டது என்று நம் கையை வெட்டுவதோ?

*இன்னா செயினும் விடுதற் காரியாரைத்*
*துன்னர்த் துறத்தல்*
*தகுவதோ?-துன்னஞ்சீர்*
*விண்குத்து நீள்வரை வெற்ப !*
*களைபவோ*
*கண்குத்திற் றென்றுதங் கை*
எனவும்
*இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்*
*நாண நன்னயம் செய்து விடல் [குறள்]*

எனவும் கூறி பாதி இராச்சியம் தர மறுத்தால் ஐவருக்கும் ஐந்து ஊர் கேட்கலாம், அதுவும் மறுத்தால் ஐந்து வீடு கேட்கலாம் என்று சமாதான முறையில் சொல்லுகிறான்.

கண்ணனுக்கு இது தெரியுந்தானே! அடுத்து அர்ச்சுனனைச் சந்திக்கிறார். "எங்களுக்கு உரிய பங்கு தர மறுத்தால் போர் புரிவதன்றி மறுபேச்சு ஏது? எனது அம்பும் வில்லும் கர்ணனைக் குறிவைத்துக் காத்துக் கிடக்கிறது! அண்ணனை சூதாட வைத்து இராச்சியத்தை பறித்ததும் பாஞ்சாலியை மானபங்கப்படுத்தியதும் நம் கண்முன் நிற்கிறது. கர்ணனும் வேடிக்கை பார்த்தவன். சமாதானம் என்ற பேச்சு வேண்டாம் போர்தான் முடிவு" என முழங்குகிறான் அர்ச்சுனன்.

"என்னைப் பல வழிகளில் கொல்லப் பார்த்தவர்களைச் சும்மா விடுவதா? பாஞ்சாலியைக் கூந்தலிற் பிடித்து இழுத்து வந்தவன் துச்சாதனன். அவளை மடியில் வந்து அமரும் படி அழைத்தவன் துரியோதனன். இருவரையும் எனது கதாயுதத்தால் அடித்துக் கொன்று இரத்தம் எடுத்துப் பாஞ்சாலி கூந்தலிற் பூ வைப்பது என்று அன்று சொன்ன சபதம் என்னவாவது? இரக்கம் வேண்டாம். போர்தான் வேண்டும்" என்கிறான் வீமன்.

"பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய அனுப்பினார்கள் அது முடித்து வந்த போது ஓர் ஆண்டு குறைகிறது. அதனால் மேலும் பதினான்கு ஆண்டு போய்வாருங்கள் என்கிறார்களே கௌரவர்கள் கணக்கு தெரியாதவர்கள்! இது எந்த நீதி? அர்ச்சுனனுக்கும் வீமனுக்கும் வேலை வேண்டும் போர்தான் முடிவு" என்கிறான் நகுலன்.

கண்ணன் சகாதேவனிடம் வருகிறார் இவன் ஒரு சாத்திரியார். வரவிருக்கும் போர் தொடங்க நல்ல நாள் பார்க்கவும் இவனிடம்தான் இரு பகுதியாரும் போவார்கள். இப்படியானவன், "கண்ணனே! போர்வேண்டும் என எண்ணுகின்றவன் நீ, ஆனாலும் இப்போரை வரவிடாமல் செய்வதற்கு ஓர் உபாயம் கூறுகின்றேன் கேட்பாயாக. குந்தி மகன் கர்ணனுக்கு பாராளும் உரிமையைக் கொடுத்து, பார்த்தனைக் கொன்று பாஞ்சாலியின்

(16 ஆம் பக்கம் பார்க்க)




செல்வன் ஆதவன் ஏரம்பமூர்த்தி

# கலைஞனின் கண்கள்

வர்ண பகவான் வானத்தில் பெரிதாக உறுமிக் கொண்டான். என் கனவு சாம்ராஜ்ஜம் கலைந்தது. கொட்டாவி விட்டபடி எழுந்து, அடி மேல் அடி வைத்து ஜன்னலுக்கு அருகில் சென்று திரைச்சீலையை விலக்கி வெளியே பார்க்கிறேன். பரவி இருந்த பனிப்புகார் வானத்தை மூடிய கரு முகில், மழை, இருள் இவை அன்றி வேறு எவையும் தெரியவில்லை. "ஒரு கிழமையாய் ஒரே கதைதான்" என்று முணுமுணுத்துக் கொள்கிறேன்.

என் அறையை நோக்கி பார்வையை திருப்புகிறேன். திரும்ப முதல் வெளியே நிழல் போல ஒரு உருவம் தெரிகின்றது. உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒரு கணம் மீண்டும் பார்க்கிறேன்.

அது மனித உருவம் தானா? அந்த குன்றின் மேல் இருப்பது யார்? இது என்ன தூக்க மயக்கமா? உண்மையில் யாரோ இருக்கிறார்களா? கண்களை கசக்கிக் கொண்டு மீண்டும் பார்க்கிறேன். "எட அது பாமன்" அந்த "விசர்" பாமன்.

ஆம், அப்படித்தான் அவனை எல்லோரும் அழைத்தார்கள். அவன் எங்கிருந்து வந்தான்? அவனைப் பெற்றவர்கள் யாவர்? எவையுமே எவருக்குமே தெரியாது. பாமன் எவருடனும் அதிகம் பேசமாட்டான். அவன் அந்தக் குன்றின் மேல் அமர்ந்திருப்பதை நான் ஏற்கனவே பல தடவைகள் பார்த்திருக்கிறேன்.

அந்தக் குன்றில் மேல் குந்தியிருப்பதைவிட வேறு எதுவுமே அவனுக்குத் தெரியாது என எண்ணி எல்லோரும் அவனை அப்படி அழைப்பார்கள்.

அந்தக் குன்றில் அவன் இருந்து நடுங்குவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. சில நிமிடங்களில் எனது 'ஜக்கெட்டை' அணிந்து கொண்டு படியில் வேகமாக இறங்கினேன். கதவை திறந்தவுடன் கடும் குளிர் முகத்தில் அடித்தது. என்னால் முடிந்தளவு விரைவாக அவனை நோக்கி ஓடினேன். குளிர் காற்றும் மழை நீரும் என் முகத்தில் வாரியடித்தன.

இவன் எப்படித்தான் கையில்லாத "சேட்டுடனும் கட்டைக் காற்சட்டையுடனும் இந்தக் குளிரை தாங்குகின்றானோ?"

நடுங்கியபடியே அந்த குன்றை அடைந்து விட்டேன். ஓடி வந்ததில் மூச்சு வாங்கியது. பனிக் காற்றை ஆழமாக இரு முறை உள்ளே இழுத்து வெளியே விட்டேன்.

நான் வந்ததைப் பற்றி எந்தக் கவலையும் இன்றி வானத்தையே உற்றுப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். பார்ப்பதற்கு அங்கு என்னதான் இருக்கிறது? இந்த மோசமான கால நிலையில் மழை, இருள், குளிர் எதைப் பற்றியும் கவலைப்படாது அவனைக் கவர்ந்திழுக்கும் பொருள்தான் யாது?

"பாமன் எழும்பு/இந்தக் குளிருக்குள்ளே என்ன செய்கிறாய்? என் வீட்டுக்கு வா! அங்கே சூடாக இதமாக இருக்கும்." அவன் பதில் ஏதும் பேசவில்லை. அவன் மூளையில் என்ன சிந்தனைதான் ஓடுகின்றது?

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ள

ரம்யன்

## அசை போட ஒரு விடயம் 23

பிரித்தானியாவின் மிகப் பிரபலமான பிரதம ர்களில் ஒருவரான வின்சென்ற் சேர்ச்சில் பிரபு பிரசித்தி பெற்ற பேச்சாளரும் ஆவார். பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்வதற்கு அவர் வழங்கிய அறிவுரை ஆயத்தப்படுத்திக் கொள்வதாகும். ஆயத்தம் செய்து கொள்வதே வெற்றிக்கான திறவுகோல் என்பது அவர் வழங்கியுள்ள அறிவுரை.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் ஒருமுறை முக்கிய விடயம் ஒன்றின் மீது பேசி முடித்துவிட்டு சேர்ச்சில் ஆசனத்தில் அமர்ந்த போது, துள்ளி எழுந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர் ''நான் உமது மனைவியாக இருந்தால் நிச்சயமாக உமக்கு நஞ்சுபருக்கி கொன்றிருப்பேன்'' என்று கூறிவிட்டு அமர்ந்தார். அதைச் செவிமடுத்த சேர்ச்சில் சாவகாசமாக எழுந்து ''அம்மணி நான் கணவனாகவும் நீர் மனைவியாகவும் இருக்க நேர்ந்தால் நீர் வழங்கும் நஞ்சினை நிச்சயமாக நான் பருகியிருப்பேன்'' என்று பதில் அளித்தார். சபையோர் கொல்லென சிரித்திருப்பார்கள் என்பதில் என்ன சந்தேகம்.

பொதுவில் பொது மேடைகளில் பேச எழுகிறவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கும், கேட்போரின் மனோநிலைக்கும் ஏற்ப தமது பேச்சினை வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இந்தப் பேச்சு சோபிக்கும். தொழிலாளர் கூட்டத்தில் இலக்கியம் பேசுவதும், இலக்கியவாதிகள் மத்தியில் தொழிலாளர் பிரச்சினை பற்றி பேசுவதும் பேதமை. ஆனால் ஒரு திறமை வாய்ந்த பேச்சாளனால் இந்த இரண்டு விதமான சூழ்நிலையிலும், சாதுர்யமாகத் தனது பேச்சை நகர்த்தி வெற்றியுடன் சாதிக்கமுடியும்.

ஒரு கல்வி நிலையத்தில் தெள்ளுகள் பற்றியே விரிவாக கற்றறிந்திருந்த மாணவர் ஒருவர், ஒரு மொழிவாரி பேச்சுப்போட்டியின் போது சிங்கத்தைப் பற்றி உரை நிகழ்த்தும்படி பரீட்சையாளரால் கேட்கப் பட்டார். மாணவரும் சிங்கத்தைப் பற்றி பொதுவாக விவரித்ததன் பின்னர், சிங்கத்துக்கு உடம்பில் மயிர் உண்டு. அங்கே தெள்ளுப் பூச்சிகள் வாழும் என்று கூறி தெள்ளுகள் பற்றி விரிவுரை நிகழ்த்தத் தொடங்கினான். பரீட்சையாளர் அவன் பேச்சை நிறுத்தி, பசுவைப் பற்றிப் பேசும்படி கேட்டுக்கொண்டார். மாணவன் விடவில்லை, பசுவுக்கும் முடியுண்டு முடியில்தான் தெள்ளு காணப்படும் என்று கூறி தெள்ளைப்பற்றிப் பேசத் தெடங்கினான். பரீட்சையாளர் பேச்சை நிறுத்தக்கூறி மீனைப் பற்றிப் பேசும்படி பணித்தார். மாணவனும் தொடர்ந்தான். மீனுக்கு மயிர் இல்லை. மயிர் மட்டும் இருந்திருந்தால் அங்கே தெள்ளுக் காணப்படும் என்று கூறி, தெள்ளுப் பற்றித் தான் கற்றவைகளை எல்லாம் விளாசித்தள்ளத் தொடங்கினான்.

பேசவிருக்கும் விடயத்தைப் பற்றிய அறிவு இல்லாதவர்களுக்கு இந்தச் சங்கடம் தான் ஏற்படும். சிலர் அதிக பிரசங்கித்தனமாகவும் பேசுவார்கள். சொன்னதையே மீண்டும் மீண்டும் பேசிப் போரடிப்பார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள், தமக்குப் பின்னர் பேச வருபவர்களின் தலைப்பை எடுத்துக் கொண்டு அதன் மீது பேசி முழங்குவார்கள். இதில் தலைமை வகிப்பவர்கள் செய்யும் தமாஷ் மிக மோசம். இப்பொழுது இன்னார் பேச இருக்கிறார் அவர் பேசவிருக்கும் தலைப்பு இது என்று கூறிவிட்டு அந்தத் தலைப்பில் தமக்குத் தெரிந்தவற்றை எல்லாம் அள்ளி வீசுவார்கள். அந்தத் தலைப்பில் பேசவிருந்தவருக்கு பெரும் சங்கடமாகப் போய் விடும். ஏனென்றால் அவர் பேசுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டு வந்தவற்றை எல்லாம் தலைமை வகிப்பவர் பேசி முடித்திருப்பார்.

உண்மையில் நீங்கள் சிறந்த மேடைப் பேச்சாளராக இருப்பின், நிச்சயம் சிலர் கூறுவது போல், அந்தத் திறமை பிறப்போடு வந்தது என்று கொள்ளமுடியாது. அதற்கு நீங்கள் வெகுவாக முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பீர்கள். பயிற்சியின் மூலம் இந்தத் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம், பெற்றுக்கொள்ளும் திறமையை மேலும் பயிற்சிசெய்து வளர்த்துக் கொண்டவர்கள் இன்று சிறந்த மேடைப் பேச்சாளர்களாகக் காணப்படுகிறார்கள்.

ஒரு நல்ல பேச்சாளனாக இருப்பவர் ஒரு நல்ல கேள்விச் செவியனாகவும் இருக்கவேண்டும். மற்றவர் சொல்வதைக் கேட்க பொறுமையில்லாதவன் நல்ல பேச்சாளனாக வரமுடியாது.

ஒரு பேச்சாளன் பேசி முடித்ததும், அந்தப் பேச்சிலிருந்து ஏதோ ஒரு விடயத்தை மனதில் எடுத்துச் செல்வதாக கேட்பவர்கள் உணரவேண்டும். அது சிறந்த பேச்சாக அமைந்துவிடும்.

நல்ல சொற்பொழிவொன்றை நிகழ்த்துவதற்கு விரும்பும் ஒருவர் முதலில் என்ன செய்யவேண்டும் என்பதற்கு சில குறிப்புகள் உண்டு.

பேச்சுக்குரிய விடயத்தைப்பற்றி ஆய்வு செய்தபின் பேச்சில் என்னென்ன இடம் பெறவேண்டும் என்பதைத் தெரிந்து, மூளையில் செலுத்திக்கொள்க. அவசியமானால் குறிப்பெழுதிக்கொள்க. பேச்சை எழுத்தில் வடித்து பலமுறை படித்துவிட்டு வேண்டியவர்கள் முன் பேசிக்காட்டலாம்.

இது ஆரம்ப நிலைப் பேச்சாளர்களுக்கான குறிப்பு. ஆற்றல் மிக்க பேச்சாளர்கள் தமக்கென்று சில முறைகளை வைத்திருப்பார்கள். பொது மேடையில் பேசி வெற்றிபெற விரும்புகிற ஆரம்ப பேச்சாளர்கள் பின்பற்றக்கூடிய சில விடயங்களை ஆங்கிலக் கட்டுரையாளர் ஒருவர் விரிவாகத் தந்துள்ளார். அதன் முக்கிய பகுதிகளின் சுருக்கம் வருமாறு.

நீங்கள் எதிர்கொள்ள இருக்கும் சபையோரைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள். அவர்களின் பின்புலம் ஏன் வந்திருக்கிறார்கள், எதனை எதிர்பார்ப்பார்கள் என்பவைகளையும் உரை நிகழ்த்தும் போது அவர்களின் உடல் மொழியையும் கவனியுங்கள். செவிமடுக்கிறார்களா?, அக்கறையில்லாமல் இருக்கிறார்களா? பொருத்தமான கேள்வி ஒன்றைக் கேட்டு உங்கள் பக்கம் கவனத்தைத் திருப்புங்கள். ஒருவரையே ஒரு பக்கமே பார்க்காமல் எல்லோரையும் கவனியுங்கள். பேச்சை நீட்டாதீர்கள். சிறுவசனங்களை, கருத்துள்ள சொற்களைப் பயன்படுத்தி விளக்குங்கள். அவசியமானால் பேச்சுக்கு மெருகூட்டும் சிறுகதையை அல்லது நிகழ்வைச் சொல்லுங்கள் அவர்களின் ஆர்வம் குறை

யும் முன் இன்னும் பேசமாட்டாரா என்று எதிர்பார்க்கும் நிலையில் நிறுத்துங்கள்.

பேச்சாளராக வரவிரும்புகிறவர் தனக்கென்று ஒரு பாணியை வளர்த்துக்கொள்ள வேண்டும். பிரசித்தமான பேச்சாளர்களைக் கவனித்து அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். அவசியமாகும் போது ஒரு நகைச்சுவையை அவிழ்த்து விடுங்கள். அது உங்கள் பேச்சுக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

மேடையில் தோன்றியதும் மிக தன்னம்பிக்கையுடன் செயற்படுங்கள்.

இன்று பேச்சுவன்மை உள்ளவர்கள் பல தொழில்களிலும் முன்னேறி வருவதைப் பார்க்கிறோம்.

தொழில் அதிபர்கள், மேலாண்மை அதிகாரிகள், நிறுவன செயலாளர்கள், விற்பனை முகவர்கள் போன்ற தொழில்களுக்கு பேச்சாற்றல் முக்கியம். அதற்காக பேச்சையும், பேச்சாற்றலையும் வளர்த்துக் கொள்வது அவசியம்.

அநேகர் மேடையில் தோன்றியதும் அல்லது ஒரு சபையோர்முன் பேசநேர்ந்தால் உணர்ச்சிவசப்பட்டு விடுகிறார்கள். பேச்சாளன் இப்படியான உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளப் பழகியிருக்க வேண்டும். சில சமயம் உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டி ஏற்படலாம். அதனை நாசுக்காக வெளிப்படுத்தி சபையோரையும் தன் பக்கம் ஈர்த்து அடுத்த விடயத்துக்கு போய்விட வேண்டும்.

'மறேவோக்கர்' என்ற புகழ்பெற்ற அறிவிப்பாளர் ஒருவர் இருந்தார். தமது அறிவிப்பை தொடங்குவதற்கு முன்னர் அந்த இடத்திலேயே வேகமாக ஓடி உடலில் ஒட்சிசனை அதிகரித்துக்கொண்டு கடமையை ஆரம்பிப்பார். நாமும் பேச்சை ஆரம்பிக்குமுன் எவருக்கும் தெரியாமல் வேகமாக நடந்து கால் கைகளை ஆட்டி அசைத்து உடம்பை உஷ்ணப்படுத்திக் கொள்ளலாம்.

முக்கியமான விடயம் என்னவெனில் உங்கள் சபையோருக்கு முன்னால் நீங்கள் தன்னம்பிக்கையோடு நிற்பதுதான். உணர்ச்சிவசப்படுவது அவர்களுக்குத் தெரியவரலாகாது. கைகள் வேர்க்கலாம், முழங்கால்கள் மோதிக்கொள்ளலாம், இதயம் படபடக்கலாம். இவை அவர்களுக்குத் தெரிய வேண்டாம். புன்சிரிப்பை வெளிப்படுத்தி தன்னம்பிக்கையுடன் தொடங்கினால் சிறிது நேரத்தில் சாதாரண நிலைக்கு வந்துவிடுவீர்கள். பிறகு அன்றைய பேச்சு வெற்றிகரமாக அமைந்துவிடும்.

✱

# திருமண சுபமுகூர்த்த வேளை

மகாதேவாப்பத்தர்
இராமகிருஷ்ணன் ஆச்சாரி,



### திருமண சுபமுகூர்த்த வேளை

திரு என்றால் ''அழகு'' அழகிய என்று பொருள் தரும். ''மணம்''என்றால்''ஒன்று படுதல்'' என்று பொருள் தரும். அழகிய இரு உள்ளங்களும் சேர்ந்து இணைவதுதான் ''திருமணம்'' திருமணங்கள் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகின்றன எனப் பெரியோர்கள் கூறுவார்கள். ''மணமகன்-மணமகள் இருவரின் உள்ளமும், உடலும் சங்கமித்து புதிய வாழ்க்கை ஒப்பந்தத்தில் இணையும் உறவே! திருமணம் ஆகும்''. அது மாத்திரமன்றி இரு குடும்பங்கள் (மணமகன் வீட்டார்-மணமகள் வீட்டார்) இணைகின்றன.

திருமணப் பத்திரிகையில் பார்த்தால் ''ஒரு நேரம் குறிப்பிட்டு உள்ளதை அவதானிக்கலாம். அதுதான் ''திருமண சுபமுகூர்த்த நேரம்'' என்பதாகும். இந்த திருமண சுபமுகூர்த்த நேரம்'' தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

### திருமண சுபமுகூர்த்த நேரம்

அதாவது திருமண சுபமுகூர்த்த வேளை என்பது (3¾ நாழிகை எனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்த 3¾ நாழிகை என்பது மணிக்கணக்கில் சொல்வதானால் (90 நிமிடங்கள்) 1½ மணி நேரம் ஆகும். 60 நாழிகை என்பது 24 மணி நேரம் பகல்பொழுது 30 நாழிகை (12 மணி நேரம்) இரவுப் பொழுது 30 நாழிகை (12 மணி நேரம்) ஆகும்.

### தாரை வார்த்தல் (கன்னிகாதானம்)

''தாராந்து''என்ற சொல்லில் இருந்து வந்தது தான் ''தாரை வார்த்தல்'' என்பதாகும். இங்கு ''தாரை'' என்பது நீரைக் குறிக்கும். திருமண வைபவத்தில் ''கன்னிகா தானம் இடம்பெறும் போது ''தாரைவார்த்தல்'' நிகழ்வு முக்கியமான சிறப்பு. அதாவது ''மணமகளின் தந்தையார்தான் பெற்ற மகளை மணமகனுக்கு'' இனி வாழ்நாள் முழுதும் உனக்கேயுரியவள் என்று ''தாரை வார்த்து'' கொடுக்கும் செயல் வடிவமே! கன்னிகாதானம்.

### திருமாங்கல்யதாரணம்

அடுத்த நிகழ்வு திருமாங்கல்யதாரணம் (மணமகன் மணமகளுக்கு ''திருமாங்கல்யம்'' (தாலிகட்டும் நிகழ்வு) அணிவித்தல் மூன்று முடிச்சு போடுவதற்கு மணமகனின் சகோதரி முறையானவர் துணை செய்ய வேண்டும். சகோதரி இல்லாதபட்சத்தில் சகோதரி முறையானவரைக் கொண்டு செய்ய வேண்டும். மணமகனின் தாய் மாமனார்-மாமியும்-மணமகளின் தாய் மாமனார் மாமியும் ஒரு திருமணத்திற்கு முக்கிய காரணகர்த்தாக்கள். இவர்களும் இரு குடும்பங்களின் சார்பாக உறுதுணையாக இருக்க வேண்டும். மணமக்களின் சிறப்பான வாழ்க்கைக்கு இந்த திருமண சுபமுகூர்த்த(ம்) வேளையே ''சுப வேளையாக'' அமைகின்றன. கன்னிகாதானம்-திருமாங்கல்ய தாரணம் இரண்டு நிகழ்வுகளும் திருமண முகூர்த்த(ம்) வேளையில் இடம் பெற வேண்டும்.

### பெற்றோர்களின் கவனத்துக்கு

திருமணப் பத்திரிகையை ஒரு நல்ல நாளில் உங்கள் அருகில் உள்ள இஷ்ட தெய்வமான ஆலயத்துக்குச் சென்று பத்திரிகையின் நான்கு பக்க மூலையிலும் மஞ்சள் தடவி ''இறைவனின் ஆசி வேண்டி அர்ச்சனை செய்து உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் திருமணப் பத்திரிகை மகிழ்ச்சியுடன் வழங்குங்கள்.


✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெனாலிராமனும் குதிரையும்

ஒரு சமயம் தெனாலிராமனுக்கு உடல் நலம் மோசமாகி விட்டது. வைத்தியரும் வந்து பார்த்தார். வைத்தியச் செலவு நிறைய ஆகும் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். வைத்தியச் செலவுக்கு தெனாலிராமனிடம் பணம் இல்லை. ஆகையால் அந்த ஊரில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் சேட்டிடம் அணுகினான். அதற்கு சேட்டும் பணத்தை எப்போது திருப்பிக் கொடுப்பாய் என்று கேட்டார்.

தெனாலிராமன் உயர் ஜாதி அரேபியக் குதிரை வைத்திருந்தான். நல்ல விலை போகும் அதனால் உடல் நலம் தேறியதும் குதிரையை விற்றுப் பணம் தருவதாகச் சொன்னான். அவன் சொன்னதின் பேரில் சேட்டும் நம்பிக்கையோடு பணம் கொடுத்தான். பணத்தைப் பெற்றுக் கொண்ட தெனாலிராமன்



வைத்தியரிடம் சென்று சிகிச்சையை ஆரம்பித்தான்.

விரைவில் குணமும் அடைந்தான். பல மாதங்கள் ஆயின. தெனாலிராமனிடமிருந்து பணம் வருவதாகத் தெரியவில்லை. ஆகையால் சேட் தெனாலிராமனை சந்திக்கப் புறப்பட்டான். தெனாலிராமனைப் பார்த்து என்னப்பா, உடல் குணமானதும் குதிரையை விற்றுப்பணம் தருவதாகச் சொன்னாயே. இன்னும் தரவில்லையே உடனே கொடு என்றான். தெனாலிராமனும் நன்கு யோசித்தான். அநியாய வட்டி வாங்கும் சேட்டுக்குப் பாடம் கற்பிக்க விரும்பினான். சரி குதிரையை விற்றுப் பணம் தருகிறேன். என்னுடன் நீயும் வா என்று அவனையும் அழைத்துக் கொண்டு பக்கத்து ஊரில் நடக்கும் சந்தைக்குப் புறப்பட்டனர். போகும் போது குதிரையையும் கூடவே ஒரு பூனையையும் அழைத்துச் சென்றான். சந்தையில் தெனாலிராமனின் பளபளப்பான குதிரையைப் பார்க்க பெரிய கூட்டமே கூடி விட்டது.

அப்போது ஒரு பணக்காரன் தெனாலிராமனைப் பார்த்து உன் குதிரை என்ன விலை என்று கேட்டான். அதற்கு தெனாலிராமனோ குதிரையின் விலை 1 பவுண் தான். இந்தப் பூனையின் விலையோ 500 பவுண். ஆனால் இந்த பூனையையும் சேர்த்து வாங்கினால் தான் இந்தக் குதிரையைக் கொடுப்பேன் என்றான்.

தெனாலிராமனின் பேச்சு அவனுக்கு விநோதமாக இருந்தாலும் குதிரையை வாங்க வேண்டும் என்ற மிகுந்த ஆவலில் 501 பவுண் கொடுத்துக் குதிரையையும் பூனையையும் வாங்கிச் சென்றான். தென்னாலிராமனோ சேட்டிடம் ஒரு பவுணை மட்டும் கொடுத்தான். ஆனால் ஒரு பவுணை சேட் வாங்க மறுத்து விட்டான். குதிரை அதிக விலைக்குப் போகுமென்று நினைத்துத் தானே உனக்குப் பணம் கொடுத்தேன். நீ இப்படி



ஏமாற்று கிறாயே என்றான்.

அதற்கு தெனாலிராமன் ஐயா, சேட்டே குதிரையை விற்றுத்தான் உமக்குப் பணம் தருகிறேன் என்று சொன்னேன். அதன்படியே குதிரையை 1 பவுணுக்கு விற்று அந்த 1 பவுணையும் உனக்கே கொடுத்து விட்டேன். நீ வாங்க மாட்டேன் என்கிறாயே! இது என்ன நியாயம் என்றான். சேட்டோ 500 பவுண் வேண்டுமென்றான். இறுதியில் இவர்கள் வழக்கு மன்னர் கிருஷ்ண தேவராயரிடம் சென்றது. மன்னர் இந்த வழக்கை ஆதியோடு அந்தமாக விசாரித்தார். தெனாலிராமன் செய்தது சரியே என்று தீர்ப்புக் கூறினார். ★

## அற்புதப் படைப்பு தாய்



உலகில் இனிமையான வார்த்தை அம்மா, துன்பத்திலும் துயரத்திலும் வருவது அம்மா; குழந்தையின் முதல் வார்த்தை அம்மா; பசு கூட அம்மா என்றே கதறும். இறைவனது சிருஷ்டியில் தாய் என்பவர் அற்புதப் படைப்பு கருவில் உயிர் கொடுத்து பத்து மாதம் சுமந்து அந்த உயிர் வாழ்வதற்கு உடலையும் உதிரத்தையும் கொடுத்து, பிறந்த பின்பும் உதிரத்தைப் பாலாக்கிக் கொடுத்து இரவு பகல் கண் விழித்து கட்டிலிலும், தொட்டிலிலும், தோள் மீதும் போட்டு சீராட்டித் தாலாட்டி வளர்த்தெடுப்பவர்தாய். நல்ல அறிவுரைகளை கூறி நல்வழிகாட்டி, பள்ளிக்கனுப்பி, வரும் வரை கண் அயராது வழி பார்த்து நிற்கும்' சிறப்புமிக்க தாயை போற்றாதவர்களுக்கும், வணங்காதவர்களுக்கும் நற்கதி கிட்டாது.

வி.கார்த்திகா
யா/ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.

## பிராணிகள் தமது பாதுகாப்புக்காக கைக்கொள்ளும் உத்திகள்

- முயல்:- நீண்ட செவிகள் மூலம் சிறிய சத்தத்தையும் கேட்டுக் கிரகித்துத் தப்பி ஓடும்.
- கோழி:- கால் நகங்களால் எதிரியைத் தாக்கும். பறந்து 'தப்பிக்கும்.
- யானை:-தும்பிக்கையால் தாக்கும்.
- நத்தை:-ஓட்டுக்குள் சுருண்டு கொள்ளும்.
- முள்ளம் பன்றி:- தனது உடலில் உள்ள முட்களைச் சிலிர்த்து விரட்டும்.
- ஆமை:- ஓட்டுக்குள் உடலை மறைத்துக் கொள்ளும்
- பல்லி:- வாலை உடைத்து விட்டு ஓடும்.
- பச்சோந்தி:-சூழலுக்கு ஏற்ப தனது நிறத்தை மாற்றும்.
- மரஅட்டை:- உடலை இறுக்கி ஒரு வளையமாக ஆக்கும்.
- அணில்:- வாலைச் சிலிர்த்து எதிரியைப் பயங்காட்டி விட்டு ஓடும்.
- தேனீ:- கொடுக்கால் எதிரியைத் தாக்கும்.

சி.நிரோஜன்
யா/கனிஷ்ட வித்தியாலயம்

## விடை தெரியுமா? 154

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகில் மிக உயரமாகப் பறக்கக்கூடிய பறவை எது?
2. சிரியா நாட்டின் தலைநகர் எது?
3. 5ஆவது ஐ.பி.எல். போட்டியின் முதல் ஆட்டம் எங்கு நடை பெற்றது?
4. முதல் உலக மகாயுத்தம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
5. இலங்கையின் பழைமையான நகரம் எது?

### விடைகள் 153

1.அலெக்சி ஆர்க்கிபோவிச் லியோனொவ்
2.மார்ச்-20
3.அமெரிக்கா
4.நீலம்,பச்சை,சிவப்பு
5.நாக்கினால்

### வெற்றி பெற்றோர் விவரம் (152)

★ நி.தேனுகா, தரம்-8வி, யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலை
★ ச.சங்கீர்தா, தரம்- 9ஏ, யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலை
★ சி.சிவவைஸ்ணவி, தரம் -9டி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி
★ அ.சுவியா, தரம் - 5 பி, யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
★ அ.துசாரா, தரம் -7 எப், யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலை
★ கு.மாதங்கி, தரம் -4ஏ, இணுவில் இந்துக் கல்லூரி

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 14.04.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## தமிழில் எண்களின் பெயர்கள்

| | |
|---|---|
| பத்துக்கோடி | :-அற்புதம் |
| நூறு கோடி | :-நிகற்புதம் |
| ஆயிரம் கோடி | :-கும்பம் |
| பத்தாயிரம் கோடி | :- கணம் |
| ஒரு லட்சம் கோடி | :-நிகற்பம் |
| பத்து லட்சம் கோடி | :-பதுமம் |
| கோடி-கோடி | :-சங்கமம் |
| கோடி -10 சங்கமம் | :-வெள்ளை |
| கோடி -10 வெள்ளை | :-அந்நியம் |
| கோடி -10 அந்நியம் | :-மத்தியம் |
| கோடி -மத்தியம் | :-பரார்த்தம் |
| கோடி -பரார்த்தம் | :-பூரியம் |
| கோடி -கோடி -கோடி | :-பிரமகற்பம் |

சா.ஜிந்துஜா






நா.கஜீபராஜ்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



சி.கோகுலராஜ்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி



சி.றஜிந்தன்
யா/கல்வியங்காடு இந்து த.க.பாடசாலை



கு.மீரா
யா/இணுவில் இந்துக் கல்லூரி



த.டெல்சன்
யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை



சி.தனுஷா
யா/நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி



நா.பதுஷன்
யா/கோண்டாவில்
இ.கி.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்புக்கள்



கொதிக்கும் இரத்தம்
குமுறி எழும் கூக்குரல்கள்
அழிந்து போன வீடுகளில்
ஆங்காங்கே
சிலந்திவலை

பசுமறந்த கன்றுகளும்
தாயிழந்த பிள்ளையரும்
பெற்றுவிடாப் பெருஞ்சொத்து
பெற்றவளின் பாலதுவும்

காட்டுவழி நடந்து
களைப்புற்ற ராத்திரிகள்
எறிகணைக்கு பயந்து
வெட்டிவிட்ட பங்கர்கள்

குடி மனையின் கூரையிலே கூச்சலிடும்
ஓ நாய்கள்
வெடி களுக்குப் பழகிப்போன
வீட்டுத் தோட்ட வாழை மரம்

கோட்டை முதல் குடிசை வரை
தொன்று தொட்ட பழங்குடிசை
சேர்த்து வைத்த பொன் பொருளும்
சேற்றில்பட்ட பூப்போல

பேய்க்கு பயந்த பிள்ளை
பின்பக்கம் போகாத பிள்ளை
காட்டினில் நின்று
காவல் காக்கும் நிலை இப்போ

அரும்பிலே முளைத்த காதல்
அடிமரத்தில் சேர்ந்த காதல்
18 வயது வரை பாதுகாத்த
பருவக்காதல் பறிபோனதும்

முத்தத்து ரோஜாவை
சித்தெறும்பு கடித்தாலும்
பொத்தென்று கோபம் வரும்
நினைக்கையிலே சோகம் வரும்

1 முதல்11 வரை படித்து வந்த படிப்பு
எட்டுமணியானவுடன்
எழுந்து விட்ட குதூகலிப்பு
புற்றைக் காடுகளிலும்
பாலைவன மேடுகளிலும்

இத்தனையும் தந்தவர்கள்
எக்காளச் சிரிப்பொலி
அதிகாரப் பார்வைகள்
அழியும் நாள் வரைக்கும்
சாதல், மயங்கல், அழல்,எழல்

தொடரும்....................

-நிலீஸ்

## வாழ்க்கை

உனக்காக நீயும்
எனக்காக நானும்
மட்டும் வாழ்வதல்ல
நமக்காக நாம் வாழ்வதே!

## அம்மா

நாம் தலை நிமிர்வதற்காக
தன் தலையையே ஈடு
வைக்கும் இனிய
ஓர் உறவு இவ்வுலகில்!

## கவிதை

உன்னை
நினைக்கும் போது
என்னுள் ஊறுகின்ற
வற்றாத நீர் ஊற்று!

– நந்தினி

# அன்பின் சிகரம் அன்னை

நண்பனே நீ உன் காதலியை நேசித்துப் பார்
அன்பின் வலியை உணர்வாய்
நண்பனே நீ உன் நண்பனை நேசித்துப் பார்
அன்பின் ஒற்றுமையை உணர்வாய்
நண்பனே நீ இயற்கையை நேசித்துப்பார்
அன்பின் இனிமையை உணர்வாய்
நண்பனே நீ உன் அன்னையை நேசித்துப்பார்
உண்மையுடன் அன்பின் ஆழத்தை உணர்வாய்
நண்பனே அன்னையின் அன்பே நிலையானது
நீ பூமித் தாயின் மடியை அடையும் வரை
நண்பனே அன்னையின் மடியில் சாய்ந்துபார்
அன்பின் வெள்ளத்தில் மிதப்பாய்
நண்பனே நீ உன் அன்னையை நேசித்துப் பார்
வாழ்க்கை என்னும் அமிர்தத்தைச் சுவைப்பாய்.
நண்பனே இந்த உலகத்தில் அன்னையின்
அன்புக்கு நிகர் எதுவுமில்லை.

நா.ஜெனோசன்.
யாழ்ப்பாணம்.



# துயரத்தின் தூண்கள்



வாட்டும் துயரம்-அது
வாழமுடியாத சோகத்தின் உயரம்
வதங்கிப் போகும் கீரைகளாய்
வாழ்க்கையே நெருப்பாகுது

மசிக்க ஒருத்தன்
மணியாய் புசிக்க இன்னொருத்தன்
மாற்றானுக்கு சுவைபோக- எம்
மக்கள் தான் மசிபடவோ,

குப்பைகளில் கிழறப்படும் குப்பைகளாய்
குண்டடியில் அங்கங்கள் பதங்களாகி
குறித்தோர் இலாபம் காண
குறுக்கே வந்த போர்
துணை போனது குற்றமே,

எப்படித்தான் உயர நினைத்தாலும்
எழும்பவில்லையே தமிழர் நிலை
ஏனெனில் அதிகாரிகளின் மாற்றம்
எங்கே வந்து போனது

இன்று நேற்று என்றில்லாது
இரக்கமற்ற இரசாயிகளுக்கு இரையாகி
இனியும் வாழ்வது இடரே
இதை அறிவது காலத்தின் தொடரே!

அமைதியுடன் உள்ளம் இயங்க
அம்பு துரத்தி வந்து நின்றது
அடுத்தவன் இதைக் காணமுன்னர்
அடக்கமாகிக் காலியாகின்றான்

குப்பி விளக்கு
குறித்த நேரம் குளிக்கும்
குடலாய் கூறாய் திரியும்
குறிக்கோளில் நனையும்

பிரசூனம் இழந்த செடிகளாய்
பிரசை இழந்த மக்களாய்
பிதிர்வனம் மீது வாழ்க்கையாய்
பிடிதம் ஏந்திப் போவது துயரத்தின் தூண்களே!

ஜெயம் ஜெகன்
புதுக்குடியிருப்பு.



# முதலாளித்துவம் என்பது...




முதலாளித்துவம் என்பது
சுயநலத்தின் தங்குமிடம்,
ஆணவத்தின் குகை,
அடக்கு முறையின்
தாய் வீடு,

அடாவடியின் சொந்த ஊர்,
கடவுளையும் விலை பேசும்
கல்நெஞ்சம் கொண்ட ஜந்து,
சுதந்திரக் காற்றை
அசுத்தப்படுத்தும் விஷக் கிருமி

புன்னகையில் அது
அகங்காரம் சேர்க்கும்
பூக்களிலும் மலநாற்றம் வீசும்
உண்மைகளை புதைக்கும்
பொய்களைச் சோடிக்கும்
புனிதத்தைக் கெடுக்கும்
அசுத்தத்தைக் குடிக்கும்
கோபுரத்தில் இருந்து வந்து
குடிசையை அழிக்கும் கொடூரம் அதனிடம் மட்டும்
மனிதனை படைத்த கடவுளுக்கு
மனிதன் ஊ[illegible]
மு[illegible]

நெடுங்கேணி ராயு

# அழியா நினைவுகள்



காணாது போன எங்கள் கிரஹம்
நீண்ட பனைகளும், கொத்தும்
குலையுமாக தென்னம் தோப்பும்
காயும் கனியுமாக மாவும் பலாவும்
காணி நிறைய வேம்பும்
வேலி நிறைய கிளுவையும்
எப்போதும் எம்மண் வாசனை கூறி நிற்கும்

அழகான அன்னை வேளாம் கன்னி
ஆலயமும்
அரிய மலர் ஆசிரியர் கல்வி புகட்டிய
எங்கள் ஊர் பள்ளியும்
நாவுக்கு சுவை தரும் வடிவேலன் தேனீர் கடையும்
ஞாய விலையில் பொருள் தரும்
குட்டி மனேசரின் கூட்டுறவு கடையும்
கூப்பிட்டு கடிதம் தரும் மலாக்காவின் தபாலகமும்
தலை அலங்காரம் புரியும் துரை அண்ணையின் சலூனும்
குதித்து கும்மாளம் அடிக்கும் மாணிக்க பிள்ளையார்
குளமும்
காதலின் சாட்சியம் கூறும்
அந்த கூழாமரமும்
எப்போதும் எம் மனம்களில்
அழியா நினைவுகளாக உள்ள போதும்
அடையாளமே தெரியாது அழிக்கப்பட்டன.
எம் கிராமம் மட்டும்தான்
[illegible]டும்தான் கிழிக்கப்பட்டது.
ஆனாலும் எம்முகவரி முகமாலைதான்.

முகமாலை ஊர்
செ.நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்

# வடக்கில் அரசியல் கடை விரிக்கும் தென்னிலங்கை கட்சிகள்





சித்திரைப் புத்தாண்டு பிறக்க இன்னும் சில நாள்களே உள்ள நிலையில் வடபகுதியின் நகரங்களின் நடைபாதைகள் பெரும் வர்த்தக மையங்களாக மாறிவிட்டன. தென்னிலங்கை வியாபாரிகள் நடைபாதைகளை ஆக்கிரமித்து தைக்கப்பட்ட ஆடைகளைக் குவித்து வைத்து "லாபாய், லாபாய்" எனக் குரலெழுப்பி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். அவற்றின் தரம் பற்றிய அக்கறையின்றி மலிவான விலை காரணமாகவும் அலங்கார வடிவங்கள் காரணமாகவும் எமது மக்களும் விழுந்தடித்து வாங்கிச் செல்கின்றனர்.

இன்னொரு புறம் இந்த நகரங்களின் நிரந்தர வர்த்தகர்கள் வங்கிகளில் வட்டிக்குக் கடன் வாங்கிப் பெரும் முதலீடு செய்து தமது கடைகளில் பொருள்களை அடுக்கிவைத்து புதுவருட வர்த்தகத்தை எதிர்பார்த்தவாறு நடத்த முடியாது திண்டாடுகின்றனர். கடை வாடகை செலுத்தி, வரி செலுத்தி, மின்சாரக் கட்டணம் செலுத்தி, சிப்பந்திகளுக்கு ஊதியம் வழங்கி வியாபாரம் செய்ய வேண்டிய அவர்கள் தென்னிலங்கையில் நடைபாதை வியாபாரிகளுடன் போட்டி போட முடியாமல் தவிக்கின்றனர். அவர்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் அதேவேளையில் தென்னிலங்கை வியாபாரிகள் எமது மக்களின் தலையில் தரமற்ற பொருள்களைக் கட்டிச் சுமத்தி விட்டு எமது பணத்தைக் கொண்டு செல்கின்றனர்.

இந்த நிலைமை இன்று நேற்று ஆரம்பமானதல்ல. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்பு ஏ-9 பாதை திறந்ததை அடுத்தே இந்த முறையற்ற வர்த்தக ஆக்கிரமிப்பு ஆரம்பமாகிவிட்டது. எனினும் இப்போது புத்தாண்டு காலத்தை முன்னிட்டு இது உச்சக் கட்டத்தை எட்டித் தொட்டு எமது வர்த்தகர்களின் தொழிலையே கேள்விக்குள்ளாக்கி விட்டது.

ஏ-9 பாதை திறந்த பின்னான வடக்கு நோக்கிய தென்னிலங்கையின் கடைவிரிப்பு நடைபாதை வியாபாரத்தில் மட்டுமல்ல வேறு பல முனைகளிலும் எமது பணத்தையும் எமது உழைப்பையும் கொள்ளையடிக்கும் கைங்காரியம் ஆரம்பித்துவிட்டது.

பற்பல தனியார் வங்கிகள், கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள், வாகனங்களின் வாடகைக் கொள்வனவுக்கு நிதி வழங்கும் லீசிங் நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள் எனப் பலவும் இங்கு முகாமிட்டு தங்கள் கொள்ளைகளைவெகுதுரிதமாக மேற்கொண்டு வருகின்றன.

விவசாயம் உள்ளிட்ட தொழில் துறைகளுக்கு வங்கிகளில் கடன் பெற்றே செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. எமது உற்பத்திகளை உரிய முறையில் உரிய விலையில் விற்க முடியாதவாறு எமது சந்தைகளில் தம்புள்ள மரக்கறிகள் வந்து குவிகின்றன. இந்த நிலையில் போதிய வருமானமின்மையால் எமது மக்களின் உழைப்பு வங்கிகளுக்கு வட்டி கட்டவே போதுமதாக இருக்கிறது.

வாகனங்கள் லீசிங் முறையில் வழங்கப்படுகின்றன. அதிலும் கூட எமது மக்களின் உழைப்பு லீசிங் நிறுவனங்களுக்கு பணம் கட்டுமளவுக்கே உள்ளது. சில சமயங்களில் லீசிங் கட்ட முடியாது வாகனத்தையே பறிகொடுக்கும் பரிதாபமும் ஏற்பட்டு விடுகிறது.

வீடுவீடாகத் திரியும் காப்புறுதி நிறுவனங்கள் தமது மயக்கு மொழிப் பிரசாரங்களால் எப்படியோ மக்களை அவற்றில் இணைத்து விடுகின்றனர். பெரும்பாலான வாடிக்கையாளர்கள் தொடர்ந்தும் அவற்றைக் கட்ட முடியாது கட்டிய பணத்தையும் இழக்கும் அவலமே ஏற்பட்டு விடுகிறது.

தமிழ் மக்கள் என்றுமே கடுமையான உழைப்புக்குப் பின் நிற்காதவர்கள். ஆனால் அவர்களின் உழைப்பின் பலனையும் வெளிநாடுகளின் எமது உறவுகள் இரவு பகல் பாராது பாடுபட்டு அனுப்பும் பணத்தையும் தென்னிலங்கை எம்மிடம் இந்த வடக்கு நோக்கிய கடைவிரிப்பின் மூலம் கொள்ளையிட்டு வருகிறது. இதுவும் கூடத் தமிழ் மக்களை பொருளாதார ரீதியில் நலிவடைய வைத்து அடிமைப்படுத்தும் ஒரு நீண்டகால இலக்குக் கொண்ட நயவஞ்சகத் திட்டத்தின் ஒரு பகுதியே.

பொருளாதார ரீதியான இந்தக் கடைவிரிப்பு ஒரு பக்கம் மேலோங்கி வர இன்னொரு புறம் அரசியல் ரீதியான கடைவிரிப்பும் மெல்ல மெல்ல வலுப்பெற்று வருகிறது.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகளை நிறுவுவதன் மூலமும் ஈ.பி.டி.பியின் ஆதிக்கத்தை விரிவாக்க முயற்சிகள் மேற்கொண்டதன் மூலமும் தென்னிலங்கையின் தமிழ் மக்கள் விரோத அரசியலை எம்மீது திணிக்கும் முயற்சிகள் பலவழிகளிலும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தமிழ் மக்கள் அவர்களைச் சரியாக இனம் கண்டு நிராகரித்து விட்ட காரணத்தால் அவர்களால் அந்த நோக்கத்தில் வெற்றிபெற முடியவில்லை.

அதேவேளையில் காணாமற் போனோர் பிரச்சினை, மாணவர்கள் பிரச்சினை என்பவற்றைக் கையிலெடுத்துக் கொண்டு ஜே.வி.பியும் விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகளை முன்னெடுத்து ஐக்கிய தேசியக் கட்சியும் இங்கு அரசியல் கடை விரிக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஒரு ஜனநாயக நாட்டில் எவரும் எப்பகுதியிலும் அரசியல் செய்வதையே ஒடுக்கப்படும் ஓர் இனத்துக்காகக் குரல் கொடுப்பதையோ தவறு எனச் சொல்லி விட முடியாது; தடுக்கவும் முடியாது.

ஆனால் அவர்களின் நோக்கங்கள் தொடர்பான சில கேள்விகள் எழும்போது அவை பற்றி நாம் அலசாமல் இருக்க முடியாது.

தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் செய்யவரும் எவரும் இலங்கைத் தமிழ் மக்கள் இலங்கையின் ஒரு தேசிய இனம் என்பதையும் வடக்கு, கிழக்கு அவர்களின் பாரம்பரிய வாழ்நிலப் பிரதேசம் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவை ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைத் தீர்வு அது எவ்வகையில் வரையறுக்கப்பட்டாலும் அமையவேண்டும். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதும் தேசிய இனத்துக்கான சகல தகைமைகளுக்கும் உரித்துடையவர்கள் என்பதையும் ஏற்றுக் கொள்ளாத எந்த ஒரு அரசியலையும் தமிழ் மக்கள் அங்கீகரிக்கப் போவதில்லை.

ஜே.வி.பியைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களை ஒரு தேசிய இனத் தகைமை கொண்ட இனமாக அது ஏற்றுக் கொண்டதில்லை. அது மட்டமல்ல வடக்கு,கிழக்கு தமிழரின் பாரம்பரிய வாழ் நிலப் பகுதி என்பதையும் வரையறை செய்ய அது தயாரில்லை.

1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.அதன் அடிப்படையில் வடக்குக்கிழக்கு ஒரே மாகாணமாக அங்கீகரிக்கப்பட்டது. அதாவது வடக்குக் கிழக்கு ஒன்றிணைந்த ஒரு மாகாணம் என்பதையும் அது தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்நிலப் பகுதி என்பதையும் அங்கீகரித்ததுடன் அது ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நிரந்தரமாக்கப்படவேண்டும் எனவும் அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

**ஞாயிறு காரம்**

இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாகிவிட்ட போதிலும் அப்போது ஆட்சியிருந்த ஐக்கிய தேசியக் கட்சியாலோ அதன் பின் அதிகாரத்துக்கு வந்த அரசாங்கங்களாலோ சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. அதாவது அந்த அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிய ஐக்கிய தேசியக் கட்சி அரசே அதை நடைமுறைப்படுத்தவில்லை. குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் கூட வடக்குக் கிழக்கு இணைப்பைஉறுதிப்படுத்தவில்லை.

அதைச் சந்தர்ப்பமாகப் பாவித்த ஜே.வி.பி. [illegible] வடக்குக் கிழக்கை இரண்டாகப் பிரிக்க ஏற்பாடு செய்தது. அதன் அடிப்படையில் வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன.

அதாவது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்நிலப் பகுதி என்ற கோட்பாட்டை உடைப்பதில் எப்போதுமே தீவிரம் காட்டி வந்துள்ளது.

இப்படியான தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கே எதிரான ஓர் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்ட ஜே.வி.பியின் போலி அரசியலைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா?

அதேவேளையில் ஜே.வி.பி. கிளர்ச்சிக்குழு காணாமற்.போனோர் தொடர்பாகக் காட்டும் அக்கறையையும் போராட்டங்களையும் நாம் வரவேற்கிறோம். அவற்றில் அவர்களுடன் இணைந்து செயற்பட தமிழ் மக்கள் தயாராயுள்ளனர் என்பதைப் பலமுறை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் காணாமற் போனோர், விசாரணையின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டோர் பற்றிய பிரச்சினைகள் மட்டும்தான் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அல்ல. தமிழ் மக்கள் மீது தொடுக்கப்படும் கொடூர இன ஒடுக்கு முறையின் ஒரு பகுதி வெளிப்பாடுதான் அது. இன ஒடுக்கு முறையின் மூலவேர் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும் ஏற்றுக் கொள்ளாமை என்பதிலிருந்து முளைவிட்டது என்பது புரியப்பட வேண்டும். ஜே.வி.பியினர் தாங்கள் பின்பற்றுவதாகக் கூறும் மாக்கியவாதமும் ஏந்தும் செங்கொடிகளும் தேசிய இனங்களின்சுயநிர்ணய உரிமையை ஆணித்தரமாக ஏற்றுக் கொள்கின்றன. எனவே ஜே.வி.பியினர் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ் நிலப் பிரதேசம் என்பதையும் பகிரங்கமாகப் பிரகடனம் செய்துவிட்டுத் தமிழ் மக்களிடம் அரசியல் செய்ய வந்தால் அது அர்த்தமுள்ளதாக இருக்க முடியும்.

அப்படி இல்லாத நிலையில் அவர்கள் தமிழ் மக்கள் பற்றிக் காட்டும் அக்கறை என்பது போலியானது எனவும் தமது இனவாத முகத்தை மறைக்கப் போடும் முகமூடி என்றும் தமிழ் மக்கள் முடிவு செய்வதில் எவ்வித தவறும் இருக்க முடியாது.

இன்னுமொரு புறம் ஐக்கிய தேசியக் கட்சியும் தனது அரசியல் கடையை வடக்கு நோக்கி விரிக்க ஆரம்பித்திருக்கிறது. இம்முறை மேதினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடப் போவதாகத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி தம்முடன் இணைந்து கொண்டாட வரும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

சிங்கள மக்களின் கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சி, பெரும்பான்மையாகத் தமிழர் வாழும் யாழ்ப்பாணத்தில் உலகத் தொழிலாளர் தினத்தை ஏன் கொண்டாட வேண்டும் என்ற ஒரு கேள்வி எழும்புவது இயற்கையே.

தென்னிலங்கையில் ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராக ஜனாதிபதி தலைமையில் ஒன்றுபட்ட தேசம் என்ற பெரும் பரப்புரைப் போர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிராக மக்களுக்கு விளக்கங்களைக் கொடுக்க வேண்டிய ஐக்கிய தேசியக் கட்சி அந்தக் கடமையை கைவிட்டு ஏன் வடக்கு நோக்கி வரவேண்டும்.

வடக்கில் இவர்கள் மக்களுக்கு என்ன சொல்லப் போகிறார்கள்? இவர்கள் வடக்கில் மேற்கொள்ளும் பிரசாரங்களால் தெற்கில் சிங்கள மக்களைத் தங்கள் பக்கம் அணி திரட்ட முடியுமா?

இவர்கள் வடக்கில் மேதினம் கொண்டாடுவதை தமிழ் மக்களிடையே இவர்களது ஒரு அரசியல் கடைவிரிப்பு என்றுதான் நாம் கருத வேண்டியுள்ளது.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகள் ஆகியவற்றுக்குத் தென்பகுதியில் ஒரு முக்கிய பணி உண்டு. மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் சிங்களக் கடும் போக்காளர்களும் ஜெனிவாத் தீர்மானம் இலங்கையின் சுய கௌரவத்துக்கும் இறைமைக்கும் எதிரான ஒன்று எனக் கூறி தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்கு முறையையும் இன அழிப்பு நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தியபரப்புரை செய்து வருகின்றனர். அதை உடைத்தெறியும் வகையில் நாடு முழுவதும் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் பரப்புரைப் போரை அவை ஆரம்பிக்க வேண்டும். அதன் மூலமே இனவெறி அரசியலை மழுங்கடிக்க முடியும். அதை விடுத்து தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் செய்வதில் எந்தப் பயனும் இல்லை. நடைபாதை வியாபாரிகளைப் போன்று பண்டிகைக் காலக் கடை விரிப்புமாக அரசியலைக் கையெடுப்பதில் எவ்விப் பயனுமில்லை எனச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதித்தே வாழ்ந்திடுவோம்

நடராசா- சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு.



பிள்ளைக் கனியமுதை
அள்ளி அணைப்பதற்கு
தவமாய் தவமிருந்து
கருவறையில் சுமந்து
காலனுடன் போராடி
ஈன்றெடுத்த மழலையர்க்கு
முகவரியில் முதல் எழுத்தாய்
பெருமையுடன் போடுதற்கு
முத்தான கணவனுக்கு
தத்துக் கொடுத்துவிடும்
தியாகத் திருவுருவாய்
துலங்கிடும் அன்னையரை
துதித்து தொழுதிடுவோம்
மதித்தே வாழ்ந்திடுவோம்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# இலக்கியப் பெண்கள்



முற்காலத்தில் தான் பெண்கள் அடிமைகளாய் இருந்தார்கள். இப்போது நாகரிகம், என்றும், முன்னேற்றம் என்றும் பெண்கள் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ளும் கேடுகளில் இவையும் ஒன்று. என்று சிலரால் கூறப்படுகிறது.

ஆனால் வேத காலத்திலும் பெண்களுக்கு மரியாதையே கிடையாது எனச் சொல்லப்படுகின்றது. இதுவும் முற்றிலும் தவறு. வசிஷ்டருக்கு அருந்ததியாலும், அகத்தியருக்கு லோபாமுத்திரையாலும், யாக்ஞவல்கியருக்கு, மைத்திரேயியாலும் , அத்திரி மகரிஷிக்கு அனசூயையாலும் இன்னும் பல ரிஷி, முனிவர்களுக்கும் அவர்கள் மனைவிகளால் பெருமையே தவிர சிறுமை கிடைக்கவில்லை. அகத்தியரின் மனைவி லோபாமுத்திரை ஒரு அரசகுமாரியாகப் பிறந்தும் அகத்தியரை மணந்ததும், அவரின் தவங்களுக்கு உறுதுணையாக இருந்து வந்தாள்.

வசிஷ்டரின் மனைவியும் வசிஷ்டரின் தவத்துக்குத் துணையாக இருந்து வந்ததோடு அல்லாமல், இன்றளவும், திருமணங்களில் தம்பதிகளை அவர்கள் என்றும் ஒற்றுமையோடு இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வசிஷ்டர், அருந்ததி நட்சத்திரங்களைத் திருமணத்தின் போது காட்டுவது வழக்கமாய் இருந்து வருகின்றது. மைத்திரேயியின் விவீதப் புலமை பற்றியும் எடுத்துச் சொல்லவேண்டிய தேவை இல்லை. அனசூயையோ அவளின் தவவலிமையால் கடும் வரட்சியிலும் கங்கையை வரவழைத்ததோடு அல்லாமல், காட்டில் அந்த ஆசிரமத்தைச் சேர்ந்த அனைவருக்கும் வளம் பெருகும்படிச் செய்தவள்.

அரசர்களை எடுத்துக் கொண்டாலும் பல மன்னர்களின் பத்தினிகள் சிறந்தே விளங்கி வந்திருக்கின்றார்கள். புத்திசாலித் தனத்திலும், வீரத்திலும், கணவனுக்கு உதவி செய்வதிலும் சிறந்தவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர். சத்தியவானின் மனைவி சாவித்திரி, தன் விவேகத்தாலும், புத்தி சாதுர்யத்தாலும் யமனை வென்று கணவனை மீட்டு வந்ததோடு , கணவனின் ராச்சியத்தையும் மீட்டுத் தந்தாள். தசரதனின் மனைவியான கைகேயியோ, கணவன் போரில் ரதத்தின் கடையாணி கழன்று வீழ்ந்து துன்பப்பட்ட நேரத்தில், துர்வாசரின் சாபத்தால், இரும்பாய் மாறிவிட்ட தன் சுட்டுவிரலைக் கடையாணியாய்க் கொடுத்து, தன் கணவனைக் காத்தவள்.

கிருஷ்ணனின் மனைவியான சத்யபாமாவும் கண்ணன் போருக்குச் சென்றபோது துணைக்கு ரதம் ஓட்டிச் சென்று கணவனுக்கு உறுதுணையாக இருந்தவள். இது தவிர, சந்தனுவின் மனைவியான கங்கை, மச்சகந்தி, திருதராஷ்டிரன் மனைவியான காந்தாரி, பாண்டுவின் மனைவியான குந்தி, பாண்டவர்களின் மனைவியான திரௌபதி என அனைத்துப் பெண்களுமே தைரியம், வீரமும் நிரம்பப்பெற்றவர்களாகவும், பேச்சுச் சாதுரியம் நிரம்பியவர்களாகவும், தங்கள் திறமையாலும், விவேகத்தாலும் கணவர்களுக்கு உதவியவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர்.

சரித்திர காலங்களிலும் சேர, சோழ, பாண்டியர்களின் மனைவிகளில் இருந்து பெரும்பாலான பெண்கள் தைரியமும், வீரம், சொல்லாற்றல் நிரம்பியவர்களாக இருந்து வந்திருக்கின்றனர். புலமையிலும் சிறந்து விளங்கிய பெண் புலவர்கள் உண்டு.

பாரத வரலாற்றில் பின்னர் வந்த காலகட்டங்களில் தான் பெண்களின் நிலை சீரழிவு ஏற்பட்டது. சில தரப்பினர் பெண்கள் படிக்கக் கூடாது என்றும் சொல்ல ஆரம்பித்தனர். பெண்கள் என்றால் இழிவான பிறவிகள் என்ற நிலையும் உருவானது.

# பெண்ணின் சக்தி பெரிது



பெண் என்பவள் ஆதாரசக்தி, வாழ்வின் ஆதாரம். பெண் இல்லை எனில் சிருஷ்டியே இல்லை. அவளை முன்னிறுத்தியே சிருஷ்டி நடந்து வருகின்றது. பெண் தான் கர்ப்பம் தரிக்கின்றாள். குழந்தையைப் பெற்று எடுத்து வளர்க்கின்றாள். அத்தகைய ஒரு மாபெரும் சக்தியை நம் இதிகாசங்களோ, புராணங்களோ இழித்துப் பேசி இருக்கின்றது என்ற கூற்றே தவறு அல்லது தவறான புரிதல் என்று சொல்லலாம்.

ஆண் சார்புடையவன். பெண்ணின் துணை இல்லாமல் ஒரு ஆணால் வாழ்க்கை நடத்த முடியாது. ஆனால் ஆணின் துணை இல்லாமல் பெண்ணால் வாழ முடியும். இன்னும் சொல்லப் போனால் திருமணமே செய்து கொள்ளாமல் பெண் தனித்து வாழ்வாள். ஆனால் ஆண் திருமணம் செய்து கொள்ளாவிட்டாலும், கூட எந்த விதத்திலாவது ஏதாவது ஒரு உறவின் முறைப் பெண்ணை ஏதோ ஒரு சமயம் நாட வேண்டி உள்ளது என்பதே உண்மை. கணவனை இழந்த பெண்களோ, அல்லது சிறு வயதிலேயே கண வன் விட்டு விட்டுச் சென்றாலோ பெண்கள் அஞ்சுவதில்லை. தன் மக்களைத் தாங்களே எப்பாடு பட்டாவது தாங்கி வளர்க்கின்றார்கள். அதே ஒரு ஆணால் தன்னந்தனியாக மனைவியோ, அல்லது வேறு ஒரு பெண்ணின் துணையோ இல்லாமல் தன் மக்களை வளர்க்க முடியாது என்பதும் உண்மை. கணவனை இழந்த பெண்களை விடவும், மனைவியை இழந்த ஆண்களே மனதளவில் மிகவும் பாதிக்கப்படுவது, ஆய்வில் மட்டுமில்லாமல் கண் கூடாகவும் தெரியும் ஓர் உண்மை.

பெண் தன் சக்தியை முழுமையாகக் காட்டினால் ஆண்களால் தாங்க முடியாது என்பதே உண்மை. ஆனால் பெருமளவும் பெண்களின் சக்தி சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. தவறான உள் நோக்கத்துடனேயே நோக்கப்படுகிறது.வியாபார நோக்கில் இன்றைய நாள்களில் பெரும்பாலும் தன் சக்தியைப் பெண் விரயம் ஆக்குகின்றாள்.

தன்னிடம் உள்ள ஆத்ம சக்தியைப் பெரும்பாலான பெண்கள் உணரவே இல்லை. ஆத்ம சக்தியை உணர்ந்த பெண்கள் தொழுவதற்கு உரியவர்களாக ஆகிறார்கள். அவர்கள் மீது அனைத்து ஆண்களுக்கும் ஒருவித பயம் கலந்த பக்தி உண்டாகிறது. ஆனால் அதே ஒரு பெண்ணாக இருந்தால் தன் கணவனின் ஆத்மசக்தியைத் தனக்கும் சேர்த்துத் துணையாக்கிக் கொண்டு தன் இல்லறத்தை நல்லறமாக்கிக் கொள்வது மட்டுமில்லாமல், தன் குலத்தையே தழைக்கச் செய்வாள். உண்மையில் பெண்கள் ஆண்களை விடப் பலம் படைத்தவர்கள் மனோரீதியாக.

முதலில் சொன்னதற்கு உதாரணம் புனிதவதியார். கணவன் கொடுத்த மாம்பழத்தை சிவனடியார்க்குப் படைத்த அவர், பின்னர் இறை அருளால் மற்றொரு மாம்பழத்தை வரவழைக்கக் கண்ட அவரது கணவன் பரமத்தன், அவரிடம் இருந்து ஒதுங்கினான். ஏனெனில் அவரின் இறைத் தன்மையைக் கண்டு பயமும், மரியாதையும் கலந்த ஓர் உணர்வு அவனிடம் உண்டாகியது. பவளமல்லிப் பூவைத் தலையில் சூட முடியுமா? இறைவனுக்கே படைக்கப்பட்டவை அல்லவா அவை. ஆகவே இப்படிப்பட்ட பெண்களைப் புனிதவதியார் என்றழைக்கப்படுவதில் தவறே இல்லை. பிறப்பால் மட்டுமன்றி அவர்களின்புனிதத்தன்மை ஏதோ ஒரு காலகட்டத்தில் [illegible] பிறந்ததன் நோக்கம் புலப்பட, சாதாரண வாழ்வு வாழ அ[illegible] என்பது புலனாகின்றது. இதைப் போய்த் தவறு என்று சொல்லி, புனிதம் என்று பெண்ணை ஒதுக்கி ஆணாதிக்கம் பேசுபவர்கள் புனிதத்தின் அர்த்தத்தையே புரிந்து கொள்ளாதவர்கள்.

அந்தப் பெண் படைக்கப்பட்ட நோக்கம் தெரிய வந்ததுமே இல்வாழ்வு அவளுக்கு மறுக்கப்பட்டது. என்றாலும் முதலில் கலங்கிய அந்த அம்மையார், பின்னர் தெளிந்தார் . தன் வாழ்வின் நோக் கம் புரிந்து கொண்டார். ஒருவேளை இதைப் புரிந்து கொண்டு, அதனாலேயே ஔவை திருமணத்துக்கு முன்பே, மூப்பை வேண்டிப் பெற்றாளோ

அடுத்த உதாரணம் வள்ளுவனின் வாசுகி. வள்ளுவர் எப்படிப்பட்ட மனிதர் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. வள்ளுவரோடு வாழ வந்த வாசுகியோ, கணவனின் தனித்தன்மையை உணர்ந்து, அவரின் ஆன்மிகத்தையும், இறை உணர்வையும் புரிந்து கொண்டதோடு அல்லாமல், அதற்கு உறுதுணையாகவும் இருந்து வந்திருக்கின்றாள். அதனாலேயே வள்ளுவரின் திருக்குறள் பெற்ற பெருமை இன்றளவும் பேசப்படுகின்றது.

இது போலவே அகத்தியரின் மனைவியான லோபாமுத்திரை. அழகியும், அரசகுமாரியும் ஆன அவள் இயற்கையாகவே பேரறிவு வாய்ந்தவள். அதோடு அம்பிகையை நாள் தோறும் வணங்கி அம்பிகையின் மகாமந்திரம் ஆன ஸ்ரீவித்யா மந்திரத்தைப் பரிபூரணமாய் அறிந்து அதன்படி தவம் செய்தவள்.

எனினும் ஒரு குள்ள முனிக்கு வாழ்க்கைப் பட்டதோடு அல்லாமல், அதே ஸ்ரீவித்யா மந்திரத்தை தன் கணவர் ஆன அகத்தியருக்கு ஹயக்ரீவர் மூலம் வழங்கச் செய்தவள். ஆம், லோபாமுத்திரையின் கணவன் என்பதாலேயே அகத்தியருக்கு அந்த யோகம் கிட்டியதாய்ச் சொல்லுகின்றது புராணம்.

குடும்பத்தைத் தாங்கும் ஒரு பெண், தன் தனி ஒரு குடும்பத்தை மட்டுமின்றி சமூகத்துக்கே பெரிய உதவி புரிகின்றாள். நல்மக்களை வளர்ப்பதன் மூலம் நாட்டையே [illegible]கின்றாள். கணவனது உடல், உள்ளம் மட்டுமில்லாமல் அவனின் ஆன்மா[illegible] காப்பது பெண்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை நாடகத் துறையின் இணையற்ற நடிகை கலைஞானவாரிதி சந்திரா சரவணமுத்து

ஈழத் தமிழர்களின் கலை வளர்ச்சியில் இந்தியக் கலைஞர்களின் நேரடியான பங்களிப்புக்கள் பெருமளவாக இருந்துள்ளதைக் கடந்த கால வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த வகையில் தென்னிந்தியாவைப் பிறந்த இடமாகவும் ஈழத்தைப் புகுந்த இடமாகவும் கொண்டவரான ஈழத்தின் இசைநாடகத் துறையில் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிவரும் ஒருவர். மரபு வழியாக ஆற்றுகைப்படுத்தப்பட்டு வரும் அனைத்து விதமான இசை நாடகப் பிரதிகளையும் முழுமையாகத் தெரிந்த சிறந்த நடிகையாகவும் விளங்கி வருபவர் இசைநாடகச் செல்வி சந்திரா சரவணமுத்து.

மறைந்த போல் கிறேசி சின்னம்மா தம்பதியரின் மகளாக 12.08.1937இல் தென்னிந்திய மாநிலங்களுள் ஒன்றான கேரளாவின் திருச்சூரில் இவர் பிறந்தார். இசைக் கலைஞரும் கலை ஆர்வலருமான இவரது தந்தையாருடன் தமிழகத்துக்கு வந்து இசையிலும் நடனத்திலும் சிறுவயதிலேயே தேர்ச்சி பெற்றுத் தனது அக்காவான இந்திராவுடன் இணைந்து பல மேடைகளில் நடன நிகழ்வுகளை வழங்கியும் இசைநாடகத் துறையில் ஈடுபட்டும் வந்தார்.

அந்தக் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய நாடக சபாக்களில் இணைந்து இசை நாடகங்களிலும் நாட்டிய நிகழ்வுகளிலும் பெருவிருப்புடன் இந்திரா – சந்திரா சகோதரிகளான இவர்கள் ஈடுபட்டு வந்தனர். இந்திராவுடன் துணைப் பாத்திரங்களில் எல்லா விதமான நாடகங்களிலும் நடித்து வந்ததுடன் சில திரைப்படங்களிலும் இருவருமாக அக்காலத்தில் நடித்திருந்தனர். தமிழகத்தில் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாகக் கலைத் துறையில் புகழ் பெற்றிருந்த இவர்கள் கொக்குவில் தா.சின்னத்துரை என்பவரால் 1949இல் ஈழத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தமது தந்தையாருடன் இங்கே வந்திருந்த இவர்களது நடன நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் பெரும் வரவேற்பைப் பெற்றன. ஆடலிலும் பாடலிலும் சிறந்து விளங்கிய இவ்விருவரதும் நிகழ்வுகள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுப் புகழ்கொண்டு விளங்கின. இந்திரா – சந்திரா சகோதரிகள் என்னும் பெயர் அக்காலத்தில் இலங்கை முழுவதும் நடைபெற்ற கலைநிகழ்வுகளில் பெரும் செல்வாக்குச் செலுத்தி நின்றன.

1949 இல் இருந்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக இச்சகோதரிகள் நம் நாட்டிலேயே தங்கியிருந்து கலைச்சேவையாற்றி வந்தனர். இக்காலத்தில் இசை நாடகத் துறையில் நடிகராகவும் ஹார்மோனியக் கலைஞராகவும் பெரும் புகழ் பெற்றிருந்த இணுவில் வே.சரவணமுத்து என்பவரைத் திருமணம் செய்து தனது இல்வாழ்வையும் கலைவாழ்வையும் ஈழத்தில் நிரந்தரமாக்கிக் கொண்டார் சந்திரா.

பொன்னாலை கிருஷ்ணன் கோயிலில் ஏற்பாடாகியிருந்த பவளக்கொடி என்னும் நாடகத்தை மேடையேற்றவேண்டிய குழுவினர் திடீரென வெளியூர் சென்றமையால் அந்த நாடக விழாவானது வே.சரவணமுத்து தலைமையில் நடத்தப்பட்டது.

இந்த நாடகத்தில் முதல்



**சாதனைக் கலைஞரைச்**
**சந்திப்போம் சிந்திப்போம்**

**39**

முதலாக அல்லியாக நடித்து இரசிகர்களின் பெரு வரவேற்பைப் பெற்று அன்றிலிருந்து பிரதான நடிகையாக இவர் ஏற்றம் கண்டார். கணவரால் வழங்கப்பட்ட உற்சாகமும் பயிற்சியும் சிறந்ததொரு இசைநாடகக் கலைஞராக இவரை உருவாக்கியது.

1953இல் இருந்து கதாபாத்திரங்களை ஏற்று நடிக்கத் தொடங்கி, வள்ளி, சாவித்திரி, பவளக்கொடி, அல்லி, நல்லதங்காள், மாதவி, ஞானசவுந்தரி, சந்திரமதி போன்ற பாத்திரங்களில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நடித்துப் புகழ் பெற்றார்.

வி.வி.வைரமுத்து, வ.செல்வரத்தினம், ம.தைரியநாதன், சி.ரி.செல்வராசா, வி.என்.செல்வராசா, இராமலட்சுமி, வடிவேலு, கன்னிகா, பரமேஸ்வரி, சகுந்தலா, சாந்தா, கனகா போன்ற இசைநாடக நடிகர்களுடன் இணைந்து சிறப்புடன் நடித்து இத்துறையில் பெண்களின் பங்களிப்பையும் பெண் நடிகர்களுக்கான தனித்துவத்தையும் நிலைநிறுத்தி ஈழத்தின் இசைநாடக வரலாற்றில் தன் பெயரைப் பதித்துக்கொண்டவர்.

சுருதி, லயம் சற்றும் பிசகாமல் பாடியவாறு பாத்திரத்தின் தன்மையை உணர்ந்து நடிக்கும் ஆற்றல் கொண்ட இவர், எல்லா விதமான உணர்வுகளையும் கனகச்சிதமாக வெளிப்படுத்தும் அற்புதத் திறன் கொண்டர். தனக்குத் தேவையான ஒப்பனைப் பொருள்களையும் ஆடை, அணிகலன்களையும் சொந்தமாக வைத்திருந்த இவர் வீரமைந்தன், சங்கிலியன், அத்தைமகள் போன்ற சமூக நாடகங்களிலும் நடித்தவர்.

"எனது பன்னிரண்டாவது வயதில் ஈழ மண்ணில் காலடி பதித்தேன். தந்தையுடனும் அக்காவுடனும் இங்கேயே தங்கியிருந்து கலைநிகழ்வுகளை நடத்திய அந்தக் காலம் பொற்காலம்தான். இரவு ஒன்பது மணிக்குத் தொடங்கும் இசை நாடகம் மறுநாள் காலை ஆறு மணிக்கே நிறைவுறும். மக்கள் கூட்டமோ அலைமோதும். நாடகம் முடியும் வரை ஒருவர் கூட எழுந்து செல்வதில்லை. இதனால் நடிகர்களும் உற்சாகத்துடன் விடியும் வரை நடிப்பார்கள்.

ஆனால் தற்காலத்தில் இசை நாடகத்தின் நிலையோ தலைகீழாக மாறிவிட்டது. இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களே நாடகங்கள் நடத்தப்படுகின்றன. தற்காலத்தில் திருவிழாக்களை நடத்துகின்ற பிரமுகர்களும் முழு இரவும் நாடகங்களை ஆற்றுகைப்படுத்த விரும்புவதில்லை. நீண்ட நேரம் இசைநாடகத்தை நிகழ்த்தக் கூடிய நாடகக் குழுக்களும் தற்போது இல்லை. நாட்டில் ஏற்பட்ட அசாதாரணமான சூழல்களும் இந்தத் துறையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியுள்ளன என்பதை மறுக்க முடியாது. இனிவரும் காலத்திலாவது ஆலயத் திருவிழாக்களில் நல்ல கலைநிகழ்வுகளை மேடையேற்றவும் தமிழர் கலைகளை வளர்க்கவும் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

அத்துடன் கலைத்துறையில் இளமைத் துடிப்புடனும் ஆற்றுகை வல்லமையுடனும் இருக்கும் காலத்திலேயே கலைஞன் மதிப்பளிக்கப்பட்டு ஊக்கப்படுத்தப்படவேண்டும். தரமான கலைவிழாக்களும் பண்பாட்டு விழாக்களும் நடத்தப்பட்டு உண்மையான கலைஞனை இனம் கண்டு மக்கள் முன்னிலையில் போற்றி மதிப்பளித்தால் அக்கலைஞனின் ஆயுள் அதிகரிக்கும், கலைச் செயற்பாடுகளும் உயர்ச்சி பெறும்.

ஆனால் தற்காலத்தில் முதுமையடைந்து வீட்டிற்குள் முடங்கி எழுந்து நடக்க முடியாமல் ஓய்வு நிலையில் இருக்கும் கலைஞர்களையே தேடிப்பிடித்து விருதுகளை வழங்குகின்றனர். இவ்விருதை எனது இளமைக் காலத்தில் தந்திருந்தால் மேலும் ஒரு படி உயர்ந்திருப்பேன், மகிழ்ந்திருப்பேன், என்று பல முதுகலைஞர்கள் முணுமுணுத்துக் கொள்கின்றனர்" என்று தனது உணர்வலைகளை இவர் பகிர்ந்து கொள்கிறார். ✱

■ வசாவிளான் தவமைந்தன்

# வெயில் காலத்தில் உடல் நலம் பேண மருத்துநீர் அற்புத மருந்து

சித்திரை மாதம் வருகிறது என்றலே புது வருடப் பிறப்பு வரப்போகிறது என்ற குதூகலம் எல்லோர் உள்ளத்திலும் ஏற்படும். கூடவே, வெயில் வெப்ப நோய்களும் வரப்போகின்றன என்பதை நினைத்துப் பார்க்க யாரும் விரும்புவதில்லை. ஆனால் உண்மை அதுதான். சித்திரை வைகாசி மாதங்கள் இளவேனிற்காலம். அதாவது இளவெயில் காலம் என்றும் ஆனி, ஆடி மாதங்கள் முதுவேனிற்காலம். அதாவது முது வெயிற் காலம் என்றும் கூறப்படுகிறது. எனவே, சித்திரை வருகிறது என்றாலே வெயிற் காலம் ஆரம்பிக்கிறது என்று கருத்து. வெயிற்காலத்தில் எமது உடல் வெப்பு அல்லது வெக்கையை உணர்கிறது. வேர்க்குரு, சொறி, சிரங்கு, தாகம், கண்ணோய்கள், தலைவலி, காய்ச்சல், போன்ற பலவிதமான நோய்கள் ஏற்பட்டு உடலை வாட்ட வாய்ப்புகள் உள்ளன.

நோய் வந்த பின்னர் சிகிச்சை பெறுவதிலும் பார்க்க நோய் ஏற்படாமல் முற்பாதுகாப்பாக நடந்து கொள்வதே ஆரோக்கியத்துக்குச் சிறந்தது. அந்த வகையில் எம் முன்னோர்களான ஞானிகளும், சித்தர்களும் அறிமுகப்படுத்திய ஓர் அற்புத மருந்தே மருத்து நீர் அல்லது மருந்து நீராகும். தற்காலத்தில் சமயம் சார்ந்த ஒரு விடயமாக சித்திரைப் புத்தாண்டு தினத்தில் தலைக்கும் உடலுக்கும் தேய்த்துக் குளிக்கப் பாவிக்கப்படும் மருத்து நீர் உண்மையில் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் ஒரு மருந்தாகும். மருத்து நீர் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மூலிகைகளின் மருத்துவ குணங்களை கருத்தில் கொள்ளும்போது இவ்வுண்மை புலனாகிறது.




துளசி, தாமரைப்பூ, பீர்க்கம் இலை, தாதுமாதுளம் பூ, தாழம்பூ, வில்வமிலை, விஷ்ணுகிராந்தி, அறுகம்புல், சீதேவியார் செங்கழுநீர், சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், பால், கோசலம், கோமயம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம் என்பன மருத்துநீரில் சேரும் முக்கிய மூலிகை மருந்துச் சரக்குகளாகும். இவற்றின் மருத்துவ குணங்கள் வருமாறு-

**துளசியிலை**

உடற்சூடு, மூக்கால் நீர்வடியும் பீனிச நோய், இருமல் சளி, கபதோசம் என்பவற்றை நீக்கும் .

**தாமரைப்பூ**

வெப்பத்தாலுண்டாகின்ற கண்ணெரிவு, சுரம், நீர்வேட்கை (தாகம்) என்பவற்றை நீக்கும்.

**தாது மாதுளம்பூ**

உடலுக்கும், கண்ணுக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

**தாழம்பூ**

தாழம்பூ ஊறிய நீர் வியர்வையைப் பெருகச் செய்து உடல் வெப்பத்தைத் தணிக்கும். தலைவலியையும், உடல் வலியையும் போக்கும். மனதுக்கு மகிழ்ச்சியை இதன் நறுமணம் ஏற்படுத்தும்.

**வில்வமிலை**

கண்ணெரிவு, கண்சூடு, கண் சிவப்பு, முதலிய வெப்பத்தாலுண்டாகும் கோளாறுகளை வில்வமிலை ஊறிய / அவித்த நீர் போக்கும்.

**விஷ்ணு கிராந்தியிலை**

உடற்சூடு, சுரம், தாபம், தாகம்,கோழை, இருமல், உடல்தளர்ச்சி என்பவற்றை நீக்கி உற்சாகத்தைக் கொடுக்கும்.

**அறுகம்புல்**

தலைநோய், கண் புகைச்சல், சொறி, சிரங்கு, படர்தாமரை, உடல் வெப்பு என்பவற்றை நீக்கும்.

**பீர்க்கம் இலை**

இந்த இலையூறிய நீர் கண்சூடு, கண்ணெரிவு, என்பவற்றை நீக்கும்

**மஞ்சள்**

இது ஒரு கிருமி கொல்லி.. தோற்புண்கள், சொறி, சிரங்கு ஏற்படாமல் பாதுகாக்கும்.

**சுக்கு, மிளகு, திப்பிலி**

உடலுக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

சலதோஷத்தைப் போக்கும்.

**கோசலம்,கோமயம், பால்**

புதிதாகப் பெறப்படும் கோசலம், கோமயம் என்பன கிருமிகள் தோலின் தொற்றாமல் பாதுகாக்கும். பால் உடலுக்குக் குளிர்ச்சியை ஏற்படுத்தும். பொதுவாக மருத்து நீரிலுள்ள மூலிகைகள் இவற்றுடன் சேர்த்து அவிக்கப்படுவதால் இரண்டினதும் வீரியமும் அதிகரிக்கிறது.

**குங்குமப்பூ**

தாழம்பூவைப் போல் உடலுக்கு நன்மை பயக்கும்

**கோரோசனை**

உடற்சூடு, கபதோஷம் என்பவற்றைப் போக்கும்.

எனவே, மருத்துநீரைப் புது வருட தினத்தில் மட்டுமன்றி, வெயிற் காலத்தில் வாரம் ஒருமுறையாவது தலையிலும், உடலிலும் தேய்த்துக் குளித்து வருவதன் மூலம் வெயிற் காலத்தில் ஏற்படக்கூடிய உடல் நோய்களிலிருந்து பாதுகாப்பைப் பெற இயலும்.

வசதியானவர்கள் மேற்படி மூலிகை மருந்துச் சரக்குகளை மூலிகைக் குளியலாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 209

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | 5 | |
| | | 6 | | 7 | | | |
| 8 | 9 | | | 10 | | | 11 |
| 12 | | | 13 | | | 14 | |
| | 15 | 16 | | | | 17 | |
| 18 | | | | | 19 | | |
| 20 | | | 21 | 22 | | | 23 |
| | | 24 | | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. இந்த ஆறுதலைத் தேடித்தான் எல்லோரும் அலைகிறார்கள்
4. தர்க்கம்/ஒரு நோய்
6. பார்வைக்குக் கிட்டுவது
8. ஆகுதி
10. போக அல்ல
12. தூர அளவிடை
13. கை கூப்பு
15. பகிடி
17. பெருங்குழி
18. சமமானது
19. நில்
20. ஒரு காட்டு மிருகம்
21. அதிகாரம் தருவது இது
24. ஈராறு

### மேலிருந்து கீழ்

1. நிரந்தரம் அற்ற தன்மை
2. சமயம்
3. மூன்று
4. குரங்கு
5. தமது
7. நாவிதன் செய்வது
9. படித்தவன்
11. அரிசியில் இருந்து பிரித்து எடுப்பது
13. குமரன்
14. இளம்பெண்
16. அளவீட்டில் நீள, அகல, உயரத்தைக் குறிக்கும்
18. புகழுடம்பு புதைத்த இடத்தில் கட்டுவது
19. விலக்கும் அல்லது நீக்கும் எனப் பொருள் தரும்
22. ஏகம்
23. தேசம்

✱வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

✱ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 207 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பிசகு (4) வாசகன் (7) சாட்டல் (8) கல
(9) சுடலை (10) சிலம்பு (12) கரம் (13) அபிநயம்
(15) கவி (16) கல் (17) குழு
(18) பகர (20) பருத்தி (22) திரும்பல் (23)துரு

**மேலிருந்து கீழ்**

(1) பிசாசு (2) சட்டம்பி (3) குடலை (5)சகலம்
(6) கலம் (10) சிரம் (11) புரவி (12) கயல்
(13) அதிபதி (14) நகரம் (15) கழுத்து (17)குரு
(19) கரு (20) பல் (21)திரு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 209**
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*[பிறைவேற்]லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 18.04.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.209 இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 22.04.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 207 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**பி.பிரணவி,**
இல.276, மூர் வீதி, மன்னார்.

**2 ஆம் பரிசு**
**சி.சிந்துஜா,**
இல.184, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
**ப.மதுசிகன்,**
இல.31, ஆசாத் வீதி,யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**மு.தங்கராசா,**
அவ்வொல்லை வீதி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு**
**இ.சிவகாமி,**
சிவன் வீதி, ஆவரங்கால்.

**பாராட்டுப் பெறுவோர்**

**திருமதி தவமணி பிறேமானந்தன்,**
சின்னக்கடை,
பிரதான வீதி, மன்னார்.

**லீலா யேசுசகாயம்,**
அன்னவாசா, நவாலி தெற்கு, மானிப்பாய்.

**திருமதி சி.கோகுலன்,**
இல.86, மாதா கோயிலடி, கற்குழி,
வவுனியா.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ் மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடு[illegible] காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது வி[illegible] அனுப்பிவைக்கப்படும்.*

## பாரதப் போர்.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூந்தலைக் களைந்து விட்ட பின் காலில் விலங்கு மாட்டி உன்னையும் நான் கட்டி விட்டால் மாபாரதம் வாராது காக்கலாம் என்கிறான்.

*"பாராளக் கர்ணன் இகல் பார்த்தனை முன் கொன்று அணங்கின்*
*காரார் குழல்களைந்துன் காலிற் தளை பூட்டி*
*நேராகக் கைப் பிடித்து நின்னையும் யான் கட்டுவனேல்*
*வாராமல் காக்கலாம் மாபா ரதம் என்றான்"*

எனச் சகாதேவனைக் காட்டுகின்றார் வில்லிபுத்தூராழ்வார்

இதனைச் செவிமடுத்த ஸ்ரீகிருஷ்ணன், புன்னகை பூத்த முகத்துடன் கேட்கிறார் சகா தேவனே நீ கூறுவது போல கர்ணனுக்கு அரசுரிமையைக் கொடுக்கலாம், பார்த்தனையும் கொல்லாம், பாஞ்சாலியின் கூந்தலையும் களைந்து போடலாம். ஆனால் என்னையும் பிடித்துக் கட்டி வைப்பேன் என்கிறாயே அது எப்படி உன்னால் முடியும். பார்க்கலாம்! என்று கூறியவர் பார்க்குமிடமெங்கும் தனது மாய உருவைக் காட்டி நிற்கிறார்.

உடனே சகாதேவன் கிருஷ்ணா! முகுந்தா! என்று தியானத்தில் மூழ்கி நிற்கிறான்.

உண்மையான கிருஷ்ணன், சகாதேவனுடைய உள்ளத் தாமரையின் அன்பில் அடங்கி விடுகிறார்

''சகாதேவனே போதும் உன்சித்து விளையாட்டு என்னை விட்டு விடு'' என்று கூறியருள் செய்து அவனை ஆசீர்வதிக்கிறார் கிருஷ்ண பரமாத்மா.

பாரதப்போர் முடிவில் கர்ணன் தவிர்ந்த குந்திபுத்திரர் அனைவரும் நல்வாழ்வு பெறுவீர்கள் உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும் என வாழ்த்துகின்றார் கண்ணபரமாத்மா. ✱

## கலைஞனின்....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குன்றையும் வானத்தையும் அந்தக் காலநிலையையும் தவிர இந்த உலகில் வேறு எவையும் அவனுக்கு எஞ்சி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. என் முதுகுப்பக்கம் கடுமையாக குளிர்ந்தது. இருப்பினும் ஒரு இதமான வெப்பமும் என்னுள் பரவுவதை உணர்ந்தேன். அது எப்படிச் சாத்தியம்? அவனைச் சுற்றியுள்ள சக்தி வட்டம் தான் காரணமா?

அவனைப் பிடித்து உலுக்கினேன். திடுக்கிட்டுத் திரும்பினான். என்னைப் பார்த்து புன்முறுவலுடன் ''நீ வந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சி சூர்யா, நீயும் அங்கே பார்!'' என்றான்.

நிமிர்ந்து வானத்தை பார்த்தேன். என்ன ஆச்சரியம்! வானம் இத்தனை அழகா?

இவ்வாறான மோசமான கால நிலை என்பது உலகின் சோகமான துக்கமான சம்பவங்களின் பிரதிபலிப்பு என்பது நீண்ட காலமாக எனது எண்ணமாக இருந்து வந்தது. என் எண்ணம் முழுவதும் தவறானது என்பதை இன்று உணர்ந்து கொண்டேன்.

இந்த மேகக் கூட்டங்களில் வானத்தின் வேந்தன் வர்ண பகவான் காட்டும் வர்ணஜாலங்கள்தான் எத்தனை?

முகில்களுக்கு இடையே இடைக்கிடை தெரியும் மெல்லிய நீலம், ஒவ்வொரு மின்னலுக்கு இடையிலும் தெரியும் ஊதா நிற அழகுத் தோற்றம், ஆங்காங்கே தெரியும் பால் வெள்ளை முகில்க் கூட்டம் அவை யாவும் மிக மிக அழகாகத்தான் இருக்கின்றன.

இப்பொழுது குளிர் நடுக்கம் எல்லாமே எங்கோ போய் உடல், உள்ளம், ஆத்மா எல்லாமே வர்ணிக்க முடியாத ஓர் ஆனந்த அமைதி நிலைக்கு மோனநிலைக்கு சென்று விட்டன.

பாமன் யார் என்பது, இப்பொழுது எனக்குத் தெரிந்து விட்டது. அவன் கண்களில் இருந்து வீசும் ஒளிக் கீற்றுகளை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்.

அவை சாதாரணமான கண்கள் அல்ல, அவை கலைஞனின் கண்கள். அந்தக் கண்களின் உடைமையாளன் சாதாரண ப்ரகிருதி அல்லன். அவன் ஒரு அற்புத கலைஞன்.

எல்லோரும் அவனை பைத்தியம் என்று நினைக்கலாம். அழைக்கலாம். ஆனால் உண்மை நிலையை மற்றவர்களின் எண்ணமோ அபிப்பிராயமோ மாற்றி விடப்போவதில்லை.

இப்போதெல்லாம் அந்தக் குன்றில் குந்தியிருப்பது அவன் ஒருவன் மட்டுமல்ல. அவனுடன் அவனைப் புரிந்து கொண்ட இன்னுமொருவனும்தான்.

பாமனுடன் இணைந்து அந்தக் குன்றில் வீற்றிருந்து வானத்தை பார்த்து இயற்கையன்னையின் அழகை இரசிப்பது எனக்கு மிகவும் பிடித்த பொழுதுபோக்கு.

அந்த வழியால் போவோர் வருவோர் எல்லாம் எம்மிருவரையும் விநோதமாக பார்த்து எதுவும் புரியாமல் தலையை ஆட்டியபடி நகர்ந்து செல்வார்கள்.

அதைப் பற்றி எங்களுக்கு என்ன கவலை? வாழ்க்கையில் எவ்வளவு ஆனந்த அனுபவங்களை தெரியாமலேயே அறியாமலேயே இந்த மனிதர்கள் வீணடிக்கின்றார்கள்,

இந்த ஆனந்த வெள்ளத்தை அள்ளி பருகும் கலையை இந்த மனிதர்கள் அறிந்து கொண்டால் அதன் சுவையைத் தெரிந்து கொண்டார்களாயின் அதன் பின்புதான் நாம் யார் என்பதை இவர்களும் அறிந்து கொள்வார்கள். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் 10ஆம் திகதி வரை

# சிரிய அதிபருக்கு கால அவகாசம்

ராம்

## 48 மணிநேரத்தில் அனானின் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்

சிரியாவில் போர் ஓய்வு ஏற்படவும் ஆயுதப் படைகளை விலக்கிக் கொள்ளவும் கொபி அனான் 6 அம்சத் திட்டம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். அதனை ஏற்றுக்கொண்டு செயற்படுத்த 10 ஆம் திகதி வரை சிரிய அதிபருக்கு அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆசாத் அதை நிறைவேற்றுவார் என்பதில் அமெரிக்காவுக்கு நம்பிக்கையில்லை.

ஐ.நா. அரபு லீக் தூதராக சிரியாவுடன் பேச்சுக்கள் நடத்திவரும் முன்னாள் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் சிரியாவில் அமைதியை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருப்பவர்களுக்கு மகிழ்ச்சிதரும் செய்தியொன்றை வெளியிட்டிருக்கிறார்.

ஒருவருடகால உள்நாட்டு மோதலில் 10 ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டுள்ள நிலையில் கொஞ்சமும் விட்டுக்கொடுக்க மறுத்து வந்த அதிபர் பஷர் அல்- ஆசாத் அமைதித் திட்டத்தை வரும் பத்தாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ராணுவத்தை உடனடியாக போராட்ட நகரப் பகுதிகளிலிருந்து விலக்க ஆரம்பிப்பதாகவும், ஏப்ரல் 10 ஆம் திகதி அளவில் கனரக ஆயுத வாகனங்கள் மற்றும் ராணுவத்தினரை முற்றாக விலக்கிக்கொள்வதாகவும் சிரியா ஒப்புக்கொண்டிருப்பதாக அனான் அறிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொபி அனான் இது குறித்து அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதை அடுத்து அமெரிக்கத் தூதுவர் சுசான் ரைஸ் அதனைப் பத்திரிகையாளர்களிடம் வெளியிட்டார்.

இந்த விவகாரத்தில் சாதகமான ஒரு நிலை தோன்றுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழுவும் முக்கிய பங்குபணி ஆற்றியுள்ளது. அனான் சிரியாவுக்கு விஜயம் செய்து திரும்பியதன் பின்னரும் எதிர்ப்புப் படைகள் மீது கடும் தாக்குதல்களை அதிபரின் படைகள் நடத்திக் கொண்டிருந்த வேளையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவர் ஜேகொப் கெல்லன் பேர்கர் அங்கு அவசரமாகப் பயணம் செய்து திரும்பினார். கடந்த வருடத்திலிருந்து, இது அவரது மூன்றாவது பயணமாகும். கெல்லன் பேர்கர் திரும்பியதை அடுத்து கொபி அனான் சிரியா தமது அமைதித் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருப் பதாகவும் வரும் 10 ஆம் திகதியிலிருந்து அதனை செயல்படுத்துவதாகவும் தெரிவித்திருப்பதாகக் கூறியுள்ளார். ஒரு பொது இணக்கப்பாட்டின் கீழ் ஏப்ரல் 10ஆம் திகதியை திட்டம் செயல்படுத்துவதற்கு ஏற்ற தினமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்று சிரியாவின் ஐ.நா. தூதுவர் பாஷர் ஜபாரியும் உறுதிப்படுத்தியுள்ளார்.

சிரியா, அனானின் அமைதித் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருப்பதாக செய்தி வந்துள்ள போதிலும் பாதுகாப்புச் சபையிலும் வெளியிலும் உள்ள ராஜதந்திரிகள் சந்தேகத்துடனேயே இருக்கிறார்கள். ஜெனீவாவில் தற்பொழுது இருந்துவரும், கொபிஅனான் வீடியோ மாநாடு மூலம் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுக்கு தமது அறிக்கையை தாக்கல் செய்தார்.

அமெரிக்கத் தூதுவர் ரைஸ் அம்மையார் மேலும் கருத்து வெளியிடுகையில்:-

அதிபர் ஆசாத் தமது வாக்குறுதியை நிறைவேற்றுவாரா? என்பதில் அமெரிக்காவுக்கும் வேறு நாடுகளுக்கும் சந்தேகம் இருக்கவே செய்கின்றது என்றார்.

அனானின் அமைதித் திட்டத்தின்படி காலக்கெடு முடிவடைவதற்கு 48 மணித்தியாலத்துக்கு முன் சகல விதமான மோதல்களும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். அனானின் ஆறு அம்சத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களில் இதுவும் ஒன்று என்று ராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

கொபி அனான் ஐ.நாவுக்குத் தெரிவித்துள்ள ஆலோசனையில் சிரியாவின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கென விரிவான செயல் திட்டமொன்றுடன் மேற்பார்வைக் குழுவொன்றை அங்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஒன்று தெரிவித்துள்ள கருத்தில், அரபு வசந்த எழுச்சியுடன் ஆரம்பமான சிரியா விவகாரத்தில் இதுவரை 10, 108 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த வித எழுச்சியின் காரணமாக எகிப்து, டுனீஷியா போன்ற நாடுகளில் அரசுகளின் பதவி கவிழ்க்கப்பட்டுள்ளன.

### சிரிய அதிபரின் வாக்குறுதியில் அமெரிக்காவுக்கு நம்பிக்கையில்லை

போர் ஓய்வுக்கான இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டிருப்பதாகத் தகவல் வந்துள்ள நிலையிலும் அதிபர் பஷர் அல் ஆசாத்தின் ராணுவம் எதிர்ப்புப் படைகள் மீது கடுமையான குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. போர் ஓய்வுக்கு அதிபர் ஆசாத் இணங்கியிருந்தாலும் அதனை அவர் கொண்டு நடத்துவார் என்பதில் தங்களுக்கு சந்தேகம் இருந்துவருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

புதன்கிழமையன்று அதிபர் ஆசாத்தின் படைகள் பல நகரங்களிலும் கிராமங்களிலும் உட்புகுந்து ஷெல் குண்டுகளை வீசித் தாக்குதல்களை நடத்தியதாகவும் இதில் 52பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகளுக்கான சிரிய அவதான நிலையம் அறிவித்தது. இவர்களில் 28பேர் பொது மக்கள் என்றும் இந்தத் தாக்குதல் பெரும்பாலும் ஹொம்ஸ் மாகாணத்திலுள்ள நகரங்களில் இடம் பெற்றதாக அந்த அவதான நிலையம் கூறியது.

ஆசாத்தின் படைகள் எதிர்த் தரப்பினரின் வீடுகளை நெருப்பிட்டுக் கொளுத்துவதாகவும் நாடு முழுவதும் அவர்களின் வீடுகளில் கொள்ளையிடுவதாகவும் அந்த அவதான நிலையம் அறிவித்திருக்கிறது. இந்தச் செயற்பாடுகள் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களாகக் கருதப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரிய மக்களுக்கெதிராக ஆசாத்தின் படைகள் இனக் கொலை நடவடிக்கையொன்றில் இறங்கியிருப்பதாகவும், சர்வதேச சமூகம் இந்தப் படைகளை உடனடியாக வெளியேறும்படி செய்யவேண்டும் என்றும், சிரியாவின் பிரதான எதிர்த்தரப்பான சிரிய தேசிய கவுன்சில் கேட்டிருக்கிறது.

### ஆஸ்திரேலியாவுக்கு 200 அமெரிக்கப் கடற்படையினர்

ஆசியப் பெருங்கடல் பகுதியை வல்லரசு கெடுபிடிகளுக்குள்ளாக்கும் வகையில் அந்தப் பகுதிகளில் உள்ள நாடுகளே வழியமைத்து வருகின்றன.

பொருளாதார மேம்பாட்டுக்காகவும் அண்டை நாடுளை ராஜதந்திர நெருக்குதல்களுக்கு உள்ளாக்கவும் பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகள் கம் யூனிஸ்ட் சீனாவுக்கு தமது மண்ணில் அதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றனர்.

பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில் இந்த நாடுகளில் அரசியல் சித்தாந்த மட்டத்திலும் சீனா காலப்போக்கில் கால் பதித்து விடலாம் என்ற அச்சம் மேற்குலக நாடுகளுக்கு ஏற்பட்டிருப்பது இயற்கை. அது மட்டுமல்ல இந்த நாடுகளில் சீனா அமைத்துக் கொடுக்கும் பெரும் எடுப்பிலான கட்டுமானங்களுக்கு தம் நாட்டிலிருந்தே பாதுகாப்புப் படைகளை அனுப்பி உதவும் நிலைப்பாட்டுக்கும் எதிர்காலத்தில் கோரிக்கை வரலாம். இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் பெரும் அளவில் முதலீடுகளைப் போட்டிருக்கும் சீனா அதற்கான பிரதிபலன்களை எதிர்பார்க்காமல் இருக்காது.

உலகப் பார்வை ஒரு கண்ணோட்டம்

மாபலியிடம் மூன்றடி மண் கேட்டுப் பெற்ற வாமணன், மூன்றாமடியை அவன் தலைமீதே வைத்துப் பாதாளத்துக்கு அனுப்பிய கதைகள் எம் மத்தியில் உண்டு. இவைகளைப் பற்றியெல்லாம் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் உணராமல் இல்லை.

அந்த வகையில் தான் ஆஸ்திரேலியாவின் வடபிராந்தியத்தில் 2, 500 படைவீரர்களை நிலைகொள்ளச் செய்வதற்கான திட்டமொன்றைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. அங்கிருந்தபடி தென்கிழக்காசியா முழுவதையும் ஆளில்லா விமானங்களைக் கொண்டு கண்காணிக்க ஏற்பாடு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் படி தற்பொழுது அமெரிக்கப் படைகளின் 200 பேர் கொண்ட கடற்படையின் முதல் அணியினர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றடைந்துள்ளனர்.

கடந்த வருடம் நவம்பரில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தபோது இதற்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இது சீனாவை கடும் ஆத்திரத்துக்கு உள்ளாக்கி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

### மியன்மாரில் ஏற்பட்டுவரும் சீர்திருத்தம் ராணுவ ஆட்சி முடிவுக்கு வருமா?

அதிகார மமதையாலும், ஆள் அணி பலத்தினாலும் அநீதியாளர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத்தான் தம் ஆட்சியை நடத்த முடியும். தென்னாபிரிக்காவில் 25 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் கிடந்து உழன்ற நெல்சன் மண்டேலா என்ற பெருந்தகை ஈவிரக்கமற்ற வெள்ளைத் தோல் மேலாதிக்கவாதிகளை எதிர்த்து நின்று தமது நாட்டுக்கும் தம் மக்களுக்கும் விடுதலையைப் பெற்றுத்தந்தார்.

ஒரு சில வெள்ளை இனத்தவர்கள் பெரும் எண்ணிக்கையிலான கறுப்பின மக்களை அடிமைகளாக வெகு காலம் வைத்திருக்க முடியாது என்பதை மண்டேலா நிரூபித்திருந்தார். இன்று தென்னாபிரிக்கா விடுதலை பெற்ற நாடாக, விடுதலையை விரும்பும், விடுதலைக்காகப் போராடும் நாடுகளுக்கும் இனங்களுக்கும் முன் உதாரணமாக விளங்குகிறது.

தென்னாபிரிக்கத் தலைவரைப் போலவே 22 வருடங்களுக்கு மேலாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த மியன்மாரின் ஜனநாயகத்துக்கான போராட்ட வீராங்கனை ஆங்சான் சூகி இன்று அந்த நாட்டின் இடைத் தேர்தலில் அமோக வெற்றியை ஈட்டி ராணுவ ஆட்சியாளர்களுக்குப் பாடம் புகட்டியிருக்கிறார்.

ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு ராணுவ ஆட்சியை நிலைநாட்டி உரிமைக்காகப் போராடிய ஜனநாயகவாதிகளை சிறையில் அடைத்தும் தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்தும் அட்டூழியம் புரிந்த ராணுவ ஆட்சியாளர் இன்று மக்களின் அதிகாரத்துக்கு அடிபணியும் அளவுக்கு வந்துள்ளார்கள். ராணுவ ஆட்சியை ஏற்றுக்கொள்ளாத நாடுகள் அனைத்துமே மியன்மாருக்கு எதிராக குரல் எழுப்பி வந்தன. ஐரோப்பிய யூனியன் போன்றவை அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்திருந்தன.

''ராணுவத்தை வைத்துக்கொண்டு எத்தனை காலமும் பதவியில் இருக்கலாம்'' என்ற மாயை இன்று மலையேறிவிட்டது. ''மக்கள் சக்திக்கு முன் வேறு எந்த சக்திக்கும் இடமில்லை'' என்ற நிலைமை இன்று மியன்மாரில் தோன்றியிருக்கிறது. எகிப்து, லிபியா, டுனிஷியா போன்ற நாடுகளாலும் இது இப்போது நிரூபணமாகியுள்ளது. அந்த வழியில் இனி மியன்மாரில் நல்லதோர் மாற்றத்தைக் காணமுடியும். வெளியாரின் நேரடியான தலையீடு இன்றி நேரடியான மக்கள் வாக்களிப்பின் மூலம் அங்கு ராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போட்டியிட்ட அனேகமாக அனைத்து இடங்களிலும் ஆங்சாங் சூகியின் தலைமையிலான கட்சி வெற்றி பெற்றிருப்பதாக செய்தி வந்துள்ளது.

இப்பொழுது போட்டியிட்ட தொகுதிகள் அனைத்திலும் ஒன்றைத்தவிர வெற்றிவாகை சூடியுள்ள ஜனநாயகத்துக்கான தேசிய சபை, மியன்மார் நாடாளுமன்றத்தில் காத்திரமான பங்களிப்பைச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆங்சான் சூகி நாடாளுமன்றில் இருந்து பணியாற்றுவதை இப்போதைய ஆட்சியாளர்கள் விரும்புகிறார்கள். ராணுவத்தின் ஆதரவுபெற்ற யூனியன் ஒருமைப்பாடு மற்றும் அபிவிருத்திக்கான கட்சி இப்பொழுது சௌகரியமான பெரும்பான்மையோடு விளங்குகின்றது. ஆனால் காலப்போக்கில் ஆங்சாங் சூகியின் கட்சி மக்கள் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைக்கும் நிலைக்கு வரும் என்பது எல்லோரது எதிர்பார்ப்பாகும்.

கடந்த திங்கட்கிழமை தமது கட்சியின் வெற்றி குறித்து ஆங்சாங்சூகி வெளியிட்ட கருத்தில் பல பத்து ஆண்டு காலம் ராணுவ ஆட்சியில் அடக்குமுறையை அனுபவித்த தேசத்துக்கு ''புதிய சகாப்தம்'' ஒன்று உருவாக இருப்பதை தமது கட்சியின் வெற்றி எடுத்துக் காட்டுகிறது என்று கூறினார். தமது கட்சியினரை வீண் பெருமை கொள்ள வேண்டாம் என்றும் அடக்கத்தோடு இருக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

மியன்மாரின் தேசிய வாழ்வில் வேகமான மாற்றங்கள் ஏற்பட்டுவருவதை ஆங்சான் சூகி தேர்தலில் வெற்றிபெற்று, நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருப்பது காட்டுவதாகக் கருதப்படுகிறது. பல பத்து ஆண்டுகளாக இடம்பெற்று வந்த இராணுவ ஆட்சி கடந்த வருடம் முடிவுக்கு வந்தது.

பதவியிலிருக்கும், ஓரளவு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட இப்போதைய ஆட்சியாளர்கள் கடந்த ஆண்டிலிருந்து பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து வருவது ஆட்சிக்கு எதிரானவர்களையும் கூட ஆச்சரியத்தில் மூழ்கடித்து வருகிறது. அரசியல் கைதிகளின் விடுதலை, பிரதான அரசியல் நீரோட்டத்தில் எதிர்க்கட்சியினரை இணைத்துக்கொள்ள ஆரம்பித்திருப்பது முதலியவை இதில் அடங்கும். மியன்மாரில் ஏற்பட்டுவரும் ஜனநாயகத்துக்கான மாற்றங்களையடுத்து பல நாடுகளும் முன்பு விதித்திருந்த பொருளாதாரத் தடைகளை நீக்கிவருகின்றன.

### தீவிரவாதிகள் கடத்திய 10 பொலிஸாரும் 14 ஆண்டுகளின் பின் விடுதலை

கடந்த 12 அல்லது 14 ஆண்டுகளுக்கு மேலாக கடத்தி வைத்திருந்த 10 பொலிஸ் உத்தியோகத்தர்களை கொலம்பியாவில் ''பார்க்'' தீவிரவாதிகள் விடுதலை செய்துள்ளார்கள்.

கொலம்பியாவில் இயங்கிவரும் புரட்சிகர ஆயுதம் தரித்த ராணுவம் என்று அழைத்துக்கொள்ளும் அமைப்பு, கடந்த பெப்ரவரியில் ஏற்பட்ட ஓர் இணக்கப்பாட்டுக்கு அமைவாகத்தான், காட்டுப்பகுதிகளில் பல வருடங்களாகக் கடத்தி வைத்திருந்த பொலிஸாரை விடுவித்தது. லத்தீன் அமெரிக்காவில் இயங்கிவரும் கிளர்ச்சிக்குழுக்களில் பெரிய அளவிலான கிளர்ச்சிக்குழு இது என்று கூறப்படுகிறது.

விடுவிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் களைப்படைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

ஆனால் உறவினர்களைக் கண்டதும் புன்சிரிப்பு செய்தனர். இவர்களின் விடுதலையில் அங்குள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு மும்முரமாக ஈடுபட்டிருந்தது தெரியவந்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிலையைப் பாதிக்கும் இணைய பாவனை

■ *நித்தியா*

வடமாகாண மாணவர்களின் கல்வி நிலை மிகவும் மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்பதைக் கடந்தவாரம் வெளியான கல்விப்பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் தெட்டத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. இதுவரை இல்லாத அளவுக்கு இந்த வருடம் சித்தியடைந்தோர் வீதத்தில் வடக்கு மாகாண மாணவர்கள் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளனர். போர்ச்சூழல் நிலவிய காலத்தில் கூட இத்தகைய பின்னடைவு ஏற்படவில்லை என்று அரசால் மாத்திரமன்றி கல்வி ஆர்வலர்கள் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தத் தருணத்திலாவது எமது மாணவ சமுதாயம் எத்தகைய பின்னணியில் சென்றுகொண்டிருக்கின்றது, சமுதாயத்தவர்களாகிய நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதைச் சற்றுச் சிந்தித்துப்பார்க்கவேண்டாமா? ஏனென்றால், வாழ்க்கை என்னும் சக்கரத்தில் அவசர அவசரமாகப் பயணித்துக்கொண்டிருக்கின்ற நாம் எல்லோரும், மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதைச் சில சந்தர்ப்பங்களில் மறந்துவிடுகின்றோம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கல்வி வீழ்ச்சி நிலைக்கு போர் நெருக்கடி, இடப்பெயர்வு, முகாம் வாழ்க்கை போன்றன காரணங்களாகக் கூறப்பட்டாலும், தற்போது மிகப்பெரிய காரணியாக தொழில்நுட்ப முன்னேற்றம் கொண்டு வந்த கைபேசி மற்றும் இணையப் பாவனைகள் அமைந்துவிட்டதை யாரும் மறுத்துவிட முடியாது.

சிறுவயதிலேயே தனியறை, அந்த அறைக்குள் கணினி, மடிக்கணினி, தொலைபேசி மற்றும் நவீன பொழுதுபோக்குகளைப் பிள்ளைகள் கேட்டவுடனேயே வாங்கிக் குவித்து அழகுபார்ப்பது தேவைதானா? இவற்றுடன் இருபதற்கே பிள்ளைக்கு ஒரு நாள் போதாது? இந்த நிலையில் பாடங்களைப் படிப்பதற்கு எங்கே நேரம். சிந்தியுங்கள் பெற்றோர்களே!

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்று கூறுவார்கள். அன்று நிலைவைக் காட்டி சோறூட்டிய அன்னைமார் இன்று தொலைக்காட்சியைக் காட்டி உணவூட்டுகின்ற கொடுமை தாங்கமுடியவில்லை. இன்று தொலைக்காட்சியே இல்லாத வீடுகளே இல்லை. அதைவிட கணினி மற்றும் மடிக்கணினி தேவையில்லை என்றால் கூட, அவற்றை வாங்கி இன்றைய இளம் சிறார்களின் கைகளில் கொடுத்து அழகு பார்ப்பதைப் பெருமையாக நினைக்கின்றனர் பெரும்பாலான பெற்றோர்கள்.

இவற்றைவிட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் தற்போது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இணைய மையங்கள் விளங்குகின்றன. பெரும்பாலான மாணவப் பருவத்தவர்கள் இந்த நிலையங்களிலேயே தமது பெரும்பொழுதைக் கழிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. குடாநாட்டில் பல பிரதேசங்களிலும் குறிப்பாக கிராமப் புறங்களையும் இந்த இணைய மையங்கள் ஆக்கிரமித்துள்ளன.




இணைய மையங்களில், தனிக் கணினியில் நீண்டபொழுதைக் கழிக்கும் சிறுவர்கள் ''பேஸ்புக், கேம் என்று தமது பொழுதை வீண்பொழுதாகவே கழிக்கின்றனர். இணையத்திலும் அறிவு சார்ந்த விடயங்கள் இருந்தபோதிலும், அவற்றை விரும்பிக் கற்போர் குறைவே. அதுமட்டுமன்றி மாணவர்களின் அதிகரித்த இணையப் பாவனை கலாசாரப் பிறழ்வுகளுக்கும் அவர்களை இட்டுச் செல்கிறது. இத்தகைய இணைய மையங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். சில வசதி படைத்த மாணவர்கள் கைத்தொலைபேசிகளைப் பாடசாலைக்குக் கொண்டு சென்று மறைத்து வைத்திருந்து பாட வேளையிலும் விளையாடுகின்றனர். இணையத் தளங்களைப் பார்வையிடுகின்றனர். இதனால் மாணவர்களாலேயே மாணவர்களின் கற்றல்கள் சிதறடிக்கப்படுகின்றன. இதில் பெற்றோருக்கும் பங்குண்டு. ''பாதுகாப்புக்காக போன்கொடுத்து விடுகின்றோம்'' என்று அவர்களே பிள்ளைகளுக்குப் பக்கத் துணையாகச் செயற்படுகின்றார்கள்.

படிக்கும் காலத்தில் இவை அவசியமற்றவை. மிக மிக அவசியமான நேரங்களில்மாத்திரமே அவற்றை உபயோகப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தை அள்வான கண்டிப்புடன் மாணவர்கள் மனதில் ஊட்ட வேண்டும்.

பெற்றெடுத்த பிள்ளைகளைச் சரியான வழியில் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வளர்ப்பதில்தான் பெற்றோரின் திறமையும் கடமையும் அடங்கியுள்ளது. அதை விடுத்து செல்ல வளர்ப்பு, செலவுக்காக அளவுக்கு மிஞ்சிப் பணம் கொடுத்தல் அவர்களை நல்வழிப்படுத்தாது. சிறுவர்கள் அறியாமலே செய்யும் பிழைகளைச் சுட்டிக் காட்டி அவர்களைத் திருத்துவதற்கு சமூகத்தில் உள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் பின் நிற்கக்கூடாது. அப்போதுதான் மாணவர்களின் கல்வி மட்டத்தை உயர்த்த முடியும். ✸

# இது வன்னிதானா?



■ *பாண்டியம்மா*

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பார்கள். வன்னி மக்களைத் துரத்திக் கொண்டிருக்கும் அவலமும் போரால் ஏற்பட்ட துன்பங்களும் தொடர் கதையாகவே உள்ளன.

அரசின் நெருக்கீடுகள் ஒரு புறம் சமுதாயம் கொடுக்கும் இடையூறுகள் ஒரு புறம் என்று துன்பங்கள் வாட்டி வதைத்தாலும் இயற்கை கூட இவர்களை விட்டு வைப்பதாய் இல்லை.

அவலம் மட்டுமே வாழ்க்கை என்னும் நிலைக்கு இங்குள்ள மக்கள் தள்ளப்பட்டு உள நோயாளிகளாக மாற வேண்டிய நிர்ப்பந்தம்தான் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட மக்கள் ஏன் ஒதுக்கப்பட்டவர்களா என்று எண்ணும் அளவுக்கு அவர்களின் அவலம் தொடர்கதையாகவே உள்ளது. ஏன் இந்த நிலைமை என்று வேதனைப்பட மட்டும் முடிகிறதே தவிர வேறு என்ன தான் செய்துவிட முடியும்.

போர் நெருக்கடிகள் ஓய்ந்ததாகக் கூறப்படும் நிலையில் மீண்டெழுந்த மக்களுக்கு மீண்டும் மீண்டும் துயரங்கள் தொடர் கதையாகவே உள்ளன.

சர்வதேசம் அளவில் அத்தியாயம் அத்தியாயமாகப் புரட்டப்படும் இவர்களின் வேதனைகள் வெளிவராதனவாகவே உள்ளன.

கொடுத்தார்க்குக் குறைவில்லை என்பார்கள் ஒரு காலத்தில் தென்னி லங்கையைச் சேர்ந்தவர்கள் உணவுத் தேவைக்காக வன்னி மண்ணை எதிர்பார்த்திருந்த காலம் இங்கு சற்று நினைவுக்கு வருகிறது.

அள்ளி அள்ளிக் கொடுத்து ஓய்ந்துவிட்ட இவர்களது கரங்கள் இன்று சுரண்டப்படுகின்றன. ஏனையோரது கரங்களை எதிர் பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலையில் தான் இன்று வன்னி மக்களின் நிலைமை உள்ளது.

நிம்மதியான உறக்கம், வயிரார உணவு, சுதந்திரமான நடமாட்டம், எல்லாவற்றையும் பறிகொடுத்து வெறும் பகட்டு வாழ்க்கையை மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இயற்கை கொடுக்கும் இம்சைகளையும் சொல்லொணாத் துயரமாக ஏற்று வாழப் பழகிவிட்டார்கள்.

யாரிடம் எதைச் சொல்வது, சொல்லியும் நடக்கப்போகிறதா? ஒன்றும் இல்லை, இதுதான் எங்கள் வாழ்க்கை என்று எமது வாழ் நாள்ளைக் கடத்துவதைத் தவிர வேறு வழி என்னதான் என்று ஒருவர் தனது ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்டத்தின் நகர்ப்புறம் ஒன்றில் நான் கடை வைத்த போது எல்லாம் புதுமுகங்கள் மொழி வேறு, இனம் வேறு என அவர்களின் அடையாளங்கள்.

இது வன்னிதானா? என்று எனக்குள் சற்று சந்தேகம் எழுந்தது. உறுதிப்படுத்த இது எந்த இடம் என்று அருகில் நின்ற ஒருவரிடம் கேட்டேன்.

கிளிநொச்சியா? என்று எமது தமிழுடன் கொஞ்சம் கலப்படமாய் அவரிடம் இருந்து பதில்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை எமது தமிழை அடையாளப்படுத்தும் உருவத்தை நான் காணவில்லை.

இதுதான் தற்போது வன்னி மாவட்டத்தின் நிலை.

புதுமுகங்களின் ஆட்சி மேலோங்கி இருப்பதால், வன்னி மாவட்டத்தை நிரந்தர இடமாகக் கொண்டவர்கள் வந்தேறு குடிகளாக ஒடுக்கப்பட்டு, நடமாடும் சுதந்திரம் கூட முடக்கப்பட்டுள்ளார்கள்.

போர் குடும்பத் தலைவனை கொய்து எடுத்துவிட்டதால், தலை இல்லாமல் வால் மட்டும் ஆடுகிறது.

பெண் தலைமைத்துவம் கொண்டு குடும்பம் என்றொரு புதுப்பிரிவினரும் உருவாக்கப் பட்டுவிட்டனர்.

வறுமையின் கொடுமைப்பிடி ஒய்யாரமாய் இவர்களின் தலையில் ஏறி இருப்பதால் அதன் [illegible] [illegible]

நிர்ப்பந்திக்கப்பட்ட துயரமான வாழ்க்கை இவர்களுக்கு. ஆண்களுக்கே வேலை கிடைப்பது கஸ்டமான ஒன்றாக உள்ள நிலையில் பெண்கள் வேலை தேடுவது என்பது எண்ணிப் பார்க்க முடியாத ஒன்றுதான். அதுவும் கணவனை இழந்த பெண்கள் என்றால், அவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக வேண்டிய இக்கட்டு நிலைக்குள் தான் இருப்பர்.

பெண்கள் தமது குடும்பம் சுமையைத் தீர்க்க வழி தேடும் போது எதிர் கொள்ளும் பல்வேறான சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

இராணுவத்தினரின் கெடுபிடிகள் ஒருபுறம், சமுதாய நெருக்கடி ஒரு புறம் என அல்லல் படும் இவர்களின் வாழ் நாள் வேதனைகளுடன்தான் தொடர்கிறது.

தொண்டுகள் புரிவதாகக் கூறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஏன் இவர்களைத் திரும்பிப்பார்க்கவில்லை.

மீள் குடியமர்வின் போது கட்டிக்கொடுத்த தற்காலிக குடிமனைகளையும் இயற்கை ஒரு புறம் துவம்சம் செய்து கொண்டிருக்கிறது.

வன்னிக் கொடூரத்தை பறைசாற்றி சர்வதேசத்திடம் அரசு பெற்றுக் கொண்ட உதவிகள் எங்கே? வன்னி மக்களின் துன்ப துயரங்களை மூடி மறைத்து தனது பகுதிக்குள் அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகிறது அரசு.


பரந்து பட்ட வன்னி மண்ணில் இன்று அனைத்தையும் இழந்து சோபை இழந்து காணப்படும் இவர்களது வாழ்வில் ஒளியேற்ற என்னதான் நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது அரசு.

விரக்தியின் விளிம்பில் மன உழைச்சலைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இவர்களது துயரம் எப்போது தீரப்போகிறது. ✸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமா

# இடரினும் தளராமல் எழுவோம்



இடரினும் தளராமல் கல்விக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள் வடபகுதி மக்கள்' என்றொரு காலம் இருந்தது. வடக்குத் தமிழர் தொடர்பில், பொதுநிலை அபிப்பிராயம் இப்படித்தான் நீண்ட காலமாக நிலவி வருகிறது.

போர் இடம்பெற்ற 30 ஆண்டு காலப்பகுதியில் குண்டுச் சத்தங்களுக்குப் பதறியடித்துப் பதுங்கு குழிகளுக்குள் காலத்தை நகர்த்திய போதும் வடபகுதி மக்கள் கல்வியில் சாதித்துக் காட்டினார்கள் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறோம்.

தவணை முறையில் அடுத்தடுத்துத் தொடர்ந்த இடப்பெயர்வுகளின் பொழுதெல்லாம் கொப்பி புத்தகங்களையும், குப்பி விளக்குகளையும் மறக்காது தூக்கிச் சென்றவர்கள் எமது மாணவர்கள் என்று பெருமை பேசுகின்றோம்.

புதர்களுக்கு மத்தியில் தறப்பாள் கொட்டிலுக்குள் குப்பி விளக்கின் சிறிய ஒளியில் புத்தகம் ஏந்திய மாணவர்களின் மன உறுதியை எல்லோரும் பாராட்டினார்கள்; வியந்தார்கள்.

ஆனால் போர் முடிந்த பின்னர் நிலைமை தலைகீழாகிவிட்டது போல் தோன்றுகிறது. அல்லது அப்போது இருந்தவெல்லாம் வெறும் மாயைகள்தானோ என்று எண்ண வைக்கிறது. 2011 ஆம் ஆண்டுக்குரிய சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் அப்படி எண்ண வைக்கின்றன.

மாகாண அடிப்படையில் பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கும் போது வடக்கு மாகாணம் இறுதி இடத்துக்குப் பின் தள்ளப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் கடைசி இடம் எமக்குத்தான். சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்டு வடபகுதியின் கல்வி நிலை வீழ்ச்சி கண்டுள்ளது என்ற முடிவுக்கு வரமுடியுமா என்று ஒரு சாரார் கேட்கிறார்கள்.

கடந்த வருடம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய ரீதியாக முதலாம் இடத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன் தட்டிக் கொண்டானே அதையேன் கருத்தில் எடுக்கவில்லை என்று கேட்கிறார்கள்.

ஒரு சிலரின் சாதனைகள் சமூகத்தின் கல்வி நிலையை வெளிக்காட்டிவிடமாட்டா. 2011 சாதாரணதரப் பரீட்சையிலும் கூட நிறைய மாணவர்கள் 9 'ஏ' தரசித்திகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், ஒட்டு மொத்தப் பரீட்சார்த்திகளின் அடிப்படையில் பார்க்கையில் உயர்தரம் கற்பதற்கான தகுதியைப் பெறுவதற்கு கிட்டத்தட்ட 50 விழுக்காட்டினர் தவறியிருக்கிறார்கள்.

கல்விதான் செல்வம் என்று கூறப்பட்ட வடக்கில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளமை உண்மையில் கவலைக்குரியது; கவனிப்புக்குரியதுதான். வடக்கு இறுதி நிலைக்குப் பின்தள்ளப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் தொடர்பாக கல்வியுடன் தொடர்புடைய அதிகாரிகளிடம் கேட்டபோது அவர்களில் பலர் ஒரேவிதமான காரணத்தைக் குறிப்பிட்டனர். ஒரு சில வித்தியாசமான பதில்களும் கிடைக்கப்பெற்றன.

"வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையில் வீழ்ச்சி கண்டுள்ளதாக ஒட்டுமொத்தமாகக் கூறிவிடமுடியாது. இங்குள்ள 12 கல்வி வலயங்களில் 7 வலயங்களின் பெறுபேறுகள் 60 வீதத்துக்கு மேற்பட்ட சராசரி சித்தி வீதத்தைக்கொண்டுள்ளது. இது திருப்தியளிப்பதாக இருக்கிறது. ஆனாலும் முன்னேற்றத்துக்கு இடமுண்டு'' என்கிறார் கல்வி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளர் எஸ். சத்தியசீலன்.

ஏனைய ஐந்து வலயங்களின் சித்தி வீதம்தான் அதிருப்தி அளிப்பதாக இருக்கிறது. தீவகம், மடு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு ஆகிய ஐந்து வலயங்களும் சித்தி விகிதத்தில் குறைந்திருக்கின்றன. இவற்றின் இந்த நிலைமைக்கு இறுதிப் போரும் காரணம் என்று சுட்டிக் காட்டுகிறார்கள். "போரால் பாடசாலைகள் இயங்கவில்லை, கல்விச் செயற்பாடுகள் முடங்கியிருந்தன. தற்போது இந்த ஐந்து வலயங்கள் மீதும் நாம் அதிக கவனமும் அக்கறையும் காட்டி வருகிறோம்'' என்கிறார் கல்விச் செயலாளர்.

"கல்வியில் சமத்துவமின்மை, கல்விக்குரிய வளங்கள் ஒரே மாதிரியாகக் கிடைக்காமை, போரும் போரினால் ஏற்பட்ட விளைவுகளும் வடக்கின் கல்வி நிலையை வீழ்ச்சி அடையச் செய்துள்ளன'' என்கிறார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின். அரசின் கல்விக் கொள்கையில் வடபகுதி கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டிலுள்ள ஏனைய மாகாணங்களுக்கு விதிவிலக்காக வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அதிபர், ஆசிரியர் இடமாற்ற குளறுபடிகளும் இழுபறிகளும்கூட கல்வி நிலை வீழ்ச்சிக்கான காரணங்கள் என்கிறார் அவர்.

வடக்கின் கல்விச் சொத்தை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடம்பெற்று வருகின்றமைதான் வீழ்ச்சிக்கான பிரதான காரணம் என்கிறார் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் சுதர்சன்.

"சாதாரண தரப் பரீட்சை முடிவில் வீழ்ச்சி கண்டுள்ள வடக்கு மாகாணம் இனிவரும் காலங்களில் உயர்தரப் பரீட்சையிலும் வீழ்ச்சி காணும். மாணவர்களுக்கான கவனக் கலைப்பான்கள் அதிகரித்துவிட்டன. பெற்றோரின் ஆசிரியரின் கட்டுப்பாட்டில் இருந்து மாணவர்கள் தாமாக விடுவித்துக் கொள்கின்றமை, போதைப்பொருள் பாவனை இவையே மாணவர்கள் படிக்கவேண்டிய நேரத்தில் படிக்காமல் வேறு விடயங்களில் கவனம் செலுத்தக் காரணமாகின்றன. பாடசாலைகளில் பாடவேளை உரிய முறையில் பயன்படுத்தப்படாமையும் வீழ்ச்சிக்கான காரணங்கள்'' என்று அவர் அடுக்கிக் கொண்டே செல்கிறார்.

"வடபகுதி மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அவர்களது கவனம் முழுக்க முழுக்க உயர்தரப் பரீட்சையே. எனவே சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை எடுத்து வைத்துக்கொண்டு வடக்கின் கல்வி நிலை வீழ்ச்சிகண்டுள்ளது என்று கருதமுடியாது. சாதாரண தரப் பரீட்சையில் மட்டாக சித்தியடைந்த மாணவன், உயர்தரப் பரீட்சையில் மருத்துவத்துறையில் சாதனை படைத்த வரலாறுகளும் உண்டு. எனவே வடக்கின் கல்வி நிலை வீழ்ச்சி கண்டுள்ளதாகக்கூறமுடியாது'' என்றார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் கூறுகிறார்.

எனினும் பொது அபிப்பிராயத்தின்படி கல்வி நிலை வீழ்ச்சியின் முதல்படியில் நிற்கிறது என்பதே.

உரியவர்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து இந்த நிலையை மாற்ற வேண்டும். தகுந்த நேரத்தில் தகுந்த நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டால் எதிர்காலத்தில் வீழ்ச்சியைத் தடுக்க முடியாமல் போகும் என்பதே பல பெற்றோர்களினதும் சமூகவியலாளர்களினதும் ஆதங்கம். அதிகாரிகள், பெற்றோர்கள், கல்வியியலாளர்கள், பல்கலைக்கழகம் சார்ந்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்பதன் மூலமே எதிர்காலச் சரிவிலிருந்து எமது கல்வியைப் பாதுகாக்க முடியும்.

# அறைகுறை வாழ்வு அவலத்தில் மக்கள்

ஜனநாயகன்

**தற்காலிக குடியிருப்புகளில் உள்ளவர்களுக்கு அரசால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் ஜூன் மாதத்துடன் நிறைவடையவுள்ளதாக செய்திகளும் வெளியாகியுள்ளன. மொத்தத்தில் இன்னும் சில மாதங்களுக்குள் மேலும் தொடர் துன்பங்கள் இவர்களை ஆட்கொள்ள தயாராகவே உள்ளன.**

அவலம், விரக்தி, ஏக்கம், துயரம் என்ற தொடர் சொற்றொடர்கள் தமிழ் மக்களின் நடைமுறை வாழ்க்கையுடன் இரண்டற பின்னிப்பிணைந்தனவாக உள்ளன. மரத்தில் இருந்து விழுந்தவனை மாடேறி மிதிப்பதைப்போல் ஆகிவிட்டது தமிழ் மக்களின் வாழ்வு.

கட்டியிருந்த கூடு கலைக்கப்பட்டு கூடு அமைந்திருந்த மரமும் வேரோடு பிடுங்கி எறியப்பட்டுவிட்டது. வீட்டை பறித்தெடுத்துவிட்டு விலைகேட்கும் சம்பவங்கள் தொடர்கதையாக இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் இலங்கையில் இடம்பெறுவதாக அரசு உலக நாடுகளுக்கு கூறிவரும் மீள்குடியமர்வு மக்களைப் பஸ்களில் கொண்டு சென்று சொந்த இடங்களில் இறக்குதல் என்றாகிவிட்டது. தற்காலிக தறப்பாள் கொட்டகையில் நடக்கும் வாழ்வே அவர்களின் நிகழ்கால, எதிர்கால வாழ்வாக தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

"பள்ளிக்கூடம் போன பிள்ளை படிப்பை நிறுத்திவிட்டு பாணுமின்றி கூழுமின்றி பட்டினியா சாகுது. வெள்ளைக்காரர் மாதம் இரண்டு வேளை வந்து பார்ப்பினம். வெளிச்சம் அற்ற குடிசையென்று எழுதிக் கொண்டு போவினம்'' என்ற பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் என்ற கவிதை தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகள் அங்குள்ள மக்களின் யதார்த்த வாழ்வின் பதிவு என்றாகி விட்டது.

போரின் பின்னரான மீள் கட்டுமான நிவாரண உதவிகளும் இவர்களின் அடிப்படை தேவைகள் கூட நிவர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. தறப்பாள் கொட்டகைகளில் தஞ்சமடைந்திருக்கும் மக்கள் வறுமையின் பிடியில் பசிக் களைப்பு, வாழ்வின் வெறுமை என்ற [illegible] சிலுவையை சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் உரிமையை நிலைநிறுத்தி நடத்தப்பட்ட போராட்டம் இவர்களை வலுக்கட்டாயமாக ஏதிலிகள் பட்டியலில் இணைத்துள்ளது.

போர் முடிவடைந்து விட்டது. உலகின் முன்னணி பயங்கரவாத அமைப்பு வேரோடு பிடுங்கியெறியப்பட்டு விட்டது என அடிக்கடி மார்தட்டி உலக அரங்குகளில் முழங்கிவரும் அரசு இவர்களின் வீடுகளை உயர் பாதுகாப்பு வலயங்களாக்கி இன்னும் முற்றுகைக்கு உள்ளேயே வைத்துள்ளது.

ஜீவனோபாயத் தொழில்களுக்கான மூலாதாரங்கள் உயர் பாதுகாப்பு வலய முட்கம்பிகளுக்கு பின்னாலேயே உள்ளன. இவர்களின் வயல் காணிகள் இன்னும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள்ளேயே. வறுமை இவர்களை இறுக [illegible] அரசு நிவாரணம் என்று வழங்கும் பிடி அரிசியும் இவர்களுக்கு ஆனைப் பசிக்கு சோளப் பொரியாகவே உள்ளது. இவர்களை வாட்டுவதில் இயற்கையும் அடிக்கடி தலைகாட்டிக் கொள்கிறது.

அந்த வகையில் வவுனியா மெனிக்பாம் முகாமில் அண்மையில் இடம்பெற்ற அனர்த்தம் ''அகதி'' என்ற முத்திரையுடன் வசிக்கும் மக்களை மீண்டும் அவலத்தில் தள்ளியுள்ளது. இவர்களின் 'தற்காலிக குடிசைகள் காற்றால் பிடுங்கி எறியப்பட்டு இயற்கையால் இவர்கள் அநாதரவாக்கப்பட்டுள்ளன.

முகாம் வாழ்வின் துயரங்களோடு சேர்த்து இயற்கையும் இவர்களை துயரத்துக்குள்ளேயே தள்ளிவருகின்றது. இந்த இயற்கைச் சீற்றத்தால் பல மக்கள் நிர்கதியாகியுள்ளனர். சம்பவம் கேள்விப்பட்டதும் குறித்த இடத்துக்கு விரைந்த வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீனிடம் தம்மை சொந்த இடங்களுக்கு விடுமாறு உணர்ச்சி பொங்க மக்கள் கதறி அழுதனர். இவர்களின் இந்த அழுகைக்கான பிரதிபலிப்பு எந்த வகையில் இவர்களின் சொந்த இடமீள் குடியமர்வுக்கு வலுச் சேர்க்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்த நிலையில் தற்காலிக குடியிருப்புகளில் உள்ளவர்களுக்கு அரசால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் ஜூன் மாதத்துடன் நிறைவடையவுள்ளதாக செய்திகளும் வெளியாகியுள்ளன. மொத்தத்தில் இன்னும் சில மாதங்களுக்குள் மேலும் தொடர் துன்பங்கள் இவர்களை ஆட்கொள்ள தயாராகவே உள்ளன.

வடக்கில் மக்களின் மீள் கட்டுமானங்களிலும் மீள் குடியமர்வுகளிலும் கொடிகட்டிப் பறக்கிறோம் என அறிக்கையிடும் ஆளும் தரப்பு, முகாம்களில் அடைபட்டுள்ள மக்களைச் சொந்த இடங்களில் முழுமையாக மீள்குடியமர்த்தும் செயற்பாடுகளிலும் அவர்களின் நிரந்தர வாழ்விடங்களில் புதைந்திருக்கும் கண்ணி வெடிகளை அகற்றி அவர்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை துரிதகதியில் ஈடுபட வேண்டும். ✸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஆனதி

# 2 பிள்ளையான் பிணம் என்றாலும் தூக்கிச் செல்ல முடியாது

## இறுதி நாள்களும் எனது பயணமும்

உடையார்கட்டு தொடக்கம் முல்லைத்தீவின் பல பகுதிகளும் சன நெரிசலால் திக்குமுக்காடிக் கொண்டிருந்தன. மனிதர்களின் ஆக்கிரமிப்பு அனர்த்தங்கள் போதாதென்று இயற்கையும் மக்கள் மீது சீறி விழுந்தது. காற்றும் மழையும் வந்து மக்களின் தறப்பாள்களைக் குதறி எறிந்தன. பகலும் இரவுமாகக் கொட்டிய மழை பெரு வெள்ளமாகி குடிசைகளை எல்லாம் அடித்து விழுத்திக் கொண்டு பாய்ந்தது.

போகிற நான் ஏன் சும்மா போகவேண்டும் என்ற குருட்டு நியாயத்துடன் வீதியோரம் ஒதுங்கிய மனிதர்களைக்கூட, வாரியிழுத்து வீழ்த்தி தனக்குள் சுருட்டிக்கொண்டு பாய்ந்தது. பல பேர் வெள்ளத்திலும் மாண்டுபோனார்கள். பாரிய மரங்கள்கூட வேரோடு பாறி வீழ்ந்தன. அதுவும் தன் பங்குக்கு சிலரைக் கொன்றுபோட்டது.

உலகமே சேர்ந்துநின்று கொல்லும் இனத்தில் தானும் ஒன்றிரண்டு பேரை கொன்றால் என்ன குறைந்தா விடும் என்று இயற்கையும் நினைத்ததுபோலும். எங்கும் சா மயம்.

உடையார்கட்டு, இருட்டுமடு பகுதிகளுக்குள்ளும் திடுதிப்பென எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. சரசரவென சனங்கள் கொட்டில்களைவிட்டு வெளியில் பாய்ந்தனர். பலர் உடுத்திய உடைகளோடும், சிலர் சில பைகளோடும் வீதிக்கு வந்தனர். போகவர முடியாத மக்கள் வெள்ளத்தால் வீதி திமிலோகப்பட்டது. வீதியோரம் முழுவதும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் நிறைந்து நின்றன. பயணிக்க இடைவெளியின்றி, தங்கிடங்களாகிய, கழிப்பிட மறைவாகிய, எரிந்து கருகிய, பூட்டுகள் தொங்கிய இன்னோரன்ன வாகனங்கள் நின்றன.

உடையார்கட்டு, இருட்டுமடு இடம்பெயர்வின் கையோடுதான் கோடி பெறுமதியான சொத்துக்களை கைவிட்டுவிட்டு உயிருள்ள மாந்தர்கள் மட்டும் ஓடத் தொடங்கினர். என்னுடைய குடும்பமும் இதன் பின்னரே மிகமோசமாக அலைமோதித் தவித்தது. என் வயோதிபத் தாய் தந்தைக்கு உதவ முடியவில்லையே என்ற ஏக்கம் என்னை வதைத்தது. என்னுடைய தங்கை மட்டுமே என் குடும்பத்தின் முழுப் பாரத்தையும் தன் தோள்களில் சுமந்தாள். என் குடும்பத்தின் நிலையை நினைக்கும்போதெல்லாம் எனக்கு அழுகை வரும்.

எனினும் நான் காணும் நூற்றுக் கணக்கான துயரங்களையும் நினைத்து, அவர்களது நிலையைவிட என் குடும்பத்தின் நிலை பரவாயில்லை என்று தேறிக் கொள்வேன். எனினும் அடுத்த நிமிடமே தடுமாறும் நடையுடன் என் தந்தை சனக் கூட்டத்தில் நெரிபடுவது என் நினைவில் வந்து வலியை ஏற்படுத்தும். இலகுவில் களைப்படைந்து விடக்கூடிய என் வயதான தாயார் என்னவென்று இந்த நடைப் பயணத்தை சமாளிக்கின்றாரோ என்று எண்ண முன் கண்களில் நீர் வழியும். பாவம் தங்கை, அவள் சம்பாதித்துச் சேர்த்த அனைத்து சொத்துகளையும் இழந்துவிட்டாள்.

வள்ளிபுனம், தேவிபுரம் பகுதிகளிலும் குடியிருப்பதும் கேள்விக் குறியானது. புதுக்குடியிருப்பின் இரணைப்பாலை நிரம்பி வழிந்தது. புதுக்குடியிருப்பின் மையப் பகுதியோ சுடு காடுபோல் கிடந்தது. அங்கு தாக்குதல் நடவடிக்கைக்குரிய போராளிகள் மட்டுமே நடமாடினார்கள். ஆனால் அதையண்டிக் கூப்பிடுதூரத்தில் இருந்த இரணைப்பாலையோ சன வெள்ளத்தில் மூழ்கியது.

எங்கும் சனக்கூட்டம். ஒருவர் முகத்தில் ஒருவர் மூச்சுவிடும் நெரிசல். காணும் இடமெல்லாம் தறப்பாள் கொட்டில்கள் முளைத்தன. பின் எரிந்து, கிழிந்து, மிஞ்சியவை பிடுங்கி... என்னடா வாழ்க்கை என்றானது. இந்தப் பூமியே பிளந்து எங்களை விழுங்கிவிடக் கூடாதா என்று வெறுத்துப்போனது. அடுப்பில் உலை ஏற்று வதே பிரச்சினை ஆகிவிட்டது. உடுத்த உடுப்பில்லை. குடிக்க நீரில்லை. உண்ண உணவில்லை. இருக்க இடமில்லை. படுக்க நேரமில்லை என்ற இல்லாமைகளே நிறைய இருந்தன.

இரணைப்பாலை, ஆனந்தபுரம் போன்ற பகுதிகளும் இராணுவ சன்னதங்கொண்டு குதறப்படத் தொடங்க, இலட்சக் கணக்கான மக்களின் இடம்பெயர் அவலம் தொடர்ந்தது. மாத்தளன் பகுதி நிரம்பியது. சொத்து சுகமில்லாத வெற்று மனிதர்களே இடத்தை முழுதுமாக நிறைத்தனர். சின்னஞ்சிறு பாடசாலை ஒன்றே பென்னம் பெரிய மருத்துவமனையானது. ஈவிரக்கம் பார்க்கும் குணங்களைக் கழற்றி வைத்துவிட்டதைப் போன்று மருத்துவர்களும் மருத்துவ தாதிகளும் கடமையாற்ற முடிந்தது. காயங்கள் மலிந்து போயின. மண்டபங்களையும் விறாந்தைகளையும் நிறைத்து அடுக்கிப் போட்டும், நோயாளிகளைக் கிடத்த அங்கே இடம் போதவில்லை. தெருவோரப் பிச்சைக்காரர்களைப்போல நடைபாதைகளில் குருதி வழியக் கிடந்தார்கள்.

ஏற்கெனவே எரிந்து சுடுகாடாகிப்போன புதுக்குடியிருப்பின் ஆனந்தபுரப் பகுதியில் தாக்குதலணிப் போராளிகள் நிலை கொண்டிருந்தார்கள். நகரக் கூடாது என்ற பிடிவாதத்துடன் நிலைகொண்ட போராளிகள் படையினருடன் கடுமையாகப் போரிட்டனர். ஆகவே படையினரால் முன்னரைப் போன்று இலகுவாக நீகர முடியவில்லை. முக்கிய பல தளபதிகள் நின்றுகொண்டிருந்த அக்கள முனையில், எதிரி கடுமையாகப் போரிட வேண்டியிருந்தது.

படையினர் எந்த இலக்கையும் இனங்காணாமல் குருட்டுத் தனமாக எறிகணைகளை ஏவிக்கொண்டே இருந்தார்கள். அவைகூட நாளாந்தம் சிலபேரை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தன. பத்து மீற்றர் பாதை திறப்பதற்கு நான்கைந்து போர் விமானங்கள் வந்து உதவி கொடுத்தன. எனினும் ஆனந்தபுரத்தில் போராளிகள் சண்டையிட்டுக்கொண்டே தான் நின்றார்கள். மக்கள் இடம்பெயரத் தொடங்கிய நாள்களிலேயே சுடுகாடாகத் தொடங்கிவிட்ட இரணைப்பாலை, வெறும் பொட்டல் வெளியாகி விட்டது. அங்கு போராளிகளைக் கூண்டுக்குள் அடைத்து வைத்திருப்பதைப்போன்று வியூகம் அமைத்து படையினர் சுற்றி நின்று தாக்கினார்கள்.

ஆனந்தபுரத்தைவிட்டு வெளியேற மாட்டேன் என்று தலைவர் உறுதியாகச் சொல்லியிருக்கிறார். போராளிகள் அங்கேயே செத்து மடிவார்களேதவிர ஒருபோதும் அவ்விடத்தை விட்டுவிட்டு வரமாட்டார்கள் என்று ஊரெல்லாம் கதைத்தது. அது படையினருக்கு தெரியுமோ, தெரியாதோ உண்மையோ, பொய்யோ என்று எவரும் அறிந்திருக்கவில்லை.

ஆனந்தபுரம், கணமும் தவறாமல் பாரிய குண்டுச் சத்தங்களால் அதிர்ந்துகொண்டே இருந்தது ஊருக்கே கேட்டது. நாளுக்கு நான்கைந்து தடவைகள் வந்து விமானங்கள் குண்டுகளை வீசுவதையும், கரும்புகையும் நெருப்பும் கிளம்புவதையும் மக்கள் எல்லோரும் கண்டார்கள். மாத்தளன் பகுதிக்குள் வந்த பின்னும் தேங்காய், மாங்காய், விறகுகள் பொறுக்க என இரணைப்பாலை பக்கமாக போய் வந்த சனங்களும் தம் பயணத்தை நிறுத்தி விட்டார்கள். ஏனெனில் அங்கே தென்னை, பனை உட்பட எந்தவொரு பச்சை மரமுமே இருக்கவில்லை. அத்தனையையும் எறிகணைகள் சீவிச் சரித்தன. ஒட்டுமொத்த புதுக்குடியிருப்பும் புகை படிந்த பொட்டல் வெளியானது.

ஆனந்தபுரத்தில் படையினர் பல நாள்களாக போரிடவேண்டி இருந்தது. அதனால் மாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பகுதிகளில் தறப்பாள்களை விரித்துக் கட்டிய மக்கள் கொஞ்சம் ஆசுவாசப் பெருமூச்சை விட்டபடி அரிசி, பருப்பைத் தேடத் தொடங்கினர்.

மருத்துவமனை வளாகங்களிலும், ஏனைய எறிகணைகள் விழுகின்ற இடங்களிலும் கிடந்த பிணங்களை அள்ளிச்செல்லும் பாரிய பொறுப்பை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்தது. உறவுகளால் கைவிடப்பட்டோ, அடையாளம் காணப்படாமலோ வெளியிடங்களில் கிடக்கும் பிணங்களை அள்ளிச்சென்று எங்கேயாவது புதைக்க வேண்டுமே. மருத்துவமனைக்கான தறப்பாள் கொட்டில்களில்கூட ஒருவரை ஒருவர் நெருக்கிக்கொண்டுதான் கிடந்தனர். அப்படி இருக்க பிணங்களை அடையாளம் காணும்வரை அடுக்கி வைத்துக்கொண்டு இருக்க முடியுமா? சில வேளை அடையாளம் கண்டுவிட்டவர்களும் அதிலேயே அழுதுவிட்டு போகவேண்டியதுதான். அது தனது குழந்தையின் பிணமேதான் என்றாலும் தூக்கிச்செல்ல முடியுமா? எங்கே கொண்டுபோய் புதைப்பது?

ஒருவரைப் புதைக்கவே இடமில்லை என்று திண்டாடினால் உழவியந்திரத்தில் பெட்டி பெட்டியாக அள்ளிச்செல்லும் பிணங்களை எங்கே கொண்டுபோய் கொட்டிப் புதைப்பது? வீதியில் இடைவெளியே இல்லாமல் ஆமையாய் ஊரும் வாகனங்களுக்கிடையே பிணங்கள் குவிக்கப்பட்ட உழவூர்திகளும் நகரும். பெட்டி முழுவதிலும் தாறுமாறாகக் கிடக்கும் பிணங்கள் உயிருள்ளவர்களை அச்சுறுத்தும்.

ஒரு கொத்துக்குண்டு விழுந்தும் பத்து இருபது என்று சனங்கள் காயப்பட்டு விழுந்தார்கள். குடும்பங் குடும்பமாகச் செத்தார்கள்.

பிணங்களைப் புதைப்பது ஒரு பிரச்சினை என்றால் காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு கொண்டுசெல்வதும், அவர்களது உயிர்களை காப்பாற்றுவதும் அதைவிடப் பிரச்சினை ஆனது.

அந்த இடத்தில் மட்டும் எல்லோரும் ஒருமித்துச்செயற்பட்டார்கள். யார் எவர் என்றில்லை. காயப்பட்டுவிட்டால் அவர்களை அவசர அவசரமாகத் தூக்கி வாகனங்களில் ஏற்றி மருத்துவமனைகளுக்கு அனுப்பிவிடுவார்கள். எந்த வாகனத்திலிருக்கும் சாரதியும் மாட்டேன் என்று ஒரு வார்த்தை சொல்வதில்லை. எவர் காயப்பட்டாலும், எவராவது தூக்கிச் சென்று மருத்துவமனையில் சேர்த்துவிடுவார்கள் என்று நம்பலாம். அந்த மனிதாபிமானம் எல்லோருக் கும் இருந்தது. ஆனால் மருத்துவமனையில் தான் மருந்துகள் இல்லாமல் போய்விட்டன.

காயப்பட்டவர்களைக் கொண்டுசெல்ல மட்டும் எப்படித்தான் வீதியில் இடம் கிடைக்குமோ தெரியாது. அம்புலன்ஸ்களின் அலறலும் அதன் பின்னே அணிவகுக்கும் வாகனங்களின் பாய்ச்சப்பட்ட ஒளியும் ஒலியும் மனிதர்களை பாதையிலிருந்து அப்புறப்படுத்தி விடுகின்றன. ஒன்று, இரண்டு, மூன்று எண்ணிக் களைத்துவிடுமளவுக்கு வாகனப் பேரணியாக காயப்பட்டவர்களை ஏற்றிச்செல்லும் சம்பவங்களும் நடந்தன.

அந்தளவுக்கு தொகையான மக்கள் காயப்பட்டார்கள். அடிக்கடி ஆகாயத்தில் விரியும் கொத்துக்குண்டுகள் அந்த கைங்கரியங்களைச் செய்தன. எல்லா வாகனங்களில் இருந்தும் வழியும் குருதி வெள்ளம் வீதியைச் சேறாக்கியது. அந்த வாகனங்கள் கடந்து சென்ற பின்பும் அழுகை ஒலியும் அலறல் ஒலியும் கேட்பவர் காதுகளுக்குள்ளேயே நிற்கும். என்னுடைய குடும்பத்துக்கும் பாரிய இழப்பு. ஆட்லறி எறிந்த ஒற்றை எறிகணையிலேயே எனது சின்னக்காவும் பதினான்கு வயது மகனும் பத்து வயது மகளும் ஒன்றுவிட்ட சகோதரர்கள் இருவரது துணைவியர் உட்பட உறவினர்கள் ஐந்துபேர் உடல்சிதறிச் செத்தனர்.

எனது தாய் தங்கை உட்பட உறவினர்கள் ஆறேழுபேர் காயமடைந்தார்கள். சம்பவமறிந்து நான் வலைஞர் மடத்துக்கு ஓடோடிச் சென்ற போது சன்னங்களும், எறிகணைகளும் என்னுயிரை குடிக்கவும் துரத்தின. எனினும்எப்படியோ உயிர் பிழைத்து நான் அங்கு சென்றபோது எஞ்சிய சிலர் மட்டுமே பிணங்களின் முன்னால் கிடந்து கதறினார்கள்.

மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டவர்கள் இரண்டு பிணங்களோடு அதே வாகனத்தில் திருப்பக் கொண்டுவரப்பட்டார்கள். இறந்தவர்களைப் புதைக்கும் அலுவல்களை உடனடியாக பார்த்தோம். என் அம்மாவுக்கு தலையிலும் முதுகிலும் ஐந்தாறு காயங்கள். இறந்தவர்களின் உடலங்களை பொலித்தீன் பைகளில் முடிச்சுகளாகக் கட்டி அப்புறப்படுத்திய கையோடு நான் உடனடியாக என் தாயாரை ஏற்றிக்கொண்டு அருகிலிருந்த மருத்துவமனைக்கு சென்றேன். ஏனையவர்கள் முள்ளிவாய்க்காலில் இருந்த உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டார்கள்.

அந்த நாள்களில் மாத்தளனில் இயங்கிய மருத்துவமனை ஊடாக காயமடைந்தவர்கள் கப்பலில் அனுப்பப்பட்டார்கள். எனினும் கப்பலுக்கு பதிவது என்பது சாதாரணமான விடயமாக இருக்கவில்லை. அதுவே பெரும் போராட்டமானது. மூச்சுவிடவே திண்டாடிக் கொண்டிருக்கும் தாயாருக்கு பயண அனுமதி எடுக்க இரவும் பகலுமாக நான் அங்கேயே அலைந்துகொண்டு திரிந்தேன். பெற்றுவளர்த்த என் தாயாரை அந்த நிலையில் தன்னந்தனியே அனுப்புவதில் இருந்த துயரத்தை என்னால் தாங்க முடியவில்லை. வயது கட்டுப்பாடு என்று தங்கை பயணத்துக்கான அனுமதி மறுக்கப்பட்டாள். அவளும் காயப்பட்டவள் என்பதால், ஏற்கெனவே எனது குடும்பத்தில் பலர் இறந்துவிட்டார்கள் என்பதால், அல்லது நான் போராளி என்பதால், அல்லது அவள் ஒரு மாவீரனுடைய தங்கை என்பதால் அனுமதித்து இருக்கலாமே என்று உறவுகள் என்னிடம் சண்டையிட்டார்கள். அந்தச் சூழ்நிலையில் நானும் ஒரு கையாலாக தவளைப் போலவே நின்றேன். ஏனெனில் எனது தங்கையைவிடவும் எனது குடும்பத்தைவி[illegible] எத்தனையோபேர் பயணத்துக்காக காத்துக் கிடந்தார்கள். கையில் ஒரு ஒற்றை சொப்பிங் பையும் ஆயிரம்ரூபா பணமுமாக அம்மாவை கடற்கரைக்குச் செல்லும் மருத்துவமனை வாகனத்தில் ஏற்றிவிட்டோம்.

அம்மாவை அனுப்பிவிட்டு நான் வீட்டுக்கு வந்தபோது சிதைந்து சுந்தலாகிப்போன தறப்பாள் கொட்டிலோரம் குந்திக்கொண்டிருந்த தந்தைக்கு தலைதடவி ஆறுதல் சொல்ல என்னிடம் எந்த வார்த்தைகளுமே இருக்கவில்லை. ஏனெனில் அவர் தன் மகளின் குடும்பம் உடல்சிதறி கிடந்த காட்சியை நேரே பார்த்தவர். என்னைப்போல் நிறையப் பிணங்களை அவர் இதற்குமுன் கண்டவரில்லை. கூழாகிப்போன உடலையும் தனித்தனியே சிதறிக்கிடந்த உடலின் பாகங்களையும் பொறுக்கிப்போட்ட காட்சிகளை கண்டதால் சுயநினைவை இழந்தவரைப்போல இருந்தார். அவரது கண்களில் இருந்து கண்ணீர் இடைவிடாமல் வழிந்துகொண்டிருந்தது. என் மனவேதனையை அவரிடம் பகிர்ந்துகொள்ளவும் எனக்கு விருப்ப மில்லை. சிதைந்துபோன குடிசைக்குள் நுழைந்தேன்.

அம்மா பணப்பையாக பாவித்த பழைய வெற்றிலைப்பெட்டியைத் தேடினேன். மருத்துவமனையில் வைத்து அம்மா என்னிடம் சொன்னார் வெத்திலப் பெட்டிக்க சில்லறை இருக்கு. அதைச் செலவுக்கு எடுத்துக்கொள் என்று. வெற்றிலை, பாக்கு கிடைக்காத காரணத்தால் காசுப் பெட்டியான அந்த சிறிய பெட்டி, தடித்த சில்வரால் ஆனது. 1985 ஆம் ஆண்டின் இடப்பெயர்வில் இந்தியாவின் அகதிமுகாமில் இருந்தபோது வாங்கிய பெட்டி அது. அதனை மட்டுமே அந்தக் கால நினைவுப்பொருளைப்போல அம்மாவாலும் போகுமிடமெல்லாம் கொண்டுபோக முடிந்தது.

கிழித்தெறியப்பட்ட தறப்பாள் துகள்களால் மூடப்பட்ட நிலையில் மூலையில்கிடந்த பெட்டியை எடுத்துத் திறந்தேன். உள்ளே இரண்டு இரும்புத் துண்டுகளும் இரண்டு ஐந்நூறு ரூபா என அடையாளம் காணக்கூடிய பணத்தும்பும் கந்தலாகிய சில பத்திருபது ரூபாய்களும் நெளிந்துபோன சில ஐந்து ரூபா குற்றிகளும் கிடந்தன. பெட்டியைத் துளைத்து உள்நுழைந்த சிதறு துண்டுகள் இரண்டும்தான் அந்த பணத்தை கடைந்து விட்டிருந்தன.

துகளும் துகளுமாகக் கிடந்த பைகளைத் திறந்து சில பொருள்களைச் சேகரித்தேன். அம்மாவின் சேலை யொன்று தங்கையின் உடையொன்று தவிர ஏனைய அனைத்து உடைகளும் தும்புதுகள்களாகக் கிடந்தன. எந்தப் பயனும் உபயோகிக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. அம்மா அடுப்பிலே ஏற்றிய சோற்றுலை சரிந்துகிடந்தது. சில விறகுகளும் சிறிதளவு உணவுப் பொருள்களும் கிடந்தன. அவற்றை யெல்லாம் தூக்கி பக்கத்துவீட்டு குடிசையில் வைத்தேன்.

ஆனந்தபுரத்தை படையினர் கைப்பற்றிவிட்டனர் என்ற செய்தி வந்தது. அச்செய்தி எல்லோர் மனதிலும் நெருப்பை அள்ளிக்கொட்டியது. காரணம் இனியும் இடம்பெயர்ந்து செல்ல போக்கிடமே இருக்கவில்லை. இனியும் உயிர் பிழைப்பதென்றால் அது தெய்வச்செயல்தான்.

எனக்கு தலைவலிக்குமேல் தலைவலியானது. ஏனெனில் ஆனந்தபுரத்தில் போராளிகள் இல்லை என்றால் மாத்தளனில் மக்கள் இருக்க முடியாது. உடனே அப்பாவையும் அனுப்பிவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். தங்கை எப்படியும் சமாளித்துக்கொள்ளட்டும். தங்கைக்கும் காயம் ஆறவில்லை. வயோதிபத் தந்தையையும் கூட்டிக்கொண்டு எங்கலைவாள். அதனால் வயோதிபர் இல்லத்தை நாடினேன். தந்தையை அவர்களிடம் ஒப்படைத்தேன். ஒருவாரகால நாளாந்த அலைச்சலின் பின் அவரது பெயரும் பயணத்துக்கான அனுமதி பெற்றது. அடுத்த வாரத்தில் அப்பாவும் கப்பலில் ஏறினார். எங்கள் குடும்பத்தின் தொடர்பிலிருந்து அவர் காணாமல் போனார். மாத்தளன் பகுதி படையினர் வசமானபோது வலைஞர் மடத்திலிருந்த மக்களும் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலுக்கு ஓடினர்.


முள்ளிவாய்க்கால் தொடக்கம் வட்டுவாகல் வரையான மிகக்குறுகிய பகுதிக்குள் இலட்சக் கணக்கான மக்கள் குழுமினார்கள். காடு கரம்பைகளெல்லாம் காணாமல்போய் தறப்பாள் காடுகளே முழு இடத்தையும் நிறைத்தன. இயற்கை உபாதைகளைக் கழிக்கக்கூட இடமற்றுப் போனது. பிணங்களைக் கடலில் வீசிவிடக்கூட முடியாத நிலை. மக்கள் கையிருப்பு எல்லாவற்றையும் இழந்தார்கள். பலரிடம் எதுவுமே இருக்கவில்லை. விளைவு, பலர் பட்டினியால் மாண்டனர். வயிறுவற்றிச் செத்த பிணங்களைக்கூட தூக்கிப்போட சக்தியற்ற உறவுகள் அவற்றை தெருவோரங்களிலேயே விட்டுவிட்டுச் சென்றனர்.

[பயணம் தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரன்





# மியன்மாரில் மலரும் ஜனநாயகம்

மியன்மார் இப்போது ஒருபுதிய பாதையில் பயணிப்பதற்கான தொடக்கத்தில் இருக்கிறது. இதுவரை காலமும் அங்கு இடம் பெற்று வந்த இராணுவ ஆட்சி முறை அடியோடு தகர்ந்து ஒரு ஜனநாயக சூழலை சுவாசிக்கக் கூடிய நிலைக்கு மியன்மார் மக்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் முகத்தில் இப்போது நம்பிக்கையின் ஒளி தெளிவாகத் தெரிகிறது. இந்த ஜனநாயகக் காற்றை அந்த மக்கள் சுவாசிப்பதற்கு வித்திட்டவர் வேறு யாருமல்லர். அந்த மக்களால் மனதார நேசிக்கப்படும் உயர்ந்த தலைவர் ஆங் சாங் சூகி. தனது போராட்டம் நிறைந்த வாழ்க்கையால் தாய் நாட்டு மக்களின் சுதந்திரமான வாழ்க்கைக்கு அடித்தளம் போட்டிருக்கிறார் அவர். அண்மையில் நடந்த இடைத் தேர்தலில் அவர் பெற்ற வெற்றி ஜனநாயகத்தின் வெற்றி என வர்ணிக்கப்படுகிறது.

நவீன பர்மாவின் தந்தை என்று போற்றப்பட்ட ஆங் சாங்கின் மகள்தான் ஆங்சாங் சூகி. விடுதலைக்காக போராடிய ஆங் சான் கொல்லப்பட்ட பிறகு, பிரிட்டன் சென்றார் சூகி. பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் கல்வி கற்றார். 1972அம் ஆண்டில் பிரிட்டனைச் சேர்ந்த மைக்கல் ஏரிஸ் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். 1988ஆம் ஆண்டில் மீண்டும் நாடு திரும்பிய சூகி, மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கினார். மக்களாட்சிக்கான தேசிய லீக் என்ற கட்சியை நிறுவினார்.

மக்களாட்சியை ஏற்படுத்துவதற்காகத் தீவிர பிரசாரம் மேற்கொண்ட அவரை, 1989ஆம் ஆண்டு தடுப்புக் காவல் என்ற பெயரில் இராணுவ ஆட்சியாளர்கள் வீட்டிலேயே சிறை வைத்தனர். 1990ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் 485 நாடாளுமன்றத் தொகுதிகளில் 392 இடங்களில் வெற்றி பெற்றது சூகி கட்சி. ஆனால், தேர்தலுக்கு முன்பாகவே சிறையில் அடைக்கப்பட்டதால், அவரால் பிரதமர் பதவியை ஏற்க முடியவில்லை. மேலும் வெளிநாட்டவரைத் திருமணம் செய்து கொண்டதால், மியன்மார் அரசியலில் ஈடுபட சூகிக்குத் தகுதி இல்லை என இராணுவ ஆட்சியாளர்கள் ஒதுக்கி வைத்தனர். மக்களாட்சிக்காக இவர் போராடியதால், 1991ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு சூகிக்குக் கிடைத்தது. தொடர்ந்து வீட்டுக் காவலிலேயே வைக்கப்பட்டிருந்த சூகி, கடந்த 2010ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டார். அவரது கட்சிக்கு அங்கீகாரமும் கிடைத்தது. 15 ஆண்டு காலச் சிறை வாசத்திற்கு பிறகு மீண்டும் அரசியல் களம் புகுந்த சூகி, தற்போது நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம், மக்களாட்சிக்கான விதையை மியான்மரில் விதைத்திருக்கிறார்.

தனது தாய்நாட்டின் விடுதலைக்காகப் போராட முடிவு செய்த,ஆங் சாங் சூகி ஜனநாயக லீக் கட்சியைசரியான பாதையில் வழி நடத்தினார். ஆனால் இராணுவ ஆட்சியாளர்களுக்கு இது பிடிக்கவில்லை. ஆங் சாங் சூகியை வீட்டுக்காவலில் தனிமைச் சிறையில் வைத்தனர்.

யாரையும் பார்க்க கூடாது, தொலைபேசி வசதி கூட கிடையாது, சேதமடைந்த, பழமையான வீட்டில் பல நேரம் மின்சாரம் இருக்காது, பெரும்பாலும் மெழுகுவர்த்தி வெளிச்சம்தான், இரண்டு வயோதிபப் பெண்கள் தான் உதவிக்கு என்ற நிலையில் ஒரு ஆண்டு இரண்டு ஆண்டு அல்ல இருபது ஆண்டுகள் அந்த தனிமைச் சிறையில் வாடினார்.

ஆனாலும் நம்பிக்கையை விடமால் ஜனநாயக முறையில் போராட்டத்தைத் தொடர்ந்தார். கடிதங்களால் மக்களிடம் நம்பிக்கை வளர்த்தார்.இந்த நிலையில் 1990 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 485 இடத்தில் போட்டியிட்டு 392 இடங்களில் வென்றார். ஆனால் இந்த தேர்தல் செல்லாது என்று அறிவித்த இராணுவ ஆட்சியாளர்கள் ஆங் சாங்சூகியின் கட்சிக்கு தடைவிதித்தும் பார்த்தனர். போட்டிக்கு 32 கட்சிகளை வளர்த்துவிட்டனர். ஆனாலும் மக்கள் ஆங் சான் சூகியின் பக்கமே நின்றனர். இடையில் புற்றுநோய் ஏற்பட்டு மரணப்படுக்கையில் இருந்த தனது கணவரைக் காண விரும்பிய சூகிக்கு மியன்மார் அரசு அனுமதி மறுத்துவிட்டது., பின் ஒரு கடுமையான நிபந்தனை போட்டது. லண்டனில் இருக்கும் தனது கணவரைப் பார்க்கலாம் ஆனால் பிறகு திரும்பத் தனது தாய்நாட்டிற்கு வரக்கூடாது என்பதுதான் அந்த நிபந்தனை.

கணவரா? தேசமா? என்ற கேள்விக்கு முன் தேசமே பெரிதென முடிவெடுத்து கடைசிவரை கணவரைப் பார்க்காமலேயே இருந்துவிட்டார்.இதே போல பிள்ளைகளையும் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பார்க்க முடியாத நிலை நீடித்திருந்தது.

இவை அனைத்தையும் நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் தாங்கிக்கொண்டார் சூகி.

இதை அடுத்து உலக நாடுகளின் பார்வையில் விழுந்த சூகியை விடுதலை செய்ய வேண்டிய நெருக்கடிக்கும்,கட்டாயத்திற்கும் உள்ளான இராணுவ அரசு கடந்த 2010ஆம் ஆண்டு அவரை விடுதலை செய்தது. சூகி விடுதலையான போது அவருக்கு வயது 65. நாடி,,நரம்புகள் தளர்ந்து வாடி வதங்கிப்போனவர் வாழ்க்கை அத்துடன் முற்றுப்புள்ளியானது என்று நினைத்தவர்கள் மனதில் மண் விழும் வகையில் மீண்டும் பீனிக்ஸ் பறவையாக எழுந்துவிட்டார்.

பலருக்கு வாழ்க்கையில் போராட்டம் இருக்கும்,வெகு சிலருக்குதான் வாழ்க்கையே போராட்டமாக இருக்கும் அந்த வெகு சிலரில் ஒருவர் ஆங் சாங் சூகி.

இடைத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதன் மூலம், மியான்மரில் புதிய சகாப்தம் தொடங்கும் என நம்புவதாக ஜனநாயக தலைவர் ஆங் சாங் சூகி தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக லீக் கட்சி தலைமை அலுவலகத்தில் தனது வெற்றி குறித்து ஆங் சாங் சூகி, தொண்டர்கள் மத்திய பேசுகையில், ''எங்களுக்குக் கிடைத்த வெற்றி மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். மக்களின் முயற்சியால் தான், இது போன்ற அரசியல் நடவடிக்கைகள் துவங்கியுள்ளன. இடைத்தேர்தலில் நான் வெற்றி பெற்றதன் மூலம், புதிய சகாப்தம் தொடங்கும் என நம்புகிறேன். மியன்மாரில் ஜனநாயகம் மேம்பட அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும்'' என்றார்.

மியன்மாரில் ஒரு ஜனநாயக ஆட்சி ஆரம்பமாவதற்கான தொடக்கமே இது என்று சூகி மேலும் தெரிவித்திருக்கிறார். சூகியின் வெற்றியை உலக நாடுகள் வரவேற்றிருக்கின்றன. அடக்கு முறைகள், இராணுவ நெருக்கு வாரங்களை மக்கள் மீது பிரயோகிக்கும் நாடுகள் இதனை ஒரு படிப்பினையாகக் கொள்ள வேண்டும் என உலகத் தலைவ்ர்கள் கூறியிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட சூகியின் சிறை வாழ்க்கை, போராட்டம் என்பன இலங்கையில் தமிழர் இனப் பிரச்சினைக்கான போராட்ட காலத்தின் அளவை ஒத்தவை. இலங்கையிலும் மியன்மார் போன்று அடக்குமுறை ஆட்சியே நடைமுறையில் இருக்கிறது. தமிழர்கள் தொடர்ந்தும் உரிமைக்காகப் போரிடுகிறார்கள். சூகியைப் போல அவர்களும் சளைத்துவிடவில்லை. தொடர்கிறது அவர்களின் உரிமைப் பிரச்சினை. என்றோ ஒரு நாள் மியன்மார் போன்று இலங்கையிலும் ஜனநாயகம் வெற்றிபெறும் என்பதற்குச் சூகியின் வெற்றி ஓர் எடுத்துக்காட்டு.



> “ கிட்டத்தட்ட சூகியின் சிறை வாழ்க்கை, போராட்டம் என்பன இலங்கையில் தமிழர் இனப்பிரச்சினைக்கான போராட்ட காலத்தின் அளவை ஒத்தவை. இலங்கையிலும் மியன்மார் போன்று அடக்குமுறை ஆட்சியே நடைமுறையில் இருக்கிறது. தமிழர்கள் தொடர்ந்தும் உரிமைக்காகப் போரிடுகிறார்கள். சூகியைப் போல அவர்களும் சளைத்துவிடவில்லை. தொடர்கிறது அவர்களின் உரிமைப் பிரச்சினை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

தருபவர் - வித்தியா

## 08.04.2012 முதல் 14.04.2012 வரை

### மேடம்



எடுத்துக் கொண்ட பணிகளைத் திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். பணிகளுக்கு இடையே குடும்ப விவகாரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பீர்கள். மனைவி மற்றும் குழந்தைகளின் சந்தோஷங்களை கருத்தில் கொண்டு சில ஏற்பாடுகள் மேற்கொள்வீர்கள். செல்வாக்குக்கு குறைவிருக்காது. சில காரியங்களை பேச்சுகள் மூலம் தீர்வு காண்பீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் சற்று அலைச்சலுக்கு பின் நிறைவேறும். புதிய முயற்சிகளை சற்று தாமதப்படுத்துங்கள். நண்பர்களோடு பக்குவமான அணுகுமுறை நல்லது. உறவினர்களின் வருகை சந்தோஷம் தரும்.கொடுக்கல் வாங்கல் விவகாரங்கள் சுமுகமாக இருக்கும். கடன் பிரச்சினைகள் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு பணியில் சில மாற்றம் ஏற்படும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிலும் பொறுமை, நிதானம் அவசியம்.

### இடபம்



துணிச்சலோடு செயற்பட்டு வெற்றிகள் பல ஈட்டுவீர்கள். ஒவ்வொரு செயலிலும் தங்களின் சாதுரியம் மற்றவர்களால் பாராட்டப்படும். முக்கியஸ்தர்களின் பழக்கங்களை வலுப்படுத்திக் கொள்வீர்கள். கௌரவம் அதிகரிக்கும். உடல்நிலையில் சற்று கவனம் தேவைப்படும். வேலைப் பளு காரணமாக குடும்ப காரியங்களை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படும்.

இருப்பினும் செய்து முடிப்பீகள். புதிய தொழில் முயற்சி ஒன்றிற்காக தீவிர சிந்தனை கொள்வீர்கள். உறவுகளின் தொடர்புகள் பட்டும் படாததுமாய் இருக்கும். பெற்றோர்களால் ஆதாயங்கள் கிடைக்கும். சேமிப்பில் இருந்தும் செலவுகளை சமாளிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் பணியில் பிற சிந்தனைகள் இல்லாமல் கொண்டு செல்ல முயற்சியுங்கள்.வார்த்தைகளில் கவனம் தேவை.

### மிதுனம்



நீங்கள் ஈடுபடும் ஒவ்வொரு காரியங்களிலும் குழப்பம் தவிர்க்க முடியாததுதான். இருந்தபோதும், சற்று நிதானமான செயற்பாடுகளால் காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். புதிய முயற்சி மற்றும் அரசு தொடர்பான காரியங்கள் போன்றவற்றை முன்யோசனையோடு செயற்படுங்கள். உடல்நிலையில் சற்று சோர்வு காணப்படும். மருத்துவ ஆலோசனை வீண் பயத்தைப் போக்கும். குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகள் அதிகம் யோசிக்க வைத்தபோதும், பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். குழந்தைகளின் பழக்க வழக்கங்களில் கூடுதல் கவனம் நல்லது.

செலவுகளை கட்டுப்படுத்தி சமாளிப்பீர்கள். கடன்கள் தொந்தரவு தராது. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகள் உத்தரவுகளைப் புரிந்து செயற்பட்டால் மனக்கஷ்டம் நீங்கும்.

### கடகம்



புகழ் செல்வாக்கு கூடும். உபயோகமான, உருப்படியான பல காரியங்களையும் செய்துகொள்ள முடியும். இருப்பினும், உணர்ச்சி வசப்பட்ட சூழ்நிலையில் எந்தவொரு முடிவையும் எடுப்பதை மட்டும் கொஞ்சம் தவிர்த்துக் கொள்ளுங்கள். நண்பர்கள் மற்றும் வெளி வட்டாரப் பழக்க வழக்கங்களால் நன்மைகள் அடைவீர்கள். உடல் நிலையில் உரிய நேரத்தில் உணவு, உறக்கம் தொந்தரவு இல்லாமல் செயற்பட வைக்கும்.

குடும்பத்தில் கோபதாபங்கள் நிலவியபோதும், பாதிப்பு இருக்காது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு கூடும். இருப்பினும் மனச்சோர்வு இல்லாமல் செய்து முடிப்பீர்கள். பெண்களுக்கு பொறுமையான செயற்பாடுகள் பெருமை தரும்.

### சிங்கம்



ஒவ்வொரு காரியங்களிலும் அலைச்சல், செலவுகள் தவிர்க்க முடியாதவை. சில மாற்றங்கள் ஏற்படும். மாற்றங்கள் தங்களுக்கு உடன்பாடு இல்லையென்றபோதும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் நிலவும். புதிய பணிகளுக்காக முயற்சிகள் மேற்கொள் வோர்களுக்கு சாதகமான சூழ்நிலை நிலவும். சிலர் கூட்டு முயற்சியில் தொழில் தொடங்கத் திட்டமிடுவர்.

அரசு தொடர்பான காரியங்கள் கைகூடும். உடல்நிலையில் சிறு சிறு தொந்தரவுகள் தங்களை அதிகம் யோசிக்க வைக்கும். தகுந்த மருத்துவம் எடுத்துக் கொள்ளுங்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். மனைவி வகையில் ஆதாயங்களை எதிர்பார்க்கலாம். குழந்தைகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு சில ஏற்பாடுகள் செய்வீர்கள்.கொடுக்கல் வாங்கலில் சற்று இழுபறி நிலை நிலவும். உத்தியோகத்தர்கள் ஊழியர்களோடு கருத்து வேற்றுமையைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

### கன்னி



அடுத்தடுத்த செயற்பாடுகளைத் திட்டமிட்டு அவசர அவசரமாக செயற்படுவீர்கள். காரியங்கள் முடிந்தபின்னும் பயன் என்ன என்பது கேள்விக்குறியாக இருக்கும். ஒவ்வொரு விவகாரங்களிலும் முடிவு சரிதானா என்று பரிசீலனை செய்தபின் செயற்படுங்கள். உடல்நிலையில் எதனையும் பொருட்படுத்தாது கொண்டு செல்வீர்கள்.

குடும்ப காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தபோதும் குடும்ப உறுப்பி னர்களிடம் அதிருப்தி நிலவவே செய்யும். இல்லறத் துணையின் அறிவுரை களையும் கவனத்தில் கொள்ளுதல் நல்லது. அரசு தொடர்பான பணிகளுக்காக தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பயன் தரும். உத்தியோகத்தர்கள் உங்கள் பணியில் குடும்ப விவகாரங்கள் குறுக்கீடாமல் கொண்டு செல்லுங்கள். பொறுப்புணர்ந்து செயல்படுதல் நல்லது.

### துலாம்



புகழ் செல்வாக்கு அதிகரிக்கும். பெறுப்புகளில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டியிருக்கும். தடைப்பட்ட சுபநிகழ்ச்சிகளை வெற்றி கரமாகச் செய்து முடிப்பீர்கள். சொத்துக்களால் வரும் வரவுகள் கூடும். அவ்வப்போது மனதில் நிலவும் தேவையற்ற கவலைகளை கொஞ்சம் தவிர்த்துக் கொள்ளுங்கள். வீடு சம்பந்தப்பட்ட வேலைகள், எழுத்து ஒப்பந்தம் போன்றவற்றை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பழக்கப்பட்ட அல்லது பாசமான நபர்களை சந்திப்பதும், பண நிலையில் சில உதவிகள் கோருவதும், சில பணிகளுக்காக பயணங்களை மேற்கொள்வதுமாகவும் இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமைக்கு குறைவிருக்காது. குழந்தைகள் மீதும் பாசம் கூடுதலாகும். பெற்றோர்களால் ஒத்துழைப்பு கூடுதலாகும். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு பெருமைப்பட வைக்கும்.

### விருச்சிகம்



எந்த ஒரு விவகாரத்திலும் அதிருப்தியான சூழ்நிலை காணப்படும். பொறுமை மற்றும் நிதானம் மிக அவசியம். புதிய அறிமுகங்களிடம் கூடுதல் கவனம் இருக்கட்டும். வெளிநாடு சம்மந்தப்பட்ட தொழில் புரிபவர்கள் மிகுந்த விழிப்போடு செயற்படுதல் அவசியம். குடும் பத்தில் விருந்தினர்களின் வருகை அதிகம் இருக்கும். பெற்றோர்களின் உடல்நிலையிலும் கவனம் கூடுதலாக இருக்கட்டும். முக்கியத்தர்களின் சந்திப்பின்போது உங்களின் நோக்கம் தெளிவானதாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

உத்தியோகத்தர்களுக்கு மன நிறைவான சூழ்நிலை நிலவும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். மாற்றங்களுக்கு தற்போது முயற்சிக்க வேண்டாம். சில விடயங்கள் அதிருப்திதான் என்றபோதும், பொருள்படுத்திக் கொள்ளாதீர்கள்.

### தனுசு



சில விடயங்கள் தங்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி இருக்கும். சில நெருக்கடிகளும் தவிர்க்க முடியாததுதான். அதன் காரணமாக அலைச்சலும், மன உளைச்சலும் ஏற்படத்தான் செய்யும். இது, தங்களுக்கு ஒன்றும் புதிது இல்லை என்பதால், கவலைப்பட்டுக் கொள்ள ஒன்றும் இருக்காது.

உயர்கல்விக்கான வாய்ப்புகள் பிரகாசமாகும். உடல்நிலையில் ஆரோக்கியம் கூடியபோதும் சாதாரணமான பரிசோதனை மனக்குறையை அகற்றும். குடும்பத்தில் சில நபர்களால் சச்சரவுகள் உண்டு என்ற போதும் சந்தோஷத்துக்கு குறைவிருக்காது. பெற்றோர்களால் எதிர்பார்க்கும் உதவிகள் தாமதமாகும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கருணை பார்வை கிடைக்கும். பெண் களுக்கு சந்தோஷமான சூழ்நிலை நிலவும். ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும்.

### மகரம்



சில விவகாரங்களுக்காக கவலைகள் அதிகரிக்கும். தீர்வு காண வழிமுறைகள் எளிதாகக் கிடைத்தபோதும் அதனை நடைமுறைப் படுத்துவதில் தாமதம் எற்படும். சொத்து சம்பந்தப்பட்ட விடயங் களுக்காக அலைச்சல் இருக்கும்.

அரசு தொடர்பான காரியங்களை விரைவாகச் செய்து கொள்ள கூடிய சூழ்நிலையே. உயர் கல்விக்கான முயற்சிகள் வெற்றி பெறும். உடல்நிலை ஒருநேரம் போல் மறுநேரம் இல்லை என்ற போதும் அன்றாட நடவடிக்கைகளுக்கு பாதிப்பு இருக்காது.

பெற்றோர்களால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கப் பெறும். உத்தியோகத் தர்களுக்கு பொறுப்புகள் கூடும். புரிந்து செயற்பட முயற்சியுங்கள். பெண்களின் ஆசைகள் நிறைவேறும். நீண்டகால பிரார்த்தனை ஒன்றை நிறைவேற்றிக் கொள்ள சந்தர்ப்பம் அமையும்.

### கும்பம்



தங்கள் விரும்பிய மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. அதே நேரத்தில் அவசரமும், படபடப்பும் தவிர்க்க முடியாததாக இருக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடும்போது, தகுதியான நபர்களின் ஆலோசனைகளையும் கருத்தில் கொள்ளுங்கள். உடல் நிலையில் ஆரோக்கியம் கூடியபோதும் சில செலவுகள் இருக்கும். குடும்பத்தில் வழக்கமான உற்சாகத்துக்கும், சந்தோஷத்துக்கும் குறைவிருக்காது. பெற்றோர்களின் கருத்துக்கள் அதிகம் யோசிக்க வைக்கும்.

உடன்பிறப்புகளால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தர்கள் தாமதம், மறதியால் இடர்பாடுகளைச் சந்திக்க நேரலாம்; கவனம் தேவை.

எதிலும் பொறுமையுடன் செயற்படுதல் நல்லது. பெண்களுக்கு மனச்சோர் வுகளுக்கு இடையில் அவ்வப்போது சந்தோஷங்களும் ஏற்படும்.

### மீனம்



மன அமைதி கூடும். கடந்த கால பிரச்சினைகளுக்கு, நிரந்தரமான மற்றும் தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். நண்பர்களில் சிலர், விலகிச் செல்லுதலும் புதிய நண்பர்களின் வருகையும் இருக்கும். வீடு மற்றும் வாகன வகையில் சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். உடல்நிலையில் சற்று அலைச்சல் கூடுதலால் சோர்வு காணப்படும். குடும்பத்தில் ஒற்றுமைக்கு குறைவிருக்காது.

பெற்றோர்களால் உதவிகள் கிடைத்தபோதும் பயன்படுத்திக் கொள்ளமுடியாத சூழ்நிலையே. உடன்பிறப்புகளின் வார்த்தைகள் மற்றும் கருத்துக்கள் தங்களை வழிநடத்திச் செல்லும். உத்தியோகத்தர்கள் மனதில் நிலவும் மாற்றம் பணிச் சுமையை கூடுதலாக எண்ணத் தோன்றும்.பெண்களுக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மேலோங்கும். ஓசையில்லாமல் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சி. நற்குணலிங்கம், தலைவர்,
கரவெட்டி மத்தியஸ்தர் சபை

# குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் குழந்தைகள்

**குடும்ப வன்முறை அவர்களை மட்டுமன்றி அவர்களது பிள்ளைகளையும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. பிள்ளைகள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படுவதுடன் அவர்களது கல்விப் பயணம் தடைப்படவும், மந்த கதியில், எதிர்காலம் பாதிக்கப்படவும் செய்கின்றது**

குடும்ப வன்முறையானது பெரும்பாலும் மறைக்கப்பட்டதொரு விடயமாகவே இருந்து வருகின்றது. தமது குடும்ப நிலைமை சமூகத்துக்குக் கொண்டு செல்லக் கூடாது என்ற நோக்கமே இதற்குக் காரணமாகும். குடும்ப வன்முறை பாதிக்கப்பட்ட குடும்ப நலனுக்கு மட்டுமன்றி நாம் வாழும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் பிரச்சினையான ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

குடும்ப வன்முறை என்பது, பாதிக்கப்பட்டவருக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட இயற்கையான தொடர்பு காரணமாக எழும் பிரச்சினையின் காரணமாக குடும்பச் சூழலினுள் அல்லது வெளியில் சம்பந்தப்பட்டவரால் செய்யப்படும் அல்லது செய்விக்கப்படுகின்ற உடல்ரீதியான அல்லது உளரீதியான பாதிப்புகளாகும்.

உளரீதியானது என்பது, ஆக்ரோசமாகத் திட்டித் தீர்ப்பது பற்றி சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவரை பார தூரமாக இயல்பாகச் சிறுமைப்படுத்தும் அல்லது அவமானப்படுத்தும் நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டவருக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம்.

ஒரு குடும்பச் சூழலில் ஒருவர் மற்றவர் மீது அதிகாரத்தையும், கட்டுப்பாட்டையும் விதிக்கும்போது குடும்ப வன்முறை தோன்றுகின்றது. இந்த நிலையைப் பெரும்பாலான குடும்பங்களில் அதுவும் குறிப்பாக கல்வியறிவு குறைந்த, வறுமையான குடும்பங்களில் காணமுடிகின்றது. இவர்களது வீடு ''அமைதி இழந்த வீடாகவே'' காணப்படுகின்றது.

குடும்ப வன்முறை அடித்தல், உதைத்தல், கடித்தல், தள்ளுதல், தடுத்தல், பொருள்களை எறிதல் அவை ஆக்ரோசத்துடன் மேற்கொள்ளப்படும் நடத்தைக் கோலங்களாகும் போன்ற பல்வேறு வகைகளில் அடங்கும்.

இவற்றைவிட உடல்ரீதியான வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம், கட்டுப்படுத்தல் அல்லது ஆதிக்கம் செலுத்துதல், அச்சுறுத்தல், புறக்கணிப்பு மற்றும் பொருளாதார நலன்களுக்கான தடை போன்றவை அடங்கும்.

குறித்த நிலைமையை நெருக்கமான உறவுக்கு உட்பட்ட ஒருவராலோ அல்லது இருவராலோ நிகழ்த்தப்படும் துஷ்பிரயோகமான ஒரு நடத்தைப் போக்கு எனலாம்.

பெண்களுக்கு எதிரான வன்முறை (Violence Against Women) என்பது பெண் என்ற காரணத்தாலும் அவளது இயலாமை காரணமாகவும் ஏற்படும் வன்முறையாகும்.

பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறையில் பாலியல் துஷ்பிரயோகம், பாரம்பரிய மற்றம் கலாச்சார வன்முறை, தீருமண ரீதியான பாலியல் வல்லுறவு, தகாப்புணர்ச்சி என்பனவும் அடங்கும்.

இப்படியான துன்பங்களைப் பெண்கள் சந்தித்தபோதும் அந்தச் சூழலில் இருந்து விலகிச் செல்லாமைக்கு அதாவது துஷ்பிரயோகம் செய்பவரை விட்டு விலகிச் செல்லாமைக்குப் பல காரணங்களை இனங்காணலாம்.

* மணம் முடித்த பெண்களாயின் குடும்பத்தைப் பிரிய விரும்பாமை.
* குழந்தைகளைப் பிரிந்திருக்க முடியாமை
* அயலவர்கள் மத்தியில் இழிவானவளாகக் கருதப்படல்
* துஷ்பிரயோகம் காதலின் அடையாளம் என எண்ணுதல்
* தஞ்சமடைய வேறு ஒரு இடமும் இல்லாதிருத்தல்
* வருவாய்ப் பிரச்சினையை எண்ணுதல்
* வன்முறை அதிகரிக்கலாம் என எண்ணிப் பயப்படல்
* இதிலிருந்து மீள வழி தெரியாதிருத்தல் என்பனவாகும்.

வன்முறைக்கு உள்ளாக்கப்பட பெண்கள் தமது சாதாரண வாழ்க்கையை முற்றாக வாழமுடியாது பல வகையான உள, உடல் தொடர்பான பல நோய்களுக்கு ஆளாகின்றனர்.

குடும்ப வன்முறை அவர்களை மட்டுமன்றி அவர்களது பிள்ளைகளையும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. பிள்ளைகள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படுவதுடன் அவர்களது கல்விப் பயணம் தடைப்படவும், மந்த கதியில், எதிர்காலம் பாதிக்கப்படவும் செய்கின்றது. இவ்வாறான சூழ்நிலைகளில் வளரும் குழந்தைகள் உற்சாகம் அற்றவர்களாகவும் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாகவும் வளர்கின்றனர்.

சிறுவர்களில் குடும்ப வன்முறை பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

* நடத்தைப் பிரச்சினைகள்
* தலையிடி, படுக்கையை நனைத்தல், நித்திரை ஒழுங்கின்மை
* விரல் சூப்புதல்
* திக்குவாய்
* எதிர்காலம் பற்றிய கவலை
* தற்கொலை எண்ணம்
* இரவு தூக்கமற்ற கனவுகள்
* பின்வாங்கல், தனிமை, வீட்டிலிருந்து ஓடுதல்
* கோபத்தை முகாமைத்துவம் செய்ய முடியாமை

இவ்வாறான பாதிப்புக்களை சிறுவயதில் பிள்ளைகள் எதிர்கொள்வதால் பிள்ளைகளின் வாழ்க்கையைப் பற்றிப் பெற்றோர் ஒரு கணமாவது யோசிக்கவேண்டும். ஆனால் பெரும்பாலான குடும்பங்களில் இதுபற்றிச் சிந்திப்பது இல்லை என்ற நிலைமைதான் காணப்படுகின்றது.

தாம்தான் வன்முறைக்கு உட்பட்டுள்ளோம் என்று பெற்றோர் நினைக்கிறார்கள். ஆனால் அதன் தாக்கம் எந்த அளவுக்குக் குடும்பத்தின் மற்றைய உறுப்பினர்களைப் பாதிக்கின்றது என எண்ணுவதில்லை.

இது குறித்து எண்ணுவார்களேயானால் சாதாரணமான குடும்ப வன்முறை குடும்பங்களில் அருகில் செல்ல வாய்ப்பு ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன.

இயற்கையின் மத்தியஸ்த சபைகள் சமூகத்தில் ஏற்படும் முரண்பாடுகள் நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்று வழக்குத் தொகையை அதிகரிக்கா வண்ணமும் சுமூகமான முறையில் தீர்த்து வைக்கக் கூடியதுமான சேவைகளை வழங்குகின்றன. சட்டத் துறையை நாடுவதற்கு பொருளாதார வசதியற்ற பெருந்தொகையான மக்களுக்கும் உதவி வருகின்றன.

மத்தியஸ்த சபைகள் குடும்ப வன்முறைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேரடியான அதிகாரங்களைக் கொண்டிராத போதிலும் மத்தியஸ்த சபைகளுக்கு தவறுகள் என்ற விடயத்தின்மீது குடும்ப வன்முறைகள் ஆற்றுப்படுத்தப் படுகின்றன.

எமது காலாச்சார பாரம்பரியங்களும் சமூகக் கட்டமைப்பும் குடும்ப வன்முறையை பொலிஸ் நிலையத்துக்குச் செல்வதைத் தடுக்கின்றன.

இந்த நிலையில் குடும்ப வன்முறைக்கு பாதுகாப்பு வழங்க என்று மத்தியஸ்த சபையை நாடலாம். மத்தியஸ்தர் சபை இதற்கு மிகவும் பொருத்தமான ஒரு அடைக்கலமாக அமைகிறது.

மத்தியஸ்தம் என்பது பிணக்குகளுக்கு சுமுகமாக தீர்வு காணும் பொறிமுறை எனும் வகையில் இரகசியத் தன்மை பேணும் ஒரு இடமாக உள்ளதாலும் இரு பகுதியினரும் தாமாகவே முடிவெடுக்கச் சந்தர்ப்பம் வழங்குவதாலும் தீர்வு வலுக்கட்டாயப்படுத்தி வழங்காமையாலும் குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கு சிறந்த பங்களிப்பை மத்தியஸ்தர் சபைகள் வழங்குகின்றன; வழங்கும்.

# தடைகளை உடைத்தெறிந்து தமிழினத்தை உயர்த்திடுங்கள்

■ தென்னவன்

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் நாட்டில் கர்ப்பத்தடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டபோது அதனை முழுமையாக எதிர்த்தவர்கள் எமது தமிழ்மக்கள்.

அன்றைய காலத்தில் வாழ்ந்த குடும்பத்தினர் நிறைவான குடும்பங்களாக வாழவே விரும்பினர்.

ஒவ்வொரு குடும்பத்திலும் 5 பிள்ளைகளுக்கு மேல் இருந்தனர். ஒரு குடும்பத்தில் ஒரு நிகழ்வு நடைபெற்றால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த உறவுகளால் நிகழ்வு மண்டபம் நிறைந்திருக்கும்.

இந்த நிலையில் நாம் இருவர் நமக்கிருவர் என்று அறிமுகப்படுத்தப்பட்ட கர்ப்பத்தடையை தமிழ்மக்கள் முழுவீச்சில் எதிர்த்தனர். மூன்று பிள்ளைகள் உள்ள குடும்பங்களையே வம்சவிருத்தி குறைந்த குடும்பமென அக்கால மக்கள் கூறினர்.

இதனால் முதல் பிரசவத்தைப் பெண்ணின் தாயாரும் ஏனைய பிரசவங்களை மாமியாரும் பராமரித்து வந்தனர்.

இந்தநிலையில் கர்ப்பத்தடைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அதனை முழுமையாக எதிர்த்தவர்கள் தாய்மாரும் மாமிமாருமே.

தமது வம்சத்தின் விருத்தி குறைந்துவிடும் என்பதே காரணமாகும். கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை செய்வதால் பெண்களின் உடல்நிலை பாதிப்படையாலம் எனக்கருதி ஆண்கள் சிலர் 'வாசக்டமி' என்னும் சத்திரசிகிச்சை மேற்கொண்டனர்.

உத்தியோகம் செய்யும் பெண்கள் தமது தொழில்கருதி கர்ப்பத்தடைச் சத்திரசிகிச்சை மேற்கொண்டனர்.

ஒரு பிள்ளை பிறந்து 2 வருடங்களின் பின்னர் கருத்தரிப்பது பெண்ணின் உடலுக்குப் பாதிப்பில்லை என்பதைக் கருத்தில்கொண்டு கருத்தடை ஊசி மருந்து, வில்லைகள் பாவிப்பது போன்ற முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை ஒரு சில பெற்றோர் வரவேற்றதால் இதன் பயன்பாடு அதிகரித்துக்காணப்படுகின்றது.

இலங்கை சனத்தொகை புள்ளி விவரங்களின்படி இலங்கைத் தமிழர்களின் விகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்த போதிலும் தமிழ்மக்களிடையே காணப்படும் கருத்தடை அதிகரிப்பும் ஒரு காரணமாக உள்ளது. போர் அழிவு, புலம்பெயர்வு போன்றவையும் சனத்தொகைக் குறைவுக்குக் காரணங்களாகும்.

இரண்டு குழந்தைகளுடன் சிலர் கர்ப்பத்தடைச் சத்திரசிகிச்சை செய்கின்றனர். வைத்தியசாலைகளில் கடமையாற்றும் இளநிலை உத்தியோகத்தர்கள் சிலர் தம் அறிக்கைகளை மாதாந்தம் வழங்குவதற்காக இரண்டு குழந்தைகளுடன் சத்திரசிகிச்சை செய்வதை ஊக்குவிக்கின்றனர். இரண்டு பிள்ளைகளுடன் கர்ப்பத்தடைச் சத்திரசிசிச்சை செய்யவேண்டும் என்பது கட்டாயம் இல்லை.

35 வயதுக்குப் பின்னர் பிரசவம் இடம்பெறுவது பெண்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதால் இந்த வயசுக்கு இடையில் ஆகக்குறைந்தது 3 பிள்ளைகள் பிரசவித்ததால் மட்டும் கர்ப்பத்தடை செய்வது நல்லது.

பெரும்பான்மையினம் சனத்தொகை விகிதத்தில் அதிகரித்துவரும் இவ்வேளையில் இலங்கைத் தமிழர் விகிதாசாரம் பெரும் வீழ்ச்சியில் உள்ளமை எமது இனத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

தாய்ப்பால் குழந்தைக்குக் கொடுப்பது, பெண்கள் மீண்டும் கர்ப்பம் தரிப்பதைத் தடுக்கும் எனத் தெரிந்தும் பல பெண்கள் ஆறு மாதத்துடன் பிள்ளைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்திவிடுகிறார்கள். இது அவர்களுக்கு மார்புப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பு உண்டாகிறது என்றும் ஆய்வுகள்மூலம் தெரியவந்துள்ளது.

அண்மையில் கர்ப்பத்தடை தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்ட ஊசி மருந்தை அனேகமான பெண்கள் ஏற்றுவதில் ஆர்வமாக உள்ளனர்.

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக இங்கு மற்றும் இந்தியா போன்ற இடங்களில் திருமண பந்தத்தில் இணைந்த பெண்களும் இந்த ஊசியைப் பயன்படுத்துகின்றனர். கணவன் இங்கிருந்து வெளிநாடு சென்று அங்கிருந்து உரிய படிவங்களைப்பெற்று இந்தப்பெண்ணின் பயண ஏற்பாடுகள் முடியும்வரை கர்ப்பம் தரிக்கக் கூடாது என்பதற்காக இந்தத் தடுப்பு மருந்தை பயன்படுத்துகின்றனர். இந்த மருந்தின் பயன்பாடு, சிலவேளை வெளிநாட்டு காலநிலைக்கேற்ப இந்தப் பெண்களுக்கு குழந்தைகள் கிடைக்கும் வாய்ப்பையே தடுத்துவிடலாம் என வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழ் இனத்தின் சனத்தொகை விகிதாசாரத்தை அதிகரிக்க நான்கு பிள்கைளின் பின்னர் தான் கர்ப்பத்தடை செய்யப்படவேண்டுமென்ற கட்டுப்பாடு வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் விடுக்கப்படல் வேண்டும் என ஆர்வலர்கள் சிலர் கூறுகின்றனர்.

நாமிருவர் நமக்கிருவர் என்ற கோட்பாடு இலங்கைத் தமிழ் இனத்தைத் தொடர்ந்தும் சமநிலையில் வைக்குமே தவிர சனத்தொகை அதிகரிப்புக்கு உதவாது என்பது அவர்களது கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வழி வேண்டாம்

ஸ்பொட் பிக்சிங்கில்' ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக 5 வருடகாலப் போட்டித்தடையை அனுபவித்துவரும் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஆமிர், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் மற்றும் மோசடிகளுக்கெதிரான அறிவுறுத்தல் வீடியோவில் தோன்றியுள்ளார்.

ஆமிருக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டுகளை அடுத்து சிறுவர் குற்றவாளிகளுக்கான பள்ளியில் 3 மாதகாலம் தனது தண்டனைக் காலத்தை அனுபவித்து வெளியே வந்த மொஹமட் ஆமிர், சர்வதேச கிரிக்கெட் சபையின் நடைமுறைகளின்படி தன்னை நிரூபிக்க வேண்டி உள்ளது. அவருக்கான 5 வருடகாலத் தண்டனைக் காலப்பகுதியில் அவர் ஊழல் மற்றும் மோசடிகளுக்கெதிராக சர்வதேச கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இதன் ஒரு கட்டமாகவே சர்வதேச கிரிக்கெட் சபையின் வீடியோ ஒன்றில் தோன்றி மொஹமட் ஆமிர் தனது அனுபவங்களைப் பகிர்ந்துள்ளார்.

'ஸ்பொட் பிக்சிங்கில்' ஈடுபட்ட ஆட்டத்தில் தான் 6 இலக்குகளைக் கைப்பற்றியதாகவும், ஆனால் அந்த ஆட்டத்தில் தான் மிகவும் மோசமான செயலொன்றைச் செய்ததாகவும் மொஹமட் ஆமிர் அந்த வீடியோவில் குறிப்பிடுகிறார்.

இரண்டு பந்துகள், இரண்டு முறையற்ற பந்து வீச்சுக்களில் தனது வாழ்க்கை சீரழிந்துவிட்டதாகத் தெரிவிக்கும் ஆமிர், சில மணிநேரங்களில் தனது வாழ்க்கை முழுமையாக மாற்றமடைந்துவிட்டதாகத் தெரிவிக்கிறார்.

இந்த 'ஸ்பொட் பிக்சிங்' சம்பந்தமாக சர்வதேச கிரிக்கெட் சபை நடத்திய விசாரணைகளின் போது மொஹமட் ஆமிர் தனது குற்றத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, தான் குற்றவாளி அல்லன் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்திருந்தார். அதுகுறித்தும் அவர் அந்த வீடியோவில் குறிப்பிடுகிறார்.



'ஸ்பொட் பிக்சிங்கில்' ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக 5 வருடகாலப் போட்டித்தடையை அனுபவித்துவரும் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஆமிர், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் மற்றும் மோசடிகளுக்கெதிரான அறிவுறுத்தல் வீடியோவில் தோன்றியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் விசாரணைகளின் போது தனது குற்றத்தை ஒப்புக்கொள்ள விரும்பியதாகவும், எனினும் போதிய தைரியம் இல்லாததன் காரணமாக அங்கு தனது குற்றத்தை ஒப்புக்கொள்ள முடியவில்லை எனவும் ஆமிர் தெரிவிக்கிறார். அங்கு பொய் சொன்னதை எண்ணித் தான் வெட்கமடைந்ததாகத் தெரிவித்த ஆமிர், தனது பிழையை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

தனது மூத்த வீரர்கள் சிலர் தன் மீது அழுத்தங்களைப் பிரயோகித்ததன் காரணமாகவே தான் லோர்ட்ஸில் முறையற்ற பந்துகளை வீசியதாக மீண்டும் இந்த வீடியோவிலும் கூறியுள்ள ஆமிர், ஒரு நாள் தான் உச்சத்தில் இருந்ததாகவும், மறு நாளில் அனைவரும் தன்னை ஏமாற்றுக்காரன், போட்டிகளை சூதாடுபவன் என்று அழைத்ததாகவும் தெரிவித்தார்.

அந்த வீடியோவில் இறுதியாக தான் செய்த பிழையை நீங்கள் செய்யாதீர்கள் என்று மொஹமட் ஆமிர் கூறுகிறார். வெளிவந்த தகவல்களின் அடிப்படையில் இந்த வீடியோ ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றிவரும் வீரர்களுக்குக் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

2010 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் பணத்தை வாங்கிக் கொண்டு வேண்டுமென்றே முறையற்ற பந்துகளை வீசியமைக்காக பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான மொஹமட் ஆமிர் மற்றும் மொஹமட் ஆசிப் ஆகியோரும், குறித்த சதி நடவடிக்கைக்கு முக்கிய காரணியாக அமைந்த அப்போதைய அணித்தலைவர் சல்மான் பட்டும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளதோடு, மொஹமட் ஆசிப், சல்மான் பட் இருவரும் தற்போது இங்கிலாந்தில் சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ★

# யாழ்.சதுரங்கமும் சர்வதேச போட்டிகளும்

யாழ்.மாவட்டத்தில் ஏனைய விளையாட்டுக்களுடன் ஒப்பிடுகையில் சதுரங்கம் விளையாடுவோரின் எண்ணிக்கை அதிகம். ஆனால் ஏனைய விளையாட்டுக் கழகங்களின் எண்ணிக்கைகளுடன் ஒப்பிடும் பொழுது சதுரங்க கழகங்களின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணக்கூடியதாகவேயுள்ளது.

ஏனைய விளையாட்டுக்களுடன் ஒப்பிடும் போது சதுரங்கம் ஓர் அறிவு சார் விளையாட்டாகும். சதுரங்கம் விளையாடும் வீரர் ஒருவர் ஏனையோரைவிட 10%-20% வரை அதிகமான நுண்ணறிவுத் திறனைக் கொண்டவராகவும், மற்றவர்களைவிட விரைவாக முடிவெடுக்கும் ஆற்றலுள்ளவராகவும், சிக்கலான நிலைகளில் தளம்பாத நிலையுடையவராகவும், அதிலிருந்து இலகுவாக விடுபடக் கூடியவராகவும் காணப்படுவார்.

இவ்வாறான ஓர் உன்னத விளையாட்டு யாழ்.மாவட்டத்தில் எவ்வாறான நிலையில் உள்ளது என்பதை ஆராய்வதும், அதை உயர்த்துவது எவ்வாறு என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் சதுரங்கப் போட்டிகளை நடத்தும் முக்கிய அமைப்புக்களாக யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனம், யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் உதவியுடன் இலங்கை சதுரங்க சம்மேளனம், கல்வித் திணைக்களம் போன்றவை செயற்படு கின்றன.

யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனத்தில் யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் போட்டிகள் யாவும் பதிவு செய்யப்படுவது அவசியமாகும். யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனம் கடந்த வருடம் பலதரப்பட்ட போட்டிகளை சர்வதேச விதிமுறைகளுக்கமைய நடத்தியிருந்தது. இதில் சதுரங்க கடிகாரங்கள் விளையாட்டின் ஆரம்பத்திலிருந்தே அறிமுகப்படுத் தப்பட்டன. அத்துடன் நகர்வுகளைப் பதிவு செய்யும் முறையும் வலியுறுத்தப்பட்டது. எனினும் இது கட்டாயமாக்கப்படவில்லை. அத்துடன் மிக முக்கியமானது என்னவெனில் [Com puter Pairing] கணினி மூலம் சோடி சேர்க்கும் முறை. இதனால் பிழைகள் எதுவுமின்றி விரைவாகபோட்டிகளைநடத்தக்கூடியதாகஇருக்கும்.

யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனம் நடத்திய போட்டிகளில் மிக முகியமானது கடந்த வருட இறுதியில் நடத்தப்பட்ட சர்வதேச சதுரங்க பெருவிழாவாகும். இதில் தற்பொழுது உலகெங்கும் பிரபலம் பெற்றுவரும் 20 நிமிடங்களைக் கொண்ட Chess twenty 20 விளையாட்டாக அறி முகப்படுத்தப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட வீர, வீராங்கனைகள் சர்வதேச தரப்பட்டியலில் இடம்பெறக் கூடியதான Rating tournament ஒன்று நடத்தப்பட்டது. இது Round Robin முறையில் நடத்தப்பட்டது. Round Robin முறையில் தென்ஆசியாவில் முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில் Rating இல்லாத வீரர்களும் உள்ளடக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 10 வீர, வீராங்கனைகள் புதிதாக சர்வதேச தரப்பட்டியலில் இணைக்கப்பட்டனர். இவர்களை விட, புலம்பெயர்ந்த தமிழர்கள் 8 பேரும் சர்வதேச தரப்பட்டியலில் இடம்பிடித்திருந்தனர். இந்தப் போட்டிகள் யாவும், யாழ்.மாவட்டத்தின் முன்னணி வீரரும், தேசிய நடுவரும், பிரபல பயிற்றுனரும், பல சர்வதேச போட்டிகளில் வெற்றியீட்டியவருமான, சதுரங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் கே.ஆதவன் அவர்களின் வழிகாட்டலில் நடத்தப்பட்டன. இவர் இலங்கையில் மட்டும் அல்லாது இந்தியா, மலேசியா போன்ற நாடுகளிலும் பல சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை வென்றவர். ஏற்கனவே சர்வதேச தரப்பட்டியலில் இடம்பெற்ற முதன்மை வீரரான ஆதவன், சி.சிவோதயன், சி.வித்தியாதரன், செல்வி.வித்தியாதரணி ஆகியோருடன் சேர்த்து யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது 14 பேர் சர்வதேச தரப்பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

இவர்கள் தொடர்ந்தும் சர்வதேசப் போட்டிகளில் பங்கு பற்றி தமது தரப்பட்டியலில் முன்னேறுவார்களேயானால் யாழ்.மாவட்டம் இலங்கையின் முதலாவது Grand Master [G.M] ஐ பெறும் என்பது உறுதி.

ஆனால் நடைமுறையில் சதுரங்கம் விளையாடும் பலருக்கும் Rating என்றால் என்ன? எவ்வாறு தாம் ஒரு Rated Player ஆக வரலாம் என்பது பற்றிய போதிய [illegible] இல்லை. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் போட்டிகளில் வென்றால் போதும் என்ற மனப்பாங்கே அதிகமாகவுள்ளது.

ஆர்வம் கொண்ட வீரர்களுக்கும் சர்வதேச தரப்படுத் தலுக்கான போட்டிகளில் பங்குபற்றத் தடையாக கொழும்பையும், அதனை அண்டிய பிரதேசங்களிலுமே சர்வதேச போட்டிகள் இடம்பெறுகின்றன. அதுமட்டுமன்றி போட்டிக்கான அதிகரித்த கட்டணங்கள், தங்குமிட வசதியின்மை, போட்டிகள் நான்கு அல்லது ஐந்து நாள்கள் நடைபெறுகின்றமை, மொழிப்பிரச்சினை, முறையான பயிற்சியின்மை, ஒருமுறை தோற்றால் மறுமுறை தோல்வியை வெற்றியாக்க வேண்டும் என்ற மனப்பாங்கு இன்மை, பெற்றோர், பாடசாலை, தனியார் வகுப்பு ஆசிரியர்களினதும் சதுரங்கம் தொடர்பான அக்கறையின்மை போன்றவையும் காரணிகளாகின்றன.

இந்தப் போட்டிகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளன நிதிப் பிரச்சினை, பங்குபற்றும் வீர, வீராங்கனைகளில் அதிகமானோர் சர்வதேச தரப்பட்டியலில் இடம்பெற்ற வீர, வீராங்கனை களாக இருக்க வேண்டிய தேவை, போதியளவு சதுரங்க கடிகாரங்களை தரமான Chess Bord என்பன இல்லாமை, பொருத்தமான போட்டி மண்டபம் இன்மை, சதுரங்க பயிற்றுவிப்பாளர் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் பலருக்கும் சர்வதேச போட்டிகள் பற்றியும், Rating பற்றிய பூரண அறிவின்மை, படிப்பு கெட்டுவிடும் என பெற்றோர் எண்ணுதல், சரியான பயிற்சியின்மை போன்ற சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தக் காரணங்களினால் ஏனைய மாவட்டங்களில் நடைபெறுவது போன்று இங்கு போட்டிகளை நடத்த இயலாதுள்ளது. அத்துடன் ஏனைய விளையாட்டுக்களுக்கு கிடைப்பது போன்று அதிக அனுசரணை இதற்குக் கிடைப்பதில்லை. ஏனெனில் இந்தப் போட்டிகளில் பார்வையாளர்களைவிட பங்குபற்றுநர்களே அதிகம். இந்த விளையாட்டை வளர்ப்பதற்கு யாழ்.மாவட்டத்திலுள்ள அனைவரினது ஒத் துழைப்பும் அவசியம்.

# புலியின்...

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)


காலம் செல்லச் செல்ல அரசுக்கு பிரச்சினைகளும் ஒன்றன் பின் ஒன்றாக வந்த படியே உள்ளன. இவற்றை இல்லாமல் செய்வதற்கு அரசுக்கு மீண்டும் ''புலி மந்திரம்'' தேவை.

அதற்காக என்ன பித்தலாட்டம் செய்யவும் அரசு தயாராக இருக்கிறது. சில வேளைகளில் அமைச்சர் கருணாவோ அல்லது கே.பியோ மீண்டும் புலிகள் அமைப்பை ஆரம்பித்து அரசுக்கு எதிராக செயற்படுவ தாக மஹிந்தவாதிகள் கதை அவிழ்த்துவிட்டால் கூட அதை நம்புவதற்கு காதில் பூ வைத்துக் கொண்டு மக்கள் தயாராக இருக்க வேண்டும். புலிகளுக்கு மீள உயிரூட்டுதல் அரசுக்கு சாதகமாக இருப்பினும், இந்தப் பித்தலாட்டத்தில் சிக்கி தம் வாழ்வைத் தொலைக்கப்போவது அப்பாவி மக்கள் தான்.

அரசு பழையபடி புலிகளின் பேரைச் சொல்லி அல்லது இவர்கள் தான் புலிகள் ஏன்று முத்திரை குத்தி மக்களை வேட்டை ஆடும் பணியை கிழக்கில் தொடங்கிவிட் டது. இந்த ஆட்டத்தை முடித்து வைக்க அரசு விரும்பாது. ஏனெனில் ஆட்டத்தில் இரு பக்கமும் ஆடுவது அரசுதானே. பகடைக் காய்கள் மட்டும் அப்பாவி மக்கள். புலிகளின் வீழ்ச்சியை அதிகம் எதிர்பார்த்த மஹிந்த இப்போது அவர்களின் மீள் வருகைக்காக தவமிருக்கும் அபத்தத்தை காலம் உண்டாக்கியிருக்கிறது. ✱

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகிழ்வான குடும்பத்துக்கு...



நல்லதொரு குடும்பம், பல்கலைக் கழகம். ஒரு குடும்பம் எனும்போது, அம்மா, அப்பா, அண்ணன், அக்கா, தங்கை மற்றும் தம்பி என்று அடுக்கிக் கொண்டே போகலாம். எத்தனை சண்டை சச்சரவு வந்தாலும் குடும்ப வாழ்க்கை எப்பொழுதும் ஒரு இனம் புரியாத ஆனந்தம்.

இந்தக் குடும்ப வாழ்க்கை நம்மை கணவன் அல்லது மனைவி என்ற முறையில் கடைசிவரை கூட்டிச் செல்லும். எத்தனை இன்னல்கள், மனக் கசப்புகள் மற்றும் வீண் பிரச்சினைகள் வந்தாலும், இறுதிவரை இயன்ற அளவு பொறுமையுடனும் புரிந்துணர்வுடனும் ஒரே பாதையில் பயணிப்பதே ஒரு ஒழுங்கான தம்பதியினருக்கு சிறந்த எதிர் காலத்தைத் தரும்.

சந்தேகம்

தனிப்பட்ட ரீதியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சொல்ல முடியுமான சில விடயங்களும் சொல்ல முடியாத சில விடயங்களும் இருப்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. சிலர் இதில் திறந்த புத்தகம். எல்லா விடயங்களையும் முகத்திற்கு நேரே சொல்லி விடுவார்கள். இவற்றில் இரு பாலாருக்கும் சந்தேகம் எவ்வாறு வரும் என்பது மிகவும் தொலைவில் உள்ள சிந்திக்கவே முடியாத ஒரு விடயம் அல்ல.

பொதுவாக இரு பாலாரும் எதிர் பாலாருடன் சகஜமாகப் பழகுவது இதற்குப் பெரிதும் வழி வகுக்கும். இதைக் குறைத்துக் கொண்டாலே இலகுவில் சந்தேகம் எனும் பிரச்சினையைத் தூக்கி எறிந்துவிட முடியும். அதிலும் முக்கியமாக ஒருவர் மற்றவருக்கு நீ இவ்வாறு அந்த நபருடன் பழகுவது எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லத் தயக்கமாக இருக்கும். இதை மனதிலேயே பூட்டி வைத்து உள்ளுக்குள் நொந்துகொண்டு இருப்பார்கள். இது மேலும் தொடரும்போது, ஒருவர் மற்றவர்மீது வெகுவாக எரிந்து விழுவது போன்று, ஒரு வெறுப்பைக் காட்ட ஆரம்பிப்பார்கள். இந்த சமயத்தில் வேறு ஏதாவது தொடர்பற்ற விடயத்தில் சிறு பிரச்சினை வந்தால் கூட, அதை மையமாக வைத்து, இந்தப் பிரச்சினையை ஊதிப் பெரிது படுத்தி விடுவார்கள். இத்தனைக்கும் அந்த நபரின் மனதில் கூட அவ்வாறு ஒரு எண்ணம் இருந்திரக்காமல் இருக்கலாம். இது போன்று பிரிந்த எத்தனை குடும்பங்களை வாழ்க்கையில் கண்டுள்ளோம்.

பொதுவாகக் கணவன் மனைவிக்கு இடையில் புரிந்துணர்வு முக்கியம். எந்த அளவு புரிந்துணர்வு இருந்தாலும், சந்தேகம் என்பது எப்போதும் வரலாம். அதனால், புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளும் அதே நேரம், எந்தப் பிரச்சினை மனதில் தோன்றினாலும், தெளிவாக அதைப் பேசி அதற்கான தெளிவான முடிவைக் காண்பதே இதற்குச் சிறந்த வழி. அதிலும், எதைச் சொல்வதாயினும் நீங்கள் உங்களது கணவனை அல்லது மனைவியைப் புரிந்துகொண்ட முறையில் அவர்களுக்குப் பொருந்தும் வகையில் அழகாகச் சொல்வது இன்னுமோர் முக்கிய விடயம். உதாரணமாக, உங்கள் மனைவி உங்களது நண்பர் ஒருவருடன் யதார்த்தமாகப் பழகும் விதம் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், அவருடன் அன்பாகப் பேசி, நீங்கள் எந்த அளவுக்கு அவரை நேசிக்கின்றீர்கள் என்பதை உணர்த்தி, எதிர்காலம் பற்றியும் குழந்தைகள் பற்றியும் பேசி, பிரச்சினை இல்லாத ஒரு அழகான வாழ்க்கையைக் கண்ணில் காட்டி, உங்களது மனதில் உள்ள சந்தேகத்தை எடுத்துக் கூறினால், கல்லாக இருந்தாலும் உங்களைப் புரிந்து கொள்ளும்.

எந்த அளவுக்குத்தான் ஒருவரைக் காதலிக்கிறோம் என்று கூறினாலும், நாம் நமது தாய், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மேல் கொண்டுள்ள அன்பிலிருந்து கணவன் அல்லது மனைவி மீது கொண்டுள்ள அன்பு குறிப்பட்ட அளவு காமமும் கலந்த அன்பாகும். இல்லை என்று யாராலும் சொல்லவே முடியாது. இந்த அன்பு மற்றைய எல்லா அன்பை விடவும் வேறுபட்டதாகும். இதில் எந்த வகையிலும் பிரச்சினைகள் வரலாம்?

அன்பும் அரவணைப்பும்

ஆண்களை விடப் பெண்கள் பொதுவாக ஆரம்பத்தில் போலவே கடைசிவரை தனது கணவனிடம் இருந்து அன்பை எதிர் பார்க்கின்றனர். அதே நேரம் சில ஆண்களும் இதை எதிர் பார்க்கின்றனர். இது கடைசிவரை ஒரே மாதிரி இருக்க வாய்ப்புக் குறைவாகவே அமைகிறது. பொதுவாகப் பிள்ளைகள் என்று ஆனவுடன் மனைவியின் அன்பு பிள்ளைகளுக்கும் செல்வதோடு, வீட்டு வேலையில் தீவிரமாக ஈடுபடும்போது, கணவன் மீது அன்பு காட்டுவதற்கான சந்தர்ப்பம் குறைவாகவே அமைகிறது. அதேபோன்று, வேலைத் தளத்தில் வேலைப் பழு மற்றும் குடும்பப் பிரச்சினைகள் காரணமாக கணவனுக்கும் இதற்கான சந்தர்ப்பம் குறைவாகவே அமைகிறது.

கணவன் அல்லது மனைவிக்கு ஏதாவது துன்பம் வந்தாலோ, ஒரு நோய் வாய்ப்பட்டாலோ அல்லது அவர்களது உறவினர்களில் யாருக்காவது ஏதேனும் துன்பம் நேர்ந்தாலோ, அவற்றை நமது பிரச்சினை போன்று பார்ப்பவர்கள் குறைவாகவே உள்ளனர்.

அது ஒருபுறம் இருக்க, பொதுவாக நாங்கள் ஒருவருடன் மிகவும் நெருக்கமாகப் பழகும்போது, எங்களிடம் உள்ள அனைத்து இரகசியங்களையும் மற்ற நபர் அறிந்து கொள்வது வழக்கம். எப்பொழுதுமே ஒருவர் ஒரு புரியாத புதிராக இருக்கும் பொழுது, அனைவரும் அவருடன் பழக வேண்டும், அவர் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று மிகுந்த ஆர்வம் கொள்வர். ஒருவரைப் பற்றி நன்கு அறிந்துகொண்ட பிறகு, அவரிடம் பேசுவதற்குக் கூட எதுவும் இருக்காது. அத்தோடு, எந்த நபரைப் பற்றியும் நன்கு தெரிந்துகொண்ட பிறகு அனைவரும், அந்த நபரை எடை போட்டு விடுவார்கள். அதற்குப் பின்னர் அந்த உறவில் சந்தோசம் குறைவாகவே இருக்கும். இதுவே திருமண வாழ்விலும் எமக்குப் பிரச்சினையாக அமையலாம். இது எல்லோருக்கும் பொருந்தாது. எனினும், மற்றைய நபரின் தன்மையை உணர்ந்துகொண்டு அதற்கேற்ப நடந்துகொள்வது எங்களது கையில்தான் உள்ளது.


இதுபோன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லை என்று சொல்ல முடியாது. வாரத்திற்கு ஒரு நாளாவது இருவரும் ஒன்றாய் உண்ணுவது, மாதத்திற்கு ஒருமுறையாவது வெளியே சென்று தனிமையில் மனம்விட்டுப் பேசுவது, ஒருவரை ஒருவர் ஆட்சி செய்ய முயலாமல், விட்டுக் கொடுத்து நடந்து கொள்வது, எந்தப் பிரச்சினை வந்தாலும் கோபத்தில் வார்த்தைகளை வெளிவிடாமல் இருப்பதோடு, ஆத்திரத்தில் எந்த முடிவையும் எடுக்காமல் இருத்தல், ஒருவரது உணர்வை மற்றவர் மதித்து, நல்ல புரிந்துணர்வுடன் இருத்தல் போன்ற பல வழிமுறைகள் இருக்கின்றன.

உண்மை நிலை

## வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை

அரசாங்கம் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான நிலைமைகளை உருவாக்குகின்ற அதேவேளையில் அனைத்து பிரஜைகளுக்கு அடிப்படைத் தேவைகள் வளங்கப்படுகின்றமையினை உறுதிப்படுத்த விரும்புவதனால் அது தான் உருவாக்குகின்ற வருமானத்திலும் பார்க்க கூடுதலாக அளவை செலவிடுகின்றன. அரசாங்கம் அதன் வருமானத்திலும் பார்க்க கூடுதலான செலவீனங்களை செலவிடும் பொது அரசாங்கம் பற்றாகுறையான வரவு செலவு திட்டத்திற்கு உள்படுகிறது. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் அரசாங்கம் பற்றாகுறையினை நிதியிடுவதற்கு கடன்பட வேண்டிய தேவை ஏற்படுகிறது. உயர்ந்த அரச கடன்பாடுகள் குறிப்பிடதக்க அளவு பொருளாதார விளைவுகளை தோற்றுவிக்குமாகையால் நாடானது, அதன் பற்றாக்குறையினை சாத்தியமானளவிற்கு குறைந்த மட்டில் பேணுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இறைப் பற்றாக்குறை (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




**இலங்கையில் கடந்த 25 ஆண்டுகளாக சராசரி வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 8% இற்கும் கூடுதலாகவே காணப்பட்டது. எனினும் 2011இல் இது 6.9% இற்கு குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தது.** வீதிகள், துறைமுகங்கள், வானூர்தி நிலையங்கள், வைத்தியசாலைகள், பள்ளிக்கூடங்கள், பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைமைகளில் காணப்பட்ட பாரிய அரச முதலீடுகளுக்கு மத்தியிலும் ஒப்பீட்டு ரீதியில் குறைவான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நாங்கள் பேண முடிந்தமை குறிப்பிடத்தக்கதொரு விடயமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசிப் பயறின் மருத்துவ குணங்கள்

பாசிப்பயறு சத்தான பயறு வகைகளில் ஒன்றாகும். பண்டைய காலம் முதலே இந்தியாவில் விளைவிக்கப்பட்டு வந்த இந்த வகை பயறுகள், பின் தெற்கு சீனா, இந்தோ சீனா, மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் விளைவிக்கப்பட்டது.

இதில் அதிக அளவு கல்சியமும், பொஸ்பரசும் அடங்கியுள்ளன. புரதம், கார்போஹைடிரேட், சிறிதளவு இரும்புச் சத்தும் அடங்கியுள்ளன. நார்ச்சத்தும், தாதுப்பொருள்களும் இதில் அடங்கியுள்ளன.

### கர்ப்பிணிகளுக்கு ஏற்றது

கர்ப்ப காலத்தில் தாய்மார்களுக்கு வேகவைத்த பாசிப்பயிறை கொடுக்கலாம். எளிதில் ஜீரணமாகும்.

சத்துக்கள் நேரடியாக கருவில் உள்ள குழந்தைக்கு சென்று சேரும். குழந்தைகளுக்கும், வளர் இளம் பருவத்தினருக்கும் பாசிப் பருப்பு சிறந்த ஊட்டச்சத்து உணவு என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். வயிறுக்கோளாறுகள் இருப்பவர்கள் பாசிப் பயிறு வேகவைத்த தண்ணீரை சூப் போல் அருந்தலாம்.

### காய்ச்சல் குணமாகும்

சின்னம்மை, பெரியம்மை தாக்கியவர்களுக்கு பாசிப்பயறை ஊறவைத்த தண்ணீரை அருந்த கொடுக்கலாம். அதேபோல் காலரா, மலேரியா, டைபாய்டு போன்ற நோய்களை குணமாக்குவதில் பாசிப்பயறு சிறந்த மருந்துப் பொருளாக பயன்படுகிறது.

### நினைவுத்திறன் கூடும்

மணத்தக்காளி கீரையோடு பாசிப் பருப்பையும் சேர்த்து மசியல் செய்து அருந்தினால் வெயில் கால உஷ்ணக் கோளாறுகள் குணமடையும். குறிப்பாக ஆசன வாய்க் கடுப்பு, மூலம் போன்ற நோய்களுக்கு இது சிறந்த மருந்தாகும்.

பாசிப் பருப்பை அரிசியோடு பொங்கல் செய்து சாப்பிட்டால் பித்தமும், மலச்சிக்கலும் குணமாகும். பாசிப் பருப்பை வல்லாரை கீரையுடன் சமைத்து உண்டால் நினைவுத்திறன் அதிகரிக்கும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.


### அழகுசாதனப் பொருள்

குளிக்கும் போது சோப்பிற்கு பதிலாக பாசிப் பயறு மா தேய்த்துக் குளித்தால் சருமம் அழகாகும். தலைக்கு சீயாக்காய் போல தேய்த்துக் குளித்தால் பொடுகுத் தொல்லை நீங்கும்.






## 67 வயது அப்பா



பிரிட்டனில் 67 வயது நிரம்பிய முதியவர் ஒருவர், பெண் குழந்தைக்கு தந்தையான அதிசயம் நிகழ்ந்துள்ளது.

Malcolm Lawrence என்ற 67 வயது நிரம்பி இவர் 12 முறை மாரடைப்பால் பாதிக்கப்பட்டுள்ளார். இவருக்கும் Ann-Marie, (வயது 31) என்ற பெண்ணுக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றது.

திருமணமான இரண்டு ஆண்டுகளாக குழந்தை இல்லை என்று வருத்தப்பட்ட இவர்களுக்கு தற்போது ஒரு அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது.

இது பற்றி Mrs. Malcolm Lawrence கூறுகையில் சிலர் எங்களது வயது வித்தியாசத்தை பார்த்துக் கிண்டல் செய்கின்றனர். ஆனால் எங்களது திருமண வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக உள்ளது அதன் அடையாளம் தான் இந்தக் குழந்தை என்று தெரிவித்துள்ளார்.

எங்கள் குடும்பத்துக்கு புதிதாக வந்துள்ள இந்த குழந்தையை நினைத்து நாங்கள் மிகவும் சந்தோஷப்படுவதாக Malcolm Lawrence இன் முதல் மனைவியின் மகன் Gavin (வயது 29) தெரிவித்துள்ளார்.

## இரத்த அழுத்தத்திற்கு மருந்தாகும் சீரகம்



மத்தியதர இரத்த அழுத்த நோய் இருப்பவர்களுக்கு திராட்சைப் பழச்சாறுடன், சிறிது சீரகத்தைப் பொடித்து சாப்பிட்டுவர இரத்த அழுத்தம் அதிகரிக்காது.

சிறிது சீரகம், நல்லமிளகு பொடித்து எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, அந்த எண்ணெயைத் தலையில் தேய்த்துக் குளித்தால் கண் எரிச்சல், கண்ணிலிருந்து நீர் வடிதல் நீங்கும்.

அகத்திக்கீரையுடன், சீரகம், சின்னவெங்காயம் சேர்த்து கஷாயம் செய்து அத்துடன் கருப்பட்டி பொடித்திட்டு சாப்பிட்டால் மன அழுத்தம் மாறும். ஆரம்ப நிலை மனநோய் குணமாகும்.

சீரகம், சுக்கு, மிளகு, தனியா, சித்தரத்தை இவ்வைந்தையும் சேர்த்துத் தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் இரண்டு சிட்டிகை வீதம் தினம் இரண்டு வேளையாக சாப்பிட்டால் உடல் அசதி நீங்கி, புத்துணர்ச்சி ஏற்படும்.

சீரகத்தை லேசாக வறுத்து அத்துடன் கருப்பட்டி சேர்த்துச் சாப்பிட்டுவர நரம்புகள் வலுப்பெறும். நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

சிறிது சீரகத்துடன், இரண்டு வெற்றிலை, நான்கு நல்ல மிளகு சேர்த்து மென்று தின்று, ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் பருகினால் வயிற்றுப் பொருமல் வற்றி, நலம் பயக்கும்.

சீரகத்துடன் மூன்று பற்கள் பூண்டு வைத்து மைய்யாக அரைத்து, எலுமிச்சை சாறில் கலந்து குடித்தால் குடல் கோளாறுகள் குணமாகும்.

ஓமத்துடன் சிறிது சீரகம் இட்டு கஷாயம் செய்து சாப்பிட்டால் அதிக பேதி போக்கு நிற்கும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல் நோய்க்கு சிறிது சீரகத்துடன் சின்ன வெங்காயம் வைத்து மைய்ய அரைத்து, பசும்பாலில் கலந்து குடித்து வர, நல்ல பலன் கிடக்கும்.

சிறிது சீரகத்துடன் கீழ்க் காய் நெல்லி வைத்து அரைத்து எலுமிச்சை சாறில் சேர்த்துப் பருகி வர கல்லீரல் கோளாறு குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானத்தின் குப்பை

வானத்தின் குப்பைகளை அள்ளுவதற்கு ஒரு திட்டத்தை சுவிஸ் அறிவித்துள்ளது.

வானில் கைவிடப்பட்டுக் கிடக்கும் செய்மதிகள், ரொக்கட்டுக்களின் பாகங்கள் ஆகியவற்றை அகற்றுவதற்கு ஒரு இயந்திரத்தை உருவாக்குவதுதான் இந்த திட்டமாகும்.

விண்வெளியை துப்பரவு செய்வதற்கான இந்த இயந்திரம் ஒரு வேக்கூம் கிளீனர் மாதிரி செயற்படும்.

வான் குப்பைகளை அள்ள வேக்கூம் கிளீனருடன் சுவிஸ் வருவது குறித்து நிச்சயமாக பல நகைச்சுவை கருத்துக்கள் வரலாம். ஆனால் இந்த விடயம் ஒன்றும் அவ்வளவு நகைச் சுவையான விடயம் அல்ல. இது மிகவும் முக்கியமான ஒரு விசயம்.

பல்லாயிரக் கணக்கான கைவிடப்பட்ட பொருள்கள் பூமியை சுற்றி வந்து கொண்டிருக்கிறன. சரியாக எவ்வளவு பொருள்கள் அவ்வாறு இருக்கின்றன என்று எவருக்கும் கணக்கு எதுவும் இதுவரை தெரியாது.

இவற்றில் பழைய செய்மதிகள், சர்வதேச வெண்வெளி ஆய்வு கூடத்தில் இருந்து வீசப்பட்ட பொருள்கள், விண் ஓடங்கள் ஆகியவை அடங்கும். இவை ஒரு மணி நேரத்துக்கு இருபத்தெட்டாயிரம் கிலோ மீற்றருக்கும் அதிகமான வேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கின்றன.

இந்த குப்பைகளும், துண்டுகளும் பூமியைச் சுற்றிவரும் செய்மதிகளுக்கும், ஆள்கள் பயணிக்கும் விண் ஓடங்களுக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தலாம்.

தற்போது இவற்றை அகற்றுவதற்காக லௌசானில் உள்ள ஈகோல் பொலிதெக்னிகில் உள்ள சுவிஸ் விண்வெளி மையம் றிமோட் காண்ட்ரோல் மூலம் இயக்கக் கூடிய ஒரு இயந்திரத்தை அறிவித்திருக்கிறது.

அந்த குப்பைகளை அங்கே பெருக்கியெடுத்து அவற்றை பூமிக்கு கொண்டுவரும் போதே எரியச் செல்வது ஒரு வழி. அல்லது அவற்றை அங்கிருந்து பூமிக்கு கொண்டு வந்து

(XII ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரமான பெண்களை

## கருப்பை புற்றுநோய் தாக்குமாம்

பெண்களின் உயிரைக்குடிக்கும் முக்கிய நோய்களில் ஒன்று கருப்பை வாய் புற்றுநோய். இந்த புற்றுநோய்க்கு பல்வேறு காரணங் கள் கூறப்பட்டாலும் உயரம் அதி கம் உள்ள பெண்களுக்கு கருப்பை புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப் புகள் அதிகம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மேற் கொண்ட ஆய்வில் இது கண்ட றியப்பட்டுள்ளது. ஆனாலும் அந்த பெண்கள் ஹார்மோன் மாற்று சிகிச்சை பெற்றார்களா என்பதைப் பொறுத்து முடிவுகள் அமையும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றனர்.

உலகம் முழுதும் பெண்களுக்கு கருப்பையில் புற்றுநோய் ஏற்படு வதற்கான காரண்ங்கள் குறித்து ஒக்ஸ்போட் பல்கலைக்கழக ஆய் வாளர்கள் மேற்கொண்டனர். இந்த ஆய்விற்கு கருப்பை புற்று நோய் உள்ள 25 ஆயிரம் பெண்களும், புற்று நோய் இல்லாத 48 ஆயிரம் பெண்களும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆய்வின்போது ஒவ்வொரு 5 செ.மீ. உயர வளர்ச்சியிலும் 7% இவர்களுக்கு கருப்பைப் புற்று நோய் ஏற்பட வாய்ப் புள்ளதாகத் தெரியவந்துள்ளது. உதார ணமாக 165 செ.மீ. உயரம் இருப்பவர்க ளுக்கு கருவக புற்று நோய் ஏற்பட 14% அதிக வாய்ப்பிருந்தால், 155 செ.மீ. உள்ளவர்களுக்கு இந்த வாய்ப்பு குறைவாக உள்ளதாகவும் ஆய்வாளர் கள் தெரிவித்துள்ளனர்.

கருப்பை புற்று நோய் வளர்ச்சியில் பெண்களின் உயரம் என்பதை நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள இந்த ஆய்வு முடிவுகள் உதவி புரிவதாக ஒக்ஸ்பேட் பல்கலைக்கழக புற்று நோய் ஆய்வாளர் டாக்டர் கில்லியன் ரீவ்ஸ் தெரிவித்துள்ளார். ஆனாலும் உயரம் ஏன் கருப்பை புற்று நோய் ரிஸ்கை அதிகப்படுத்துகிறது என்பதற் கான உண்மையான காரணங்கள் தெரியாவிட்டாலும் சில விளக்கங்கள் கொடுக்க முடியும் என்கிறார் ரீவ்ஸ்.

உயரம் அதிகமுள்ள பெண்களுக்கு இன்சுலின் மட்டம் அதிகமாக இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். இந்த இன்சுலின் அளவுதான் ஏனைய புற்று நோய்களைத் தீர்மானிக்கிறது. மார்பகப் புற்றுநோய்க்கும் இதுவே காரணமாக அமைகிறது. உயரம் அதிகம் இருப்பதால் செல்களின் எண்ணிக்கை அதிகமாகும் நடைமுறையில் புற்று நோய் செல் உற்பத்தியாகும் வாய்ப்பு அதிகமுள்ளது, ஆனாலும் எதிர்கால ஆய்வுகள்தான் இதனை உறுதி செய்ய வேண்டும் என்று கூறுகின்றனர். இந்த ஆய்வாளர்கள். ப்ளாஸ் மெடிசின் என்ற மருத்து இதழில் இந்த ஆய்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது.




# மாட்டிறச்சி சாப்பிடுவதால் இளவயது மரணம் ஏற்படும் ஆபத்து

ரெட்மீட் எனப்படும் மாட்டிறைச்சியை சாப்பிட்டால் இளவயதில் மரணத்தை தழுவ நேரிடும் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். மேலை நாடுகளில் பன்றியின் இறைச்சி பொதுவாக வெள்ளைக் கறியாகக் கருதப் படுகிறது. மாறாக மாட்டிறைச்சி சிவப்புக் கறியாகக் கருதப்படுகிறது. மையோக்ளோபன் என்ற இந்த புரோட்டீனே இதற்கு சிவப்பு வண் ணத்தை அளிக்கிறது. பன்றியில் கோழியின் இறைச்சியை விட மையோக்ளோபன் (Myoglobin) அதிகமாக இருந்தாலும் மாட்டிறைச்சியைவிட மிகவும் குறைவு. இறைச்சி நன்றாக சமைக்கப்படும்போது இந்தச் சிவப்பு வண்ணம் மறைந்து பழுப்பு வண்ணத்தை அடைகிறது.

இதற்குக் காரணம் மையோக்ளோபன் வேதி மாற்றம் அடை வதே. எந்த அளவுக்கு மையோக்ளோபன் இருக்கிறதோ அந்த அளவுக்கு கறி உட லுக்குத் தீங்கு விளைவிக்கிறது.

மனிதர்களின் உணவுப்பழக்கம் மற்றும் அவர்களின் ஆயுள் காலம் குறித்தும் ஹார்வார்டு பல்கலைக்கழக ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அதில் மாட்டிறைச்சி அதில் சாப்படுபவர்களில் 20 சதவிகிதம் பேர். இளம் வயதில் மரணமடைவது கண்டறியப் பட்டது. 1 20,000 பேரிடம் ஆய்வு மேற் கொண்டதில் இது தெரியவந்துள்ளது.

மாட்டிறைச்சி சாப்பிடுவதன் மூலம் இதய நோய்கள், புற்றுநோய் பாதிப்பு ஏற்படுகிற தாம். அதேசமயம் கோழிக்கறி, மீன் போன் றவை இளம் வயது மரணத்தை தடுப்பதாக வும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தினசரி மாட்டிறைச்சி சாப்பிடும் இளை ஞர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட் டது. 22 வயதுடைய 37,698 ஆண்களும், 28 வயதுடைய 89,644 பெண்களும் இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர்.

நான்கு ஆண்டுகளாக அவர்களின் உண வுப்பழக்கம் குறித்து ஆய்வு மேற்கொள் ளப்பட்டது. இதில் தினசரி மாட்டிறைச்சி சாப்பட்டவர்கள் 13 சதவிகிதம் பேர் இள மையிலேயே இதயபாதிப்பு, பல்வேறு உடல் உபாதை போன்ற நோய்களுக்கு ஆளானது தெரியவந்தது. இதற்குக் காரணம் மாட்டி றைச்சியில் உள்ள கொழுப்பு, சோடியம், நைட்ரேட்ஸ், கார்சினோஜென்ஸ், குரோனிக் போன்றவை ஆகும். இவையே இதயநோய், புற்றுநோய் பாதிப்பு ஏற்பட காரணமாகின்றன என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அதேபோல துரித உணவுகளை சாப்பி டும் 20 சதவிதம் பேர் இளம் வயதில் மரண மடைவடைதும் கண்டறியப்பட்டது. மாட்டி றைச்சிக்கு பதிலாக உலர் பருப்பு, மீன் போன்றவை களை உட்கொண்டவர்கள் நீண்ட நாள்கள் ஆரோக்யத்துடன் இருந்தது தெரியவந்தது. எனவே மாட்டிறைச்சியை குறைவாக சாப்பிட்டு உடல் ஆரோக்கி யத்தை பாதுகாத் துக் கொள்ள வேண்டும் என்று ஆய்வாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

ரூ. 50,000க்கு மேற்பட்ட
நிலையான வைப்பை ஆரம்பிக்கும் சகலருக்கும்
புத்தாண்டிற்கு முன்பே பெறுமதிமிக்க பரிசுகள்




ஏப்ரில் 9 முதல் 20 வரை
நாடெங்குமுள்ள லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி. கிளைகளுக்கு வாருங்கள்.

ஒரு வருட நிலையான வைப்புக்கு 15% வட்டியும் சிரேஷ்ட பிரஜைகளின் ஒரு வருட நிலையான வைப்புக்கு 16% வட்டியும் வழங்கப்படும்.

| காலம் | மா.வ.வீ. | வ.வி.வீ. | முதிர்ச்சியில் | வ.வி.வீ. |
|---|---|---|---|---|
| 12 மாதங்கள் | 13.75% | 14.65% | 15.00% | 15.00% |
| 24 மாதங்கள் | 14.25% | 15.22% | 15.25% | 14.24% |
| 36 மாதங்கள் | 14.50% | 15.50% | 15.50% | 13.57% |
| 48 மாதங்கள் | 14.75% | 15.79% | 15.75% | 12.99% |
| 60 மாதங்கள் | 15.00% | 16.08% | 16.00% | 12.47% |

லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ்
(LOLC குழுமத்தின் அங்கத்துவ நிறுவனம்)
இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அந்தாட்டிக்காவில் வேற்றுக் கண்டத் தாவரம்

அந்தாட்டிக்கா தென் துருவக் கண்டத்தின் விளிம்புப் பகுதிகளில் அந்த இடத்துக்குச் சொந்தமில்லாத வேற்றுக் கண்டத் தாவரங்கள் வளரத் தொடங்கியுள்ளதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இவ்வாறாக அந்த இடத்தில் முளைக்க ஆரம்பித்துள்ள தாவரங்களில் பல அந்தாட்டிக்கா செல்லும் விஞ்ஞானிகள் சுற்றுலாப் பயணிகளின் ஆடையில் ஒட்டியிருந்த மகரந்தம் மற்றும் விதைகளால் தோன்றியவை என்றும், அறியாமல் இவர்கள் இத்தாவரங்களை இங்கு கொண்டு போய் சேர்த்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

அந்தாட்டிக்கா கண்டத்தின் மிகப் பெரும்பான்மையான இடங்கள் உறைபனியால் மூடப்பட்டுள்ளது.

ஆனால் உறைபனி இல்லாத ஒரு சில இடங்களில், குறிப்பாக தென் அமெரிக்கா கண்டத்தின் அருகு வரை செல்லும் வால் போன்ற அந்தாட்டிக்கா தீபகற்ப பகுதியில் பெருமள வில் தாவரங்கள் முளைத்துள்ளன.

இந்தப் பகுதி கடந்த சில ஆண்டுகளில் மிக வேகமாக வெப்பமடைந்து வந்திருப்பதால்தான் இந்த இடங்களில் தாவரங்கள் தோன்ற முடிந்துள்ளது.

அந்தாட்டிக்கா செல்பவர்கள் தாங்கள் உணராமலேயே எந்த அளவில் தாவர விதைகளை அக்கண்டத்துக்கு கொண்டு செல்கிறார்கள் என்பதை கண்டுபிடிப்பதற்காக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அக்கண்டம் செல்லும் விஞ்ஞானிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் உடுத்தியுள்ள ஆடைகளின் மடிப்புகள், சப்பாத்துகளின் இடுக்குகள் போன்ற இடங்களை பரிசோதித்தபோது, சராசரியாக ஒருவர் பத்து தாவரங்களின் விதைகளையோ மகரந்தங்களையோ இக்கண்டத்தில் போய் சேர்த்து விடுகிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

இவ்வகையாக ஒரு வருடத்தில் எழுபதாயிரம் வகையான விதைகள் மகரந்தங்கள் அண்டார்டிகா சென்று சேர்வதாக கணக்கிடப்படுகிறது.

இவற்றில் பாதியளவான வகைகள் அந்தாட்டிக்கா பிழைத்துவிடக் கூடியவை என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

காலப் போக்கில் இந்தத் தாவரங்கள் எல்லாம் அந்தாட்டிக்காவின் இயற்கைச் சூழலை மாற்றியமைத்துவிடக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அந்தாட்டிக்கா செல்வோர் அவ்விடத்துக்கு சொந்தமில்லாத தாவரங்களையோ விலங்குகளையோ அங்கு கொண்டு செல்கிறார்களா என்பதை கண்காணித்துக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்துகின்றனர்

# பருவ நிலை மாற்றத்தை பயன்படுத்தி மீன்வளர்ப்பு



மாறிவரும் புவியின் பருவ நிலை மாற்றத்தை சாதமாகப் பயன்படுத்தி கூடுதல் மீன்வளத்தை எவ்வாறு பெறலாம் என்பது பற்றி ஆராய்வதற்காக ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆஸ்திரேலியப் பிராந்தியமான டாஸ்மேனியாவில் கூடியுள்ளனர்.

கடல் வெப்பமடைவதன் காரணமாக சில மீன் இனங்கள் தாம் வாழ்ந்துவந்த பகுதிகளை விட்டு இடம்பெயர்வது என்பது ஏற்கனவே நடந்துவருகின்ற ஒரு சூழ்நிலையில், அந்த வகையான இடங்களில் மீன்வளத்தை வளர்த்து அறுவடை செய்வதற்குரிய புதிய வாய்ப்பு உருவாகியுள்ளதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இந்தியாவிலும், ஆஸ்திரேலியாவிலும் கடலுணவு வளத்தை மேம்படுத்துவது இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தியாவை அண்டிய கடற்பகுதிகள் மற்றும் தென்கிழக்கு ஆஸ்திரேலியாவை அண்டிய கடற்பகுதிகளை புவிவெப்பமடைந்துவரும் பருவ நிலை மாற்றம் வேகமாக நடந்துவருகின்ற இடங்களாக விஞ்ஞானிகள் காண்கின்றனர்.

குளிர்ந்த நீருடைய இடமாக இருந்துவந்த டாஸ்மேனியக் கடல் பகுதியில் கடல் நீர் வெப்பமடைந்து வருவதன் காரணமாக, அந்தக் கடல் பகுதியில் ஏராளமான மீன் இனங்கள் செழிப்பாக பல்கிப் பெருகும் வாய்ப்பு உள்ளது என்றும் அந்த மீன்வளத்தை வர்த்தக ரீதியில் அறுவடைசெய்ய முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றனர். ஹோபர்ட் நகரில் இரு நாட்டு விஞ்ஞானிகளும் கூடிய ஒரு சந்திப்பில், வெப்ப மண்டலம் மற்றும் வெப்ப மண்டலத்தை ஒட்டிய கடல் பிரதேசத்தில் வாழும் மீன் இனத்தின் முட்டைகளை புதிதாக வெப்பமடைந்துவரக்கூடிய கடல் பகுதிகளில் தூவி, அந்த இடங்களில் மீன்வளத்தைப் பெருக்குகின்ற ஒரு திட்டம் பற்றி விவாதிக்கப்படுகிறது.

ஒரு பிரதேசத்தில் அறவே இல்லாத மீன் இனங்களை அப்பிரதேசத்தில் புதிதாக அறிமுகப்படுத்தும் வகையிலானது அல்ல தமது திட்டம் என்பதை ஹோபர்ட்டில் கூடியுள்ள விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர். மாறாக வெப்பமாக கடல் பகுதிகளை நோக்கி ஏற்கனவே இடம்பெயர்ந்துவரும் மீன் இனங்களை அவ்விடங்களில் செயற்கையாக வளரவிட்டு, இயற்கையில் நடந்துவரும் ஒரு மாற்றத்தை சற்றே வேகப்படுத்த தாங்கள் திட்டமிடுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# உண்மை நிலை வறுமை



தலைக்கு மேலே நிங்கள் கூரையொன்றைக் கொண்டிருக்கின்றீர்களா? உண்பதற்கு ஊட்டம் மிக்க உணவு இருக்கிறதா? உங்கள் அலுமாரியில் ஆடைகள் உள்ளனவா? குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின அளவீடு – 2009/2010 இன்படி. **இலங்கையில் வறியோர் எண்ணிக்கைச் சுட்டெண் 2006/2007இன் 15.2% இலிருந்து 8.9% இற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.** பெருந்தோட்டத் துறையின் வறுமை 32% இலிருந்து 11.4% இற்கு குறிப்பிடத்தக்களவிலும் கிராமியத் துறையின் வறுமை 15.7% இலிருந்து 9.4% இற்கும் வீழ்ச்சியடைய நகரத் துறையின் வறுமை 5.3 இற்கு மிதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.




தேசிய மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் துறையிலும் வேளாண்மைத் உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலும் காணப்பட்ட உயர்ந்த வளர்ச்சி ஊக்கமளிக்கும் உத்வேகமொன்றைக் கொண்டிருந்ததுடன் வறுமையைக் குறைக்கவும் உதவியது. **வறுமையை 2016 அளவில் 3% இற்கு குறைக்கவும் மின்னூட்டலை 2013 அளவில் 100% கிடைக்கச் செய்யவும் முடியுமென இலங்கை நம்புகிறது.**

CERTIFIED
BANK OF SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டிலிருந்தும்
பணம்
செலான் எம்மிடமிருந்தும்
பணம்
மற்றும் வெளிநாட்டு சுற்றுலா விமான பயணச் சீட்டு

"இப்போது உலகில் எந்த
நாட்டிலிருந்தும்
அனுப்பும் பணத்தினை
இலகுவாகவும்
மற்றும் துரிதமாகவும்
பெற்றுக்கொள்வதற்கு
செலான் வங்கிக்கு
வருகை தாருங்கள்..."
இலங்கை கூடைப்பந்து அணியின்
தலைவி தர்ஜினி சிவலிங்கம்



அது மாத்திரமா

- பாங்கொக் மற்றும் இந்தியா சென்றுவர விமானச்சீட்டுகளை வென்றிடும் வாய்ப்பு
- கொடுக்கல் வாங்கல் செய்யும் அனைவருக்கும் ரூ. 200 பெறுமதியான பண வவுச்சர்
- குறைந்த கட்டணம், பாதுகாப்பான நட்புரீதியான சேவை
- அதிஉயர் நாணய மாற்று வீதம்


மேலதிக தகவல்கள் அருகிலுள்ள செலான் வங்கியில்

துரித அழைப்பு : 0112 452 666

இம்மகத்தான வாய்ப்பு ஏப்ரல் 2ம் திகதி முதல்
மே 31ம் திகதிவரை கீழ்காணும் கிளைகளில் மட்டுமே.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | அம்பாறை | களவாஞ்சிக்குடி |
| நெல்லியடி | மட்டக்களப்பு | கந்தளாய் |
| மன்னார் | காத்தான்குடி | |
| கிளிநொச்சி | திருகோணமலை | |
| வவுனியா | செங்கலடி | |
| முல்லைத்தீவு | கல்முனை | |
| சங்கானை | சியம்பலாண்டுவை | |
| சாவகச்சேரி | சம்மாந்துறை | |
| மானிப்பாய் | பொத்துவில் | |


தாய்லாந்துக்கு விமானப் பயணச்சீட்டு


இந்தியாவுக்கு விமானப் பயணச்சீட்டு




*நிபந்தனைகள் அடங்கும்

GRACE

SPEEDCASH NOW

XPRESS MONEY
Send now. Receive now.

MoneyGram. Money Transfer

SEY CASH

ARY SpeedRemit MONEY TRANSFER

AFX FASTREMIT SEND & RECEIVE MONEY INSTANTLY

PLACID EXPRESS Worldwide Money Transmitter

EzRemit

INSTANT CASH GLOBAL MONEY TRANSFER

செலான் டவர்ஸ், இல.90, காலி வீதி, கொழும்பு 03
தொலைபேசி: +94 11 2456789, +94 11 4701000
தொலைநகல்: +94 11 2456456
மின்னஞ்சல் : info@seylan.lk
Brand Finance Rating "A" Fitch Rating: 'A-(lka)'
கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

www.eseylan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனியன் வங்கி

பியவர

Piyawara Children's Savings Account

சிறுவர் சேமிப்புக்கு அதிகூடிய வட்டி வீதம்

10%

(011) 2374100

யூனியன் வங்கி

தலைமை அலுவலகம்: 64, காலி வீதி, கொழும்பு 03. இணையத்தளம்: www.unionb.com



THE HIGHEST INTEREST RATE FOR 18th Months FIXED DEPOSITS

18 மாத நிலையான வைப்புக்கு அதிகூடிய வட்டி வீதம்

18%

AER 17.27%

சிரேஸ்ட பிரஜைகளுக்கு (55 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

CALL 077 22 68 723

கிளைகள்

யாழ்ப்பாணம், நுகேகொட, நீர்கொழும்பு, கொள்ளுப்பிட்டி, இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா

அடகு நிலையங்கள்

அளுத்கம, மட்டக்களப்பு, சிலாபம், கம்பஹா, ஹற்றன், ஜா-எல, கண்டி, நாகம, செட்டித்தெரு, வத்தளை

Conditions Apply

SWARNAMAHAL FINANCIAL SERVICES PLC

சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விஸஸ் பீஎல்சீ.

No. 338, Hospital Road, Jaffna. Tele/Fax : 0212 220 245

E-mail: info@sfs.lk | Web: www.sfs.lk

SFS

Registered by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Companies Act No. 78 of 1988.



## நவ சபிறி கிராமிய கடன் திட்டத்தின்

(புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்)

கீழ் 2012 சிறுபோக பயிர்ச்செய்கை கடனுக்கான விண்ணப்பங்கள் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

### கடன் அனுமதிக்கப்பட்ட பயிர் வகைகள்

- நெல்
- சோளம்
- வெங்காயம்
- உருளைக்கிழங்கு
- மரக்கறி
- மிளகாய்
- அவரை இனத் தாவரங்கள்
- வேறு கிழங்கு வகைகள்
- இஞ்சி மற்றும் எண்ணெய் விதைகள்

### கடன் வழங்கும் வங்கிகள்

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- செலான் வங்கி
- கொமர்ஷல் வங்கி
- ஹற்றன் நேஷனல் வங்கி
- சம்பத் வங்கி
- பிரதேசிய சங்வர்தன வங்கி(RDB)
- லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி
- யூனியன் வங்கி
- சனச அபிவிருத்தி வங்கி
- தேசிய அபிவிருத்தி வங்கி (NDB)
- டி.எப்.சீ.சீ வங்கி (DFCC)

வட்டி வீதம் : இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் வட்டிச் சலுகையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதம் வருடத்திற்கு 8 %

கடனை திருப்பி செலுத்துதல் : 270 நாட்களுக்குள்

மேற்கூறப்பட்ட வங்கி ஒன்றின் உங்களுக்கு அண்மையிலுள்ள கிளைக்குச் சென்று முகாமையாளரைச் சந்தித்து கலந்துரையாடுங்கள்.

பிரதேச அபிவிருத்தி திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாடெங்குமுள்ள சொவ்ட்லொஜிக் காட்சியறைகளில்
50% வரையிலான
புத்தாண்டு தள்ளுபடிகள்
★ ஒன்று வாங்கினால் இலவச வெகுமதிகள்
★ அதிவிசேட வட்டியற்ற தவணைச் சலுகை
★ விசேட பணச் சலுகை
நாணயமாற்று விகிதங்கள் அதிகரித்தாலும், எமது விலையில் மாற்றமில்லை.
விரையுங்கள்!
ஒளிமயமான சொவ்ட்லொஜிக் புத்தாண்டு
அந்த வீட்டிற்கும் புதிய உபகரணங்கள்
இந்த வீட்டிற்கும் புதிய உபகரணங்கள்
Panasonic மின்விசிறி
Midea மின்விசிறி
F-409M
• Wireless remote controller
• Oscillation control
• 3-speed and off electronic switch
• 3-step timer (1, 3 or 6 hours)
• Transparent plastic blade
ரூ. 8,990/-
F-56MZ2
• 5-speed selection
• Cut-off safety switch equipped
• Fall prevention of blade adopted
• Thermal fuse prevents overheating or power surge
• Permanently lubricated ball bearing assembly
விசேட விலை ரூ. 5,490/-
FT40-10M
• 3-speed
• Oscillation control
• Easy angle adjustment
• Plastic blade
ரூ. 2,990/-
FS40-10N
• 3 wind speed
• Tilt-angle adjustable
• Oscillation avaliable
• Elegant Finish
ரூ. 4,490/-
F-407X
• Metal blade
• 3-speed selection
• Push button switch
• 6-hour mechanical timer
• Easy angle adjustment
ரூ. 10,250/-
மாதாந்தம் ரூ. 196/-
F-400C
• Blade diameter: 40cm (16")
• 3-speed and ON/OFF push button switch
• Transparent plastic blade
• Easy angle adjustment
ரூ. 6,490/-
F-409U
• Oscillation control
• 3-speed and on/off by pull switch
• Easy angle adjustment
• Metal blade
ரூ. 6,990/-
SAMSUNG ஏயார் கண்டிஷனர்
AS123BBD / AS183BSD / AS242USD
• Capacity 12,000 / 18,000 / 24,000BTU
• Biosleep
• Virus Doctor
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
ரூ. 71,990/- தொடக்கம்
மாதாந்தம் ரூ. 1,380/- தொடக்கம்
Panasonic INVERTER AIR CONDITIONER WITH ECONAVI
eco ideas
CS/CU-S10MKH // CS/CU-S13MKH // CS/CU-S18MKH // CS/CU-S24MKH
• Capacity 10,000 / 12,500 / 18,000 / 24,000 BTU
• AUTOCOMFORT
• ADVANCED+PLUS e-ion Air Purifying System with Patrol Sensor
ரூ. 89,900/- தொடக்கம்
மாதாந்தம் ரூ. 1,723/- தொடக்கம்
Panasonic SPLIT - DELUXE AIR CONDITIONER WITH ECONAVI
eco ideas
CS/CU-C9MKH // CS/CU-C12MKH // CS/CU-C18MKH // CS/CU-C24MKH
• Capacity 9,000 / 12,000 / 18,000 / 24,000 BTU
• AUTOCOMFORT
• ADVANCED+PLUS e-ion Air Purifying System with Patrol Sensor
ரூ. 76,500/- தொடக்கம்
மாதாந்தம் ரூ. 1,466/- தொடக்கம்
Panasonic SPLIT STANDARD AIR CONDITIONER
eco ideas
CS/CU-PC9MKH // CS/CU-PC12MKH // CS/CU-PC18MKH // CS/CU-PC24MKH
• Capacity 9,000 / 12,000 / 18,000 / 24,000 BTU
• AUTOCOMFORT
• ADVANCED+PLUS e-ion Air Purifying System with Patrol Sensor
ரூ. 71,000/- தொடக்கம்
மாதாந்தம் ரூ. 1,361/- தொடக்கம்
free
0% interest 100% Fun
பிரபல வங்கிகளினூடாக 12 - 60 மாதங்களுக்கு வட்டியற்ற கொடுப்பனவுச் சலுகை
HNB
SEYLAN
* சொவ்ட்லொஜிக் உத்தரவாதத்தின் பக்கபலம்
Panasonic SAMSUNG ONIDA CANDY IGNIS Cornell DELL NOKIA xerox Russell Hobbs Midea lifeStyles
நாடெங்குமுள்ள சகல சொவ்ட்லொஜிக் மெக்ஸ்களிலும் சொவ்ட்லொஜிக் காட்சியறைகளிலும் பெறலாம்.
உடனடி அழைப்பு
011 5 705 705
அதிகாரம்பெற்ற விநியோகஸ்தர்
softlogic
BEST IN THE BUSINESS
The 7th Frontier




செலிங்கோ லை.்.ப் விற்பனை ஆலோசகருக்கு கிடைக்கும் சிறந்த வருமானம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள், அறிவு, அனுபவம் மற்றும் ஏனைய நலன்கள் மிக விசேஷித்தவை. எனவே வாழ்க்கையில் வெற்றி பெற செலிங்கோ லை.்.ப் உடன் இணைந்து கொள்ளுங்கள். இது தொழிலுக்கும் மேலான ஒரு உன்னத காரியம்.

PHOENIX O&M

**தகைமைகள்**

- க.பொ.த (உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி இருத்தல் வேண்டும். (விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவு எனின் 2 சித்திகள் போதுமானது)
  அல்லது
  க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி இருத்தல் வேண்டும். அவற்றுள் இரண்டிற்கு திறமைச் சித்தி காணப்படுவதுடன் 1 வருட தொழில் அனுபவமும் இருத்தல் வேண்டும்.
- பாடசாலை கல்விக்குப் புறம்பாக வேறு துறைகளில் திறமையை வெளிப்படுத்தியவராக இருத்தல் வேண்டும்.
- உறவினர், நண்பர், அயலவர் மற்றும் சமூகத்திலுள்ள வெவ்வேறு நபர்களுடன் சிறந்த பொதுசனத் தொடர்பு இருத்தல் வேண்டும்.
- விற்பனைத் துறையில் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

உங்கள் விண்ணப்பப் பத்திரத்தை, உதவி பொது முகாமையாளருக்கு (விற்பனை நிர்வாகம்) தபால் மூலம் கீழே குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள் அல்லது எந்தவொரு செலிங்கோ லை.்.ப் கிளையிலும் ஒப்படைக்கலாம். இல்லையெனில jobs@ceylife.lk இற்கு ஈ-மெயில் ஒன்றை அனுப்புங்கள். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விற்பனை ஆலோசகர் பதவி" எனக் குறிப்பிடவும். (ஈ-மெயிலிலும் இவ்வாறு குறிப்பிடுக)

வாழ்க்கை,
பாசம்,
பாதுகாப்பு.

## செலிங்கோ லை.்.ப்

செலிங்கோ லை.்.ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PQ24 தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிவரும் கடற்கரைப் பறவைகள்



கடற்கரையை அண்டி வாழும் பறவையினங்கள் அவற்றின் எண்ணிக்கையில் அரைவாசியளவாக குறைந்து வருவதாக புதிய ஆய்வொன்று கண்டறிந்துள்ளது.

மோசமாக அழிவடைந்துவரும் விலங்கினங்களின் பட்டியலின் உச்சத்தில் இந்தப் பறவையினங்களில் 28 வீதமானவை இருப்பதாக பறவைகள் பற்றிய சஞ்சிகையொன்றில் வெளியான ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புவி வெப்பமடைதல், பருவநிலை மாற்றம் போன்ற பல்வேறுபட்ட காரணிகளால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆல்பட்ரோஸ் குடும்பத்தைச் சேர்ந்த பறவையினங்களே வேகமாக அழிந்து வருவதாக பறவைகள் பாதுகாப்பு ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பெரும் வர்த்தக ரீதியான நவீன மீன்பிடி முறைகளாலும், பெருச்சாளிகள், காட்டுப் பூனைகள் போன்ற உயிரினங்களாலும் இப்பறவைகளின் இனப்பெருக்கத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகளுமே இந்த அழிவுக்கு காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடல் மற்றும் கடல்சார்ந்த பகுதிகளின் ஆரோக்கியத்தை உறுதி செய்யவும், அவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகளை எச்சரிப்பதற்கும் இந்தக் கடல்சார் பறவைகள் மிகவும் அவசியமானவை. ஆனால் உலகின் மொத்தப் பறவையினங்களில் இவை வெறும் 3.5 வீதமானவைதான்.

அடையாளம் காணப்பட்டுள்ள 346 வகையான கடல்சார் பறவையினங்களில் 47 வீதமானவற்றில் இந்த அழிவைக் காணமுடிவதாக கூறப்படுகிறது.

தரையில் இனப்பெருக்கம் செய்து, கடலுக்குச் சென்று உணவுதேடும் இந்தப் பறவையினங்களிடம் அவதானிக்கப்பட வேண்டிய பல முக்கிய அம்சங்கள் இருப்பதாக கடற்சார் பறவைகள் பற்றி ஆய்வு நடத்தும் பேராசிரியர் ஜோன் க்ரொக்ஷால் கூறுகிறார்.

அல்பாட்ரோஸ் குடும்பத்தைச் சேர்ந்த 22 பறவையினங்களில் 17 இனங்கள் அருகிவிடும் அபாயம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பெரும் வர்த்தக ரீதியான மீன்பிடி நடவடிக்கைகளின்போது பெருமளவிலான பறவைகள் வலைகளிலும் கண்ணிகளிலும் சிக்கி உயிரிழந்துவிடுவதாக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேபோல இந்தப் பறவையினங்களின் கூடுகளையும் அழித்து. அவற்றின் முட்டைகளையும் குஞ்சுகளையும் உண்ணக் கூடிய பெருச்சாளிகளும் பெருகிவருவதால் கடல்சார் பறவையினங்களின் இனப் பெருக்கம் வேகமாக தடுக்கப்படுகிறது.

பிரிட்டனை அண்டிய கடல் பரப்பில் , இந்த வகை பெருச்சாளிகள் பெருகிவரும் சில தீவுகளை ஜி.பி.எஸ். கருவி மூலம் அடையாளம் கண்டு, ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தி அங்கு எலிகளைக் கொல்ல நச்சுப் பொருள்களைத் தூவும் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.


றைனோ சுப்பர்மெற்
உங்களுக்கான சிங்க் அலுமினியத் தேவைகள் அனைத்திற்கும்

கூரைத்தகடுகள்


வளைவுத் தகடுகள்




கேற்றுக்கள்

வடிகால்,உபபாகங்கள்


இணையற்ற விசேட நன்மைகள்

- மிக உயர்ந்த தரம்
- பல்வேறு நிறங்களில், தடிப்பத்தில், வடிவங்களில், அமைப்புக்களில் கிடைக்கும்
- விரயத்தைத் தவிர்க்க பொருத்தமான அளவுகளில்
- முழுத் தேவைக்குமான உபபாகங்கள்
- நாடுமுழுவதிலுமுள்ள பதிவு செய்துள்ள விநியோகஸ்தர்கள் மூலமாக சுலபமாகக் கிடைக்கும்
- இலவச தொழில்நுட்ப ஆலோசனை
- விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
- முன் பூச்சிடப்பட்ட உலோக அமைப்பு
- வெடிப்பு, நிறமாற்றம், அரிப்பு ஆகியவற்றை தவிர்க்கும் உத்தரவாதம்

55% அலுமினியம் சிங்க் அலோய் முலாமிடப்பட்டது
AZ 150, Hi-tensile (Grade 550) Steel


RHINO SUPERMET

DNV ISO: 9001-2008

0.20மி.மீற்றர் தடிப்புடைய 1 அடி நீளம் ரூ.111 இலிருந்து

றைனோ றூஃபிங் ப்ரொடக்ஸ் லிமிட்ட்.
752, பேஸ் லைன் வீதி, கொழும்பு 9.
இணையத் தளம்: www.rhinosupermet.com

உடன் தொடர்புகளுக்கு
5748728/5748738
திங்கள் முதல் வெள்ளி
காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 வரை

HOLMES POLLARD & STOTT

பாவியுங்கள் 100 % சுத்தமான
றோயல் குளுக்கோஸ்




Packed By: Royal Industries
Colombo - 13

யாழ்ப்பாணத்தில்
ஐ.எல்.ஈ சப்ளை செயின் சென்டர்

Oil Lubricated Reciprocating Air Compressor

தோல் மற்றும் சப்பாத்து தயாரிப்பு
பழுதுபார்த்தல்
மரத்தளபாடங்கள்
பிரிண்டிங்
ஸ்பிரே பெயின்டிங்

T-JAY





ரீ.ஜே என்டர்பிரைஸஸ் (பிரைவெட்) லிமிட்ட் (கொழும்பு)
தொலைபேசி : 0772 932 784
இதற்கான அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்
ஐ.எல்.ஈ சப்ளை செயின் சென்டர்
259, பிரதான வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி (021) 4590 807


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# முந்துங்கள்
# இது உங்களுக்கான வாய்ப்பு



சென்றமுறை 'மல்டிலெக் சிங்கப்பூர் சவாரி' போட்டியில் பங்கேற்ற பலர் எமக்கு நன்றிகளைத் தெரிவித்து கடிதங்களை அனுப்பினார்கள். தொலைபேசியில் தொடர்புகொண்டார்கள். அனுபவத்தின் மகிழ்ச்சியை எம்மோடு பகிர்ந்துகொண்டார்கள்.

இது உங்களுடைய தருணமாகும். எமக்கு கடிதங்களை எழுதுவதற்கு அல்ல, உல்லாசக் கப்பல் சவாரியின் அனுபவத்தைப் பெறுவதற்கேயாகும். சிங்கப்பூருக்கு விமானத்தில் சென்று அங்கிருந்து சொகுசு கப்பலில் 4 தினங்கள் மலேசியா மற்றும் தாய்லாந்திற்குச் சென்று மீண்டும் சிங்கப்பூருக்கு வந்து, அதன்பின் விமானத்தில் தாயகம் திரும்புவதற்கு வாய்ப்பளிக்கும் 'மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி போட்டிக்கு நீங்களும் இன்றே விண்ணப்பியுங்கள். தினந்தோறும் ஒரு வெற்றியாளர் தெரிவுசெய்யப்படுவார். முந்துங்கள் இது உங்களுக்கான வாய்ப்பாகும்.

## வெற்றிப்பெற நீங்கள் செய்யவேண்டியது.

மல்டிலெக் பிரீமியம் இமல்ஷன், மல்டிலெக் வெதர்காட், மல்டிலெக் வோட்டர் புருவிங் சீலர், மல்டிலெக் நொன் யெலொவிங் எனமல் பிரிலியன்ட் வைட் பெயின்ற் அல்லது அறிமுகப்படுத்தப்பட்ட புத்தம் புதிய மல்டிலெக் ப்ளட்டினம் பெயின்ற் வகைகளில் 4 லீற்றர்களைக் கொள்வனவுச் செய்யுங்கள். விற்பனை முகவரிடம் இருந்து பெற்ற பரிசுக்கூப்பனை நிரப்பி, மேலுறைகளுடன், மல்டிலெக் பெயின்ற் கொள்வனவுச் செய்த பற்றுச் சீட்டையும் இணைத்து இன்றே அனுப்பி வையுங்கள்.

மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி, த.பெ. 2024, கொழும்பு.

MACKSONS HOLDINGS




போட்டிக் காலம்: ஏப்ரில் 15 வரை




Multilac®
PREMIUM PAINTS

www.multilac.com Hotl... 0772 222 555


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் கனவுகள் நனவாக இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சித்திரை புத்தாண்டில் நடைபெறும் கொடுக்கல் வாங்கலில் கலந்து கொள்வதற்கு வருடத்தின் 365 நாட்களும் திறந்திருக்கும் எமது வங்கி கிளையொன்றிற்கு வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

எமது கிளைகள் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏப்ரல் 14 ஆம் திகதியன்று மு.ப 9.00 மணி முதல் பி.ப 2:00 மணி வரை திறந்திருக்கும்



| சுவர் கடிகாரம் | சுடு தண்ணீர் போத்தல் | கேத்தல் | ட்ரெவலிங் பேக் |
|---|---|---|---|
| ரூ.5,000* க்கு மேலான வைப்புகளுக்கு | ரூ.25,000* க்கு மேலான வைப்புகளுக்கு | ரூ.50,000* க்கு மேலான வைப்புகளுக்கு | ரூ.100,000* க்கு மேலான வைப்புகளுக்கு |

ரூ.500,000* க்கு மேல் வைப்புச்செய்து அனைத்து பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்

அழையுங்கள்: 011 4 711 411
www.nationstrust.com

*இவ வெகுமதி கையிருப்பு முடியும் வரை மாத்திரமே செல்லுபடியாகும்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

Nations TrustBank


# வானத்தின் குப்பை

(V ஆம் பக்க தொடர்ச்சி)

இங்கே அவற்றை எரிப்பது இரண்டாவது வழி. இவை இரண்டு குறித்தும் தாம் ஆராய்வதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

பத்து மில்லியன் டொலர்கள் பெறுமதியான இந்த விண்வெளியை சுத்தம் செய்யும் திட்டம் இன்னமும் மூன்று முதல் ஐந்து வருடங்களில் ஆரம்பமாகும் என்று அந்த மையத்தின் இயக்குனர் வோல்க்கர் காஸ் கூறியுள்ளார்.


Jaffnaonlineshoppingcentre

உங்கள் வீட்டில் பிறந்தநாள் கொண்டாட்டமா..?
உங்கள் காதலர்களின் வீட்டில் பிறந்தநாள் கொண்டாட்டமா..?
கல்யாண நாள் கொண்டாட்டமா..? 2 நாட்களில் நீங்கள் தரும் விலாசத்திற்கு அனுப்பி வைப்போம்......

இதோ.. உங்களுக்கு பிடித்த style ஐ தெரிவு செய்ய எங்கள் web site ஐ நாடுங்கள் www.jaffnaonlineshoppingcentre.com
அல்லது அழையுங்கள் 0776591650 /0771339998








L B சகிதம்
# நாடெங்கும் கொண்டாட்டம்

புத்தாண்டு அன்பளிப்புக்களுடன் நாடெங்கும் வலம் வருகிறது
எல். பீ. ஃபினான்ஸ் நிலையான வைப்பு
மலரும் சித்திரைப் புத்தாண்டு மாதத்தில் எல்.பீ. ஃபினான்ஸில் நிலையான வைப்பை ஆரம்பிக்கும் அனைவருக்கும் நாம் வழங்கும் வட்டி வீதம் குறையாத உயர் ஆதாயத்துடன் கைநிறையப்
## பரிசுகள்

| காலம் | மாதாந்தம் | வ.தே.வ.வி. | முதிர்ச்சியில் | வ.தே.வ.வி. |
|---|---|---|---|---|
| 6 Months | 14.00% | 14.93% | 15.50% | 16.10% |
| 1 Year | 15.00% | 16.08% | 16.00% | 16.00% |
| 2 Years | 15.50% | 16.65% | 16.50% | 15.53% |
| 3 Years | 16.00% | 17.23% | 16.70% | 14.05% |
| 4 Years | 16.00% | 17.23% | 16.70% | 13.64% |
| 5 Years | 16.00% | 17.23% | 16.70% | 12.91% |

1% மேலதிக வட்டி
சிரேஷ்ட பிரஜைகளுக்கு
(55 வயதிற்கு மேல்)



கிரெடிட் ரேட்டிங் A-/P2 RAM ரேட்டிங்ஸ் (லங்கா) லிமிட்டட் கூட்டிணைக்கப்பட்ட திகதி: 30.05.1971
2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் உரிமமளிக்கப்பட்டது.

*நிபந்தனைகளுக்கு உட்படும்

இன்றே அழையுங்கள்!
கொழும்பு - டிரோன் 0773 371164
வவுனியா - சுதாஹரன் 0777 587366
யாழ்ப்பாணம் - நிரஞ்சன் 0777 587387
சுன்னாகம்- ஐங்கரன் 0777 718412

L B FINANCE
L B Finance PLC, 275/75, Prof. Stanley Wijesundara Mw., Colombo 7. www.lbfinance.com

நிலையான வைப்பு ஹொட்லைன்
011 4521020


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆயிரம் முட்டைகளுடன் ஈஸ்டர் மரம்

ஜேர்மனியில் 10 ஆயிரம் முட்டைகளுடன் கூடிய ஈஸ்டர் மரத்தை உருவாக்கி வொல்கர் கிராப்ட் (வயது 76) என்பவர் சாதனை புரிந்துள்ளார்.



ஈஸ்டர் பண்டிகையின் போது கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் வண்ண ஓவியங்கள் வரைந்த முட்டைகளை பரிசாக வழங்குகின்றனர்.

இந்த வழக்கம் வெளிநாடுகளில் பெருமளவில் காணப்படுகிறது. அது போன்று வழங்கப்பட்ட முட்டைகளை ஜேர்மனியை சேர்ந்த வொல்கர் கிராப்ட் என்பவர் மரத்தில் கட்டி தொங்க விட்டு ஈஸ்டர் மரம் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

இவர் ஒரு ஓய்வு பெற்ற ஊழியர், கடந்த 1965ம் ஆண்டு முதல் ஈஸ்டர் மரத்தை உருவாக்கி வருகிறார். முதலில் 18 முட்டைகளுடன் கூடிய சிறிய ஈஸ்டர் மரத்தை உருவாக்கிய இவர், கடந்தாண்டு 9,800 முட்டைகளை மரத்தில் கட்டி தொங்க விட்டார்.

இந்த ஆண்டு அது 10 ஆயிரம் முட்டைகளாக உயர்ந்துள்ளது. இவர் உருவாக்கியுள்ள ஈஸ்டர் முட்டை மரத்தை காண ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கானவர்கள் இங்கு சுற்றுலா வருகின்றனர்.

இதுகுறித்து வொல்கர் கூறுகையில், இனிவரும் ஆண்டுகளில் இதற்கு மேல் இனி ஈஸ்டர் முட்டைகளை அதிகமாக கட்டித் தொங்க விட மாட்டேன். ஏனெனில் அவற்றைப் பாதுகாப்பது மிகவும் சிரமமாக உள்ளது. இந்த மரத்தை உருவாக்குவதற்கு எனது மனைவியும், குழந்தைகளும் உதவியாக இருந்தனர் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 47 ஆண்டுகளாக வொல்கர் ஈஸ்டர் மரத்தை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.




# குழந்தைகளுக்கு மருந்தாகும் அன்னாசி



பழங்கள் அனைத்தும் மிக முக்கியத்துவம் பெற்று இருந்தாலும் அன்னாசிப்பழம் ஊட்டச்சத்து அதிகம் நிறைந்த பழமாகும்.

சுவையும், மணமும் நிறைந்த அன்னாசி பழத்தில் நீர்ச்சத்து 85 சத வீதம் உள்ளது. சர்க்கரைப் பொருள்கள் 13 சத வீதமும் புரதச்சத்து 0.60 தாது உப்புகள் 0.05 நார்ச்சத்து 0.30 சதவிகித அளவிலும் உள்ளன.

சுண்ணாம்புச் சத்து, மணிச்சத்து, இரும்புச் சத்து போன்ற சத்துக்களும் அடங்கியுள்ளன. மேலும் விற்றமின் ஏ, பி, சி போன்றவைகளும் அடங்கியுள்ளன.

## தொப்பையை குறைக்கும்

இன்று பெரும்பாடாய் மாறும் தொப்பை குறைக்க அன்னாச்சி பழம் சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்கும். இளம்பெண்கள் உட்பட அனைவரின் தொப்பையும் கரைக்கும் சக்தி அன்னாசிக்கு உண்டு.

ஓர் அன்னாசிப் பழத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி நான்கு தேக்கரண்டி ஓமத்தை பொடி செய்து அதில் போட்டு நன்றாகக் கிளறி ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க விடவும் இரவில் அதை அப்படியே வைத்திருந்து மறு நாள் காலையில் அதைப் பிழிந்து சாறு எடுத்து வெறும் வயிற்றில் குடிக்கவேண்டும்.

பத்து நாள்கள் இதேபோல் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தொப்பை கரைய ஆரம்பிக்கும், அன்னாசிக்காய்க்கு கர்ப்பப்பையை சுருக்கும் தன்மை உண்டு. எனவே கர்ப்பிணிகள் இந்தப் பழத்தைத் தவிர்க்க வேண்டும்.

## குழந்தைகளுக்கு மருந்தாகும்

அன்னாசிப் பழத்திற்கு மஞ்சள் காமாலை, சீதபேதி, இவற்றைக் குணப்படுத்தும் தன்மை உள்ளது. இது சிறு நீரகக் கற்களைக் கரைக்கும்.

உடல்வலி, இடுப்புவலி ஆகியவற்றை குறைக்கும் தன்மை கொண்டது. பித்தத்தை நீக்கும். உடலுக்கு அழகைத் தரும். உள் உறுப்புகளை பலப்படுத்தும் கண் ஒளி பெறும். குழந்தைகளுக்கு அடிக்கடி இந்தப் பழச்சாறு கொடுத்து வர பசி ஏற்படும். எலும்பு வளர்ச்சி, உடல் வளர்ச்சி ஏற்படும்.

அன்னாசி இலைச்சாறு வயிற்றின் பூச்சிகளை அளிக்கும் தன்மை நிறைந்து காணப்படுகிறது. அன்னாசி இலைச் சாறுடன் ஒரு ஸ்பூன் தேன் கலந்து அருந்த, பேதியாகி வயிற்றுப்பூச்சிகள் வெளியேறிவிடும். இலையைப்பிழிந்து சாறு எடுத்து ஒரு ஸ்பூன் சாறுடன், சிறிதளவு சர்க்கரை கலந்து சாப்பிட, விக்கல், இழுப்பு நோய் தீரும்.

## சிறுநீரகக் கற்கள் கரையும்

அன்னாசிப்பழத் துண்டுகளை தேனில் கலந்து சாப்பிட்டு வர உடல்பலம் கூடும். உடல் பளபளப்பாகும். அன்னாசிப் பழம் அடிக்கடி சாப்பிட்டு வர, சிறுநீரகக் கற்கள் கரையும்.

இதயக் கோளாறு, பலவீனம் குணமாகும்

அன்னாசிப்பழச்சாறு ஒரு நாள் நான்கு வேளை ஒரு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வந்தால் இடுப்பு வலி மாறும். பழச்சாறை தொண்டையில் படும்படி சிறிது நேரம் வைத்திருந்து விழுங்கி வர தொண்டைவலி, தொண்டைப்புண் தீரும்.

## ஜீரணசக்தி அதிகரிக்கும்

அன்னாசிப்பழச்சாறு மஞ்சள் காமாலைக்கு சிறந்ததாகும். வயிறு நிறைய உணவு உண்ட பின் ஒரு துண்டு அன்னாசிப் பழத்தை உண்ண எளிதில் ஜீரணம் ஆகும்.

பழச்சாறில் குடல் செயலை ஊக்குவிக்கும் அமிலம் உள்ளதால் எளிதில் ஜீரண சக்தி அதிகரிக்கிறது. ஒரு நாளைக்கு தேவையான மாங்கனீஸ் உப்பைப் பெற ஒரு கப் பழத் துண்டுகளைச் சாப்பிட்டு வந்தால் போதும்.

பொட்டாசியம்,கல்சியம் போல உடல் நலத்திற்குத் தேவையான உப்பு கிடைக்கிறது. இந்த பழத்தில் உள்ள குளுகோஸ் வளர்ச்சி மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பித்தக் கோளாறுகளை அன்னாசிப் பழம் விரைந்து குணமாக்குகிறது. அன்னாசியில் கொழுப்புச்சத்து குறைவு, நார்ச் சத்து அதிகம்,அன்னாசியில் புரதம் தாராளமாக இருப்பதால் ஜீரணக் கோளாறு உடலில் வீக்கம் போன்றவை ஏற்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கான மாதாந்த இதழ்




உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய
வவுனியாவில்...
உதயன்
இல.104, பஸ்நிலையம்
வவுனியா.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org